# காஷ்மீரசைவமும் சைவசித்தாந்தமும்



தி. செல்வமனோகரன்

சேமமடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகத்தின் பெயர் : காஷ்மீரசைவமும் சைவசித்தாந்தமும்

நூலாசிரியர் : தி. செல்வமனோகரன்

அனுமதிப்பத்திரம் : EPAB/02/18569

கல்வி அமைச்சு
அனுமதிப்பத்திரம்

1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்கொடை பெறும் சுய இரட்டை மொழி மற்றும் ஆங்கிலம் பாடசாலை தொடர்பான பிரமாணக் குறிப்பின் 19/ஏ வாசகத்தின் கீழ் கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கிறேன்.

2017 செப்டெம்பர் மாதம் 20
கல்வி அமைச்சு,"இசுருபாய" பத்தரமுல்ல.
**அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் திகதி 2022.03.19**

**விஜித வெலகெதர**
செயலாளர்
கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரசைவமும் சைவசித்தாந்தமும்

திரு.செல்வமனோகரன்

சேமமடு

2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காஷ்மீரசைவமும் சைவசித்தாந்தமும்**
எழுதியது: தி.செல்வமனோகரன்©
மீள் பதிப்பு: 2020, பக்கம்:viii+216, படிகள் :500, அளவு 1/8டெம்மி, எழுத்து:10.5, ரூபா.700.00

வெளியீடு: சேமமடு பொத்தகசாலை, யு.ஜி.50 பீப்பள்ஸ் பார்க், கொழும்பு -11,
தொ.பே: 011-2331475, 0777 345 666, mail:chemamadu@yahoo.com, web.chemamadu.com

சேமமடு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. 180/1/48 கேஸ்வோர்க் வீதி, கொழும்பு-11
தொ.பே:011-2472362, 071 2726778, mail:cbcseelan@gmail.com

**KASHIMIRA SAIVAMUM SAIVA SIDDHANDAMUM**
By:T.Selvamanoharan ©
Re- Print: 2020, Peges : viii+216, Quy:500, Size:1/8 demy, Font:10.5
Publisher:Stp.Pathmaseelan

Published by Chemamadu Poththakasaalai
U.G.50 People's Park Colombo -11 Tel: 011-2331475, 0777345666
mail:chemamadu@yahoo.com, web.chemamadu.com

Printed by Chemamadu Press
180/1/48 Gaswork Street, Colombo -11,
Tel:071 2726778, mail:cbcseelan@gmail.com

**ISBN 978-955-685-047-5**
**Rs.700.00**
**CBCN:2017-03-01-148**

**EPAB/02/18569**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என்றும்
என்னுள்
எல்லாமுமாய் இருக்கும்
"இரும்பு மனுஷி"
திருமதி தி.உமாதேவி என்கின்ற
என் அம்மாவுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மெய்யியல் கற்கைப்புலம் மிக அகலமானதும் ஆழமானதும் ஆகும். ஏனைய துறைகளுள்ளும் புகுந்து நின்று கோலோச்சும் துறையிது. இந்திய - இந்து மெய்யியற் கற்கைப் புலத்தில் கல்வி பயிலும் வாய்ப்பைப் பெற்றுள்ளமையைப் பேறெனக் கருதலாம். மரபுவழிக் கல்வியாளர்களிடமும் பல்கலைக்கழகத்தின் இந்துநாகரிக, மெய்யியற்துறைகளின் புலமைத்துவம் சார் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களிடமும் கற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இதன் வழி பல்கலைக்கழகத்தில் பேராசிரியர். நா.ஞானகுமாரன் அவர்களின் மேற்பார்வையின் கீழ் "சைவசித்தாந்த, காஷ்மீரசைவ மெய்யியலமைப்பு - ஓர் ஒப்பீட்டாய்வு" எனும் தலைப்பில் முதுதத்துவமாணி கற்கை நெறியை மேற்கொண்டு அதனை நிறைவு செய்தேன். அவ்வாய்வும் அதன் வழி பெற்ற அறிவையும் அடிப்படையாகக் கொண்டு "காஷ்மீர சைவமும் சைவசித்தாந்தமும்" எனும் இந்நூல் வெளிவருகின்றது.

இந்திய தேசமெங்கும் பரவியிருந்த சைவம் பெருஞ்சமயமாக - தத்துவமாக அமையும் விதத்தில் தன் கட்டமைவுகளைத் தக்கவைத்துக் கொண்டது. அந்த வகையில் காஷ்மீரத்தில் நிலவிய ஒருமைவாத சைவத்தையும் தமிழ்நாட்டில் நிலவிய பன்மைவாத சைவசித்தாந்தத்தையும் ஒப்பிடுவதாக இந்நூல் அமைகிறது. அதேவேளை காஷ்மீரத்தில் சத்தியஜோதி உள்ளிட்டோரால் பன்மைவாத சைவமான சைவசித்தாந்தம் நிலைப்படுத்தப்பட்டதையும் அதற்கான நூல்களாக அஷ்டப்பிரகரண நூல்கள் திகழ்கின்றன என்பதையும் அறிய முடிகிறது. அத்தோடு காஷ்மீர சைவத்தின் முக்கியஸ்தரான அபிநவகுப்தரின் குரு சம்புநாதர், அர்த்த திரியம்பக சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்; அவரின் குருவும் பரமகுருவும் முறையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமநாதரும் சுமதிநாதருமாவர். இவர்கள் தென்னாட்டவர்கள்: மஹார்த்தமஞ்சரீயின் ஆசிரியர் தன்னூலுக்குத் தான் எழுதிய பரிமலம் எனுமுரையில் தம்குரு சோழநாட்டவர் என்கிறார். இது தமிழ்ச் சைவப்பாரம்பரியத்தின் தொன்மையைக் காட்டுகின்றது.

அதேவேளை, இந்திய மெய்யியலுக்குத் திராவிடர்கள் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளனர். பௌத்தத்திற்கு பெரும் பங்களிப்புச் செய்த தஞ்சைத் தமிழர்கள் மற்றும் ஆதிசங்கரர், இராமானுஜர், மத்துவர், சைவசித்தாந்த மரபினர் என இப்பட்டியல் நீள்கிறது.

இதன்வழி இவ்விருசைவ மெய்யியல்களையும் ஒப்பிடுதல் ஒரு தத்துவார்த்தத்தை தரும் எனலாம். தமிழில் சோ.ந.கந்தசாமி, நா.ஞானகுமாரன், டி.பி.சித்திலிங்கையா போன்ற சிலரே காஷ்மீரசைவம் பற்றி கட்டுரைகள் எழுதியுள்ளனர். காஷ்மீரசைவம் என்ற தலைப்பில் பெ.திருஞானசம்பந்தன் சிறுநூலொன்றை எழுதியுள்ளார். அந்தவகையில் இவ்வொப்பீட்டாய்வு தமிழின் முன்முயற்சியாக அமைகிறது.

இந்நூல் வெளிவர உதவிய எனது முதுதத்துவமாணி மேற்பார்வையாளரும் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கியவருமான சிரேஷ்ட பேராசிரியர். நா.ஞானக்குமாரன் அவர்களுக்கும், எப்போதும் என்னை ஊக்குவிக்கின்ற இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் அவர்களுக்கும், எனது குடும்பத்தினருக்கும், இவ்வாராய்ச்சிக்குப் பேருதவி புரிந்த என் பிதாமகர் திரு.சோ.பத்மநாதன் அவர்களுக்கும், பிரம்மஸ்ரீ ச.பத்மநாப ஐயருக்கும், இந்நூலை வெளியிடுகின்ற சேமமடு பதிப்பகத்துக்கும், மற்றும் உடன்பிறவாச் சகோதரர் திரு.தெ.மதுசூதனன் உள்ளிட்ட யாவர்க்கும் நன்றி.

நூலில் ஏதேனும் குறையிருப்பின் அதனை விமர்சன ரீதியாகத் தெரிவிப்பின் திருத்திக்கொள்ள வாய்ப்புண்டு. நண்பர்களும் வாசகர்களும் வழிகாட்டுவார்களாக.

நன்றி

தி. செல்வமனோகரன்

141, கேணியடி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

திரு. தி.செல்வமனோகரனின் காஷ்மீர சைவம் தொடர்பான இந் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இன்றைய சிந்தனையாளர் மத்தியில் தனக்கென்ற ஓர் இடத்தை வகிக்கின்றவர் இந்நூலாசிரியர் ஆவார். நீண்ட நாட்களுக்கு முன்னராக முதுதத்துவமாணிக்கு ஆற்றிய ஆய்வானது நூல்வடிவினைப் பெறுவது சைவசித்தாந்த ஆய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் மாணவர் களுக்கும் பெரிதும் பயன்படவல்லதாகும்.

இன்றும் நிலைத்திருக்கும் மூன்று சைவப்பிரிவுகளான சைவ சித்தாந்தம், வீரசைவம், காஷ்மீரசைவம் ஆகிய பிரிவுகளினுள் ஒன்றான காஷ்மீர சைவம் பற்றி எழுந்த ஆங்கில, தமிழ் மொழி மூலமான நூல்கள் மிக அரிதாகவே விளங்குகின்றன. அதிலும் குறிப்பாகத் தமிழ் மொழியில் எழுந்த நூல்களுள் காஷ்மீர சைவத்தினைப் பற்றி ஒரளவு அறிந்து கொள்வதற்கும் அதன் சிறப்பம்சங்களைப் புரிந்து கொள் வதற்கும் இந்நூல் பெரிதும் உதவவல்லதாகும். இந்நூல் சைவசித்தாந்தமானது இன்றும் சிறப்பாகப் பேணப்படுகின்ற இப்பிரதேசத்தில் ஒப்பீட்டு ரீதியில் சைவசித்தாந்தத்தையும் காஷ்மீர சைவத்தையும் அறிந்தும் புரிந்தும்கொள்வதற்கு அரியதொரு வாய்ப்பினை அளிப்பதாகின்றது.

சமய, தத்துவ உண்மைத்துவத்தை அறிந்து கொள்ள உதவல்ல இந்நூல் அறிஞர் உலகத்தினுள் தக்க இடத்தைப் பெறும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. எனவே கற்றோரும் மற்றோரும் இதனை ஆதரித்து நூலாசிரியரின் பணியை மேலும் ஊக்குவிப்பார்களாக.

**நா.ஞானகுமாரன்**

*சிரேஷ்ட பேராசிரியர்,*

*மெய்யியல் துறை,*

*யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

எமது பதிப்பகம் சார்பில் இளம் விரிவுரையாளர் தி. செல்வமனோகரன் எழுதிய "காஷ்மீரசைவமும் சைவசித்தாந்தமும்" எனும் நூலை வெளியிடுவதில் பெருமைப்படுகின்றோம். இந்நூல் சைவசித்தாந்த ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் நன்கு பயன்படத்தக்க நூலாகும். சமகாலச் சைவ நடைமுறையில் சைவசித்தாந்தம், வீரசைவம், காஷ்மீரசைவம் ஆகியன நிலைத்திருக்கும் மூன்று சைவப் பிரிவுகளாகும். இவற்றிற்கிடையே சமய, தத்துவ உரையாடல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ளன. இவற்றை ஒப்பியல் நோக்கு ரீதியில் விளங்கிக்கொள்வது முக்கியம். நூலாசிரியர் இந்த அணுகுமுறையையே இங்கு பின்பற்றியுள்ளார். குறிப்பாக காஷ்மீர சைவத்தினைப் பற்றி ஆழமாகவும் நுட்பமாகவும் தெளிவாகவும் தமிழ் வாசகர்கள் அறிந்துகொள்வதற்கு இந்நூலினை ஆக்கியுள்ளார்.

நீண்டகாலமாகத் தமிழில் சமய, தத்துவ விடயங்களைத் தெளிவாகவும் ஆழமாகவும் பன்முக நோக்கில் எடுத்துரைக்கும் மரபு இருந்து வந்துள்ளது. இந்நூல் இந்த மரபு வழித்தேட்டத்தின் வழிநின்று ஆக்கம் பெற்றுள்ளமையைச் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டும். மேலும் காஷ்மீரத்தில் நிலவிய ஒருமைவாதச் சைவத்தையும், தமிழ்நாட்டில் நிலவிய பன்மைவாதச் சைவத்தையும் ஒப்பிடுவதாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறான மெய்யியல் நூலொன்றை வெளியிடுவதற்கான சந்தர்ப்பத்தை நல்கிய நூலாசிரியருக்கு நமது நன்றி. இந்நூல் உருவாக்கத்துடன் தொடர்புக்கொண்ட ஏனைய நண்பர்களுக்கும் நன்றி.

113, சேமமடு
பத்மகிரி
வவுனியா

பதிப்பாளர்
சதபூ.பத்மசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | iv |
| | வாழ்த்துரை | vi |
| | பதிப்புரை | vii |
| *01.* | அறிமுகம் | 01 |
| *02.* | அறிவாராய்ச்சியியல் | 46 |
| *03.* | பதியுண்மை | 56 |
| *04.* | பசுவுண்மை | 86 |
| *05.* | பாசமும் அதன் வகைகளும் | 111 |
| *06.* | முக்தியும் முக்திக்கான மார்க்கங்களும் | 156 |
| *07.* | உசாத்துணை நூல்கள் | 211 |
| *08.* | பின்னிணைப்பு | 213 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ மெய்யியல்

இந்தியத் தொல்பெரும் மெய்யியல்களுள் ஒன்றாகச் சைவமெய்யியல் விளங்குகிறது. இந்திய நிலப்பரப்பெங்கும் "சிவன், ருத்திரன், சங்கரன்" எனப் பல பெயர்களால் சுட்டப்படுகின்ற பெருங்கடவுளை மெய்ப்பொருளாகக் கொண்ட சைவ மெய்யியலாளர்கள், தம் சமயமெய்யியற் சிந்தனைகளை இந்தியா முழுதும் பரப்பியுள்ளனர். சைவமெய்யியலின் தொடக்கப் புள்ளியை அறிய நாம் மிகப்பழையகாலத்தையே நாடிச் செல்லவேண்டும். இந்திய தொல்வரலாற்றை அறியக்கூடியதான "ஹரப்பா மொஹஞ்சதாரோ" வில் கிடைக்கப்பெறும் உருவங்கள் சிவனின் உருவங்களாகவே எடுத்தாளப்படுகின்றன.[1] ரிக் வேதத்தில் பெரிதும் முதன்மையுறாத சிவன் யசுர்வேதத்திலும் உபநிடதங்களிலும் முதன்மையுறுகின்றான். சிவன் என்னும் சொல்லால் சுட்டப்படாமல் "ருத்திரன்,[2] பசுபதி,[3] ஈசன் போன்ற சொற்களால் சுட்டப்படுகின்றான். சுவேதாஸ்வரத உபநிடதம் அவனை மெய்ப்பொருள் ஆக்குகின்றது.[4] மேலும் பதினெண் புராணங்களுள் பத்துப் புராணங்கள் சிவபுராணங்களாக விளங்குகின்றன. இதிகாசங்களும் லிங்க வழிபாடு, சிவனை நோக்கிய தவம், அவனின் மேன்மை போன்றவற்றைக் கூறி நிற்கின்றன.

இவ்வாறு வேத உபநிடதங்களிலும் அவற்றைப் பரவலாக்கம் செய்ய எழுந்த இதிகாச புராணங்களிலும் சைவமெய்யியலின் ஆரம்பக் கூறுகள் இருந்தாலும் கூட ஆகமங்களே சைவ மெய்யியலின் "மையப்புள்ளி" எனலாம். சைவ ஆகமங்கள் இருபத்தெட்டாகும். உபாகமங்கள் இருநூற்றேழாகும். ஆகமங்களின் சாரமாகவே சைவ மெய்யியல் கூறப்படுகின்றது. "மஹேஸ்வரனிடம் இருந்து, குரு பரம்பரையாக வந்த சாஸ்திரமாக ஆகமத்தைக் கௌண்டின்யர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுதல், சைவ மெய்யியலில் ஆகமம் பெறும் முதன்மையைக் காட்டுகின்றது. ஆகமங்கள் வர்ணப் பாகுபாட்டை உடைத்து யாவர்க்குமான பொதுமையை வற்புறுத்துகின்றது. இதனால் சைவாசாரியர்களும் ஆகமத்தை முதன்மைப்படுத்தினர்.[5] இதேவேளை சைவ மெய்யியலாளர்கள் வேதத்தின் முதன்மையை அல்லது மேன்மையை நிராகரிக்கவில்லை. இதனாற்றான்,

"முதலா கும்வேத முழுதாகமப் பதியான ஈசன்"[6]
வேதமோடாகம மெய்யா மிறைவநூல்"[7]

எனத் திருமூலர் கூறியுள்ளார் போலும். இங்கு இந்திய மெய்யியலின் அல்லது வைதிக தரிசனத்தின் பொதுநூலாக வேதம் சுட்டப்படுகிறது. அதேவேளை சைவத்தின் சிறப்பு நூலாக ஆகமங்கள் சுட்டப்படுகின்றன. இதனாற்றான் உரையளவையை ஆகம அளவை எனவழைக்கும் வழக்கமும் வந்திருக்கக்கூடும்.

சைவ மெய்யியல், பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு பட்ட தன்மைகளில் வளர்ச்சியுற்று வந்துள்ளது. இந்திய சமூகத்தின் அரசியல், சமூகவியல், சமயவியற் தேவைகளுக்கேற்ப மெய்யியல் பல விரிவுகளைப் பெற்று வந்துள்ளது. மாதவாச்சாரியார், "சர்வதரிசன சங்கிரக"த்தில்

1. நகுலீசபாசுபதம்
2. சைவதரிசனம்
3. பிரத்திய பிஞ்ஞானம்
4. இராசேஸ்வரம்

எனும் நான்கு பிரிவுகளைச் சுட்டுகின்றார்.[8] *K.C.Panday* அவர்கள்,

1. பாசுபத துவைதம்
2. சித்தாந்த துவைதம்
3. துவைதா துவைத லகுலீசபாசுபதம்
4. சைவ விஷிட்டாத்வைதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. விஷேசத்துவைதசைவம்

6. நந்திகேஸ்வர சைவம்

7. இராசேஸ்வர சைவம்

8. அத்வைத காஷ்மீர சைவம்

என்பவற்றைக் கூறியுள்ளார்.[9] ஆகமத்தோடு வேதத்தை ஏற்கும் சைவப்பிரிவுகளாக க.வை.தகாரே,

1. காஷ்மீர த்ரிகம்

2. துவைதவாதமான சித்தாந்தசைவம்

3. ஸ்ரீகண்டர் தொடங்கிய விஷிட்டாத்வைத சிவாத்வைதம்

4. சக்தி விஷிட்டாத்வைதமான வீரசைவ மதம்

என்பவற்றைக் குறிப்பிடுகின்றார்.[10] தத்துவலிங்கதேவர், "32" சைவப்பிரிவுகளைக் கூறுகின்றார்.[11]

இவ்வாறான கருத்துக்களைத் தொகுத்துப் பார்க்கும்போது ஒரு பிரிவு வேறு பல பெயர்களால் சுட்டப்பட்டிருப்பது தெரிகின்றது. உதாரணமாக சைவ சித்தாந்தம் - சைவதரிசனம், சித்தாந்த துவைதம் எனவும் காஷ்மீர சைவம் - பிரத்திய பிஞ்ஞானம் அத்வைத காஷ்மீரசைவம், ஈஸ்வராத்வயவாதம், த்ரிகம் எனப் பலவாறும் சுட்டப்படுவதைக் கூறலாம். பொதுவாக காபாலிகம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், வாமம், பைரவம், காஷ்மீரசைவம், வீரசைவம், சைவவிஷிட்டாத்வைதம், சைவசித்தாந்தம் என்பனவே சைவப் பிரிவுகளில் முதன்மையானவையாக எடுத்தாளப்படுகின்றன. இப்பிரிவுகள் யாவும் இன்றும் வழக்கிலுள்ளன எனக் கூறமுடியாது. காலத்துக்கொவ்வாத மெய்யியற் சிந்தனைகளையும் சமய சடங்கு சம்பிரதாயங்களையும் கொண்டிருந்த பிரிவுகள் செல்வாக்கிழந்து அருகிப் போக, சைவமெய்யியல்களுள் "காஷ்மீரசைவம், வீரசைவம், சைவசித்தாந்தம்" எனும் முப்பிரிவுகளுமே இன்றும் செல்வாக்குற்று விளங்குகின்றன.

இம்மூன்று பிரிவுகளும் பல்வேறு காலகட்டங்களில் தோன்றி வளர் நிலை பெற்று இன்றும் இலங்கி வருகின்றன. இம்மூன்று தரிசனங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தம் மெய்யியல் தளத்தினில் நின்று "பதி (காரணம்), பசு (காரியம்), பாசம் என்பவற்றை ஏற்பதோடு இவற்றினூடாக உலகு, முக்தி, மறுபிறப்பு போன்ற கருத்துக்களையும் முன்வைக்கின்றன. வீரசைவம் என்பதற்கு, "சிவனுக்கும் சீவனுக்கும் இடையில் ஐக்கியம் உண்டென்ற ஞானத்தில் திளைப்பவர்கள்" "பரமார்த்த வழி" எனப் பலவாறு பொருள் சுட்டுவர். இது நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தையுடையதெனினும் "பசவண்ணராலேயே" மெய்யியலாக வடிவமைக்கப்பட்டுள்ளது. வீரசைவர் "லிங்காயுதர்கள்" எனவும் சக்திக்கு முதன்மையளிப்பதால் "சக்தி விஷிட்டாத்வைதிகள்" எனவும் அழைக்கப்படுகின்றனர். விடுதலை என்பது "சிவ, சீவ ஐக்கியம்" என்கிறது. இதற்கு வழிகளாக சடுத்தலம், அஷ்டாவரணம், ஐவகை ஒழுக்கம் என்பவற்றைக் கூறுகின்றது. அத்தோடு சமூக அக்கறையுடன் சாதி, உயிர்ப்பலி மற்றும் மூடச் சம்பிரதாயங்களையும் நிராகரிக்கின்றது. இது கன்னடம், ஆந்திரா, தமிழ்நாடு, இலங்கை போன்ற இடங்களில் இன்றும் செல்வாக்குடன் காணப்படுகின்றது.

**சைவசித்தாந்த மெய்யியல்**

சைவ மெய்யியல்களில் ஒன்றான சைவசித்தாந்தம் தனக்கெனத் தனிப்பாரம்பரியத்தை உடையது. சைவசித்தாந்தம் என்பது "சைவம், சித்தாந்தம்" எனும் இரு சொற்களின் இணைவாகும். சைவமானது யாதெனின், "சிவனுடன் சம்பந்தமாகுதல்" எனவும் சித்தாந்தமாவது "முடிந்த முடிபு" எனவும் எடுத்தாளப்படுகின்றது. "*Piet*" என்பார், சித்தாந்தம், முடிவுகளின் முடிவு" *(The Conclusion of Conclusions)* என்று கூறுவதோடு மெய்யியல் சிந்தனையின் முடிவாகவும் எடுத்துரைக்கின்றார்.[12] சைவசித்தாந்தம் "சிவசம்பந்தத்தின் முடிந்த முடிவு" என்றும் "சைவம் பற்றிய முடிவு" என்றும் கூறப்படுகிறது. ஆரம்ப காலத்தில் சைவாகமங்களே சித்தாந்தங்களாக எடுத்தாளப்பட்டன.[13] பொதுவில் சைவசித்தாந்த ஆய்வாளர்கள் "ஆகமங்களை அடியொற்றியே சைவசித்தாந்தம் எனும் சொல் வந்தது." என்கின்றனர்.[14]

சைவசித்தாந்தத்தின் உருவாக்கம் வேதாகமங்களோடு தொடர்புறுத்தப்பட்டாலும் அது தன்னைத் தனித்துவமான ஒரு மெய்யியலாக நிலைநிறுத்திக் கொண்ட காலமாக, வட நாட்டில் சத்தியஜோதி சிவாச்சாரியாரின் காலமான கி.பி 8ஆம் நூற்றாண்டையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டில் மெய்கண்டரின் காலமான கி.பி 13ம் நூற்றாண்டையும் சுட்டுவர். "சைவசித்தாந்தம்" மொழி, வர்க்கம் தாண்டிய வாழ்வியல் தத்துவமாயினும், இச்சொல் முதன்முதல் எம்மொழியில் வழங்கப்பட்டது என்பது இன்னமும் ஆராய்ச்சிக்குரியதொன்றே. "சத்தியஜோதி கி.பி 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்றும்[15] தமிழ் நாட்டு திருமூலர் கி.பி 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று கூறினும் கி.பி 6 - கி.பி 9 வரையான காலப்பகுதியே பொதுவாக அவரின் காலமாக எடுத்தாளப்படுகின்றது. ஆயினும் உறுதியான ஒரு முடிவை இக்காலவாராய்ச்சி இற்றை வரை எட்டவில்லை. சுந்தரர் தேவாரத்தில் (கி.பி 9) திருமூலர் பற்றிய குறிப்புக் காணப்படுவதும் சம்பந்தர், நாவுக்கரசர் தேவாரங்களில் (கி.பி 6,7) குறிப்பெதுவும் காணப்படாமையும் கொண்டு கி.பி 7ம் நூற்றாண்டே திருமூலரின் காலம்[16] எனும் முடிவுக்கு நாம் வரலாம். இவ்வகையில் இரு மொழிகளும் ஏறத்தாழ சமகாலத்திலேயே (கால ஆராய்ச்சிக்கு ஒரு முடிவு வரும் வரைக்கும்) "சைவசித்தாந்தம்" எனும் சொல் வழக்கத்திற்கு வந்ததாகக் கொள்ளலாம்.

வடமொழி சார் சைவசித்தாந்த நூல்களாக சத்தியசோதி சிவாச்சாரியாரின் "தத்துவசங்கிரகம், தத்துவத்திரய நிர்ணயம், போககாரிகை, மோட்ச காரிகை, பரமோட்சகாரிகை", எனும் ஐந்தும் ஸ்ரீகண்டரின் இரத்தினத்திரயம், ஸ்ரீபட்டராமகண்டரின் நாககாரிகை, போஜதேவரின் தத்துவப்பிரகாசம் ஆகியனவும் அஷ்டப்பிர கரணங்களாக விளங்குகின்றன. இவை கி.பி 8 -12 வரையான காலத்தைச் சேர்ந்தவையாகக் கூறப்படுகின்றன. இவை சைவாகமங்களுடைய ஞானபாதத்தின் சாரமாகச் சுட்டப்படுகிறது. "ரௌவ ஆகமத்திற் கிடைத்த பொருளின் உண்மையை "தத்துவசங்கிரகம்" எனும் பிரகரணத்தாலும், சுவாயம்பு ஆகமத்தால் கிடைத்த பொருளை தத்துவத்திரயம் என்னும் நூலாலும் சத்தியஜோதி விளங்குகின்றார்" என அகோரசிவாச்சாரியார் குறிப்பிடுகின்றார்.[17] இவை தவிர, சர்வான்ம சம்புவின் சித்தாந்த தீபிகை, அகோரசிவாச்சாரியாரின் சித்தாந்த சமுச்சய. சிவாக்கிரயோகியின் சைவ பரிபாஷை, சிவஞானபோத சங்கிரக வியாக்கியான சைவசந்நியாசப் பத்ததி, கிரியா தீபிகை, சிவாக்கிர பாஷ்யம் போன்ற இன்னும் சில வடமொழி நூல்களையும் சைவ சித்தாந்தம் சார்ந்தவையாகக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியில் சைவசித்தாந்த சிந்தனை ஆரம்ப காலத் தமிழ் இலக்கியங்களிலேயே வெளிப்படத் தொடங்கிவிட்டன. "சிவன்" எனும் சொல் நேரடியாகச் சுட்டப்பெறாதுவிடினும், "ஆலமர்ச் செல்வன்,[18] முக்கட் செல்வன்,[19] நீலமேனி வாலிழை பாகத்தொருவன்,[20] பிறவாயாக்கைப் பெரியோன்"[21] எனப் பல தொடர்களால் சிவன் கூறப்படுகின்றான். தமிழில் மணிமேகலையே முதன்முதல் "சைவம்" எனும் சொல்லைக் கூறியது. இதன் பின் வந்த பல்லவர் கால பக்தியியக்கமே சைவத்திற்குப் புத்தெழுச்சியும், மெய்யியற் செழுமையும் நல்கியது. தோத்திரங்களினூடு சைவத்தைப் பரப்பியது. இக்கால கட்டத்தில் வெளியான திருமந்திரமே தமிழில் "சைவசித்தாந்தம்" என்னும் சொல்லை முதன் முதற் கூறியது.

இதன் வழி சோழர் காலத்தில் சாஸ்திரங்கள் உருவாக்கம் பெற்றன. இத்தோத்திரங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் "ஞானாமிர்தம்" எனும் நூல் தோன்றியது. வடநாட்டு சந்தான மரபுகளிலொன்றான "மத்த மயூர சந்தானத்தின்" வழி வந்த கோளாகிமட "வாசீக முனிவர்" தமிழில் ஆக்கிய நூல் இதுவாகும். இதுவே சைவ சித்தாந்தத்தை மெய்யியல் முறைமைக்குட்படுத்திக் கூற விழைந்த முதற்றமிழ் நூலாகும்.[22] ஆயினும் இதன் பின் வந்த "சிவஞான போதமே" தமிழில் சைவ சித்தாந்த முதன் நூலாகக் கருதப்படுகின்றது. இது பன்னிரு சூத்திரங்களுள் சித்தாந்த முழுமையையும் எடுத்துரைக்கின்றது. இந்நூலின் ஆசிரியர் "மெய்கண்டார்" ஆவார். மெய்கண்டாரின் மாணாக்கரான அருணந்தி சிவாச்சாரியாரினால் "சிவஞானசித்தியார், இருபா இருப..து" என்பனவும், மற்றொரு மாணவரான திருவதிகை மனவாசகங் கடந்தாரால் "உண்மை விளக்கமும்" எழுதப்பட்டன. இவர்கள் வழி வந்த உமாபதி சிவாச்சாரியார் "சித்தாந்த அட்டகம்" எனப்படும் திருவருட் பயன், சிவப்பிரகாசம், உண்மை நெறி விளக்கம், நெஞ்சுவிடுதூது, கொடிக்கவி, போற்றிப்ப..றொடை, வினா வெண்பா, சங்கற்பநிராகரணம் என்னும் நூல்களை ஆக்கிப் போந்தார். மெய்கண்டார், அருணந்தி சிவாச்சாரியார், மனவாசகங் கடந்தார். உபாபதிசிவாச்சாரியார் மற்றும் திருக்கடவூர் உய்யவந்த தேவர், திருவியலூர் உய்யவந்த தேவர் என்போர் எழுதிய இப்பதினான்கு நூல்களும் "சைவசித்தாந்த சாஸ்திரங்கள்" எனப்படுகின்றன. இவை கி.பி 13, 14ஆம் நூற்றாண்டுகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசிந்தனையை சித்தாந்தமாக, ஒரு மெய்யியல் முறைமையோடு தமிழில் நிறுவிய வகையில் முதன்மையுறுகின்றன.

இவை தம்முள், சிவஞானபோதம் முதன்னூலாகவும், சிவஞானசித்தியார் வகைநூலாகவும், சிவப்பிரகாசம் விரிநூலாகவும் அமைந்துள்ளன. பிற்காலத்தில், சிறப்புக்களை வெளிப்படுத்த முற்படும் நூல்கள் பல உருவாக்கம் பெற்றன. அவற்றுள் "பண்டார சாஸ்திரங்கள்" எனப்படும், பதினான்கு நூல்களும் சிவாக்கிரக யோகிகளின் சிவநெறிப்பிரகாசம் தத்துவப்பிரகாசரின் தத்துவப்பிரகாசம், சிற்றம்பலவடிகளின் துகளறு போதம் போன்றனவும், இன்னும் சில "கட்டளைகளும்" முதன்மை பெறுகின்றன. இவை சைவசித்தாந்தத்தின் மெய்யியற் கூறுகளை விரித்து விளக்கி நிற்கின்றன.

**சைவசித்தாந்தத்தின் சிறப்புக்கள்**

இந்திய மெய்யியல்கள் தனியே அறிவுக்கொள்கை யாகவோ, ஒழுக்கக் கொள்கையாகவோ அல்லது இவை இரண்டையும் உள்ளடக்கியதாகவோ நிற்கின்றன. சைவசித்தாந்த மெய்யியலானது ஒருவனை வாழ்வியலினூடு ஆன்மீகத்திற்கு இட்டுச் செல்கின்றது என்பர். அந்தவகையில் அது தன்னை ஒரு சமயமாகவும் மெய்யியலாகவும் நிலை நிறுத்திக் கொள்கின்றது.

"ஒழுக்கமன்பருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவந் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா வறங்கள் ஆனால் இரங்குவான் பணியறங்கள்"

என்கிறது சித்தியார்.[23] இவை யாவும் வாழ்வியல் அறங்களே. இவ்வறவழி வாழும் ஒருவன் "பரகதி" பெறமுடியும் என உறுதிபட உரைக்கின்றது. மேலும், "எது உண்மையான நம்பிக்கை எனின் முரணற்ற வகையில் தர்மத்தின் வழி எல்லாவற்றிலும் ஒன்றைக் காணுதலும் ஆகிய தன்மையைக் கொண்டமைகின்றதோ அதுவே உண்மைச்சமயம்" என்கின்றது. அது வாழ்வியல் அனுபவங்களினூடு மெய்ப்பொருளைத் தேடுகின்றது காணுகிறது என எடுத்துரைக்கிறது.[24]

இவ்வாறு சமயமாக விளங்குகின்ற அதேவேளை, சைவசித்தாந்தமானது தர்க்க அடிப்படையிலான மெய்யியலாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது. வேதவியாசர் கூறும் பத்தளவைகளையும் வழிமொழியும் சித்தாந்திகள் "காட்சி, அனுமானம், ஆப்தம்" எனும் மூன்றளவைகளுக்கும் முதன்மை கொடுப்பதோடு மீதி ஏழு அளவைகளையும் அதனுள் அடக்கி நிற்பர்.[25] மெய்கண்டார் அளவைகள் பற்றி கருத்துரைக்காது போனாலும் தர்க்க அடிப்படையில் தன் கருத்தைத் திறன்பட உரைத்துள்ளார். "ஜோன்பீற்" என்பார்,

"மெய்கண்டார் நிபுணத்துவம் இரு அடிப்படையிலானது. அவை முறையே சுருக்கமாகச் சொல்லுதல், தர்க்க அடிப்படையில் சொல்லுதல் என்பன"

எனக் கூறியுள்ளமை கவனிக்கத்தக்கது.[26] தமிழில், சித்தியாரே சைவசித்தாந்த அளவை பற்றி முதலில் கூறிய நூலாகும்.[27] அளவைகள் வழி மெய்யியலை எடுத்துரைக்கின்ற அதேவேளை,

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்கச் சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி"

என்றும் உரைத்துள்ளமை சைவசித்தாந்தத்தின் சமய மெய்யியற் சிறப்பைக் காட்டுகின்றது.[28]

"அத்வைதம், துவைதம்" எனும் சொற்கள் இந்திய வைதிக தரிசனங்களுள் முதன்மையுறுகின்றன. இவற்றின் அடிப்படையில், வேதாந்த சித்தாந்தக் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அத்வைதம் என்பதை "இரண்டல்ல ஒன்று" எனச் சங்கரரும், விஷேடித்த அத்வைதத்தை (சரீரசரீரி சம்பந்தம்) இராமானுஜரும் கூற, அதை நிராகரித்து இருபொருட்களுக்கிடையில் என்றும் பேதமுண்டு என துவைதத்தை மத்துவர் முன்வைப்பார். முப்பொருள் உண்மையை முன்வைக்கும் சித்தாந்திகளும் அன்மை வாதத்தை முன்வைக்கும் அத்வைதவாதிகளே. இவர்கள் முக்தி பற்றிய கருத்தாடலில் "தாடலை" (தாள் + தலை) எனும் விளக்கத்தினூடு தம் அத்வைதக் கருத்தை முன்வைப்பர்.[29]

உள்பொருளின் உண்மைத்துவம் பற்றிய சிந்தனையில் சங்கரர், இராமானுஜர் ஒருமை வாதத்தையும், மத்துவர் இருமை வாதத்தையும், பௌத்தர் கணபங்க வாதத்தையும் முன்வைக்க சித்தாந்திகள், "பதி, பசு, பாசம்" எனும் முப்பொருட்களை ஏற்று "பன்மை வாதத்தை" எடுத்துரைப்பர். மேற்சொன்ன மெய்யியல்களுள் காலத்தால் பிந்திய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்தம் இதர மெய்யியல்களின் பலம், பலவீனங்களைப் புரிந்து கொண்டு தன் பன்மை வாதத்தை முன்வைத்துள்ளது.[30]

**சைவசித்தாந்தத்தின் பன்மைவாதம்**

இந்திய மெய்யியல்கள் இறை, ஆன்மா, உலகு ஆகிய பொருட்களின் நிலைபேறு குறித்து தம்முள் வேறுபடுகின்றன. சங்கரர் பிரம்மம் மட்டும் உண்மை, மீதி யாவும் தோற்றம் என அத்வைதம் பேசுகிறார். விஷிட்டாத்வைதிகளோ விஷேடனத்தை உடைய விஷேடியம் - உலகு, ஆன்மா என்பவற்றை உடலாகக் கொண்ட பிரம்மமே உண்மை என்கின்றனர். சைவ சித்தாந்திகள் உண்மைப் பொருள்களாக பதி, பசு, பாசம் என்பவற்றை ஏற்று நிற்பர். அநாதியான பசு உலகில் மீண்டும் மீணடும் பிறந்து உழல்கின்றமைக்குக் காரணமாவது பாசம் ஆகும். அப்பாசம் அநாதியாகவே பசுவைப் பீடித்திருக்கின்றது. பாசத்தினின்றும் நீங்கிப் பதியை அடைவதே பசுவின் இலட்சியம் இதுவே முக்தி என்பர். பிரம்மம் மட்டும் தான் உண்மை எனக் கூறிய சங்கரருக்கு மீதிப் பொருட்கள் பற்றிக் கூற வேண்டிய தேவை இல்லை. ஆனால் முப்பொருளையும் ஏற்கும் சைவசித்தாந்திகளுக்கு இப்பொருட்களின் இருப்பை நிலை நாட்டவேண்டிய தேவையும் அவற்றுக்கிடையிலான உறவு நிலையைத் தர்க்க ரீதியாக நிலைநாட்ட வேண்டிய தேவையும் ஏற்பட்டது.

பொதுவில் மெய்யியல்கள் யாவும் ஆன்ம விசாரணையி னூடாகவே கட்டியெழுப்பப்படுகின்றன. ஆயினும் பௌதிகம் பற்றிய கருத்து நிலை ஊடாகத் தான் (சார்ந்தோ அன்றி மறுத்தோ) பௌதிகவதீதம் பற்றிய கருத்துக்களை முன்வைக்க முனைந்துள்ளமை அவதானத்துக் குரியதாகும். காட்சிக்கு உட்படும் உலகினையும் உலகப் பொருட்களை யும் முன்வைத்தே இறை. ஆன்மா, பாசம் என்பவற்றின் இருப்புக்களை நிறுவி அவற்றுக்கிடையிலான தர்க்க இயைபுகளைச் சித்தாந்திகள் எடுத்துரைக்கின்றனர்.

உலகு என்பது சாதாரணமாக எமது காட்சிக்கு உட்படுகின்ற ஒன்று. அது பல பகுதிகளை உடையது. இத்தன்மையால் உயிர்ப்பற்ற, சடமான இவ்வுலகு பகுப்புக்கு உரியதொன்றாகும். பகுதிகளை உடைய எதுவும் பகுபடக்கூடியது என்பது தேற்றமாகும். உலகப் பொருட்கள் எம்கண் முன்னேயே தோன்றுகின்றன; இருக்கின்றன; ஒடுங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல பகுதிகளை உடைய உலகம் தோன்றி நின்று ஒடுங்குகின்றது.[31] பொதுவாக நோக்குமிடத்து பிரபஞ்சம் இன்று வரை நிலை பெறுவதையே காணமுடிகின்றது. தோற்ற ஒடுக்கத்தை காணமுடியவில்லையே என வினவின் அதற்குச் சாங்கியரைப் போல் சித்தாந்திகளும் சத்காரியவாதத்தை முன்வைப்பர். எப்பொருளும் காட்சிக்குரியதாய் வரும் போது பிறக்கின்றது அல்லது தோன்றுகின்றது என்றும், இடைவிடாது காணப்படும் போது நிலைபெறுகின்றது என்றும், உருமாற்றம் அல்லது காணப்படாத நிலையை அடையும்போது அழிகிறது என்றும் கூறுவர். மேலும் விளக்குவதானால் தாய், தந்தையர் இருக்கும்போது பிள்ளைகள் சீவித்து இறத்தலையும், பிள்ளைகள் சீவிக்கும்போது பெற்றோர் இறத்தலையும் இதற்குச் சான்றாகக் கூறலாம். ஆக, உலகில் தோன்றி நின்று ஒடுங்குதல் நிகழ்கின்றது. அவ்வாறெனில் யாவும் ஒருங்கே தோன்றி நின்றழிதலைக் காணமுடியாதா என வினவின் காண முடியாது எனலாம். உதாரணமாக மாரிகாலத்தில் சில புல்லினங்கள், சில ஊர்வன ஒருங்கே தோன்றி நின்று அழிகின்றன. அதனை அவை காணமுடியாது. அது போல மகாசங்கார காலத்தில் பிரபஞ்சமும் முற்றாக அழியும் பின் தோன்றும். மகாசங்கார காலத்தில் யாவும் அழியும் என்பதால் யாரும் அதனைக் காணமுடியாது என்றாகிறது. சடமான உலகு தோன்றி நின்று அழிவது எவ்வாறு என வினாவின் அதைத் தோற்றுவித்து நிறுத்தி ஒடுக்க ஒருவர் தேவை. அவரே "பதி" என்பர் சித்தாந்திகள். இதனையே,

"ஒருவனோடொருத்தி யொன்றென் றுரைத்திடு முலகமெல்லாம்
வருமுறை வந்துநின்று போவது மாதலாலே
தருபவ னொருவன் வேண்டுந் தான்முதலீறுமாகி
மருவிடு மனாதி முத்தசித்திரு மன்னிநின்றே"

எனச் சித்தியார் கூறுகின்றது.[32] அவன் "அந்தமாதி"[33] இலாதானாய் இருக்க வேண்டும். அவனே பதி எனச் சித்தாந்திகள் உரைப்பர். இதனை உலோகாயுதர் மறுத்து, பூதச் சேர்க்கையால் உலகம் தோன்றுகின்றது. அதனை இயக்க ஒருவர் தேவையில்லை. அது இயற்கையாக நிகழும் என்பார். உலகு தோன்றி நின்று ஒடுங்குதல் என்பது இயற்கையாகும் என்பர். பானை தானே தோன்றாது, தோற்றுவிக்கக் குயவன் தேவை. அதுபோல உலகிற்கு பதி தேவை என்பர் சித்தாந்திகள். சங்கரர் உலகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில்லை என்றும் அது, பிரமத்தின் தோற்றமே என்றும், பிரம்மம் மட்டுமே உண்மை என்றும் கூறுவார். ஆதலால் அவருக்கு இடர்பாடு இல்லை. உலகின் இருப்பைக் கூற முற்படும் சித்தாந்திகளே இவ்விடர்பாட்டை எதிர்நோக்குவர். "தோற்றிய"[34] என்ற பிறவினையூடாக பதியே உலகைத் தோற்றிவிக்கிறார் என்றும், அது இயல்பாகத் தோன்றாது என்பதையும் உணர்த்துகின்றனர்.

பதி தன்னில்னின்றும் உலகைத் தோற்றுவிக்கின்றது எனில் அது பொருந்தாததாகும். ஏனெனில் பூரணத்திலிருந்து பூரணத்தை எடுக்கும் போது பூரணமே எஞ்சும் என்பது போல, பூரணமான பதியில் இருந்து தோன்றியது உலகு எனின், அது பூரணமானதாக அமைய வேண்டும். உலகோ குறைபாடு உடையதாய், சடமாய், பகுப்பிற்கு உரியதாய், தோற்ற ஒடுக்கமுடையதாய் உள்ளது. ஆக, பதியினின்றும் பிறிதான ஒன்றினால் உலகு உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அதுவெதுவெனில் அதுவே "மாயை" என்பர் சித்தாந்திகள். இதனை,

"தேரின்மண் மாயையாக திரிகைதன் சக்தியாக
ஆரியன் குலாலனாய்நின் றாக்குவனகில மெல்லாம்"

என அருணந்தி சிவாச்சாரியார் குறிப்பிடுகின்றார்.[35] மாயையை முதற்காரணமாகக் கொண்டும் சக்தியைத் துணைக்காரணமாகக் கொண்டும் தான் நிமித்த காரணமாயும் அமைந்து உலகை இறைவன் முத்தொழிலுக்குட்படுத்துகின்றான். எள்ளில் எண்ணை இருப்பினும் எண்ணை தானே வெளிப்படாது. இயற்கையும் வெளிப்படுத்தாது. எள்ளில் இருந்து எண்ணை எடுக்க ஒருவன் தேவை. அதுபோல் மாயையில் இருந்து சடவுலகைத் தோற்றுவிக்க ஒருவன் தேவை. மாயையுள் அவ்வியக்த நிலையில் இருந்த உலகை, பதி, வியக்த நிலை அடையச் செய்கின்றார் எனச் சத்காரியவாத அடிப்படையில் சித்தாந்திகள் நிறுவுவர். ஆனால் சங்கரரோ காரணம் உண்மை காரியம் பொய் எனச் சற்காரணவாதமுரைப்பார். அதாவது பிரம்மம் உண்மை, உலகு பொய் என்பார். ஏகான்மவாதம் பேசும் சங்கரரின் நிலைப்பாட்டில் இது பொருத்தமானது எனினும் காணும் உலகு பொய் என்பது யதார்த்தத்திற்குப் புறம்பானதாகும். முப்பொருளைக் கூற வந்த பன்மைவாதிகளுக்குச் சங்கரரின் கூற்று பொருத்தமற்றதாகின்றது. உருவம் அசையும் போது நிழல் அசையும். நிழல் சடமானது எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரரின் கூற்றுச் சரியாயினும் உலகின் இயக்கத்தை நிழலாட்டத்துடன் ஒப்பிடுதல் பொருத்தமா என்பது வினாவிற்குரியதே. இந்த வகையில் உள்ளதில் இருந்தே உள்ளது தோன்றும் என்ற வகையில், இறைவன் நிமித்தமாய் நின்று மாயையில் இருந்து உலகத்தைத் தோற்றி ஒடுக்குகின்றான் என்பது தர்க்க ரீதியான விளக்கத்திற்கு இட்டுச் செல்கின்றது.

உலகும், பதியும் உண்மைப்பொருட்களாயினும் சடமான, குறைபாடு உடைய உலகு பதியை அறியாது. சடத்தை பதியும் அறிய முயற்சிக்காது எனின் இவ்விருபொருட்களினிருப்பும் அர்த்தமற்றதாகி விடும். ஆகவே இவ்விரு பொருட்களினையும் அறிகின்ற மூன்றாவதான பொருள் ஒன்று இருக்க வேண்டும். அதுவே ஆன்மா என்பர். இதனை,

"யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறிய தசத்தில தறியா
திருதிறன்அறிவுள திரண்டாலா ஆன்மா"

எனச் சிவஞானபோதமும்[36]

"நன்றா யுரைக்கக்கேள் நல்லசித்தின் முன் அசித்திங்கு
ஒன்றாது சித்தசித்தை ஓராது நின்றிவற்றை
அன்றே பகுத்தறிவ தான்மாவே என்று மறை
குன்றாமல் ஓதும் குறித்து"[37]

என உண்மை விளக்கமும் கூறுகின்றன. சத்துப் பொருளாக சிவத்தின் முன் உலகப் பொருட்கள் யாவும் இல்லாதன போலாகும். ஆதலினால் சிவம் பிரபஞ்சப் பொருள் எதனையும் குறித்தல் இல்லை. சடமான உலகும், உலகப் பொருளும் பிரம்மத்தை அறியாது. ஆக, இரண்டையும் அறியும் மூன்றாவது பொருளாக ஆன்மா இலங்குகின்றது. அந்த வகையில் ஆன்மாவே இரண்டையும் அறிதல் வேண்டும். அதற்கிணங்க ஆன்மா சத்தாகிய சிவம் சடமாகிய பிரபஞ்சம் என்ற இரண்டையும் அறிதலாலும் அவற்றைச் சார்ந்திருப்பதாலும் அதனைச் "சதசத்து" என்பர். இவ்வான்மா இருப்புடையதன்று என பௌத்தர் கூறுவர். இதனை "ஆன்மவுணர்வு கணந்தோறும் தோன்றியழிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரோட்டம் போல என்று கூறுதல் என் தாய் மலடி என்றாற் போல முடியும்" எனக் கூறி சித்தாந்திகள் மறுப்பர். ஆன்ம இருப்பை,

"உளதில தென்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டிவினை இன்மையின் உணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திரத் தனுவினுள் ஆன்மா"

எனச் சிவஞானபோதம் கூறுகின்றது.[38] "இலதென்றலின் உளது" என்று தர்க்கிக்கின்றது. தவிர தேகமோ, இயற்கையோ, கரணமோ, பிராணனோ ஆன்மா எனில் எதுவுமில்லை. அவை,

யாவற்றிற்கும் வேறாயும் தொழிற்படக் காரணமாயும் உள்ளது எதுவோ அதுவே ஆன்மா என்பர்.

"உயிரெனப் படுவதிந்த உடலின்வேறுளதா யுற்றுச்
செயிருறும் இச்சா ஞானச் செய்திகள் உடையதாகிப்
பயிலினும் இன்பதுன்பப் பலன்களும் நுகரும் பார்க்கின்
துயிலொடும் அஞ்சவத்தைப் படுமுண் மைதுரியாதீதம்"

எனக் கந்தபுராண அடிமுடி தேடும் படலப் பாடல் கூறுகின்றது.[39]

ஆன்மா உலகில் உடலெடுத்துப் பிறக்கின்றது, இறக்கின்றது. ஏன் அவ்வாறு நிகழ்கின்றது எனின் ஆன்மா இயல்பாகவே மலங்களால் பீடிக்கப்பட்டது. மலவாசனை மேலெழும்போது சகசமலமும் வலி கொள்ளும்போது ஆன்மா மாயைக்குட்பட்டு வினையாற்றுகின்றது. வினைக்கேற்ப பிறவி கிடைக்கின்றது. ஆக, ஆன்மா வினையை அனுபவிக்க ஒரு இடம் தேவை. அது உலகு எனப்பட்டது. அருவ நிலைப்பட்ட ஆன்மாவுக்கு வினை போகம் அனுபவிக்க ஒரு ஸ்தூலகருவி தேவைப்பட்டது. அதுவே உடல் ஆகும். அப்பாலுக்கு அப்பாலாய் உள்ள பதி மாயையில் இருந்து சட உலகைத் தோற்றியமைக்குக் காரணம் இதுவே என்பர்.

மேலும் சித்தாந்திகள் ஆன்மா வினை செய்கின்றது. அவ்வினை செய்தவனைச் சென்றடைய வேண்டும். சடமான வினை உயிர்களைச் "சென்றடையச் செய்பவன்" ஒருவன் வேண்டும். அவனே பதி என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பௌத்தர்கள் இதனை நிராகரித்து பிறந்த கன்று பசுவைத் தேடி அடைந்தது போல கன்மம் செய்தவனைச் சென்றடையும் எனக் கூறுவர். ஆயினும் அதனை நிராகரித்து சித்தாந்திகள், கன்று உயிர்; கன்மம் சடம்; ஆகவே அது செய்தவனைச் சென்றடையாது. அந்தவகையில் ஆன்மாக்கள் முற்பிறப்பில் செய்த கன்மங்கள் மாயையில் கண்டுண்டு கிடக்கும் என்றும் அவற்றை இறைவனே உரிய ஆன்மாக்களுக்கு அவற்றைக் கொடுப்பான் என்றும் கூறுவர். எக்காரியத்துக்கும் காரணமுண்டு. காரணமின்றிக் காரியமில்லை. ஒவ்வொரு ஆன்மாவும் வெவ்வேறுபட்ட இன்ப துன்பங்களை அனுபவிக்க முன்வினையே காரணமாகின்றது. ஆன்மாவின் உயர்வு தாழ்விற்கும் இதுவே காரணம் என்பர். ஒரு பிறவியில் செய்த வினைகள் மறு பிறவியில் அதே ஆன்மாவை எவ்வாறு தொடரும் என வினவின், ஆன்மா உடம்பைப் பெற்று வினை புரியும் போது புத்தி தத்துவத்தைப் பற்றி நின்ற, கலை அதனைத் தொடரும் என்பர். அப்போது விருப்பு வெறுப்பே பிறவிப்பயனை கொடுக்கும் எனலாமே பதியேன்? என வினவின், கமக்காரன் செய்யும் முயற்சியின் பலனை விளை நிலமே கொடுக்கும், முயற்சி தானே கொடுக்காது என்பது போல சடமாகிய கன்மம் பிறவிப்பயனைத் தராது என்பர். அவ்வாறாயின் அறிவுடைய ஆன்மா தன் கன்மத்தைத் தானே உணர்ந்து எடுத்து அனுபவிக்கலாமே எனின் மலத்தால் மறைப்புண்ட காலத்தில் அது மயங்கிக் கிடக்கும், காந்தத்தின் முன் இரும்பை வைக்கும் போதே அதனைக் காந்தம் இழுக்கும். அதுபோல் வினைப் பயனைக் கொடுக்க ஆன்மாவிற்குப் பதி தேவைப்படுகின்றார் என்பர். அந்த வகையில் ஒன்றாய், உடனாய், வேறாய்ப் பதி, ஆன்மாவுடனும் உலகுடனும் நிற்கின்றார் என்பர்.[40]

ஆன்மாக்கள் அந்தக்கரணங்கள் அல்ல.[41] கரணங்கள் தம்மையறியா, ஐம்பொறிகளும் ஆன்மாவின் வழி இயங்குகின்றன. அவை தம்மை அறிவதில்லை. தம்மை இயக்கும் ஆன்மாவையும் அறிவதில்லை. அப்படியே ஆன்மாக்களும், தம்மையும் தம்மறிவிற்கு விளக்கம் தருபவனாகிய தனி முதல்வனின் திருவருட் சக்தியையும் அறியாது. அது காந்தத்தின் முன் வைக்கப்பட்ட இரும்பின் இயக்கத்தை ஒத்ததென்பர். ஆணவ மலத்தால் அறியாமையுள் மூழ்கிய பசு, மீட்சி பெற வேண்டும் எனின் "இலதென்றலின் உளது" என ஆன்ம இருப்பை நிறுவியது போலவும் "ஒடுங்கிய சங்காரத்தினல்லது தோற்றமின்மையின்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது போலவும் எது ஆன்மாவை மயக்கியதோ அதுவே அதற்கு மயக்கத்தை நீக்க முடியும் என்ற வகையில் உலகும், உடலும் (மாயை) ஆன்மாவிற்கு உதவுகின்றன. "விடிவாமளவும் விளக்கனைய"[42] என்ற வகையில் "உலக வாழ்வு" வினை போகத்தைக் குறைக்கின்றது. இதனால் முதலில் பாசஞானமும் பின் பசுஞானமும் ஏற்படுகின்றன. அதன் பின் ஆன்மா "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" செயற்கையறிவும், இயற்கையறிவும் கடந்த பதி ஞானமும் பெற்று இறைவனை அறியும் என்பர். கருவி கரணங்களால் அறியப்பட்டாலும் அறிவரிதான உள்பொருளுமாகப் பதி இலங்குவர் என்பர். இதனை,

"உணருரு அசத்தெனின்உணரா தின்மையின்
இரு திறனல்லது சிவசத்தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே"

எனச் சிவஞான போதமும்,[43]

"அறிவுறும் பொருளோ ஈசன் அறிவுறா தவனோ என்னின்
அறிபொருள் அசித்து அசத்தாம் அறியாத தின்றாம் எங்கும்
செறிசிவம்இரண்டுமின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்
செறிதருஞ் சத்தின் முன்னர் அசத்தெல்லாம் நின்றிடாவே"

எனச் சித்தியாரும் உரைக்கின்றன.[44] இவ்வாறு பதி ஞானத்தால் பதியை உணர, நிலம் முதல் நாதம் ஈறாகக் கூறப்படும் தத்துவங்கள் எல்லாம் கானல் நீராய்ப் பொய்யாகும் என்றும், அவை நீங்க ஆன்மா பதியுடன் இரண்டறக் கலக்கும் என்றும் கூறுவர். மேலும் ஆணவம் நீங்க, பசு பதியுடன் ஒன்றித்து நிற்கும் உணர்வோடு இறைபணி நிற்கும். இதனூடு மலநீக்கம் பெற்று பதியுடன் ஒன்றிக்கும் என்பர். இங்கு ஆன்மா இறை பணிநிற்பின் கன்ம மாயா மலங்கள் ஆன்மாவைத் தாக்காது எனக் கூற முடியாது. ஏனெனில் உடம்பு உள்ளவரை பிரார்த்தமும் அதனை அனுபவிக்கும் போது ஆகாமியமும் உண்டாம் எனின் இறைபணி நிற்றலில் ஆகாமியமும், மாயையாலான மயக்கமும், ஆன்மாவைத் தாக்காது வலிகெடும் என்பர். சிவனடிமையாகத் திகழும் ஆன்மா உடம்பினோடு நின்று வினை செய்யினும் அவை ஆன்மாவைப் பந்திக்காது. பிரார்த்த வினையும் உடலூழாய் அனுபவிக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்து விடும் என்பதனால் இறை பணி நிற்கும் ஆன்மாவை இவை தாக்காது விட்டு நீங்கும் என்பர்.

ஆக, ஆன்மா உலகியலில் இருந்து விடுபட்டு இறைகதி அடையவும் பதியே உதவுகின்றது. அவனருள் இன்றி இந்நிலை ஏற்படாது என்பதை,

"காணும் கண்ணுக்குக் காட்டும் உளம் போல்
காணா உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன் கழல் செலுமே"

எனும் சூத்திர வரிகளால் உணரலாம்.[45] ஒட்டுமொத்தத்தில் மலங்களால் இயல்பாகவே பீடிக்கப்பட்ட சதசத்தான பசுவின் கன்மபோகத்திற்காக எல்லாவற்றிற்கும் அப்பாலாய், அப்பாலுக்கப்பாலாய், பரிபூரணனாய் உள்ள பதி, சக்தியின் துணை கொண்டு உலகை சிருஷ்டிக்கிறார். பசுவைப்பீடித்துள்ள மலங்களை பசுவின் பக்குவத்திற்கேற்ப நீக்கித் தன்னை அறிவிப்பார். பற்றறுத்து இறை பணி நிற்கும் பசுக்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ப நால்வகை முக்திகளையும் கொடுப்பார்.

இவ்வகையில் சைவசித்தாந்திகள் காட்சி, ஆப்த பிரமாணங்களினூடு அனுமானத்தினால் பதி, பசு இருப்பைக் காட்டி காட்சிப் பிரமாணத்தினால் உலகின் உண்மைத் தத்துவத்தை நிறுவி, அவற்றுக்கு இடையிலான தர்க்க இயைபை முக்கோண வடிவில் காட்டி நிற்பர். தம் மெய்யியற் கோடபாட்டில் பல இடர்களைச் சந்திப்பினும் தம் புத்திபூர்வமான தர்க்கத்தினால் தமது மெய்யியலைப் பன்மைவாதமாக முன்வைத்துள்ளனர்.

**காஷ்மீர சைவம்**

இந்திய நிலப்பரப்பில் தோற்றம் பெற்ற சைவப்பிரிவுகளில் ஒன்று காஷ்மீரசைவம் ஆகும். இது காஷ்மீர மண்ணில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்ததால் காஷ்மீரசைவம் ஆயிற்று. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே இங்கு சைவம் நிலவி வந்தாலும் அது சடங்கு சம்பிரதாயம் சார்ந்ததாக அர்த்த நாரீஸ்வர வடிவத்திற்கே முதன்மை அளிப்பதாக இருந்து வந்துள்ளது. ராஜதரங்கிணி, நீலமதபுராணம் என்பன இதன் தொன்மைச் சிறப்பை எடுத்துரைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தத்தை உலகெங்கும் பரப்பியவனாகிய அசோக மன்னின் காலத்துக்கு முன்பே சைவம் காஷ்மீரில் நிலை கொண்டிருந்தது. அசோக மௌரியனே பௌத்தத்தைக் காஷ்மீரிலும் பரப்பினான். காஷ்மீர மன்னர்கள் பௌத்தத்திற்கும் சைவத்திற்கும் சம ஆதரவு வழங்கியதாகவும் "அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி" என்பதற்கிணங்க மக்களும் சமயப்பூசலின்றி இரு மதங்களையும் தழுவிக் கொண்டதாகவும் அறிய முடிகின்றது.[46]

இவ்வாறான நிலைப்பாடு நீண்ட காலம் நிலைக்கவில்லை. காலம் யாவற்றையும் மாற்றியது. கனிஷ்க மன்னன் காலத்தில் (கி.பி -125 - கி.பி 160) பௌத்தம் மேலோங்கியது. சைவம் கீழ் நிலை அடையத் தொடங்கியது. "நாகர்ஜூனர்" எனும் பெயரில் பல பிரசாரகர்கள் தோற்றம் பெற்றனர். "நாகசோதி" என்பார் பௌத்த பிரசாரகர்களில் முக்கியமான வராகக் கூறப்படுகின்றார். இவர்களின் பிரசாரம் பௌத்தத்தின் பரவலாக்கத்திற்குப் பெரிதும் உதவிற்று. மறுபக்கம் சைவப்பிரிவுகளான காபாலிகம், காளாமுகம், மாவிரதம், வாமம், வைரவம், பாசுபதம் முதலானவை செல்வாக்குற்றன. இவை கோரமான சடங்கு, சம்பிரதாயங்களையும் ஆகமம் சாராக் கிரியைகளையும் முதன்மைப்படுத்தின. மண்டையோட்டை மாலையாக அணிதல், உடலில் சுடலைச் சாம்பல் பூசுதல், மண்டையோடுகளில் பிச்சையெடுத்து உணவு உண்ணுதல், சடங்கில் மாமிசம், மதுபானம் போன்றவற்றிற்கும் பெண்ணின்பத்துக்கும் முதன்மையளித்தல் போன்றவை இதற்கு உதாரணங்களாகும். அதேவேளை காலீயையும் சிவனையும் ஒருங்கே வணங்கும் போக்கும் ஆகம மரபு வழி நின்று வழிபடும் மரபும் இவற்றிற்குச் சமாந்தரமாகக் காணப்பட்டது.

சாத்வீகத்தைப் பேசிய பௌத்தமும் மக்களின் மனங்களை வென்றது. அந்த வகையில் காஷ்மீரத்து மக்கள் சைவத்தையும் பௌத்தத்தையும் ஆதரிக்கத் தொடங்கினர்; பின்பற்றி ஒழுகினர். அவர்களால் வைணவமும் பின்பற்றப்பட்டு வந்துள்ளது.[47] இவ்வாறான காலகட்டத்தில் தான் குமரிலபட்டர், சங்கராச்சாரியார் போன்ற வைதிக தரிசனவாதிகளின் எழுச்சி ஏற்பட்டது. சூனியவாதத்திற்கு உட்பட்டு வாழ்வில் பற்றுக் கோடிழந்திருந்த மக்களுக்கு மத்தியில் "பிரமம் சத்தியம் ஜகத் மித்யா" எனும் கோட்பாட்டை சங்கரர் முன் மொழிகின்றார். அது மட்டுமல்லாமல் இவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) பொதுமக்கள் மத்தியில் பௌத்தர்களோடு வாதங்களில் ஈடுபடுதல்

2) பல பிரிவுகளாக இருந்த வைதிக சமயங்களை சீர்மைப்படுத்துதல்

3) சமய, தத்துவ நூல்களை ஆக்கி அளித்தல்

4) திக்விஜயங்களை மேற்கொண்டு பிரசங்கங்களில் ஈடுபடுதல்

5) இவற்றினூடாக அரச, சமூக ஆதரவைத் திரட்டல்

போன்ற பல செயற்பாடுகளினூடாக பௌத்தத்தின் செல்வாக்கை வீழ்ச்சி அடையச் செய்தார். இவ்வாறான சூழலில் பௌத்த, அத்வைத சிந்தனைகளின் போராட்டங்களுக்கிடையே அவற்றை உள்வாங்கி காஷ்மீரில் சைவம் தன்னை மீள நிலைநிறுத்திக் கொண்டது.[48]

பௌத்த மெய்யியலாளர்களின் தர்க்கத்தைப் பின்பற்றி மஹாயான பௌத்தத்தைப் போல் காஷ்மீர சைவமும் மத்திய ஆசியாவின் பண்பாடுகளை உள்வாங்கியது.[49] சூனியவாத அடிப்படையை நிராகரித்துப் பரம்பொருள் என்பது உண்மைப் பொருள் என்றும் பூரண பிரக்ஞையின் வெளிப்பாடு என்றும் கருதுகின்றது. அதேவேளை சமூக சமத்துவம், தனிமனித சுதந்திரம், சடங்குகளுக்குக் கட்டுப்படாமை முதலான அடிப்படைகளை பௌத்தத்தில் இருந்து பெற்றுக் கொண்டது. இவ்வாறே அத்வைதிகளின் பிரமம் மட்டும் உண்மை மீதி யாவும் தோற்றம் என்னும் கோட்பாட்டினை உள்வாங்கி பதி, பசு, பாசம் எனும் முப்பொருளும் உண்மை; ஆனால் பதியினுள் மீதி இரண்டும் அடக்கம் என ஒருமை வாதம் பேசுகின்றது.

காஷ்மீர சைவ மெய்யியற் செல்நெறியில் ஏற்பட்ட எழுச்சிக்கு மூன்று வம்சங்கள் காரணங்களாக அமைந்தன எனக் கூறப்படுகின்றது. அவர்கள்,

1) துர்வாஸரின் இருந்து உருவான வம்சத்தினர்

2) அத்ரிகுப்தரின் வம்சத்தினர்

3) கௌலசம்பிரதாயத்தினர்

என்போரே. கைலாயமலையிலிருந்து உருவான துர்வாஸரின் வம்சம், சைவவாத இரகஸ்யங்களைப் பயின்று பாடம் செய்த முனிவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுக ஆரம்பத்தில் செல்வதற்கரிய "கலாபி" முதலான கரடுமுரடான கிராமங்களுக்குச் சென்றுவிட்டதாகவும் இதனால் காலவோட்டத்தில் சைவசாஸ்திரங்கள் சிதைத்து விட்டதாகவும் அதனால் பரமசிவன் ஸ்ரீகண்ட ரூபமெடுத்து துர்வாச முனிவருக்கு அவற்றைப் போதித்ததாகவும் அவர் மானஸபுத்திரர் ஒருவரை உருவாக்கி அவருக்கு அவற்றை உபதேசித்ததாகவும் கூறப்படுகின்றது. அம்மானச புத்திரரே த்ர்யம்பகர். இதனை,

"ஸோபி கத்வா குஹாம் ஸம்யக் த்ர்யம் பகாக் யாம் தத: பரம்// "
"தந்நாம்நா சிஹ்நிதம் தத்ரஸஸர்ஜ மநஸா ஸுதம்// "

எனும் வரிகளால் அறியலாம்.[50] இவருடைய பதினைந்தாவது தலைமுறை சார்ந்த சித்தர் ஒருவர் அழகான ஒரு பெண்ணைத் திருமணம் முடித்துப் பின் பல யாத்திரைகளைச் செய்து இறுதியில் காஷ்மீரத்தை அடைந்தார் என்றும் அவரே ஸங்கமாதித்தயர் என்றும் கூறப்படுகின்றது. அவரூடாக இம்மெய்யியல் அவரின் மகன் வர்ஷாதித்யருக்கும் அவரின் மகன் அருணாதித்யருக்கும் பின் அவரூடாக அவரின் மகன் ஸோமனந்தரிடமும் வந்து சேர்ந்ததாகவும் கூறப்படுகின்றது. சோமானந்தரே சிவத்ருஷ்டியை - காஷ்மீரசைவ மெய்யியலுக்கு முதன்னூலாகத் தந்தவராவார்.

அடுத்த பரம்பரை அத்ரிகுப்தருடையதாகும். கங்கா - யமுனா ஆற்றங்கரைப் பகுதியில் அத்ரிகுப்தர் வாழ்ந்து வந்தார் என்றும் அவரது காலத்தில் கான்ய குப்ஜ அரசனாக யசோவர்மா (கி.பி 730 -740) விளங்கியதாகவும் அறிய முடிகின்றது. இந்த யசோவர்மாவை காஷ்மீர அரசனாகத் திகழ்ந்த லிலிதாதித்யன் (கி.பி 740 அளவில்) தோற்கடித்ததாகவும் அதன் பின் அங்கிருந்து அத்ரிகுப்தரைக் காஷ்மீருக்கு அழைத்து வந்து அரண்மனை ஒன்றை ஜேலம் நதிக்கரையில் சீதாம்சுமௌலியின் கோயிலுக்கெதிரில் கட்டிக் கொடுத்ததாகவும் கூறப்படுகின்றது. இதனை,

"தஸ்மிந் குபேரபுர - சாரு - சி தாம்சுமௌலி - ஸாம்முக்ய -
தர்சன - விரூட - பவித்ர பாகே/
வைதஸ்ய - ரோதஸி நிவாஸமமுஷ்ய சக்ரே ராஜா த்விஜஸ்ய
பரிகல் பித - பூமி - ஸம்பத்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் வரிகளால் அறியமுடிகின்றது.[51] சாமிலிருந்து வந்த சித்தர் "மத்ஸ்யேந்த்ரர்" என்பவர் வழங்கியதும் பஞ்சமகாரத்துடன் இணைந்ததுமான கௌலசம்பிரதாயம் என்பது ஒன்று. காஷ்மீரத்தில் வசிக்கும் மற்றைய கௌல சம்பிரதாயத்தினர் தமது முன்னோடி மஹாராஷ்ரத்திலிருந்து காஷ்மீருக்கு வந்து வசித்த "மஹேச்வரானந்தர்" என்கின்றனர். *Dr. B.N. Pandit* இம்மஹேச்வரானந்தர் வேறு மஹார்த்த மஞ்சரியைத் தந்த மஹேச்வரானந்தர் வேறு என வாதிடுகின்றார். ஏனெனில் அவர் தமது குரு சோழ நாடவர் என தன்னூலுக்குத்தான் எழுதிய உரையில் குறிப்பிட்டுள்ளார் என்கிறார்.[52] இம்மூன்று வம்சாவழிகளும் காஷ்மீர சைவ செல்நெறிக்குப் பெரும் பாங்காற்றினர்.

காஷ்மீரத்தில் நிலவிய சைவம் இருவகையினதாக எடுத்தாளப்படுகின்றது. அவை,

1) அத்வைதபரமானது

2) துவைதபரமானது

என்பனவாகும். துவைதபரமான சைவமாக "சித்தாந்தசைவம் எடுத்தாளப்படுகின்றது. அஷ்டப்பிரகரண நூல்களைத் தந்த சைவாசாரியார்களினால் அவை வளர்த்தெடுக்கப்பட்டன. ஆயினும் அத்வைத பரமான சைவமே காஷ்மீரில் பெருஞ் செல்வாக்கைப் பெற்றது எனலாம். இதுவே காஷ்மீர சைவம் என அழைக்கப்படுகின்றது. காஷ்மீர சைவம் எனும் சொல்லைச் சில ஆய்வாளர்கள் ஏற்க மறுக்கின்றனர்.[53] இதற்கு அவர்கள் கூறும் காரணங்களைப் பொதுமைப்படுத்தி நோக்கின்,

1) காஷ்மீரில் இருவகையான சைவங்கள் விளங்கியமை

2) மூன்று தத்துவங்களைக் கூறுதல்

3) பிரதேசத்தின் பெயரால் வழங்கப்படுவதை விட அது எவ்வாறு அம்மெய்யியல் சார் நூல்களில் கூறப் பட்டனவோ அவ்வாறே கூறுதல்

போன்றவற்றைக் குறிப்பிடலாம். எது எவ்வாறு இருந்த போதிலும் அத்வைத பரமான சைவம் "காஷ்மீரசைவம்" எனும் பெயராலேயே இற்றைவரை யாவராலும் சுட்டப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மெய்யியல் முப்பொருள் தத்துவங்களை முன்வைக்கின்றது. அவை சிவன், சக்தி, அணு (உயிர்) அல்லது பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருட்கள் அல்லது பரா, அபரா, பராபரா எனும் முச்சக்திகள் அல்லது பேத, அபேத, பேதாபேத நிலைகள் அல்லது ஸ்வாதந்தர்யவாதம், ஆபாஸவாதம், சிவாத்வயவாதம் போன்ற அம்சங்களை உள்ளடக்கி உள்ளதாலும் எடுத்துரைப்பதாலும் இது "த்ரிக" தத்துவம் என எடுத்தாளப்படுகின்றது. இதனை,

"வேதாத்சைவம், ததோவாமம், ததோதக்ஷம், ததோகுலம்/
ததோமதம், ததஸ்சாபி த்ரிகம் ஸ்ர்வோத்தமம்//"

என பராத்ரிம்சிகா கூறுகின்றது.[54] இவ்வாறான த்ரிகசாஸ்திரத்தைப் பொதுவில் ஆய்வாளர்கள் மூன்றாக எடுத்தாள்வார். அவையாவன,

1) ஆகம சாஸ்திரம்

2) ஸ்பந்த சாஸ்திரம்

3) பிரத்திய பிஞ்ஞான சாஸ்திரம்

என்பனவாகும். ஞானம், கிரியை பற்றிக் கூறுவது ஆகம சாஸ்திரம் ஆகும். இது ஆசிரியர் ஊடாக மாணவர்களுக்குப் புகட்டப்பட்டு அல்லது பேணப்பட்டு வந்துள்ளது. இவ்வாகமங்களை அருளியவன் பரமசிவன்; பரிபூரணனான அவனால் அருளப்பட்ட இவற்றின் எண்ணிக்கை அறுபத்து நான்காகும்.[55] இவை தந்திரங்கள் என எடுத்தாளப்படுகின்றன. மாலினி விஜய, விஞ்ஞான பைரவ, மிருகேந்திர, சுவச்சந்த, மதங்க, நேத்ரு, சுவாயம் பாஸ்வ, ருத்திரயாமள முதலானவை இவற்றுக்கு உதாரணங்களாகும்.[56] சைவ மீளுருவாக்கத்திற்கு முன்பே இவ்வாகமங்கள் தோன்றிவிட்டதென்றும் ஆயினும் துவைத பரமானதாகவே இவை போதிக்கப்பட்டன என்றும் இதனைத் தடுக்கவும் சிவாகமங்களின் அதியுயர் நிலை அத்வைதமே என நிறுவவும் வசுகுப்தரால் காஷ்மீர சைவம் சார்ந்து சிவசூத்திரம் எனும் முதன்னூல் ஆக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இதனை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"த்வைததர்ச நதியா அஸத்ப்ராயே ஜீவலோகே ரகஸ்ய -
ஸம்ப்ரதாயோமாவிச் சேத் இத்யாசயத :
அநுஜிக்ரு க்ஷதபரேண பரமசிவே நஸ்வப்நே அநுக்ருஹ்ய
உந்மிஷிதப்ரப க்ருத: : வஸூகுப்த:"

என க்ஷேமராஜர் கூறுகின்றார்.[57] இதற்கு மாறாக, பரமசிவன் வஸூகுப்தருக்குக் காட்சி கொடுத்து, ஸ்ரீநகருக்கருகிலுள்ள குன்றொன்றின் மேலுள்ள சிலையின் மேல் சிவோபநிஷத் - ஸங்க்ரஹ - ரூபமான; சூத்திரங்கள் இருப்பதாகவும் அதனைக் கண்டு வெளியிடுமாறும் கூறினார் என்றும் அவரும் அவ்வாறே அதனைக் கண்டு பிடித்து வெளியிட்டதாகவும் அதுவே சிவசூத்திரம் என்றும் பௌராணிக்கக் கதையுள்ளதாக க.வை.தகாரே கூறுகின்றார். ஆயினும் இன்றும் மகாதேவ கிரியில் சங்கர்பல் எனும் சிலையைக் காட்டி அதிலிருந்தே சிவசூத்திரம் கிடைத்தது என்று கூறுவதாகவும் ஆனால் தனக்கும் தன்தொல்லியல்துறை நண்பர் டாக்டர் பி.என்.புஷ்ப்புக்கும் அவ்வாறு தோன்றவில்லை என்றும் அவர் கூறுகின்றார்.[58] இக் கதையை மறுத்து பாறையில் எழுதவில்லை கனவில் சொல்லப்பட்டதென்ற கருத்தும் உள்ளது.[59] எது எவ்வாறு இருந்த போதிலும் சிவசூத்திரமே காஷ்மீரசைவ முதன்னூல் என்பதில் யாருக்கும் கருத்துப் பேதமில்லை. இந்நூல் சிவோபநிஸத் சங்கிரக, சிவரகசியாயம சாஸ்திர சங்கிரக" எனப் பலவாறு சுட்டுவர். இந்நூலுக்கு "உத்யோதம்" விருத்தி, விமர்சிநீ எனப் பல உரைகள் ஆக்கப்பட்டுள்ளன.[60] ஆயினும் இன்று சிவசூத்திர விமர்சிநீயும் சிவசூத்திர வார்த்திகமுமே கிடைக்கப் பெறுகின்றன.

வசுகுப்தரால் இயற்றப்பட்ட பிறிதொருநூல் சிவசூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த ஸ்பந்த காரிகை அல்லது ஸ்பந்த சாஸ்திரம் ஆகும். இந்த ஸ்பந்த சாஸ்திரம்[61] சூத்திரங்களால் ஆக்கப்பட்டது. இது க்ஷேமராஜரால்,

"ஸ்பந்தநம் ச கிஞ்சித் சலநம் ஏஷைவச கிஞ்சித் ரூபதா
யத்அசலமபி சலம் ஆபாஸதே..................
ஆ பாஸபேத- யுக்தமேவ ச பாதி இதி/"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என விளக்கப்படுகின்றது.[62] ஸ்பந்த - துடிப்பு அல்லது சிறிதசைவு என விளக்கப்படுகின்றது. இது ஆத்மதரிசனத்தை அடிப்படையாகக் கொண்டது. சக்தியின் சிறிதசைவே "ஸ்புரண" ஆகும். சக்தியும் சிவமும் பிறிதல்ல. அதபோல் ஆத்மதத்துவம் உணர்வும் செயலும் கூடியது. இதனை அறிதலே ஸ்பந்தசாஸ்திரம் ஆகும். இந்நூலுக்கு கல்லாடரின் வ்ருத்தி, இராமகண்டரின் வ்ருத்தி. உத்பலரின் ஸ்பந்த ப்ரதீபிகா மற்றும் க்ஷேமராஜரின் ஸ்பந்த ஸந்தோஹம், ஸ்பந்த நிர்ணயம் போன்றன உரைகளாகத் திகழ்கின்றன.

அடுத்து பிரத்திய பிஞ்ஞான சாஸ்திரம் எடுத்தாளப்படுகின்றது. இது மனை சாஸ்திரம், பிரசார சாஸ்திரம் எனப் பலவாறு சுட்டப்படுகின்றது. அறிவுபூர்வமாக மெய்யியலாராய்ச்சியில் ஈடுபடுகின்றது. ப்ரக்தியபிஞ்ஞா - நாம் பரமேஸ்வர ரூபமாக இருக்கின்றோம் எனும் உணர்வு எனப்படுகின்றது. இதன் மூலவர் சோமானந்தர்; மூலநூல் சிவதிருஷ்டி ஆநிஹம் - 7 சூத்திரம் - 700; காஷ்மீர சைவத்தின் அதியுயர் மெய்யியற் பிரமாண நூலாக இது சுட்டப்படுகின்றது.[63] ஆயினும் இது முழுமையாகக் கிடைக்கவில்லை. இந்நூல் பிறமத கண்டனங்களை நிகழ்த்தி ஸ்வதந்த்ரய வாதத்தை அல்லது ஈஸ்வராத்வய வாதத்தை முன்வைக்கின்றது. உத்பலர் இந்நூலுக்கு வ்ருத்தியுரை செய்தார். அத்தோடு ஈஸ்வர பிரத்யபிஞ்ஞான நூலையும் எழுதினார். இதற்கு அபிநவகுப்தர் ப்ரத்யபிஞ்ஞா நிவ்ருத்தி விமர்சிநி மற்றும் ப்ரத்ய பிஞ்ஞா விமர்சிநீ என்னும் உரைகளை எழுதிப் போந்தார். இவருக்குப் பின் வந்த அபிநவகுப்தரும் இவற்றை அடிப்படையாகக் கொண்டு தந்திரலோகம், தந்திர சாரம், உள்ளிட்ட சில நூல்களை ஆக்கியளித்தார். இவர் பின் வந்த க்ஷேமராஜர், பிரத்யபிஞ்ஞான ஹிருதய எனும் நூலை ஆக்கியளித்தார். இதன் பின்பும் சில நூலாக்க முயற்சிகள் இடம் பெற்றுள்ளன.[64]

பல சமய, தத்துவ மரபுகள் நிறைந்த நாட்டில் தத்தம் சமய மரபு வெற்றி பெற வேண்டுமாயின் வாதங்களுக்கு இடமளிக்க வேண்டியமை அவசியமாகின்றது. சோமானந்தரின் நூல்கள் மற்றும் அவரது சீடர்களது நூல்கள் பிற மத கண்டனங்களை மேற்கொண்டதோடு தமது மெய்யியற் கருத்துக்களைக் கூறி நிரூபணம் செய்யவும் முற்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிரமதரிசனம்**

முன்னே கூறியது போல காஷ்மீர் பல தரிசனங்களினதும் சமயங்களினதும் வாழ்விடம் ஆகும். அந்தவகையில் காலி[65] எனும் சக்தி வழிபாட்டின் முக்கிய இருபிரிவுகளாகக் காஷ்மீரத்தில் நிலவியவை கிரமதரிசனம், குலதரிசனம் என்பனவாகும். இவ்விருதரிசனங்களும் ஒன்றோடொன்று இணங்கியும் பிணங்கியும் வழி நடத்துள்ளன. கிரதரிசனம் காஷ்மீர சிந்தனை மரபில் ஏனையவற்றிலிருந்து தனித்துவம் வாய்ந்த சமயமரபு, தத்துவமரபு, வரலாறு, குருசீடபாரம்பரியம், நூல்கள் அல்லது இலக்கியங்கள் உடையதாகத் திகழ்கின்றது.

"கிரம தர்சன" என்பதன் பொருள் "விகல்ப சம்ஸ்காரத்தி" அதாவது தூய்மைப்படுத்தல், ஏற்றுக்கொள்ளுதல் எனச் சுட்டப்படுகின்றது.[66] இத்தூய்மையாக்கல் ஒன்றன் பின்னொன்றாக கட்டங்கட்டமாக மேற் கொள்ளப்படுவதென்றும் இக்கட்டங்களினூடு மேலும் மேலும் தெளிவுற்று வருமென்றும் அபிநவகுப்தர் கூறுகின்றார்.[67] இதுவே உண்மை வழியாகவும் எடுத்தாளப்படுகின்றது. மேலும் இது "காலீநய, தேவீநய, மஹாநய, அதிநய எனப் பலவாறு அழைக்கப்படுகின்றது. "மஹார்த்த தரிசன" என மஹேஸ்வரானந்தர் இதனைச் சுட்டுவதாகவும் கூறப்படுகின்றது.[68]

கிரமதரிசனம் பல மரபுகளை உடையது; அம்மரபுகளிலொன்று "அவுத்தராம் நய" என்பதாகும். இது உத்தரபீடமாகிய காஷ்மீரில் சிவ அல்லது பைரவரில் இருந்து தோற்றம் பெற்றது. சிவத்திடம் இருந்து முதல் உபதேசம் பெற்றவர் இச்சாசக்தியாகிய பைரவீ ஆவார். இவ்வாறான கருத்தாடலை ஜயரதர் ஏற்காது நிராகரித்து உத்தரபீடத்துக்குரிய சிவானந்தரே முதலாமவர் என்கிறார். இவர் கிரம தத்துவங்களை பைரவியிடம் இருந்து கற்றுக் கொண்டதாகக் கூறப்படுகின்றது.

இக்கிரமதரிசனம் கி.பி. நான்காம் நூற்றாண்டிற்குரியதாகச் சுட்டப்படுகிறது. சிவானந்தரின் காலமும் இதுவாகவே இருக்கமுடியும் என்பர். ஏனெனில் ஜயரதர் கூறிய சிவானந்தரும் மஹேஸ்வரானந்தர் கூறிய சிவானந்தரும் ஒருவரே எனக் கருதின் மஹார்த்த என்பது கிரமத்தின் பிறிதொரு பெயர் என்றும் "மஹாநய," என ஜயரதர் மேற்கொள்களில் குறிப்பிடுவது கிரமம் பற்றியதே எனவும் K.C. Pandy குறிப்பிடுகிறார்.[69]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரம தரிசனம் சிறப்புற்று விளங்கிய காலமாக கி.பி 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகள் கூறப்படுகின்றன. இடையீடு இன்றி இத்தரிசனம் காஷ்மீரில் நிலவி இருக்கின்றது. காஷ்மீரில் நிலவிய மிகப் பழமையான ஒருமைவாத சைவமாகவும் இது எடுத்தாளப்படுகின்றது. ஆகமத்தை அடிப்படையாகக் கொண்டு ஆத்மீகப் பரிசோதனை செய்யும் இத்தரிசனம் இறுதிப் பொருளை சக்தி எனக் கொள்கின்றது. ஆனால் இத்தரிசனத்தைப் பின்பற்றியோர் சைவர்கள் என்றே குறிப்பிடப்படுகின்றனர். இந்த வகையில் சோமானந்தர் இதனைக் கண்டிப்பார்.[70] "தஸ்வயூத்தியா" என உரைப்பதனூடாக (இதன் விளக்கம் - ஒரே பட்டிக்கு உரியவை) இது ஒருமைவாத சைவத்துக்கு, பிரத்தியபிஞ்ஞானத்துக்கு இணையானதாக எடுத்தாளப்படுகின்றது.

சிவானந்தர் மூன்று பெண் துறவிகளுக்கு இத்தரிசனங்களைக் கற்பித்ததாக அறிய முடிகிறது. அவர்கள் கெயூரவதி, மதனிகா, கல்யாணிகா, எனும் பெயர்களால் சுட்டப்படுகின்றனர். இவர்கள் இவற்றை கோவிந்தராஜர், பானுகா, ஏரகர் எனும் மூவருக்கும் இன்னும் சிலருக்கும் உபதேசித்ததாகக் கூறப்படுகின்றது. கோவிந்தராஜரே சோமானந்தரின் ஆசிரியர். பானுகவிடம் இருந்தும் உஜ்ஜட்ட முதலானோர் உள்ளிட்ட சீடபரம்பரை மரபு ஒன்று உற்பத்தியாகியது. ஏரகருக்கு சீடமரபு இருந்ததாக அறியக் கிடைக்கவில்லை. மேற்படித் தகவல்கள் ஜெயரதரின் கிரமகெலியில் இடம்பெற்றுள்ளது. இவர்களைத் தவிர ஹிரஸ்வ நாத, போஸராஸ, சோமராஸ, போன்றவர்களும் கிரமதரிசன ஆசாரியர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். இத்தரிசனத்தின் முதலாசிரியரான சிவானந்தர் "அவதாரக நாத" என அழைக்கப்படக் காரணம் அவர் கிரமதரிசனத்தை பரவச் செய்தமையே ஆகும்.

## கிரமதரிசனம் சார்ந்த இலக்கியங்கள்

ஆகமத்தை அடிப்படையாகக் கொண்ட இக்கிரமதரிசனம் தனக்கான தனித்துவமான இலக்கியங்களைக் கொண்டிருக்கவும் தவறவில்லை.

1) பூர்வாகமங்கள்

2) ஆரம்ப நிலை ஆசிரியர்களுடையவை (சிவானந்தர் - ஏரகர் முதலானோர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) நூலாசிரியர் தெரியாத நூல்கள்

4) அபிநவரும் அவருடைய சீடர்களும் எழுதியளித்தவை.

என *K.C.Pandy* நால்வகைப்படுத்துவார். மேலும் அவர் தந்திரலோகத்திலும் மஹார்த்த மஞ்சரியிலும் கூறப்படும் பரந்த கிரம இலக்கியங்கள் தற்காலத்தில் தொலைந்து விட்டன என்றும் ஆயினும் அவற்றிலிருந்து சில எடுகோள்கள் வேறு நூல்களில் எடுத்தாளப்பட்டுள்ளன என்றும் அவற்றினூடாக அந்நூல்கள் இருந்தமையை அறிய முடிகிறது என்றும் கூறுகின்றார்.[71]

பூர்வாகமங்களுள் இன்று கிடைப்பன கிரம சத்பாவ, கிரமசித்தி, பிரமயாமளா, தந்திரராஜ, பட்டாரக போன்றன. கிரமசத்பாவ, சிவனுக்கும் பார்வதிக்குமான உரையாடலாக அமைந்துள்ளது. பேசுபவர் பார்வதி. கேட்பவர் - சிவன் இது பிற ஆகமமரபிற்கு நேரெதிரான தன்மையாக அமைந்துள்ளது. இது கிரமதரிசனத்தில் சக்தி பெறும் முதன்மைக்கு நற்சான்றாகின்றது. ஒன்பது சக்தி வழிபாடு, சக்தி சார்ந்த தனித்துவ வழிபாடு, சிருஷ்டியைப் பலவாறு பகுப்பாய்வு செய்து பத்து சக்திகளைக் கூறல், பதியின் ஐந்து சக்திகள், வழிபாடுகள் பற்றிக் கூறல் எனும் நான்கு எடுத்துக்காட்டுகள் மூலம் மஹார்த்த மஞ்சரி கிரமதரிசனம் பற்றியும் அதில் சக்தி பெறும் இடத்தைப் பற்றியும் கருத்துரைக்கின்றது. மேலும் மஹார்த்த மஞ்சரி,

> "தன்மெ கதய அஸ்ரோணி விஸ்தரன யதாவிதி
> புராயத் கதிதம் தெவ பஞ்சவாக மகாஹிரமம்"

எனச் சுட்டுகிறது.[72] அந்தவகையில் இதுவே கிரமதரிசனத்தின் முதன்னூலாக இருக்க வேண்டும். ஐயரதரும் தந்திரலோகத்திலிருந்து அபிநவர் கிரம எனக் குறிப்பதை கிரமதரிசனம் என்று கூறுவதோடு கிரமசத்பாவ பற்றியும் குறிப்பிடுகின்றார். மேற்கோள் காட்டுகிறார். கிரம சத்பாவ கூறும் பன்னிரு காலீகளைப் பற்றியும் கூறியுள்ளார்.

கிரமசித்தி கிரம தரிசனத்தின் இரு மரபுகளைச் சுட்டி நிற்கின்றது. மஹாதேவன் கூற பார்வதி கேட்டல்[73] பார்வதி கூற, மஹாதேவன் கேட்டல்[74] என்பன அவையாகும். பிரமயாமளா பன்னிரு காலீகளில் ஒருவரான ரக்தாவை தியானிப்பதை ஒரு பகுதியாகக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ததா ரத்தாதேவி தவ சகலபாஷேஶ தனுமா" எனக் கூறப்படுகின்றது.[75] ஆசாரியன் இல்லாமல் முக்தியடைதல் பற்றி இந்நூல் எடுத்துரைக்கிறது. தந்திரராஜ பட்டாரக, பதின்மூன்று காலீகள் பற்றிக் கூறுகிறது.[76]

கிரமதரிசனத்தின் தொன்மை வாய்ந்த ஆசிரியர்களை அல்லது ஆசாரியர்களை அறிய முடியவில்லை. இதர நூல்களில் இடம்பெற்றுள்ள எடுகோள்களின் ஊடாகவே அறியமுடிகிறது. அவர்களுள் சிவானந்தநாதர், ஹருஸ்வநாதர், ஏரகர், ஷேமராஜர் போன்றோர் முதன்மைப்படுத்தப்படுகின்றனர். நூலாசிரியர் யாரெனத் தெரியாத நூல்களாக "கிரமசூத்திரம், கிரமோதய, பஞ்சசதிக, சார்தாஸ்சதிக, கிரம ஸ்தோத்திரம் மகாநய பிரகாச, மஹாநய பத்ததி என்பன கூறப்படுகின்றன. இவை பொதுவில் சிவ சக்தி வழிபாடு, கலைகள், சடங்கு என்பன பற்றிக் கூறியுள்ளன.

அபிநவகுப்தரும் அவரது மாணவர் பரம்பரையும் கிரமதரிசனம் சார்ந்த பல நூல்களை ஆக்கித்தந்துள்ளனர். அந்தவகையில் அபிநவகுப்தர் கிரமகெலி, கிரமஸ்தோத்திர, தொஸ்த வேததாசக்கர ஸ்தோத்திர, ஷேமராஜரால் கிரம சூத்திர விருத்தி, மஹேஸ்வரானந்தரின் குருவின் குருவினால் (பரமகுரு) கிரமவாகனா மற்றும் ரிஜூவிமர்சினீ *(Rjuvimarsini)* ஜயரதரின் தந்திராலோக விவேகா என்பன குறிப்பிடத்தக்கன.

**மெய்யியல் மரபு**

கிரமதரிசனம் கி.பி 4ம் நூற்றாண்டிலேயே வளர் நிலையில் காணப்பட்டிருப்பினும் கி.பி 7ஆம் 8ஆம் நூற்றாண்டுகளிலேயே பெருவழக்காயிற்று. இடையீடின்றி காஷ்மீரத்தில் வளர்ந்த தரிசனங்களில் இதுவுமொன்று. ஆகம மரபில் இருந்தே இத்தரிசனத்தின் மெய்யியல் மரபு ஆரம்பமாயிற்று. இது பின்பற்றும் ஆகமங்களின் போக்குகள் - கருத்து நிலைகள் இத்தரிசனத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த வகையில் இத்தரிசனத்தில் கடவுள் சார்ந்த கருத்து நிலையில் இரு செல்நெறிகள் சமாந்தரமாகப் பயணித்துள்ளன.

1) சிவத்தை இறுதிப் பொருள் என்றும் அவனின் வெளிப்பாடாக "வியோமா மாமேஸ்வரி"யையும் சுட்டுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) கால சங்கர்சினியாகிய காலீயை இறுதிப் பொருளாகவும் எல்லாவற்றையும் கடந்த வியோமா மாமேஸ்வரியாகவும் சுட்டுதல்.

முன்னே குறிப்பிட்டது போல் கிரம சத்பாவவில் சக்தி கூறச் சிவன் கேட்கிறார். ஆனால் கிரமசித்தியில் இவ்விரு மரபும் காணப்படுகிறது. சோமானந்தர் சக்தியை இறுதி உண்மைப் பொருளாக் கொள்வதை நிராகரித்தார். இவர் பெண்பாலை ஆண்பாலின் ஒரு வடிவமாகக் காணுதலை இலக்கணமாகக் கொண்டார். அதனூடாக சக்தி இறுதிப் பொருளாகாது எனக் குறிப்பிட்டார். இந்தவகையில் காஷ்மீரின் சிறந்த சிந்தனையாளரான சோமானந்தர், முதல் மரபை அதாவது சிவத்தை இறுதிப் பொருளையும் காலசங்கர்னீயை அவரின் வெளிப்பாடாவுமே கூறி நிற்கின்றார்.[77]

இரண்டாவது மரபை ஆதரிக்கும் முதல்வராக அபிநவகுப்தர் காணப்படுகின்றார். காலீயே இறுதிப் பொருள்: பராஸம்வித் அவளே ஐந்தொழிலையும் புரிபவள் எனப் பலவாறு சுட்டுகின்றார். மேலும் மஹேஸ்வரானந்தர், "வர்ஹா பரமேஸ்வரஸ்யிய ஸ்பூரண தாரா" எனச் சக்தியைக் குறிப்பிடுகிறார்.[78] காலசங்கர்னீ எனும் எல்லாம் தழுவிய தத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் போதும் பால்நிலைக்கு (ஆண்-பெண்) முதன்மை கொடுக்காது பரமேஸ்வரனே ஐந்து சுழிகள் அல்லது நீரோட்டங்களுக்குக் காரணன் என்கிறார். ஆயினும் பொதுவில் கிரமதரிசனம் சக்திக்கு முதன்மை கொடுக்கின்றது. அதனால் சாக்தத்துக்கும் கிரமதரிசனத்துக்கும் தொடர்புள்ளது என்பது தெளிவாகின்றது. சாக்தத்தின் இரு இயல்புகள் கிராமத்தில் உள்ளன. அவை,

1) இறுதிப் பொருளைப் பெண்பாலாகக் கொள்ளல்.

2) பஞ்சமகரம், மாதிரா, மாம்சா, முத்ரா மைதுன என்பதைச் சடங்கின் போது பயன்படுத்தல்.

என்பனவாகும்.[79] கிரம தரிசனத்தில் சடங்கு பற்றி எழும் ஒழுக்கச் சீரழிவுப் பிரச்சினைக்குக் காரணங்களாக பஞ்சமகரம் (மீன்), மாதிரா (மது), மாம்சா (இறைச்சி), மைதுன (உடலுறவு) என்பன கூறப்படுகின்றன. அபிநவரின் எழுத்துக்களிலும் இவை பற்றிக் காண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகின்றது. அத்தோடு அவர் வைதிக சடங்குகளில் மது பயன்படுத்தப்படுதலையும் (உதாரணம் : சௌத்திரா மணி சடங்கு) நரமேதவில் ஒரு பிராமணனை இன்னொரு பிராமணன் கொல்லுமாறு வேண்டப்படுதலையும் சுட்டுகின்றார்[80] மிகப் பழைய காலத்தில் ரிஷிகள் மாட்டிறைச்சியை உண்டுள்ளனர். மனித மாமிசத்தையும் விட்டு வைக்கவில்லை என்கிறார். மேலும் சுத்தம் - அசுத்தம் பற்றிய உரையாடலையும் நிகழ்த்தி சம்வித்தோடு தொடர்புபட்டது சுத்தம், தொடர்புறாதது அசுத்தமென்றும் முழுப்பிரபஞ்சமும் அஹத்தோடு தொடர்புற்ற நிலையில் சுத்தம், அசுத்தம் முதலான பேதங்கள் இல்லை என்றும் கூறி கிரம சடங்கு தொடர்பான சமரசத்தை - சமாதானத்தை முன்வைக்கின்றார். மேலும் விலக்கப்பட்ட செயல்கள் வேள்வியில் பயன்படுத்துதல் மிக இரகசியமாகப் பேணப்பட்டது. ஆன்மீக உயர் மட்டத்தை அடைந்த மிகச் சிலருக்கே இது அனுமதிக்கப்பட்டது. எனவே அவர் சமூக ஒழுக்கத்தைக் குழப்பமாட்டார். சாதாரணன் இதனைச் செய்ய முடியாது என்கிறார். கிரமதரிசனம் "பஞ்சார்த்த கிரமபதவீ" எனப்படுகின்றது. ஐந்து எண்ணக்கருக்களைக் கொண்டமைவதனால் இப்பெயர் வழங்கப்பட்டதாகச் சுட்டப்படுகின்றது எனச் ஷேமராஜரும் மஹேஸ்வரானந்தரும் கூறுகின்றனர். பரம்பொருள் தன்னை ஐந்து வழிகளில் வெளிப்படுத்துவதால் "பஞ்சவா" எனப்படுகிறது. அவை வியாமமாஹேஸ்வரி, திக்சரீ, கேசரீ, கோசரீ, பூசரீ என்பன. கடவுளின் சக்திகள் சிருஷ்டி, திதி, அநாக்கியா, பாஷா, சம்கார என்பனவாகும். பேச்சின் கூறுகளையும் பரா, சூக்கும, பஸயந்தி, மத்தியம, வைகரி என ஐந்தாக எடுத்துரைக்கின்றது. பரம்பொருளின் அகவயச்சக்திகளும் சித், ஆனந்த, இச்சா, ஞானா, கிரியாசக்திகள் என ஐந்தாகவே எடுத்தாளப்படுகின்றன.

பௌதிக அதீதத்துவமான காலீயை விளக்கும் போது "காலீ" எனும் சொல் "கல" என்னும் அடிச் சொல்லினின்றும் பிறந்ததாகவும் "கல" - வெளிவிடுவது, அறிதல், எண்ணுதல், ஒலித்தல் எனப்பலவாறு பொருள் சுட்டிநிற்பதாகவும் எடுத்தாளப்படுகின்றது. மேலும் இது உள்ளிருப்பதை வெளிக் கொணர்வது அவ்வாறு தன்னை ஒத்ததாக வெளிப்படுவதைப் பற்றிக் கொள்வது வெளிப்படுத்தப்பட்ட ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்து அடையாளம் காணுவதோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தப்பட்டது தன்னோடு தொடர்புடைய பிம்பம் - பிரதிபலிக்கும் தளம் என்பவற்றிற்கு உள்ள தொடர்பைப் போல என்றும் வெளிப்பட்ட எல்லாவற்றையும் மறைத்து அவற்றிற்கே இயல்பான வடிவில் தூய சுயப்பிரக்ஞையாக ஒளிவீசுவது எனப் பலவாறு எடுத்தாளப்படுகிறது.[81]

இவ்வாறு பல வடிவங்களை அது எடுத்தாலும் அது பராசம்வித்தாகப் பாதிப்படையாமல் இருக்கும். ஏனெனில் ஏனைய யாவும் காலத்துடன் சம்பந்தப்பட்டவை. காலீ காலத்தைக் கடந்தது. இக்காலீயை "மாத்திரு சத்பாவ, காலசங்கர்னீ, வியோமாமேஸ்வரி" எனக் கூறுவர். அனுபவத்தில் ஏற்படும் விடயம், விடயி உள்ளிட்ட அனைத்தும் பிரபஞ்சத்தின் வெளிப்பாடே. பிரபஞ்சமோ கட்டுக்கள் அற்ற சக்தியின் வெளிப்பாடு ஆகும். இவ்வடிப்படையிலேயே காலீ, மாத்திரு சத்பாவ எனச் சுட்டப்படுகின்றது. ஒன்றன்பின்னொன்றாக நிகழ்கின்ற காலீ வடிவங்களை அனுபவித்து ஆன்மா விடுதலை பெறுகின்றது.

கருத்தை அல்லது எண்ணத்தை தூய்மைப்படுத்தல் அல்லது சுத்திகரித்தலே விடுதலைக்கான வழியாக எடுத்தாளப்படுகின்றது. எனவே பருப்பொருளை முடிவிற்கும் முடிவற்ற இறுதி நிலைக்கும் இடைப்பட்ட படிநிலையை ஆராய்ந்து கிரம தரிசனமானது இறுதியில் அடைய வேண்டிய முடிவற்ற பொருள் "பரா" எனக் கொண்டு அதனை, "மகா பைரவ சந்தோக்கிர கோர காலீ" எனக்கூறும்.[82] அதனை அடைய பதினொரு கட்டங்கள் கூறப்பட்டு அவை பராஸம்வித்தின் தோற்றங்களாகவும் சிருஷ்டி காலீயாகவும் எடுத்தாளப்படுகின்றன. இவ்வாறு ஒன்றன் பின்னொன்றாக வரும் பன்னிரு காலீகளையும் அல்லது காலீ வடிவங்களையும் அனுபவித்து விடுதலை பெறுகின்றது ஆன்மா என்பர்.

ஆக, காஷ்மீரின் தொன்மைத் தரிசனமான கிரமதரிசனம் காலீக்கு முதன்மை கொடுத்து அவளைத் தியானித்து சடங்கினூடாக அவளை அனுபவித்து விடுதலை பெறுவதைப் பற்றிக் கூறுகின்றது. இதன் ஒழுக்கமீறலான சடங்கு சம்பிரதாயங்கள் பிற்கால வீழ்ச்சிக்குக் காரணமெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குல தரிசனம்**

கிரமதரிசனத்திற்கு சமாந்தரமாகவும் அதனோடு ஒத்தும் பயணித்த இன்னொரு தரிசனம் குல தரிசனம் ஆகும். இது கிரமத்திற்கும் முந்தியது என்பர். மீன சித்தர் என அழைக்கப்படும் மச்சதந்தரால் உருவாக்கப் பட்டது. இவர் ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். கிரம தரிசனத்தைப் போல குலதரிசனமும் தனக்கான இலக்கியங்களைக் காவு கொடுத்து விட்டது. பிற நூல்களின் மூலமே அவை அறியப்படுகின்றன.

திரியம்பகரால் உருவாக்கப்பட்ட திரியம்பகப் பிரிவிலிருந்து அர்த்ததிரியம்பகம் எனும் புதிய பிரிவொன்று உருவானதாகவும் அது குலதரிசத்துடன் இனங்காணப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. கி.பி 4ம் நூற்றாண்டளவில் இது உருவானதாகக் கூறப்படுகின்றது. இக்குலதரிசனம் சுமதிநாதர், சோமதேவநாதர், சம்புநாதர், அபிநவகுப்தர் போன்ற ஆசாரியர்களால் வளர்த்தெடுக்கப்பட்டது. அபிநவகுப்தர் (ஏறத்தாழ) 23 நூல்கள் குலதரிசனம் பற்றி எழுதியதாகக் கூறப்படினும் அவை கிடைத்தில. அபிநவகுப்தரால் விளக்கப்படும் எட்டு யாமள தந்திரங்களில் ஒன்றான உருத்திரயாமள தந்திரம் குல தரிசனக் கருத்துக்களைப் பெரிதும் ஒத்துள்ளது என்பர்.

ஆகமங்களில் குல - கௌலௗ எனக் கூறப்படுகின்றது. கௌல தரிசனமானது, தட்சணமார்க்கம், வாமமார்க்கம், இருமைச்சைவம், வேதங்கள் என்பவற்றிலும் மேலானது என்றும் கௌலத்தை விட உயர்ந்தது வேறு எதுவும் இல்லை என்றும் கூறுவர்.[83] சோமானந்தரின் பிரத்திய பிஞ்ஞானத்திலும் முந்தியதாகக் குல எடுத்தாளப்படுகின்றது.

இக்குலதரிசனம் காலங் காலமாக இருந்து வருவதாக பௌராணிக உரையாடல்கள் உள்ளன. சத்தியயுகத்தில் தாகந்திரர், கிரேதாயுகத்தில் கூர்மா, துவாபர யுகத்தில் மேஷா, கலியுகத்தில் மச்சந்தர் குல தரிசனத்தைப் பரப்பியதாக நம்பப்படுகின்றது. இத்தரிசனத்தைப் பின்பற்றும் சான்றோர்கள் வாழுமிடங்கள் ஹாரம் எனவும் பிச்சையெடுத்த இடங்கள் பள்ளி எனவும் ஞானம் பெற்ற இடங்கள் பீடம் எனவும் அழைக்கப்படுகின்றன. அமர, வரதேவ, சித்திர, பிநாத, வித்திநாதர், புடிநாதர் மற்றும் பிரமச்சாரிகளான பட்ட, இந்திரா, அகிந்திரா, கஜேந்திர,[84] ஆகியோர் குலதரிசனவாதிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டப்படுகின்றனர். குலதரிசனம் 9ஆம் நூற்றாண்டிலேயே சிறப்புற்றுக் காணப்பட்டது. அதற்கு சுமதிநாதர், சோமதேவர், சம்புநாதர், உள்ளிட்ட குருபரம்பரை பெரும் பணி புரிந்தது. அபிநவர் தமக்கு முந்திய "டச்சுஷ்ம, உக்கிர, சவர, கண்டகு, மாதங்க, ஹர, அண்டக, உக்கிர, அலகலக்க, குரோதி, குலுகுலு முதலான பத்து ஆசாரியார்களை முதன்மைப்படுத்துகின்றார்.[85] ஆயினும் தந்திரவழிப்பாடு சார்ந்த "மது, மாது, மாமிசம் போன்ற அம்சங்களின் முதன்மை இதன் பிற்கால வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று.

## குல தரிசன இலக்கியங்கள்

முன்னே கூறியது போல குலதரிசனஇலக்கியங்கள் பெரிதும் கிடைத்தில. வேறு நூல்களில் உள்ள குறிப்புக்கள் மூலம் மட்டுமே அறிய முடிகின்றது. குல தரிசனம் சார்ந்த ஆகமங்களாக சித்தயோகீஸ்வரீதந்திர அல்லது சித்த யோகீஸ்வரீமாதா, ருத்திரயாமள தந்திர, உள்ளிட்ட யாமளதந்திரங்கள், குலார்ணவ தந்திர போன்றவற்றை உதாரணங் களாகக் கூறலாம். இவை தவிர தந்திரலோகம், பராத்திரும்சிகா, பஞ்சாகிக போன்றவை குல பற்றிக் கூறும் முக்கிய நூல்களாகும். உச்சுவர், நிஷ்கிரியானவர். சுமதிநாதர், சம்புநாதர், மீனசித்தர், குலுகுலு போன்றோர் பல நூல்களை ஆக்கியிருந்தும் அவை கிடைத்தில. அபிநவகுப்தர் குலதரிசனம் சார்ந்த பத்து ஆசிரியர்களைக் குறிப்பிடுகின்றார்.[86] இவைதவிர மாலினி விஜய, மஹார்த்தமஞ்சரி முதலான நூல்களிலும் "குல" சார்ந்த குறிப்புக்கள் உள்ளன.

பராத்திருச்சிகா அகுல, குல, கௌலகீ சக்தி பற்றியது; பராத்திரும்சிகா ஒரு குலதரிசனநூல் என்கிறார் K.C பாண்டே.[87] சோமானந்தரின் இந்நூலுக்கு அபிநவர் வ்ருத்தி செய்துள்ளார். சோமானந்தரின் காலத்திற்குப் பின் குலதரிசனத்தை காஷ்மீருக்கு வெளியே ஜாலந்திராவிற்கு போய் சம்பு நாதரிடம் கற்றதாகவும் கூறப்படுகின்றது.

## மெய்யியல் மரபு

முடிந்த முடிவு குல என்பதே; அது அதி உயர் தன்மை வாய்ந்த சிவத்தையும் தாண்டியது. இதிலிருந்தே முழுப்பிரபஞ்சமும் தோன்றியது. சிவம் என்றோ சக்தி என்றோ கூறமுடியாதது. எல்லாம் கடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரக்ஞையின் ஒளி இது. பூரண சுதந்திரம் உடையது. இதற்கு அப்பாற்பட்டதாய் எதுவுமே இல்லை.

"குல" என்பதை அடிப்படை உண்மைப் பொருளாகக் கொண்டு விளங்குவது குல தரிசனம் ஆகும். இதன் வழியிலேயே முழுப் பிரபஞ்சமும் அமைவதாகவும் அதனுடன் இணைவதாகவும் சிவன் எனும் ஒரு சக்தியாகக் கருத முடியாததாகவும் உணர்வு கடந்த பூரணமான ஒன்றாகவும் எடுத்தாளப்படுகின்றது. பிறிதொரு வகையிற் கூறின் சிவத்திற்கும் அப்பாற்பட்ட ஒரு உண்மைப் பொருளாக எடுத்தாளப்படுகிறது. சிவத்தின் முதற் தோற்றப்பாடு அகுல எனவும் அதற்கப்பாற்பட்டது எதுவுமில்லை என்றும் கூறப்படுகின்றது.

குலதரிசனம் கிரமவில் இருந்து பெரிதும் வேறுபடவில்லை மஹார்த்தமஞ்சரியில் கிரமதரிசனம் பற்றிக் கூறியவை குலதரிசனத்திற்கும் பொதுவானதே.[88] மாலினி விஜய வார்த்திகாவில் அபிநவர் கூறியதையும் வைத்துப் பார்க்கும் போது கிரம தரிசனத்தில் தொடங்கி குலதரிசனத்தில் முடிவடைகிறது.[89] மேலும் இது வாம சாஸ்திரத்திற்கும் குலவிற்கும் உள்ள தொடர்பினை வெளிப்படுத்து கின்றது. தந்திரலோக விவேகாவில் அபிநவர், "குல, திரிகவின் சகோதரியே கிரம" என்கின்றார்.[90] அபிநவர் கூறியதை அடிப்படையாக வைத்துக் கொண்டு மஹேஸ்வரானந்தர் இன்னும் ஒரு படி மேலே சென்று இரண்டும் ஒரே இனம் என்றும் கிரமகெலி எனும் அபிநவரின் நூலை குல ஆகமம் என்றும் கூறுகிறார்.[91] இதே போல ஜயரதர் காலீநய எனக் குறிப்பிடப்படும் வாமேஸ்வரியை கௌலிகி வித்யா என்று குறிப்பிடுகின்றார்.[92]

கிரமதரிசனத்தைப் போல குலதரிசனத்திலும் காலசங்கர்னீயே முதன்மை பெறுகிறாள். வாமேஸ்வரியாக காலீ அவதரித்தபோது வெளிப்படுத்தியதே குலதரிசனம் எனவும் அதன் ஒரு கூறே கிரமம் எனவும் எடுத்தாளப்படுகின்றது. இக்காரணத்தினாலேயே வாமேஸ்வரி வியமோமாமேஸ்வரி என அழைக்கப்படுகின்றாள். குலதரிசனம் தனக்கே உரிய முறையைக் கைக்கொண்டு கௌலிகீ சக்தியோடு தன்னை இனங்கண்டு கொண்டது. அதனுடன் அகுல, அநுத்தா என்பன பிரிப்பின்றி பிணைந்துள்ளன. பன்னிரு காலீகளை குலமும் ஏற்று நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குல தரிசனத்தில் சிவமும் சக்தியும் இணைந்த நிலையே முதன்மைப்படுத்தப்படுகின்றது. இவ்விணைவு சில சடங்குகளுடன் இணைந்ததாக அமைந்துள்ளது. குல தரிசனத்தில் சடங்குகள்,

(i) அகநிலை சார்ந்தவை

(ii) புற நிலை சார்ந்தவை என இரண்டாக எடுத்தாளப்படுகின்றன.[93]

கௌலீசம் ஏகன்மவாத சிந்தனை மரபைச் சார்ந்தது. ருத்திரமான தந்திரத்தைப் பின்பற்றுகின்றது. சிவ, சக்தி சேர்க்கையை ஆத்மார்த்த நோக்கில் வற்புறுத்துகின்றது.[94]

அதேவேளை மேற்சொன்ன அக, புறச்சடங்குகளில் மது, மாமிசம், உடலுறவு அல்லது பெண் முதன்மைப்படுத்தப்படுகின்றது. அபிநவகுப்தர் "யூபினியூ" என அழைக்கப்படுகின்றார். அவரது பெற்றோர் குல தரிசனத்தைப் பின்பற்றி உடலுறவு கொண்டு பெற்ற மகனிவராவார். "மதுராஜயோகி" எனும் ஓவியர் வரைந்த படத்தில் சிவரசம் (மது) ஏந்திய தாதிகளால் சூழப்பட்டவராக அபிநவகுப்தர் வீற்றிருப்பதாக வரையப் பட்டுள்ளது.[95]

கௌல தரிசனத்தின் சாராம்சம் பராத்திரும்சிகாவில் முதன்னான்கு சூத்திரத்தில் உள்ளதென்றும் இப்போதனையைப் பின்பற்றுபவர் "துவைத" என்ற பொய்மையை மறந்து "அநுத்தர" நிலையை அடைவர்; ஜீவன் முக்தர் ஆவர் எனவும் சுட்டப்படுகின்றது.

"குல" ஏகான்மவாதமாகத் திகழ, த்ரிக முற்று முழுதாக ஏகான்மவாதமாகத் திகழ்கின்றது. லிங்கம், சடாமுடி, சாம்பற்பூச்சு என்பவற்றை குலதரிசனம் தடை செய்கின்றது. திரிக தரிசனமோ இவ்வாறான விதிகள் எவற்றையும் விதிக்கவும் இல்லை; பரிந்துரைக்கவும் இல்லை. அதேவேளை வாம, தட்சண, மரபு சார் பண்புகள் குலவில் காணப்பட்டாலும் குல வேறு; தந்திர வேறு. இதனை அபிநவர் தந்திர லோகத்தில் இருமரபு ஆசான்களுக்கும் தனித் தனியே வணக்கம் கூறுவதனூடாக விளங்கிக்கொள்ளலாம்.[96] குல சாம்பவோபாயத்திற்கே முதன்மையளிக்கின்றது. அச்சாம்பவோ பாயத்தைப் பின்பற்றாத வர்களுக்குப் புறச்சடங்குகள் முன்மொழியப் படுகின்றது. ஆயினும் கௌலீசம் கீழ்மட்டத்தவரைப் புறச்சடங்கு களிலிருந்து விலக்குவதும் சுட்டத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை தத்துவ மரபிற்கு உட்பட்ட ஒரு தரிசனமாகவும் இது காணப்படுகின்றது. பரா பற்றிய எண்ணக்கரு, குலதரிசன வகைகளின் அமைவாக இந்திய மொழி நெடுங்கணக்கு விளக்கம் என்பவற்றினூடாக எடுத்தாளப்படுகின்றது.

பரா, அபரா, பராபரா எனும் கருத்து நிலைகளின் வழி சிவன், சக்தி, நான் எனும் மூன்று அம்சங்களையும் இத்தரிசனம் வலியுறுத்துகின்றது. பராவை முதன்மைப்படுத்துகின்றது. இத்திரிக தத்துவங்களை ஸ்ரீ சக்கரத்தினூடு விளக்கி நிற்கிறது.

இதர தரிசனங்களின்றும் மாறுபட்டு முக்திக்கு வழியாக சாம்பவோபாயத்திற்கு முதன்மை அளிக்கின்றது. இது இச்சாமாத்திரத்தில் பரம்பொருளின் சாமவேசத்தைப் பெறுதலாகும். மனமுயற்சியின்றி இச்சை முழுமையாக அறிவை அடைய வழிகாட்டி நிற்கும்.

கௌலீசம் திரிக எனக் கூறும் மூன்று சக்திகளையும் ஏற்றுக் கொள்கின்றது. சித் (அநுத்தர), இச்சாசக்தி, உன்மேஷசக்தி என்பவை அவையாகும். இவற்றின் "லயம்" பொருந்திய சேர்க்கையைப் பற்றிப் பேசுகின்றது. இச்சக்திகள் மூன்றும் மூன்று வழிகளில் இறுதிப் பொருளைச் சென்றடையும் எனக் கூறுவதனூடு அநுத்தர வேறு, பைரவ பேறு என்பதையும் எடுத்துரைக்கின்றது. அதேவேளை இம்மூன்று சக்திகளும் தனித்துவமானவையல்ல. "சுவாதந்தர்ய" சக்தியின் வெளிப்பாடு களே எனக் கூறுவதனூடு ஒருமைவாதத்தை முன்வைப்பர்.[97]

**ஒருமைவாத சைவம்**

காஷ்மீரசைவம் தன்னகத்தே இரு கருத்தியல்களைக் கொண்டமைந்துள்ளது. அவை,

1) அத்வைத பரமான த்ரிகம்

2) துவைத பரமான சித்தாந்த சைவம்

என்பன. இங்கு "த்ரிக" என்னும் சொல் "மூன்று" என்ற பொருளுடையது. பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளை எடுத்துரைத்து அவை அநாதியானவை என்கின்றது. முப்பொருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்ளும் த்ரிக தத்துவம் எவ்வாறு ஒருமை வாத சைவம் ஆகின்றது என்பதை ஆராய்வோம்.

காஷ்மீர த்ரிக தத்துவவாதிகள், நித்ய வஸ்துவாக சிவத்தைக் குறிப்பிடுகின்றனர். இது சித், பரா, சம்வித் எனப்படுகின்றது. இது ஒரு பிரக்ஞை; பிறிதொன்றையும் சாராதது. நான் - அது (விடயம் -விடயி) என்ற பாகுபாடற்றது. மேலான, பரம்பொருளான அது தன்னையே பார்ப்பது. அதனை பிரத்திய பிஞ்ஞான சாத்திரம் "பிரகாச விமர்சய" என்கின்றது. பிராகாசம் என்பது "என்றும் உள்ள ஒளி" என்றும் "அது இன்றி எதுவும் தோன்றாது" என்றும் கூறப்படுகின்றது. விமர்ச என்பது "சக்தி அல்லது சிவத்தின் ஸ்பாவம்" பிறிதொரு வகையில் கூறின் சிவத்தை முழுமையாகக் காட்டும் கண்ணாடி கர்த்ருத்வ சக்தி எனப்படுகின்றது. பிரகாசம் தனித்து இருப்பின் அது நித்தியவஸ்துவின் இயல்பாகா. வைரம் பிரகாசிக்கும் எனினும் அது தன்னை பிரகாசமாக அறிவதில்லை. ஆனால் விமர்ச தன்னைத் தானே பிரகாசமாக அறிவது ஆகும். விமர்சம் அற்றுப் பிரகாசமாக மட்டும் இருப்பின் நித்திய பொருள் செயலற்று இருக்கும். நித்திய பொருளின் நான் என்னும் பிரக்ஞையே அதன் வெளிப்பாட்டுக்குக் காரணமாகின்றது. சித் தன்னை சித்ருபினியாக அறியும் நிலையே விமர்ச எனப்படுகின்றது. இது பராசக்தி ஸ்வதந்திரிய எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது.[98]

சங்கரர் பிரமம் மட்டுமே பிரகாசம் / ஞானம் என்கிறார். அதில் விமர்ச இல்லை. தொழிலற்றது பிரமம். ஆகவே அது மலடாகின்றது. சாங்கியமும் வேதாந்தமும் புருஷனை / ஆன்மாவைக் கிரியை இல்லாதது (நிஷ்கிரியை) என்கின்றன.

"ஸ்வதந்த்ரிய" என்பது சிவத்தின் மேலாண்மைக்கு எக்குறையும் அற்ற நிலை. அது தன்னை இச்சையாகவும் கிரியையாகவும் ஞானமாகவும் மாற்றும். நித்யமான இது பிரபஞ்சம் தழுவிய உணர்வு மட்டுமல்ல மேலான ஆன்ம சக்தியும் ஆகும். இவ்வாறு எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிய சக்தி "அனுத்தர" எனப்படுகின்றது. அதுவே மிகவுயர்ந்த பரத்துவம். எல்லாம் கடந்த (திஸ்லோர்த்தீன) "விஸ்வமய"வும் ஆகும்.

பரத்துவத்தின் ஒரு ஸ்பாவம் இவ்வாறு தன்னை மாற்றுவது / வெளிப்படுத்துவது ஆகும். தெய்வீகத்தின் சாராம்சமே படைப்பு. பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு படைக்காதுவிடின் அது தானாகவோ பிரக்ஞையாகவோ இருக்க முடியாது. இதனை அபிநவர்,

> "இப்பரம்பொருள் அநந்த விதமாகத் தோன்றாமல் கட்டுப்பட்டு, எல்லைப்பட்டிருப்பின் அது உயர்வான பொருளாகா, "சாடிபோல"

என்கின்றார்.[99] இப்பிரகாச விமர்சமயமான பரமசிவம் நான் - இது என்ற பிரிப்பின்றியே இருக்கும். பெரிய ஆலம் விதையுள் அதன் முழு ஆற்றலும் அடங்கியிருப்பது போல முழுப்பிரபஞ்சமும் பரமசிவத்துள் அடக்கம் என ஒருமை வாதம் பேசுகின்றனர் த்ரிக வாதிகள்.

பரமசிவத்துக்கு அளவில்லா ஆற்றல் உண்டு. அவற்றுள் கீழ்வருவன முக்கியமானவை.

1. சித் - தன்னை வெளிப்படுத்தும் ஆற்றல்
2. ஆனந்தம் - சுவாதந்தரியமானது - இந்நிலையில் பரம்பொருள் சக்தி எனக் கூறப்படும். சித்தும் ஆனந்தமும் பரமசிவத்தின் சுவரூபங்கள் ஏனையவை சக்திகள்
3. இச்சை - சதாசிவ, சாதாக்கிய நிலை
4. ஞானம் - ஈஸ்வர நிலை
5. கிரியை - எவ்வடிவத்தையும் எடுக்கும் ஆற்றல்

இப்பிரபஞ்சம் மிக மேலானதன் ஒரு விரிவே (உன்மேஷ) என இவர்கள் எடுத்தாளுகின்றனர். பரமசிவம் இரு குணவியல்புகளைக் கொண்டது. இதனை,

1. ஸ்வோத்திரண - யாவும் கடந்த ஆற்றல்
2. படைப்பாற்றல் - இதுவே சிவதத்துவம்

என எடுத்துரைக்கின்றனர். உலகின் உருவாக்கமாக இது திகழ்கின்றது என்கின்றனர். இந்நிலையிலேயே முப்பத்தாறு தத்துவங்களும் தோன்றுகின்றது. இந்நிலையில் புருஷன் சிவத்தின் அகவய வெளிப்பாடாகவும் பிரகிருதி புறவய வெளிப்பாடாகவும் எடுத்தாளப்படுகின்றன. சிவத்தின் - பரிபூரணத்தின் மட்டுப் படுத்தப்பட்ட ஆற்றலே புருஷன் அல்லது ஆன்மா எனப்படுகிறது. புருஷ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• புலக்காட்சியால் யாவற்றையும் அறிவது என்றும் அணு தெய்வீக முழுமை மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் என்றும் கூறப்படுகின்றது. இப்புருஷன், போக்தா (அனுபவிப்பவன்), பிரகிருதி, போக்கியா (அனுபவிக்கப் படுவது) என்றும் கூறப்படுகின்றது.

இவ்வான்மா தளைக்கப்பட்டிருப்பது உள்ளார்ந்த அறியாமையால் ஆகும். அதுவே ஆணவமலம்; முழுமையான பிரக்ஞையை அணுத்தன்மைப் படுத்துவது பரம்பொருளின் இச்சா சக்தியே ஆணவமலமாகின்றது. இதுவே உலகளாவிய பிரக்ஞையில் இருந்து ஜீவனைத் தனிமைப்படுத்துகின்றது. இதன் மூலம் அசுத்த ஆன்மாவுடன் தொடர்புபடும் ஜீவன் கர்ம, மாயீய மலங்களால் மேலும் கட்டுப்படும். மாயையில் இருந்து மாயீய மலம் உருவாகி ஜீவனுக்கு வேறுபாடு பற்றிய பிரக்ஞையை வெவ்வேறு தளங்களில் ஏற்படுத்தும். இது விகல்ப நிலை; இது சுத்த விகல்பம், அசுத்தவிகல்பம் என எடுத்தாளப்படுகின்றது. அசுத்த விகல்பம் பிழையான கருதுகோள்களை ஏற்படுத்தி, ஜீவனைப் பிறவிக்கு உட்படுத்தும். "நான் மெலிந்திருக்கின்றேன், நான் பருத்திருக்கின்றேன்" முதலானவை இதற்கு உதாரணங்கள் ஆகும். சுத்த விகல்பம் வேறுபாடுகளை நீக்குவது. இருமையை நீக்குவது.[100] ஒருவனுடைய இயல்பான அறியாமையே இருமையுணர்வு. அதனை நீக்கி ஒருமையுணர்வாகிய அறிவைத்தருவது சுத்த விகல்பம் எனப்படுகின்றது.

ஷேமராஜர், "அ" வில் தொடங்கும் விரிந்த பிரபஞ்சம் என்பது அனுத்தரவின் (சொற்கடந்த மெய்ப் பொருள்) உடலியல் ஆகும் என்கின்றார். மேலும் "ஹ"வரை அது விரிதல் சக்தியின் வியாபகம் ஆகும். பிரத்தியாஹார முறையினுள் "அ" "ஹ" என்பன ஒன்றுபடுதல் "பிந்து" வடிவில் உள்ள உயர் பரம்பொருளில் தங்கியுள்ளது. இது பேதம் கடந்த பிரக்ஞை எனப்படும். இங்கு "அஹ" என்பதில் அ -சிவம் பிரகாசம் ,ஹ - சக்தி, விமர்ச் "ஹ"வில் இருக்கும் புள்ளியே பிந்து.சக்தியூடாகவும் புள்ளியூடாகவும் (பிந்து) சிவமானது உலகுவரை வெளிப்பட்டாலும் பிரியாது அவர் அப்படியே இருக்கிறார் என்கின்றனர்.[101]

அறியாத நிலையில் "மாத்ருஹ" எல்லாவகையான உலக அனுபவத்திற்கும் இட்டுச் செல்லும்; அறிந்த போது விடுதலைக்குச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டுச் செல்லும் என்பர். சாங்கியம், வேதாந்தம் என்பவற்றின் இறுதி இலக்கு முத்தி. அவை முத்தி நிலை என்பதற்கு கூறும் விளக்கம் "கைவல்யம்" ஆகும். (கைவல்யம் - தனித்திருத்தல்) சாங்கியர், புருஷன் பிரகிருதியில் இருந்து விடுபடுதல் எனவும் சங்கரர் மாயையில் இருந்து விடுபடுதல் எனவும் விளக்குகின்றனர். த்ரிக தத்துவவாதியான சோமானந்தர்,

> "வெறுமனே முக்திக்கோ தன்னை உணர்தலுக்கோ முதன்மை அளிப்பதில்லை. ஏனெனில் எல்லாம் சிவமயமானது. பந்தத்திற்கு இருப்பிடமே இல்லை. இல்லாத பந்தத்தில் இருந்து விடுதலை அடைதல் எவ்வாறு நிகழும்"

என்கிறார். மேலும், "யாதா ஸர்வ - பதார்த்தாநாம் பகவத் சிவரூபதா.:" என்கிறார்.[102] யாவுமே சிவரூபம் என்பதால் பந்தத்திற்கும் மோட்சத்துக்கும் வேறுபாடு இல்லை என்றாகின்றது. சிவத்தின் இச்சா சக்தி குறுகி ஆணவமலமாயிற்று. இவ்வாணவ மலமே கார்மீக மலத்திற்கும், மாயீய மலத்துக்கும் நிமித்த காரணமாக விளங்குகிறது எனத் த்ரிக தத்துவவாதிகள் எடுத்தாளுகின்றனர். ஆக, பந்தமும் பரமசிவனுக்கு அம்சம் என்பது தெளிவாகின்றது. இறைவனே பந்தத்தை உண்டாக்கி ஜீவனை அதிலிருந்து விடுவிக்கின்றான். இதனால் பரமசிவத்துக்கு பகையோ இரக்கமின்மையோ எதனிடம் உண்டாகக் கூடுமோ அந்த உலகம் அவன் அம்சமே. அவனைத் தவிர்த்து சுதந்திரமானதோ வேறுபட்டதோ எதுவும் இல்லை. இவை யாவும் அவனின் ஸ்வாபமே என்கிறார் அபிநவ குப்தர்.[103]

ஆன்மா தன்னை உணர்தலுக்கு (ஆத்ம வியாப்தி) அப்பால் சிவவியாப்தியை அடைதல் வேண்டும், ஏனெனில் ஆத்மவியாப்தியில் ஓர் எல்லைக்கு உட்பட்ட ஞானக்கிரியா உண்டு. ஆனால் சிவ வியாப்தியில் எல்லாம் தழுவிய எங்கும் நிறைந்த ஞானக்கிரியை உண்டு. இதுவே பரமசிவத்தின் நிலை. அதே நேரத்தில் அதனைக் கடந்தும் இருக்கும். உன்மனா சக்தி விருத்தியடையும் போது இது சாத்தியமாகும் என்பர் த்ரிகவாதிகள்.

சங்கர வேதாந்த விடுதலையில் "மாயை" மறைய பொல்லாத பிரபஞ்சமும் மறையும். ஏனெனில் "ஜகத் மித்யா" என்பர். ஆனால் திரிகத்தில் சிவ வியாப்தி நிலையில் உலகம் சிவத்தின் உன்னத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாடாக இருக்கும். அவ்வெளிப்பாடே சக்தி என்பர். சிவத்தின் நின்றும் பிறிதல்ல உலகு என்பதைத் தெளிவுறுத்துகின்றனர். சாங்கியமும் யோகமும் ஆத்மாவை "சத்சித்" எனக் கூறுகின்றன. அதாவது முத்தியில் தன் இருத்தல் பற்றிய பிரக்ஞை உடையது என்பர். ஆனால் ஆனந்தம் இல்லை. அத்வைதம், ஆன்மா சத்சித்தானந்தம் அடையும் என்கின்றது. இங்கு விடுதலை ஆனந்தம் ஆகின்றது. ஆயினும் அது ஆத்மானந்தமே. த்ரிகம், சிவவியாப்தியில் சுய பிரக்ஞை எனும் ஆனந்தத்துள் யாவும் இருக்கும் என்கின்றது. இது "ஜகானந்தம் " என்பர் த்ரிகவாதிகள்.

மேலும் கலப்பில்லாத அத்வைதம் எனும் நிலையில் ஆத்மாவின் சித்தம், சித் (எல்லாமான தெய்வீகப் பிரக்ஞை) ஆகின்றது. சித்தி, சேதனம் என்னும் அறிவாம் நிலையில் இருந்து இறங்கி சித்தம் ஆகின்றது. அவ்வேளை பிரக்ஞைக்குரிய பொருட்களுக்கு ஏற்ப அது சுருங்கி விடுகின்றது. சிவவியாப்தியில் சித்தம் மீள உயர்நிலையான "சித்தி"யை அடைகிறது. பந்தம் என்ற உணர்வற்ற உண்மை நிலையை ஆத்மா அடைகின்றது. இந்நிலையில் கும்பம் - குடம் என்ற சொற்கள் ஒரே பொருளைக் கொண்டிருப்பது போல இன்பம் - துன்பம் பந்தம் மோட்சம் சைத்தன்யம் - சடம் என்பனவும் ஒரே பொருளுடையன. தனது இயல்பான மூலஸ்பாவத்தை மீள அறிந்து கொள்ளலே முக்தி என எடுத்துரைக்கப்படுகிறது. இதுவே அஹம் என்னும் உணர்வு செயற்கையற்றதான அஹ - விமர்ச ஆகின்றமையாகும்.

பரமசிவம் எல்லாம் கடந்ததாகவும் எல்லாமாகவும் இருப்பது. அதுவே ஆன்மாவாகவும் பந்தமாகவும் உலகமாகவும் விரிவது. ஆன்மா உலகத்தில் பிறந்துழன்று, தன்னையுணர்த்து, யாவற்றையும் சிவமாய்க் கண்டு சிவவியாப்தியை அடைவதே விடுதலை என்பர் த்ரிகவாதிகள். இதுவே அவர்களின் ஒருமைவாதம் ஆகும். முப்பொருள்களான இவை, பரமசிவத்தின்/ பதியில் வெளிப்பாடுகளும் வெவ்வேறு நிலைகளுமே என்பதாலும் இவை இறுதியில் பரமசிவத்துள் அடங்கும் என்றும் கூறுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புகள்

1) *Basham, A.L., Vedic Mythology, pp. 274 - 76*

2) தைத்திரிய ஸம்ஹிதை, 16,18.28

3) ஸதபதம் பிரமாணம், 1-7, 3-8; ரிக்வேதம், 1, 114, 6; தைத்தீரிய சம்ஹிதை, 3.1, 5.1

4) ஸ்வேதாஸ்வரத உபநிடதம், 3:11, 3.16, 4.3.

5) தகாரே, க. வை., 2001; சைவதத்துவம், முன்னுரை, பக். xxx - xxxi

6) திருமந்திரம், பா. 2404

7) மேலது, பா. 2397

8) *Cowell, E. Band, Gough, H.F.(Trans), 1961, Sarva Darsana Samgraha of Madhavacharya, chow ambasan is rit series ver anasi, pp. 103 - 144*

9) *Pandey, K. C., 1986, On Outline of History of Saiva Philosophy Motilal Banarsidas, Delhi, p. 6*

10) தகாரே, க. வை., மு. கு. நூல், ப. xxxi

11) தத்துவலிங்கதேவர், தத்துவ நியானுபோகசாரம், மீதித் தகவல்கள் நூலில் இல்லை.

12) *Piet, Johnh, 1952, Saiva Siddhanta Pholosophy, p. 2*

13) "....சைவம் பிற நூல் திகழ் பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" சித்தியார், 8.15

14) கிருஷ்ணராஜா, சோ., 1993, மெய்கண்ட சாஸ்திரங்களுக்கு முற்பட்ட சைவசித்தாந்தம், சத்தியஜோதி சிவாச்சாரியாரின் உலக நோக்கு (தட்டச்சுப்பிரதி), ப. 06

15) இராமநாதன் கலைவாணி,1997, சைவசித்தாந்த மெய்பொருளியல், ப.86

16) ஞானகுமாரன், நா., மு.கு. நூல் பக். 9 - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17) அஷ்டபிரகரணம், 1925, சிவாகமசித்தாந்த பரிபாலன மடம், ப. 139

18) சிறுபாணாற்றுப் படை, 96 - 7

19) புறநானூறு, 6: 17 - 18

20) அகநானூறு, 181: 16 - 17

21) சிலப்பதிகாரம், இந்திரவிழாவூர் எடுத்தகாதை, 5: 169 - 172

22) துரைசாமிப்பிள்ளை, சு., ஔவை (உரை), 1954, ஞானாமிர்தம் முன்னுரை, பக், xxx - xxxvi

23) சித்தியார், பா. 113;

24) சிவஞான முனிவர், காசிவாசி செந்திநாதையார், ஞானப்பிரகாசர் முதலானோர் இக்கருத்தை முன்வைத்துள்ளனர். க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, மறைமலையடிகள் போன்றோர் இக்கருத்தை ஆதரிப்பர்.

25) சித்தியார், சுப.பா.07

26) *Piet, Johnh, 1952,Ibid, p. 2*

27) ஞானாமிர்தம் அளவையை கூறிக் கையாண்டாலும் மெய்யியல் கோட்பாட்டடிப்படையில் அளவையை சித்தியரே முன்வைக்கின்றது.

28) திருஞானசம்பந்தர், 3ஆம் திருமுறை, திருப்பாசுரம், பா. 5

29) "தாடலைபோற் கூடியவை தானிகழாவேற்றின்பக் கூடலை நீ யேகமெனக் கொள்" திருவருட்பயன், 3 - 10

30) சிவஞானபோதம், சூத். 1

31) மேலது

32) சித்தியார், சுப., பா. 1

33) திருவாசகம், திருவெம்பாவை, பா. 1

34) சிவஞானபோதம், சூத். 1

35) சித்தியார், சுப., பா. 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36) சிவஞானபோதம், சூத். 7

37) உண்மைவிளக்கம், பா. 24

38) சிவஞானபோதம், சூ. 3

39) சிவபாதம், செ. 2001, (உரை), சிவஞானபோதம், கந்தபுராண மேற்கொள், ப. 8

40) திருஞானசம்பந்தர், 1ஆம் திருமுறை, திருவீழிமிழலை, பா. 2

41) சிவஞானபோதம், சூ. 4

42) திருவருட்பயன், குறள், 30

43) சிவஞானபோதம், சூத். 6

44) சித்தியார், சுப., பா. 240

45) சிவஞானபோதம், சூத். 11

46) Kalla, N.B. (intanet), Kashmir Saivasm and its Echoes in Kashmiripoetry, p. 1

47) Stein, A., Introduction to Rajabaragini, p. 9

48) Loc.Cit

49) Rudrappa, J., 1969, Kashmir Saivism, p. 13

50) Siva Drasti, ah., 7: 112, 113

51) Tantraloka, ah., 37 - 52

52) Pandit, B.N. 1990, Aspects of Saivism, pp. 27 - 30

53) தகாரே, க.வை., மு.கு. நூல், ப. 119

54) Paratrisika Vivarana, p. 92

55) Pandey, K.C., pp. 77 - 80

56) Chattarj, J.C., Kashimira Shaivaism

57) Siva Satra vimarsini, p. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58) தகாரே, க.வை., மு.கு. நூல், ப. 13

59) Chatterji, J.C., op.cit, p. 29

60) Chatterji, J.C., op.cit, pp. 8 - 10

61) தகாரே. க.வை., மு.கு.நூல் ப.131

62) Ivara Pratyabhijna, Vimarsini, 1: 5.14

63) Chatterji, J.C., op.cit, p. 17

64) தகாரே, க.வை., மு.கு, நூல். ப. 135

65) ஆங்கிலத்தில் Kālí கையாளப்பட்டுள்ளதனால் காலீ எனச் சுட்டப்படுகிறது.

66) Tantraloka, ah., 111 - 203

67) Tantraloka, pp. 4 - 5

68) Pandey, K.C., op. cit, p. 463

69) Ibid p.465

70) Siva Drdisti, ah. 3

71) Pandey, K.C., op- cit, p. 467

72) Maharatha Manjari - 180

73) Ibid, 101

74) Ibid, 97

75) Krama Sútra, 16

76) Tantraloka, 111 - 189

77) Pandey, K.C., op.cit, p - 489

78) Mahrtha Majari, 99

79) Pandey, K .C., op.cit, p. 492

80) Loc.cit



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81) Ibid, p.504

82) Ibid, p. 507

83) Ibid, p.343

84) Tantraloka, ah. 29,30

85) Ibid, ah. 28

86) Loc. cit

87) Pandey, K.C., op.cit, p. 488

88) Ibid, p. 464

89) Mlini Vijayavrtka, 38

90) Tantraloka, ah. VI

91) Mahrtha Majari, 190

92) Tantraloka, ah. 111 - 203

93) Ibid, ah. 29

94) Ibid, ah. I

95) Pandey, K.C., op.cit, p. 590

96) Loc.cit

97) Ibid. p. 665

98) Para pra Vesika, p. 2

99) Tantraloka, 3.100

100) Tantra sara, p. 24

101) Protyabhijna hrdaya, pp. 108, 109

102) Siva Drsti, 2.88

103) Tantraloka, 8.72

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவாராய்ச்சியியல்

பகுத்து உணர முற்படும் ஊக்கத்தின் வழி உருவானதே அறிவு என்பர். அறிவு என்பது யாது? அதன் புலப்பாடு, பண்பு என்பன யாவை? அறிவு பெறப்படும் வழிகள் யாவை? இது எங்கிருந்து தோன்றுகிறது? இவ்வறிவின் திறன் - பயன் என்ன போன்றவற்றிற்கு விடைகாண முற்படுதலே அறிவாராய்ச்சியலாகும்.[1] இவ்வறிவு பற்றிய விசாரம் ஒரு சிந்தனை முறைமையாக எடுத்தாளப்படுகிறது.[2] சைவ மெய்யியல்கள் பொதுவில் சமயமாகவும் தத்துவமாகவும் எடுத்துரைக்கப்படுகின்றன. இந்திய மெய்யியல்களைப் பொறுத்தவரை அவை முரண்பாடுகளின் வெளிப்பாடாகவுள்ளன முரணிலையாளர்களை நிராகரணம் செய்வதில் இவை காலத்தை அதிகம் செலவழித்துள்ளன என்றே கூறவேண்டும்.

சமயம், நம்பிக்கையின் பாற்பட்டது; மெய்யியல் தர்க்கத்தின் பாற்பட்டது. நம்பிக்கைகள் உண்மையென நிறுவப்பட்டாலேயன்றி அறிவு எனும் தகுதியைப் பெறமாட்டா. அறிவு, அதன் இயல்பு அதற்கான அளவுகோல் என்பவற்றின் அடிப்படையிலேயே ஒவ்வொரு மெய்யியலும் தத்தமக்கான அறிவாராய்ச்சியற் கொள்கையை உருவாக்கிக் கொண்டன. இங்கு ஆதாரங்களும், நியாயித்தல் முறைகளும் முதன்மை பெறுகின்றன.[3]

இந்திய மெய்யியல்களைப் பொறுத்தவரை அறிவாராய்ச்சியியல் என்பது தனித்த ஒன்றாக வளர்த்தெடுக்கப்படவில்லை. தர்க்கவியல் சார்ந்த ஒன்றாகவே வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது என்பதைப் பொதுவில் ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வர். "மெய்ப்பொருள் காண்பதே அறிவு" என்பதில் இம்மெய்யியலாளர்களிடம் மாற்றுக் கருத்து இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய மெய்யியலில் அறிவு என்பது வித்யா, ஞானம், புத்தி, உபலப்தி, பிரக்ஞான, பிரத்யாய எனப் பலவாறு எடுத்தாளப்படுகிறது.[4] அறிவாராய்ச்சியல் எனும் சொல் மேலைத் தேயத்தில் *Epistemology* எனப்படுகிறது. இது *episteme and loges* என எடுத்தாளப்பட்டே அறிவு பற்றிய ஆய்வு எனப் பொருள் கொள்ளப்படுகிறது.[5] நியாயவாதிகளாலும் அறிவு பற்றிய ஆய்வாக - அறிதல் பற்றிய ஆய்வாகவே அறிவாராய்ச்சியியல் வளர்த்தெடுக்கப்பட்டது. அதன்வழியேயே ஏனைய இந்திய மெய்யியலாளர்களும் தொடர்ந்ததனால் அறிவாராய்ச்சியியல் என்பது பிரமாணங்களின் (அளவைகள்) வழியேயே புரிந்து கொள்ளப்படுகிறது.[6]

மனிதனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றை ஐயுறுவதில் இருந்தே மெய்யியலும் அறிவாராய்ச்சியியலும் தோற்றம் பெறுகின்றன. ஏன், எதற்கு, எப்படி என்பன இவற்றுக்கான அடிப்படை வினாக்களாகின்றன. அறிவை அறிதல் - தீர்மானித்தல் - ஐயுறுதல் - அறிவை அறிதல் - தீர்மானித்தல், மீள ஐயுறுதல் என முடிவுறாத் தொடராக அறிவு பற்றிய தேட்டம் அமைந்து விடுகிறது. இதன்வழி இங்கு அறிதலே முதன்மையுறத் தொடங்கியது என்பதை நாம் உய்த்துணரலாம். ஒருவர் பெற்றுக் கொள்ளும் நூலறிவு, புலனனுபவவறிவு என்பவற்றிற்கு உட்படாத புலன்கடந்த பொருட்களை ஆராய்வதிலேயே இந்திய மெய்யியல்கள் அதிக கவனம் செலுத்தின. இச்சைவமெய்யியல்களும் அவற்றிற்கு விலக்கல்ல.

அறிவாராய்ச்சியியல் தன் அடிப்படை அம்சங்களாக பிரமாதா, பிரமேயம், பிரமாணம் என்பனவற்றை கொண்டமைகின்றது. பிரமாதா - அறிபவன், பிரமேயம் - அறிபொருள்; பிரமாணம் - அறிகருவி / அளவைகள் எனப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் பிரமாணமே முதன்மைபெற்றிருப்பினும் பிரமேயம் பற்றிய அக்கறையும் இந்திய மெய்யியல்களுக்கு இருந்துள்ளது.[7] அறிபவனாகிய ஆன்மா அறிபொருட்களை / பிரமேயங்களை அறிதல் வேண்டும். அதற்கு, உதவும் வாயில்களே பிரமாணங்கள் / அளவைகள் எனப்படுகின்றன. "அதுவல்ல, அதுவல்ல என்று எது சொல்கிறதோ அதுவே ஆன்மா" என மெய்கண்டார் பிரமாதாவை அடையாளப்படுத்துகிறார்.[8] பிரமாதா உலகப் பொருட்களை, நடத்தைகளை அறிகிறது. சடப்பொருள்க ளையும் அறிகிறது; அவதானிக்கிறது; உலகைக்கொண்டு சடத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றி ஒடுக்க ஒருவன் தேவை என எடுத்தியம்புகிறது.[9] உண்மை - பொய்மை, நித்தியமானது - அநித்தியமானது; எனும் தளக் கூறுகளின் வழி பிரமேயங்களை அறியவும், உய்த்துணரவும் முற்படுகின்றது. இதற்கான அளவுகோல்களாக பிரமாணங்களைப் பயன்படுத்துகின்றது. அதன் வழியேதான் பிரமாணங்கள் முதன்மைப்படுத்தப்பட்டன.

காஷ்மீரசைவமும் சைவசித்தாந்தமும் பிரமாதாவாக ஆன்மாவையும் பிரமேயங்களாக பதி, பசு, பாசம் எனும் முப்பொருட்களையும் ஏற்றுக் கொள்கின்றன. அதேவேளை காஷ்மீரசைவம் அறிபவனும், அறிபொருட்களும் ஒன்றென்ற கருத்தை உடையது என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

கௌதமரால் நியாயசூத்திரத்தின் வழி முன்னெடுக்கப்பட்ட அறிவாராய்சியற் சிந்தனைகள் பின்னர் பௌத்தர்களாலேயே அதிகம் வளர்த்தெடுக்கப்பட்டதென்பர். தருக்கத்தைப் பயிற்றுவித்தே மெய்யியலை எடுத்துரைக்கும் முறை பௌத்தத்தில் காணப்படுகின்றது. திக்நாகரின் பௌத்தப்பிரிவே முதன்முதல் தருக்கப்பயிற்சியை விரிவாக எடுத்துரைத்தது.[10]

பௌத்தர்களான திக்நாகர், தர்மகீர்த்தி ஆகியோரின் சிந்தனையில் வந்த பிரமாணவியல் பற்றி மத்திய கால காஷ்மீரத்தைச் சேர்ந்த உத்பலதேவர், அபிநவகுப்தர் போன்றோர் கவனம் செலுத்தியுள்ளனர். திக்நாகரின் தர்க்கவியலை டேவிட்கியூமின் தோற்றப்பாட்டுவாதத்துடன் ஒப்பிட்டுச் சிந்திக்கும் முறைமைகளும் உண்டு. அஷ்டபிரகரணங்களும் வடநாட்டு சைவசிந்தாந்த அளவையில் பற்றி உரைப்பினும் நாமிங்கு கவனத்திற் கொள்வது. தமிழ் மரபு சார்ந்த மெய்கண்டரின் வழிவந்த சைவசித்தாந்தத்தையே என்பது மனங் கொள்ளத்தக்கது. இவ்விரு மெய்யியல்களும் அறிவுக்கு அடிப்படையாக உரைப்பது புலக்காட்சியையே. இதனையே மெய்யியலாளர்கள் அறிவாராய்ச்சி யியலின் பொதுவான சிந்தனை ஊற்றுக் கண்ணாகக் கொள்வர்.[11] சாதாரண காட்சிக்குப் புலப்படும் அறிவினூடு பிரமேயங்களை இம்மெய்யியல்கள் தரிசித்தன. காட்சி "பிரத்தியக்ஷ" எனப்படுகிறது. இது "புலனுறுப்புக்கு முன்னதாக," எனப்பொருள் சுட்டப்படுகின்றது. "மாசறு காட்சியை ஐயந்திரிபின்றி விகற்ப முன்ன ஆசற வறிவதாகும்" எனச் சித்தியார் உரைக்கிறது.[12] காஷ்மீர சைவத்திற்கு இதில் மாற்றுக்கருத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. அதேவேளை சவிகற்பக்காட்சி தருகின்ற தரவு, அறிவு நிலையான உயிர்பொருட்களின் தொகுதி எனக் கூறுதற்கு அடிப்படையாகாது என்பர். சவிகற்பஞானத்தைப் பயன்படுத்தி நிலையானவற்றை அறியமுடியாது. இதன் வழியேதான் பௌத்தம் வெளிப்படையான வைதிக எண்ணக்கருத்துக்களை நிராகரித்தது என்பர். புறப்பொருட்கள், சடங்குகள், அறம், கடவுள், ஞானோதயம் என இப்பட்டியல் நீள்கிறது. இதற்கு காஷ்மீரவாதிகள், முன்பிருத்த நியாயவாதிகள், சோமானந்தர், சத்தியஜோதி சிவாச்சாரியார், போன்றோர் இதனை எல்லாம் கடந்த வாதமாகக் கொள்ளலாம் என்கின்றனர்.

உத்பலதேவரும் அபிநவகுப்தரும் சிவம் - சக்தி எனும் கருத்தை மையப்படுத்தி, சிவனின் வெளிப்பாடு சக்தியினூடாகப் பிரபஞ்சத்தைக் கட்டுப்படுத்துகின்றது என்பர். சைவசித்தாந்திகளும் பிரபஞ்ச தோற்றவொடுக்கத்துக்கு பதியாகிய சிவனே நிமித்த காரணன் எனவும் சக்தி துணைக்காரணம் எனவும், மாயை முதற்காரணம் எனவும் விளக்குவர்.[13] இறுதியில் யாவும் ஒன்றாகி சிவமே எஞ்சும் என்பர். சைவ சித்தாந்தம் முப்பொருளும் நித்தியமானவை எனக்கூறி முக்தியில் இரண்டறக் கலக்கும் "சுத்தாத்வைதத்தை" முன்வைக்கிறது. நிர்விகற்பக்காட்சியே - பேதமற்ற அறிவே - யாவும் பதியெனும் உணர்வே மேலான நிலையைத் தரும் என்பதில் மாற்றுக் கருத்து இருசாராருக்கும் இருக்கவில்லை.

காஷ்மீர சைவ அறிவாராய்ச்சியியல் வாதங்கள் பிரகாச, விமர்ச எனும் அடிப்படையில் விளக்கப்படுகின்றன. பிரகாச என்பது அஹம் சார்ந்த பிரக்ஞை எனப்படுகிறது. அது ஒவ்வொரு ஞானத்தையும் உறுதி செய்து கொள்ளும். ஆதலால் இப்பிரக்ஞை எல்லாப் பொருள்களிலும் இருக்காது. இது இலட்சியவாதத்தினை ஒத்தது என்பர். இங்கு வேறொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் என்ற அனுமானத்திற்கு இடமில்லை. ஒருவர் உணர்வுபூர்வமாக உணர்ந்த இருபொருட்களுக்கு இடையே பிரகாச உருவாகும். காஷ்மீரசைவர் ஒருவரின் சொந்த பிரக்ஞைகளுக்கு அப்பால் பிறிதொரு பொருள் இல்லை என்பர். பிரபஞ்சப் பொருட்கள் அனைத்தும் ஒருவரின் பிரக்ஞை சார்ந்ததாகவே காஷ்மீர சைவர்களால் எடுத்தாளப்படுகிறது. இது புலனறிவுள்ள - புலனறிவற்ற அனைத்துக்கும் பொருந்தும் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரகாசம் தனித்திருப்பின் அது நித்தியத்துவத்தின் இயல்பாகா. வைரம் பிரகாசிக்குமாயினும் அது தன்னைப் பிரகாசமாக அறிவதில்லை. ஆனால் விமர்ச என்பது பிரகாசமாகத் தன்னைத்தானே அறிதல் என்பர்.[14]

பரமசிவம் பிரகாச - விமர்சமயன் எனப்படுகிறான்; ஒளிவடிவாக இருந்து ஏனைய பொருட்களையும் ஒளிபெறச் செய்பவன் என இது விளக்கப்படுகிறது. அது அஹம் எனும் தன்மை; இது "ப்ரகாசரூபதா சித் சக்தி" எனப்படுகிறது.[15] விமர்ச என்பது பரமசிவத்தின் இச்சாசக்தி - சுதந்திரத்தன்மை எனப்படுகிறது. பிரகாசவுடன் இணைந்ததாய் அடையாளங் காணக்கூடியதான கட்டமைப்பை உடையது. இதனால் இதம் என்பது இது (உலகம்) எனவும் அஹம் என்பது நான் எனும் ஆன்மசொரூபம் என்ற உணர்வும் (ஸம்வித்) ஏற்படும். க்ஷேமராஜர் தொடர்பில் சார்பற்று தன்னைப் பற்றிய பிரக்ஞை உடையது விமர்சம் (அக்கிருத்தியமாகம் இதி விஸ்பூரணம்) என்கிறார். நித்தியப் பொருளான சிவம் வெறுமனே பிரகாசமாக இருந்து விமர்ச அற்றிருப்பின் அது செயலற்றதாகிவிடும் என்கிறார்.[16] உத்பலதேவர், அபிநவகுப்தர் போன்றோரின் வாதங்கள் விமர்சவின் வழி அமைந்தவையே. பிரகாச - விமர்ச எனும் இருகட்ட வாதங்களும் ஒன்றாகத் தொழிற்படுகின்றன.

இலட்சியவாதம், பிரகாச, விமர்ச என்ற படிமுறையில் அடங்கும். இதில் பொருட்கள் யாவும் ஒன்றினுள் அடங்கும் எனும் தர்க்கம் உள்ளடங்குகிறது. இது சுயம் - *Self* எனப்படுகிறது. இதன் வழியே ஒருமைவாதம் முன்வைக்கப்படுகிறது. ஆனால் சைவசித்தாந்தம் பன்மைவாதத்தை முன்வைக்கிறது. பதி, பசு, பாசம் ஒன்றாகா, அவை அழிவற்ற நித்தியப் பொருட்கள், அவற்றுக்கிடையிலான உறவு ஒன்றாய், உடனாய், வேறாய் இருத்தலாகும். முக்தான்மாவில் ஆணவம் வறுத்த வித்துப் போல் அடங்கியிருக்கும் என்பர்.

மோட்சம் - பதியான்ம உறவு பற்றிய கருத்தை ஆப்தவாக்கியத்தின் வழி ஏற்பர். பிரமாண நூல்களைச் சைவ சித்தாந்தம் வேதாகமங்களைக் கூறி நிற்க[17], காஷ்மீர சைவம் ஆகமத்திற்கே முதன்மையளிக்கிறது. மறையாக, அபௌருஷேயமாக இருசாராரும் ஆகம அளவையைக் கருதுவர். இறை மொழியாகவே ஆப்தம் இருசாராலும் கருதப்படுகின்றது. பொதுவில் ஐயவாதத்தின் வழியிலேயே மெய்யியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்கிறது என்பர். அறிவைப் பெறுதல் பற்றியதான ஐயவாதிகளின் தீவிர விமர்சனத்துக்கு எதிராக காஷ்மீரசைவரான பத்ருஹரியின் கருத்தியல் முக்கியமானதாக முன்மொழியப்படுகின்றது. மொழி (சப்தம்) - அறிவு என்பவற்றிற்கிடையிலான நெருங்கிய தொடர்பினை எடுத்துக்காட்டும் அறிவுக் கொள்கையை அவர் முன்வைத்துள்ளனர்.[18] இலக்கணவாதம் - மரபு வழிவந்த அறிகையை, அதை வைத்துக் கொண்டே கற்க வேண்டும். மொழியை முன்னே கற்பதற்கான இயல்புடன் இணைந்த எமது அடிப்படை அனுபவத்தை ஒழுங்குபடுத்தி அதன் வழி நடத்தைக் கோலத்தை ஏற்படுத்தும் சகல மொழிப்பிரயோகங்களிலும் அது இருக்கின்றது என்பர். இதன்வழி முப்பத்தாறு தத்துவங்களில் ஒன்றான நாதம் என்பதனை ஆதாரமாக கொண்ட அறிவுக்கொள்கையை பத்ருஹரி விருத்தி செய்துள்ளார். அதனை "மொழிவழி அறிகை" எனச் சுட்டுவர்.[19] அதேவேளை சைவசித்தம், நியாய தரிசன ஆப்த வாக்கியக் கருத்தியலைச் சிக்கெனப்பிடித்துள்ளது என்றே கூற வேண்டும்.

காட்சி, ஆப்தவழி வரும் அனுபவம் - அனுபவம் சாரா அறிவு பற்றிய உரையாடல்களும் இம்மெய்யியல்களில் உண்டு. இவற்றின் வழி அனுமான அளவை முன்மொழியப்படுகின்றது. பதி, பசு, பாச இருப்புக்களை அனுபவவாதத்தின் வழி- சிற்றறிவு - பிரபஞ்சவறிவின் வழி இவை நிறுவமுற்படுகின்றன.[20] பிரபஞ்ச பிரஜையாக இருக்கும் - மலவாசனைக்குட்பட்ட ஆன்மாவின் பிரக்ஞைக்கு - அனுபவத்திற்கு உட்படாத அல்லது அதனைச் சாராத பதி பற்றிய கருத்தியலை உலகு சார் அனுபவத்தின் வழி (குறைபாடுகளுடைய) உவமையினூடாக இவர்கள் எடுத்துரைக்குந்திறன் கவனிக்கத்தக்கது. இது பசு, பாசம், மோட்சம் பற்றிய கருத்தியல்களுக்கும் பொருத்தும். அனுமான அளவையே இதற்கு உதவுகின்றது. சைவசித்தாந்தத்தில் அனுமான அளவை பெற்ற இடத்தை காஷ்மீரசைவத்தில் ஆப்தம் பெற்றது எனலாம். தாந்திரிக, மாந்திரீகமரபு வழி நின்ற காஷ்மீர சைவம் ஆப்த அளவையை புதுவதாக விளக்கி நிற்றல் குறிப்பிடத்தக்கது. பத்ருஹரியின் மொழி வழி அறிகை இன்றுவரை தனித்த அடையாளத்துடன் ஆய்வாளர்களால் சுட்டப்படுகிறது. ஒரு எல்லைவரையே இவ்வளவை ஆன்மாவிற்கு வழிகாட்டும் ஆதலால் தான் சம்பந்தர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்க
சோதிக்க வேண்டா. சுடர்விட்டுளன் எங்கள் சோதி"

என்கிறார்.[21] இம்மெய்யியல்களில் பதி சொல்லொணாதவன்; ஆயினும் உலகியலுக்கு உட்பட்ட கருத்தியல் ஆகம அளவையின் வழி முன்மொழியப்படுகின்றது. மொழிக்கும் கணத்திற்கு கணம் வருகின்ற புலக்காட்சி வழியான தரவுகளுக்கும் உள்ள தொடர்பாடலை "தொடர்பாடல் நடத்தையாக" காஷ்மீர சைவர் விளக்கினர். பௌத்தம், சொற்களுக்கு பொறிகள் சார்ந்த தரவுகளோடு முற்று முழுதான சமன்பாடு இல்லை என்பர். உரிய நடத்தைக்கு இட்டுச் செல்லாத சொற்களைத் தவிர்த்தனர். மனிதன் எனும் ஒரு சொல் மனிதர் அல்லாதவற்றை தனக்கு வெளியே வைத்து விடுகிறது. இவ்வாறு தவிர்த்தல், பெறுதல் என்பதே ஒப்பீடும் ஒருங்கிணைப்புந்தான் என்பர். இவ்வாறான வேறுபாடு - வேறுபாட்டை இனங்காணுதல் என்பது சிவத்தின் சுய வெளிப்பாடு என்பர். இது தன்னை அறிதல் எனப்படுகின்றது.

சித்தாந்திகள் இதனை ஞானம் என்பர். வேறுபாட்டை அறிதல் மட்டுமல்ல வேறுபட்டவற்றில் எல்லாம் சிவத்தைக் காணுதலே ஞானம் என்பர். இது பர, அபரஞானம் என வகைப்படுத்தப்படுகின்றது. பரஞானம் பௌதிகம் தழுவியது. அபர ஞானம் பௌதிகவதீதத்தை அறிவது; கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் எனும் வழி இது விளக்கப்படுகின்றது.

அடிப்படையில் சுயப்பிரகாசம் உடையவன் பதியே. தோற்றுவிக்கப்பட்ட பிரபஞ்சத்தின் அனைத்து எல்லையற்ற வடிவங்களையும் அனைத்து மனித - உயிரின் பரிணாமங்களால் - மாற்றங்களால் வெல்ல முடியாததாக உள்ளது. இம்மனப்பதிவு - நினைவு மற்றும் வகைப்படுத்தல் இதனைக் கட்டுப்படுத்துபவன் அறிவு சக்தி படைத்தவன் என்ற நினைவையும் பரஸ்பரம் உயிர்களின் அறிவு என்பது வேறுபடுகிறது என்பதையும் கூட்டுணர்வே - ஐக்கியமே ஒரு முடிவினைத்தரும் என்பதையும் உத்பலதேவர் கூறுகிறார்.[22] திரிகத்தின் அறிவு நிகழ்வு என்பது நடைமுறைக்கு உடனடியாகத் தரும் காரணகாரியத் தொடர்புகளுக்குள் அடங்காத யோகியின் நடத்தை போன்றது. ஒவ்வொரு அறிகையின் போதும் பொருள் புறவயமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுகிறது என்பர்.[23] சடப்பொருள்கள் சுயப்பிரகாசம் அற்றவை. பிரமாதாவின் பொருள் பற்றிய உணர்வு, அதன் ஒளி -பிரமேயத்தை அறிய உதவுகிறது. அதேபோல பிரமேயமான பதியின் ஒளி ஆன்மா தன்னையும் பிறவற்றையும் அறிய உதவுவதோடு பதியை உணரவும் உதவுகிறது. இதனை மணிவாசகர் "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்கிறார்.[24]

பதி என்றுமுள்ள உண்மைப் பொருள். அது ஆன்மாவிற்கு உள்ளேயேயுள்ளது. ஆன்மா அதனை அறிதலே காஷ்மீர சைவர்கள் அகநிலை அறிதலாக - தன்னிலையுணர்தலாகச் சுட்டுகின்றனர். இதுவே சைவசித்தாந்திகளின் பதிஞானம் எனலாம். உலகு பற்றிய அறிவு பாசஞானமாகவும் அதன்னின்றும் வேறுபட்ட தன்னிலையுணர்தல் பசுஞானமாயும் சுட்டப்பட்டு மேலாக உண்மையையுணர்ந்து அதனுடன் கலத்தலே பதிஞானம் எனச் சித்தாந்திகள் கூறுவர்.[25] இதுவே அபரஞானம் - அபரமுக்தி - ஆன்மாவின் இலட்சியம் அறிவுத்தேடுகை இதன் வழி நிறைவுறுகிறது. இதனை

"ஆருமறியாவது கண்ட பரிபூரணமாய்ப்
பேரறிவாய் நிற்கும் பிற"

எனும் சிற்றம்பலநாடிகளின் கூற்று தெளிவுறுத்துகிறது.[26]

காஷ்மீரசைவம் ஆன்மாவை மனதின் கைதி என்கிறது. ஆன்மா தன் உண்மைச் சொரூபத்தை அறிய சிந்தனையைப் பலியிட வேண்டும் என்கிறது. அதனூடாகத் தன்னுள் இருக்கும் பதியை அறியலாம் என்கிறது. மனதின் தொழிற்பாடு நிற்கும் போதே கற்பனைச் சக்கரம் இயங்காது நிற்கிறது. அப்பொழுதே நிலைமாறும் எமது அறிவு எனும் பேய் இளைப்பாறும். மனத்தொழிற்பாடு விகற்பத்தைத் தரும்; விகற்பம் பளிங்கு போல நித்தியத்துவத்தை திரிவுபடுத்திக் காட்டும். விகற்பம் நிற்க, "தான்" என்பது ஒளிவிடும். இச்செயற்பாட்டை காஷ்மீர சைவம் "அபேதோபாய" என்கிறது.[27] ஆக, மனம் தன் அறிவுத் தேடலை விடுத்து உள்முகநிலை அடையும் போதே, தெய்வீகப் பிரசன்னத்திடம் முற்றாகச் சரணடையும் போதே இது சாத்தியப்படும் என்கிறது. இது சாம்பவயோகமாக சித்தரிக்கப்படுகிறது. இது சைவசித்தாந்த ஞானத்தில் ஞானநிலையை ஒத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக இவ்விரு சைவ மெய்யியல்களும் ஆன்மாவின் இலட்சியத்தேடலுக்கு ஒரு நிலைவரை அறிவு உதவுகின்றது என்றும் அதன் பின் அது பயனற்றுப் போகிறது என்றும் புலனறிவு புலன்கடந்த மெய்ஞ்ஞானத்தை உணரவுதவாது என்றும் இரவில் உதவும் விளக்கனைய இவ்வறிவாராய்ச்சியில் பயன்படுகிறது என்றும் உரைத்து நிற்கின்றன.

**அறிகுறிப்புக்கள்**


1. பாஸ்கரன், க., 2006, சைவ சித்தாந்த அறிவாராய்ச்சியில், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ப.23
2. ஞானகுமாரன், நா., மு.கு நூல், ப.23
3. கிருஷ்ணராஜா, சோ., 1995, சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல் ஓர் அறிமுகம், ப.2
4. ஞானகுமாரன்.நா., மு.கு.நூல்,ப.125
5. Kandawamy,S.N., 2000, Indian Epistemology, C.T.T Campus, Chennai, p.1
6. பாஸ்கரன்.க., மு.கு.நூ, பக். 22-24
7. பாஸ்கரன்.க., மு.கு.நூ, ப. 20
8. சிவஞானபோதம், சூத்., 2
9. மேலது, சூத்.1
10. கந்தசாமி, சோ.ந., 1977, பௌத்தம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, ப.186
11. கிருஷ்ணராஜா, சோ, மு.கு. நூல். ப.
12. சிவஞானசித்தியார், சுப. பா.08
13. தகாரே, கா.வை., மு.கு. நூல்,பக்.136-139
14. Pandy.K.C., Op.cit., p. xx




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. Tanthira Sara, Ah.,1

16. Panday. K.C., Opicits, p. xx

17. *திருமந்திரம், பா. 21*

18. *கிருஷ்ணராஜா, சோ., 1995, மு.கு.நூல்,* H- *5*

19. Matilsl.B.K;1986. Pereptioin; An Eassay on classical Indin Theories of Knowndge, Clarendon Press, Oxford , P. 27

20. *சிவஞான போதம், சூத்.1*

21. *சம்பந்தர் தேவாரம் - 3312 - 5*

22. Radhakrishnan, S. Indin Philosophy, Vol. I – 135

23. Loc.cit

24. *திருவாசகம், சிவபுராணம், வரி.*18.

25. *சிவஞான சித்தியார் - சுப. பா. 246*

26. *துகளறு போதம், பா. 42*

27. Pandy, K.C. Op.cit., pp. xx - xiv



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதியுண்மை

கருத்து முதல்வாதிகள் முன்வைக்கும் உண்மைப் பொருட்களுள் முதன்மையானதாகவும் என்றும் உள்ளதும் இறுதி மெய்ப் பொருளாயும் சுட்டப்படுவது இறையே. இதற்கு சைவசித்தாந்தமும் காஷ்மீரசைவமும் விலக்கல்ல. இவ்விரு சைவமெய்யியல்களும் "பதி" பற்றிய எண்ணக் கருவை சமய மெய்யியல் நிலைகளுக்கேற்ப எடுத்தாண்டுள்ளமை இவற்றின் சிறப்பம்சங்கள் எனலாம். இவ்விரு மெய்யியலாளர்களும் பௌதிகவதீதமான பதியாக "சிவனை" எடுத்தாளுகின்றனர். கட்புல அறிவுக்கு அப்பாற்பட்ட பதியின் இருப்பை இவர்கள் தர்க்க அடிப்படையில் எடுத்துரைக்க முற்பட்டுள்ளனர்.

சைவசித்தாந்தமும் காஷ்மீரசைவமும் "பதி, பசு, பாசம்" எனும் முப்பொருட் கொள்கையை ஏற்றுக் கொள்கின்றன. இதனை,

"பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போற் பசு பாசம் அநாதி"

எனும் பாடலால் திருமூலர் எடுத்துரைக்கின்றார்.[1] பதி, பசு, பாசம் எனும் முப்பொருட் கோட்பாட்டை முன்வைப்பதனாலேயே காஷ்மீரசைவம் "த்ரிக" சாஸ்திரம் எனப்படுகின்றது. அத்தோடு அவை என்றும் நித்தியமானவை என்கின்றது. அதேவேளை காஷ்மீரசைவம் பசு, பாசம் என்பன பதியினின்றும் பிறிதில என்றும் அதனுள் அவை அடக்கம் என்றும் சிவாத்வைதம் பேசுகின்றது.[2] சைவசித்தாந்தமோ மூன்றும் நித்தியமானவை என்றும் இறுதியில் சிவனுடன் பசு இரண்டறக் கலக்கும் என்றும் கூறுகிறது. இதனை உண்மை விளக்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ணல் திருவடியில் ஆன்மா அணைந்து இன்பக்
கண்ணில் அழுந்தியிடுங் காண்"

என விளக்கும்.[3] இவ்விரு மெய்யியல்களும் பதியின் இருப்பையும் செயலையும் முதன்மைப்படுத்தி நிற்கின்றன.

**பதியின் இருப்பு**

சைவசித்தாந்தத்திலும் காஷ்மீரசைவத்திலும் பதி பற்றிய எண்ணக்கருவானது சமய நிலைக்கும் மெய்யியல் நிலைக்கும் ஏற்ப எடுத்தாளப்பட்டமை இவற்றின் சிறப்பம்சம் ஆகும். பதியாகிய சிவன் பௌதிகவதீதன் ஆதலால் அவனைப் புலனறிவால் அறியவியலாது. காணுதற்கரிய பதியின் இருப்பை மேலாண்மையை உலகை அடிப்படையாகக் கொண்டு தர்க்க அடிப்படையில் சித்தாந்திகள் எடுத்தாண்டுள்ளனர்.

"அவன் அவள் அது எனும் அவைமூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்."

என்கிறது சிவஞானபோதம்.[4] இதனையே,

"ஒருவனோடு ஒருத்தி ஒன்றென் றுரைத்திடும் உலகமெல்லாம்
வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும் தான்முதல் ஈறுமாகி
மருவிடும் அநாதி முத்த சித்துரு மன்னி நின்றே"

எனச் சித்தியாரும்[5]

"எல்லா உலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார் போல் நிற்பார் அவர்"

எனத் திருக்களிற்றுப்படியாரும்[6] கூறுகின்றன. சிவஞான போத முதற்சூத்திரம். மூன்று விடயங்களை முதன்மைப்படுத்துகின்றது. அவையாவன,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) பிரபஞ்சம் அவயப்பகுப்பையும் முத்தொழிலையும் உடைய உள்பொருள்.

2) பிரபஞ்சம் முத்தொழிற்படக் காரணமான கர்த்தா ஒன்றுண்டு.

3) பிரம்மா, விஷ்ணு, முதலானோர் முத்தொழிற்படுவர். ஆதலால் சங்காரகாரணனே முதல்வன்.

அதாவது, அவன், அவள், அது, அவை எனப் பிரிப்புடையதாகிய உலகு தோன்றல், நிலை பெறல், ஒடுங்குதல் என்னும் முத்தொழிலை உடையது. கட்புலனாகும்போது தோன்றலும் இடைவிடாது காணப்படும் போது நிலைபெறலும் கட்புலனாகாத போது அழிதல்/ ஒடுங்குதலும் நிகழ்கின்றது என்பர். மஹாசங்காரத்தில் யாவும் அழிவதால் பிரபஞ்ச ஒடுக்கத்தை யாரும் காணமுடியாதென்பார். பிரபஞ்சம் இவ்வாறு முத்தொழிற்படல் இயற்கையானது அல்ல. சுட்டி அறியப்படும் காரியமாகிய இப்பிரபஞ்சம் ஒரு கருத்தாவின் ஆணை வழி முத்தொழிற்படுகின்றது என அனுமானத்தால் நிறுவுவர். மேலும் பிரம்மா, விஷ்ணு முதலான படைத்தற் காத்தற் கடவுளரும் முத்தொழிற்படும் எல்லைப்படுத்தப்பட்ட அதிகாரத்தை உடையோர். மஹாசங்கார காலத்தில் அழிவின்றி இருப்பவர் சிவனே. ஆதலால் அச்சங்கார காரணனே முதல்வன் என்பதும் ஒடுங்கிய பிரபஞ்சத்தை மீளவும் தோற்றுவிப்பவரும் அவரே என்றும் கூறுவர். ஆக, "அவன், அவள், அது எனச் சுட்டியறியப் படும் பொருள் உலகு; அது அசித்து, முத்தொழிற்படுவது" அசத்தை முத்தொழிற்படுத்த ஒருவன் தேவை; அவனே கர்த்தா; அவன் ஒருவனாய், ஆதி அந்தமிலானாய், வினை முதல்வனாய் இருப்பன், எனப்படுகின்றது.

அவயப் பகுப்புடையதாக உலகைக் காட்டி, அது தோற்றம், நிலைபேறு, இறுதி என்னும் முத்தொழிலுக்குரியது எனவும் விளக்கப்படுகின்றது. "தோற்றிய" என்னும் "பிறவினையால்" முத்தொழிற்கும் "காரணன்" உண்டென நிறுவுகின்றனர். இதனை உலோகாய்தரும் மீமாம்சகரும் நிராகரித்து, உலகம் என்றும் நிலைபேறு உடையதென்றும் அது காரியமில்லை என்றும் ஆகவே காரணன் தேவையில்லை என்றும் கருத்தாவின் உண்மையைச் சாதித்தல் "முயல் கொம்புடையது" என்பதை ஒத்தது என்றும் கூறி நிற்பர். இதனை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உதிப்பதும் ஈறுமுண்டென்றுரைப்பதிங் கென்னை முன்னோர்
மதித்துல கநாதி யாக மன்னிய தென்ப ரென்னின்
இதற்கியான் அநுமானாதி யெடேனிப்பூ தாதி யெல்லாம்
விதிப்படி தோற்றி மாயக் காரணலான் மேதினிக்கே"

எனச் சித்தியார் விபரிக்கின்றது.[7]

"காணப்படும் உலகம் தோன்றி நின்று மறைவது,
அவயவப்பகுப்புடைமையால்:
எதுவெது அவயவப் பகுப்புடையதோ, அதுவது ஒருகாலத்தில்
மாய்ந்து மறைவது ஆகும், ஆடை போல"

என்பர். அதாவது முன்பிருந்ததாகிய நீர் அழிந்து நீராவி அணுக்களாய்ப் பிரிந்து பின் ஒன்று கூடுங்கால் மீளவும் நீராகின்றது. அழிதல் என்பது இங்கு உருவமாற்றத்தையே குறித்து நிற்கின்றது. ஆடை எரிந்து விட்டதெனில் அது எவ்வெவற்றினின்று உருவானதோ அதுஅதுவாய் மாறிவிட்டது என்று பொருளாகும் என்பர். பெற்றார் உயிருடன் இருக்கும் போது பிள்ளைகள் பிறந்து வாழ்ந்து இறந்து போதலையும் பிள்ளைகள் வாழும் போது பெற்றார் இறப்பதையும் உதாரணமாகச் சுட்டுவர். ஆகவே தோன்றல், நிலைபெறல், அழிதல் எனும் முத்தொழிலும் நடைபெறுதல் தெளிவாகின்றது. இதனையே மெய்கண்டார்,

"பூதாதிமீறும் முதலும் துணையாகப்
பேதாய் திதியாகும் பெற்றிமையின் - ஓதாரோ
ஒன்றொன்றிற் தோன்றி உளதாய் இறக்கண்டும்
அன்றன்றும் உண்டென்ன ஆய்ந்து"

என்கின்றார்.[8] இவ்வாறு அனுமானத்தினூடு மூவினையுடைமை எடுத்தாளப்பட்டுள்ளது.

காட்சியை மட்டும் ஏற்கும் சார்வாகர், உலகு ஒடுங்குவதைக் காணமுடிவதில்லையே எனின் "உலகில் ஒரு பொருள் தோன்றி, நிலை பெற, வேறொரு பொருள் அழியும்." எல்லாப் பொருளும் ஒருங்கே தோன்றுவதையோ அன்றி ஒருங்கே அழிவதையோ காண முடிவதில்லையே எனின் "குறித்த ஒரு காலத்தில் ஓரினப்பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருங்கே தோன்றுதலையும், அவை வேறொரு காலத்தில் ஒருங்கே அழிதலையும் குறிப்பிடுவர்.

உலகம் உளதாயின் அது ஏன் அழிய வேண்டும் என்றும் அழிந்தது ஏன் மீளத் தோன்ற வேண்டும் எனவும் பௌத்தர் வினவுவர். உலகம் தன்னுரு நீங்கி அருவநிலை அடைதலே ஒடுக்கம். அவ்வாறு ஒடுங்கியவிடத்தின் நின்றும் தோன்ற வேண்டும். இவ்வாறு மீள உலகம் தோன்றக் காரணம் உயிர்களை மீள மலத்தின் பிணிப்பினின்றும் நீங்குதற் பொருட்டேயாகும். தோற்றுவிக்கப்பட்ட உலகில் உயிர்கள் பிறந்து வினைபோகங்களை அனுபவிக்கும். மலபரிபாகம் ஏற்பட்ட பின் உயிர்கள் இறைகதியடையும், இந்நிலையை ஒரு கட்டத்தில் எல்லாவுயிர்களும் பெற்ற பின் இறைவன் உலகத்தை ஒடுக்குகின்றான் என்பர். "காரண காரிய" உறவான சற்காரியவாதத்தைப் பயன்படுத்தி உலகம் உளது என்பது நிரூபணம் செய்யப்படுகின்றது. ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு காரணம் இருந்தாக வேண்டும். காரியம் திடீரெனப் புதிதாகத் தோன்றுவதில்லை. "உள்ளதில் இருந்தே உள்ளது தோன்றும்" என்பர். இதனை நுணுக்கமாகக் கூறின் காரண நிலையிலும் ஒரு காரியம் உண்டு. இதுவே சற்காரியவாதமாகும்.

"ஒருபொரு ளொருவ னின்றி உளதில தாகு மென்னில்
தருபொரு ளுண்டே லின்றாம் தன்மையில் நின்றே லுண்டாய்
வருதலின் றிலது காரிய முதலுள தாகு மென்னில்
கருதுகா ரியமு முண்டாய்த் தோற்றமுங் கருத்தாவாலாம்"

எனச் சித்தியார் விளக்கி நிற்கின்றது.[9]

காரணனான இறைவன் உலகத்தை எதில் நின்றும் தோற்றிவிக்கின்றான்? என வினவினால், இறைவன் உலகைத் தன்னினின்றும் தோற்றிவிப்பதில்லை என்றும் "சக்தி" யைத் துணைக்காரணமாகக் கொண்டு மாயையினின்றும் (முதற்காரணம்) உலகைத் தோற்றிவிக்கும் நிமித்தகாரணன் என்கின்றனர். இதனை சித்தியார்,

"தேரின்மண் மாயையாகத் திரிகைதன் சக்தியாக
அரியன் குலாலனாய் நின்று ஆக்குவன் அகிலமெல்லாம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தெளிவுறக் கூறியுள்ளது.[10] ஒரு பானையையாக்க, மண் - திரிகை - குயவன் என்பன இன்றியமையாதன. இம்மூன்றும் முறையே முதல், துணை, நிமித்தகாரணங்களாகும். இது போலவே உலக உருவாக்கத்திற்கு மாயை - சக்தி - இறைவன் என்பன முறையே முதல், துணை, நிமித்தகாரணங்கள். இறைவன் "சத்", உலகம் "அசத்"; உள்ளதிலிருந்தே உள்ளது தோன்றும் என்பதற்கிணங்க அசத்திலிருந்தே அசத்து தோன்றும். ஆக, இறைவனிலிருந்து உலகு தோன்றாதென்பது நிரூபணமாகின்றது. குயவனின் குறைகள் இறைவனுக்கும் உண்டோ எனின் இல்லை என்பர். உலகத் தோற்றத்திற்கு இறைவன் காரணமெனின் அவன் குயவனைப் போல உருவுடையனாதல் வேண்டுமேயெனின் அதனை மறுத்து, உருவமற்ற உயிர் உடம்பை இயக்குதற் போல இறைவனும் உலகத்தை இயக்குவன் என்பர். முன்பு குடத்தையும் குயவனையும் ஒருங்கே கண்டவர்கள் பின்பு குடத்தை மட்டும் காணுமிடத்து குயவனை அனுமானிப்பர். ஆனால் இறைவனையும் உலகத்தையும் ஒரு போதும் ஒருங்கே காண்பதில்லையே என வினவின், சமையலறையில் புகையையும் அதற்குக் காரணமான தீயையும் ஒருங்கே கண்டவன் மலையொன்றின் புகையைக் காணும் போது தீயை உய்த்துணர்வான். சமையலறைத் தீயும் மலையிலுள்ள தீயும் வேறெனினும் செயல் மட்டும் ஒன்று. அது போலவே உலகமும் செய்வோனையுடையது என்பர். இதனை ஞானாமிர்தமும்,

" பூத ராதி யோவற வுஞற்றும்
ஒருவனை யுடைத்துப் பொருவிறி காரியம்
ஆதலிற் கடம் போல் என்னிற் கோதின்
திருக்கட மத னோடு இயற்றிய ஒருவனை
ஒருங்குடன் கண்டோன் ஒழிந்திகல் இரிகடங்
கண்டாகவையும் .......................

என்றும்[11]

"கிரிவளர் கழை ஞெலி தூம தனின்
எரிவள ரட்டிற் புகைய லெனவுணர்ந்
தொட்டினை பிறங்க லொள்ளழ லொட்டிய
தென்னை விசேடம் ........"

என்றும் கூறுகின்றது.[12]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து சங்கார காரணனான சிவனையே "முழுமுதல்வன்" என்பர். முத்தொழிலும் சிவனால் நிகழ்த்தப்படுகின்றது எனின் அவன் விகாரியாகானோ என வினவின் "தனக்குரிய முத்தொழில் செய்தும் அது பற்றி விகாரமெய்தாத ஞாயிற்றின் வைத்தறியப்படும் எனச் சிவஞான முனிவர் விளக்குகின்றார்.[13] கோயில் ஒன்றை அமைக்கும் செயலில் பலர் ஈடுபடுவர். ஆயினும் அவர்கள் யாவருக்கும் தலைமைத் தச்சன் ஒருவன் இருப்பது போல சங்கரனும் முதல்வனாகத் திகழ்கின்றான் என்பர். அயன், மால், அங்கி, நாம் ஆகிய உயிர்கள் எல்லாம் சுட்டறிவுடையோர். தன்வயம் உடையோர் அல்லர். முதல்வனே பேரறிவினன். மற்றவர்களோ அவன் வசப்பட்டு அவன் அறிவித்தால் மட்டுமே அறிகின்றவர்களாய் செய்வித்தாலன்றிச் செய்யாதவர்களாய் இருப்பர். இதனூடாக நிரீஸ்வரவாதமும் அநேகேஸ்வரவாதமும் மறுக்கப்பட்டு சங்கரனே முதல்வன் என்பது நிலை நிறுத்தப்படுகின்றது. சங்கார காரணனே முதல்வன் எனில் பிரமா, விஷ்ணு யாவர்? படைத்தல் காத்தற் தொழில்களைச் செய்யும் அவர்கள் மூல பிரமம் ஆகாரா? எனும் வினாக்கள் எழுகின்றன. ஒரு பொருள் எங்கு ஒடுங்குகின்றதோ அங்கிருந்தே அது தோன்றும். யாரால் பிரபஞ்சத்தை ஒடுக்க முடிகின்றதோ அவரே தோற்றுவிக்கவும் காரணமாவார். அவரே அதிகார சக்தி உடையவர்; அவரின் ஏவுதற்கு உட்பட்டவர்களே பிரம, விஷ்ணுக்கள் எனச் சித்தாந்திகள் கூறுவர்.

> "உரைத்த இத் தொழில்கள் மூன்றும் மூவருக்குலகம் ஓத
> வரைத்தொரு வனுக்கே யாக்கி வைத்ததிங் கென்னை யென்னின்
> விரைக்கம லத்தோன் மாலும் ஏவலான் மேவி னோர்கள்
> புரைத்ததி கார சத்தி புண்ணியம் நண்ண லாலே"

எனும் பாடலால் இதனை உணரலாம்[14] இதனைப் போற்றிப்பஃறொடையும், "நல்வினைக்கண் வாழ்நாளின் மாலாயனாகி......" என்கிறது.[15] இதனால் அவனே ஒடுக்கியும் தோற்றுவித்தும் நிறுத்தியும் மீள ஒடுக்கியும் நிற்பன் என்பது தெளிவாகின்றது.

உலகம், ஆன்மாக்கள் வினை போகத்தை அநுபவிக்கவே படைக்கப் பட்டது. ஆன்மாக்கள் உலகில் பிறப்பதற்கு வினையே காரணமென்பர். இவ்வினைப்பயனை அவ்வான்மாக்களிடம் சேர்ப்பதற்கு ஒருவன் தேவை - அவனே இறைவன் என்றும் சித்தாந்திகள் உரைப்பர். ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த நன்மை தீமைகளே அடுத்த பிறவிக்கான பலனைக் கொடுக்குமெனின் முதல்வன் எதற்கு? என மீமாம்சகர் முதலானோர் வினா எழுப்புவர். இதற்குச் சித்தியார்,

"இரு வினை இன்பத் துன்பத்திவ்வுயிர் பிறந்திறந்து
வருவது போல தாகும் மன்னிய வினைப்ப லன்கள்
தருமரன் தரணியோடு தராபதி போலத் தாமே
மருவிடா வடிவுங் கன்மப் பலன்களும் மறுமைக் கண்ணே"

என்கின்றது[16] வினை சத்தல்ல, அசத்து; அறிவற்ற வினை, தானே தன் பயனைத் தராது. செய்த வினை செய்த பொழுதே கெட்டொழிந்து விடும் பின்னின்று பயன்தராது. இதனை அருணந்தி சிவாச்சாரியார்,

"செயல்களே பலத்தைச் செய்யும் தெய்வம் வேண்டா இங்கென்னின்
முயலுமிச் செயல்கள் இங்கே முழுவதும் அழியு மெங்கே
பயனளிப் பனவழிந்தே பலன்களைப் பண்ணுங் கெட்டே
வயலிடும் தழையும்தின்னும் மருந்தும் பின் பலிக்கு மாபோல்"

என்றும்[17]

"உலகுடல் கரணங் காலம் உறுபலம் நியதி செயதி
பலவிவை கொண்டு கன்மம் பண்ணுவ துண்பதனால்
நிலவிடா திவைதாம் சென்று நினைந்துயிர் நிறுத்திக் கொள்
அலகிலா அறிவனாணை அணைந்திடும் அருளினாலே"

என்றும் இதனை விளக்குகின்றார்.[18] உதாரணமாக ஒருவன் நிலத்தை உழுது, பண்படுத்தி, எருவிட்டு, நீர்பாய்ச்சி, விதைவிதைத்து உரிய காலத்தில் களை களைந்து பயிர் வளர்க்கின்றான். அது போலவே இறைவன் யாவற்றிற்கும் பரம ஆதாரமாய் இருந்து கொண்டு, உயிர்கள் செய்யும் செயற்கேற்பப், "பலனை" மாயையுடைய காரியங்களின் மூலமாகக் கொடுப்பான்.[19]

இதேவேளை வினைகள் அறிவற்றன அவை செய்தவனைச் சென்றடையாது என்பதனை ஏற்பினும் அதனைச் செய்த உயிர்கள் அறிவுடையவை; அவை தாம் செய்த வினைகளைத் தாமே நுகராவா எனின் உயிர்கள் அறிவிக்க அறிவனவே அன்றித் தாமே அறிவனவல்ல அவற்றிற்கு, நுகர வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தி அவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுபடுத்தும் போதுதான் தத்தம் வினைகளை உயிர்கள் நுகரும் என்பர். உலகில் உயிர்களுக்குக் கிடைக்கும் அறிவு எல்லைப் படுத்தப்பட்டது என்றும் (சிற்றறிவு) கூறுவர். ஆகவே உயிர்களின் அறிவுக்குட்பட்ட வகையில் சிற்சில உலக நிகழ்வுகளினூடாக அவற்றை நினைப்பித்து அதற்கேற்ப முயலும்படி செய்து, வினைப்பயன்களைச் சேர்ப்பிக்கின்றான். இதனை,

"அவ்வினையைச் செய்வதனில் அவ்வினைஞர் தாம் சென்றங்கு
அவ்வினையைக் காந்த பசாம்போல் அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு"

என விளக்குகின்றார் மெய்கண்டார்.[20] இவ்வாறாக இறையிருப்பை, அதன் தேவையை உணர்த்தி நிற்பர்.

காஷ்மீரசைவம் சைவசித்தாந்தத்தைப் போன்று தனது தத்துவத்தளத்திற்கு அமையப் பதிக்கோட்பாட்டை முன்வைக்கின்றது. உலகு, ஆன்மா என்பவை உண்மைப் பொருட்கள் எனவும் அவை பதியினின்றும் வேறுபட்டவை அல்ல என்றும் அவனே யாவற்றிற்கும் காரணம் என்றும் கூறுகின்றது. இதனை,

"தனது மகாகுகையினுள்ளே மூழ்கிக் கிடக்கும் பொருட்கள் அனைத்தையும் ஞானசக்தி என்ற விளக்கினால் எவன் பிரகாசிக்க செய்கின்றானோ அந்த சிவனை என்றும் துதிப்போம்."

எனும் பாஸ்கரரின் கூற்று மூலம் அறிய முடிகின்றது.[21] அனைத்துப் பொருட்களின் தோற்ற ஒடுக்கத்திற்கும் காரணன் சிவன் என்கின்றனர்.

சைவசித்தாந்திகள் போல காஷ்மீர சைவர்களும் "பேதம் நிரம்பியதான பிரபஞ்சத்திற்குக் காரணமான மாயை எனப்படும் சுதந்திரசக்தியை உடைய மாயாவி" எனச் சிவனை சித்தரிக்கின்றனர்.[22] ஆனால் சித்தாந்திகள் கூறுவது போல பதியை சட மாயையில் இருந்து பிரபஞ்சத்தை தோற்றி நிலைபேறடையச் செய்து பின் ஒடுக்கும் முத்தொழிலை பற்றின்றிச் செய்யும் நிமித்த காரணனாக இவர்கள் கூறவில்லை. பதியே உலக சிருஷ்டிக்கு நிமித்த காரணனாவும் உபாதன காரணனாகவும் எடுத்தாளப்படுகின்றான். இதனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தனது இச்சாசக்தியாலே (சித்) தன்னையே சுவராகக் (ஆதாரமாக) கொண்டு பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கிறது"

என்பர்.[23] தன்னையே ஆதாரமாகக் கொண்டு என்பதனூடு நிமித்தகாரணமாக பதி வேறு, உபதான காரணம் (மூலப் பொருள் ) தேவையின்றித் தானே உபாதனம் ஆகின்றது என்கின்றது காஷ்மீர சைவம். மேலும் மாயை பரம சிவனின் சக்தி, பிறிதிலாது அவனைச் சூழ்ந்த உபாதி (வந்தேறி) அல்ல. இச்சக்தி மூலம் பல வேறுபாடுகளை அவன் உருவாக்குகின்றான் என்பர். சங்கரரோ பிரம்மம் இயற்கையில் செயலற்றது என்கிறார். மாயை என்னும் உபாதியுடன் கூடி ஈஸ்வரனாகி உலகப்படைப்பை நிகழ்த்துவதாகவும் கூறுகிறார். ஆனால் பன்மைவாதிகளான சித்தாந்திகள் இதனை நிராகரிப்பர். இவ்வாறான வாதத்தைக் காஷ்மீரசைவர்கள் தம் "ஒருமைவாதத்தை" நிலைநிறுத்திவே முன்வைக்கின்றனர் என்பது தெளிவு. சித்தில் பிரபஞ்சம் அடங்கியுள்ளதென்றாலும் அதன் பிரகாசத்தினின்றும் பிரபஞ்சம் பிறிதானதல்ல என்பதும் தெளிவுறுத்தப்படுகின்றது. சிவத்திற்கு அனந்த சக்திகள் உள்ளன. அவன் சுவாதந்திரியன் தன் இச்சாமாத்திரத்தால் எதனையும் செய்ய வல்லன் அவனிற்கு வேறான ஒரு பொருள் அவனிற்குத் தேவையில்லை.[24] உள்ள பொருளே ஒரு கண்ணாடியில் நிழலாகத் தெரிகின்றது. தெளிவான தூய கண்ணாடியில், கண்ணாடியினின்று வேறுபட்டவையும் தமக்குள் வேறுபட்டவையு மான நகரம், கிராமம் முதலியவற்றின் பிரதி பிம்பம் விழுவது போலவே உலகத்தின் பிரதிபிம்பம் என்பது கண்ணாடியினின்று வேறுபடாமல் இருந்தும் வேறாகத் தோற்றுவது போலவே உலகமும் பரமசிவனிடம் இருந்து வேறுபடாமல் இருந்தும் உலகத்தின் ஆபாஸம் (சிறிதுவெளி வருதல்.) பரமசிவனிடம் இருந்து வேறுபட்டதாகத் தோற்றுகின்றது என்பதை,

யத் பரதத்த்வம் தஸ்மிந் விபாதி ஷட்த்ரிம் சதாத்ம ஜகத்
தர்ப்பண - பிம்பம் யத்வந் நகர -க்ராமாதி சித்ரவிபாகி
பாதி விபாகேனநவச பரஸ்பரம் தர்ப்பணாதபிச
விமல தம - பரமபைரவ - போதாத் தத்வத்விபாகசூந்யமபி
அந்யோந்யம் ச ததோபிச விபக்தமாபாதி ஜகதேசத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் அபிநவர் கூற்றினால் அறியலாம்.[25] இங்கு "சித்" தன்னையே சுவராகக் கொண்ட தன்னிச்சாமாத்திரத்தால் தீட்டப் பெற்ற சித்திரமே இப்பிரபஞ்சம் எனப்படுகின்றது. மேலும் பிரமம் மாயையோடு கூடிச் சிருஷ்டி செய்வது போலல்லாது சைதன்ய பிரகாசத்தோடு ஏகாத்ம பாவத்தைப் பெற்றதாக இப்பிரபஞ்சம் எடுத்தாளப்படுகின்றது. இவ்வாறான கருத்தாடல் இந்து மெய்யியல் எங்கும் விரவிக்காணப் படுகின்றது.

சித்தாந்திகள் "மாயையே உலகிற்கு முதற் காரணம்" எனக் கூறுவதை இவர்கள் மறுத்துரைப்பர். மாயை அசத்துப் பொருள், பிரகாசமற்றது, தேசம், காலம், பொருட்கள் அனைத்தும் அச்சித் சக்தியினால் தோற்றுவிக்கப்பட்டும் ஊடுருவப்பட்டும் உள்ளன வாகையால் அச்சக்தியே இவையனைத்துமாய்த் திகழ்கின்றது. பொருளோ, கருவியோ இன்றி இச்சக்தி உலகாய் விரிகின்றது. குறிப்பிட்ட நிலையில் உலகைத் தன்னுள் ஒடுக்குகிறது. அதுவே சுதந்திர சக்தி/ சுதந்திரத் தன்மை எனப்படுகிறது. இது "ஸ்வாதந்திர்ய வாதம்" எனப்படுகிறது.[26] இது உண்மையில் வாதம் அன்று எனவும் பரமசிவனின் தனிப்பட்ட பண்பு என்றும் கூறப்படுகின்றது. இவ்வாதம் சங்கரர் கூறும் விவர்த்தவாதத்தை ஒத்ததல்ல. ஏனெனில் கயிறு பாம்பாகத் தெரிகின்றது. அங்கு கயிறு பாம்பாகத் தோன்றுகிறது. உள்ளபொருளான பிரமம் இல்பொருளான உலகமாகத் தோன்றுகிறது. (ஜகத் மித்யா) என்கின்றார் சங்கரர். ஆனால் காஷ்மீரவாதிகள் உலகை உண்மைப் பொருள் என்கின்றனர். நகரமும் அது கண்ணாடியில் பிம்பமாகத் தெரிவதும் உண்மை. நகரம் அதன் நிழல் எனும் வகையில் அவற்றின் உண்மைத்துவம் உரைக்கப்படுகின்றது. அவ்வாறாயின் சங்கரரின் பிரதிவிம்ப வாதமும் இதுவும் ஒன்றோ எனின் இல்லை என்றே கூறவேண்டும். சங்கரர் பல ஆன்மாக்கள் எனும் கருத்தை விளக்க ஒரு பரமான்மா பல ஆன்மாக்களாகத் தோற்றம் தருகின்றது என்றார். ஆனால் காஷ்மீரவாதிகள் உலகு பற்றிய கருத்துக்கே இதனைக் கையாண்டுள்ளனர். இங்கு நகரம் அதன் பிம்பம் எனும் கருத்து நிலை எடுத்தாளப்படுகின்றதே தவிர "பல" எனும் கருத்து எடுத்தாளப்படவில்லை.

அதேவேளை காஷ்மீரசைவம் கூறும் "கண்ணாடி" எனும் திருட்டாந்தத்தில் தகாரே குற்றம் கூறுகின்றார்.[27] கண்ணாடியில் விழும் விம்பம் புற உலகினுடையது. ஜடப் பொருளாகிய கண்ணாடியில் விழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிவிம்பம் பற்றிய அறிவு கண்ணாடிக்கு இருப்பதில்லை. ஆனால் பரமசிவனுக்குத் தன் விமர்ச சக்தியின் வடிவாகப் பிரதிபலிக்கும் உலகத்தைப் பற்றிய ஞானம் உண்டு. உலகின் பிரதிபிம்பம் பரமசிவனிடத்திலேயே விழுவதனால் அதற்கு கண்ணாடி போன்ற வேறு கருவி தேவைப்படுவதில்லை. கண்ணாடி தன்னளவில் ஒளியற்று இருப்பதனால் பிரதிவிம்பம் விழுவதற்குப் புறஒளி தேவையாக உள்ளது. ஆனால் பரமசிவன் சுயம்பிரகாசமாக இருப்பதால் அவனுக்குப் புறஒளி தேவையில்லை என்கிறார் தகாரே. அத்தோடு கடல் அதன் அலைகள் என்பவற்றை வைத்து விளக்கமுற்படுகின்றார். பரமசிவனிடத்து இருந்து உலகு சிறிது வெளிவருகிறது. இதுவே ஆபாஸவாதம் என்கிறனர் காஷ்மீரசைவர்கள். குயவனுக்கு மண், திரிகை முதலான சாதனங்கள் தேவை; இங்கு பரமசிவத்திடம் இருந்து வெளிவராத உலகம் வெளிவருகின்றது. ஆதலால் கருவிகள் தேவையில்லை. தன் சுதந்திர இச்சையால் அவன் உலகை வெளிக் கொணர்கிறான் என்கின்றனர்.

ஆதலால் இது விசிட்டாத்வைதிகளின் பரிணாமாதவத்தை ஒக்குமோ எனின் இல்லை என்றே கூறவேண்டும். ஏனெனில் பால் - புளித்தபால் ஆதல், அதாவது ஒன்று இன்னொன்றாக மாற்றமுறுதல் அல்லது பரிணாமம் அடைதலே இராமானுஜரின் விஷிட்டாத்வைத பரிணாமவாதம் ஆகும். ஆனால் அங்கு பூரணப் பொருளாக பதியினின்றும் உலகம் "சிறிது" வெளிப்படுகின்றதே தவிர முழுதுமல்ல. இது பெரிய ஆலமரம் மிகச் சிறிய ஆலம் விதையில் எவ்வாறு அடங்கியிருக்கின்றதோ அவ்வாறே உலகு இறையின் அந்தக்கரண சித்தியில் அடங்கியுள்ளது.

"யதா ந்யக் ரோத த - பீஜஸ்ய சக்திரூபோ மஹாத்ரும:
ததா ஹ்ருதய - பீஜஸ்தம் விச்வமேதத் சராசரம்"

எனும் ஷேமராஜரின் மேற்கோள் மூலம் இது அறியக்கிடக்கிறது.[28]

மஹேஸ்வரனை விமர்சவாகவும் சுதந்திரனாகவும் எல்லையற்ற சக்திகளை உடையவனாகவும் காஷ்மீரசைவர்கள் எடுத்தாள்வர். அவ்வாறானானவன் "மாயை" எனும் பிறிதொன்றைக் கொண்டே உலகை சிருஷ்டிக்க வேண்டுமெனில் அது அவனிற்கு இழுக்காகிவிடும் என்பர். இதனை விளக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குயவன் செய்த மட்பாண்டம் போல யோகி தன் இச்சா மாத்திரத்தால் களிமண் இன்றியே தோற்றுவித்த குடமும் தண்ணீர் பிடிக்க உதவத்தானே செய்கின்றது"

எனும் திருட்டாந்தத்தை எடுத்தாள்கின்றனர்.[29]

மேலும் மயிலின் முட்டைக்குள் உள்ள நீர்ப்பண்டத்தில் இருந்து வெளிவரப் போகின்ற மயிலின் அழகிய பல்வேறு நிறம் கொண்ட இறகுகளின் விதை அடங்கியிருப்பது போல (மயூராண்டரஸம்) பலவகையான விந்தைகள் கொண்ட உலகம் பரமசிவனுள் அடங்கியுள்ளது. இது கொஞ்சமாக வெளிவருதலே உலகம் எனவும் அதனை ஆபாஸம் என்றும் உரைப்பர்.

சைவசித்தாந்திகள் இவ்வாபாஸவாதக் கருத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் சாங்கியர்கள் போல சற்காரியவாதிகள். அதாவது "உள்ளதிலிருந்து உள்ளதே தோன்றும்" இல்லது தோன்றாது என்பர். பூரணமான பதியினின்று அபூர்ணமான உலகு தோன்ற முடியாது என்பர். இதற்கு இரு காரணங்கள் கூறப்படுகின்றது.

(i) பகுதிகளை உடைய எதுவும் மாற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் உரியது. பதியினின்று உலகு சிறிது வெளிப்படுவதாக அமையின் "பதி" பகுதிகளை வெளிப்படுத்துவதாக அமையும். அது பதியின் மேலாண்மையைக் கேள்விக்குரிய தாக்கிவிடும்.

(ii) உலகு சடமானது; பதியோ எங்குமுள்ள எல்லாமறிந்த, எல்லாம் வல்ல பூரணம் ஆகவே பதியின்று உலகம் தோன்றமுடியாது எனச் சற்காரியத்தினை முன்வைப்பர்.

இவ்வாறாக பதியின் இருப்புப் பற்றி வேறு வேறு விதமான வாதங்களை முன்வைத்தாலும் இருமெய்யியல்களும் உலகினூடாக இறை இருப்பை நிறுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பதியின் இயல்புகள்

சைவசித்தாந்தத்தினதும் காஷ்மீரசைவத்தினதும் முடிந்த முடிபான பொருள் பரமசிவனே. அவனை சித் அல்லது சிதி (சைதன்யம்) பராஸம்வித் (முடிபான ஞானம்) அல்லது அநுபூதி (பரமேசுரன்) எனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவாறு சுட்டுகின்றனர். காஷ்மீரசைவத்தின் படி அவன் நித்தியவஸ்து இது ஒரு பிரக்ஞை; அதே வேளை பிறிதொன்றையும் சாராதது. எல்லா மாற்றங்களுக்குள்ளும் மாறாது நிற்கும் தத்துவம்; இதற்கு நான் - அது, விடயம் - விடயி என்ற வேறுபாடுகள் இல்லை. அது மேலான பரம்பொருள் தன்னைத் தானே பார்ப்பது; என்றும் உள்ளது. இதன் இன்றியமையாத இயல்புகள் பிரக்ஞை, ஆனந்தம் என்பன. அதனை வெளிப்படுத்தும் விதங்களாக "இச்சை, ஞானம், கிரியை, என்பன எடுத்தாளப்படுகின்றன.[30] சைவசித்தாந்தமும் இக்கருத்துக்களை ஏற்றுக் கொள்கின்றது. இறைவன் இவை யாவையும் கடந்தவனாய், எங்கும் உள்ள, என்றுமுள்ள,[31] யாவும் அறிந்த பொருள், பரமானந்த சொரூபினன்[32] சுதந்திரன் ஒளிமயமாகவும் விமர்சமயமாகவும் உள்ள பொருள் பதி, என்கின்றன.[33] பதி பிரகாசமானது ஆனால் செயலற்றிருப்பது எனக் கூறின் அது "பதி" எனும் மேலான தன்மைக்கு இழுக்காகும். சடப் பொருளுக்கும் அவனுக்கும் வேறுபாடு இல்லாது விடும். ஆகவே அவன் செயற்றிறன் உடையவன் ஆதல் வேண்டும். இதனையே காஷ்மீரசைவம் "விமர்ஸ" என்கிறது. "விம்ருச்" என்னும் வேர்ச் சொல்லின் பொருள், "அறிவினால் பற்றுவது" என்பதாகும். நான் எனும் தன்மையின் உணர்வு என்பதே "விமர்ஸ" என்பதன் பொருள். இவ்விமர்சத்தினாலேயே உலகின் முத்தொழிற்பாடும் நிகழ்கின்றது. இதனையே கண்ணாடியில் நிழலை அசையச் செய்பவன் போல் பரமனும் நீக்கமின்றி ஆடி, புவனத்தை ஆக்கியசைத்தருளும் திறம் குமரகுருபரால் எடுத்தாளப் பட்டுள்ளது.[34]

எங்குமுள்ள, எல்லாம் வல்ல, எல்லாமறிந்த பொருளாக சைவசித்தாந்திகள் பதியை எடுத்தாளுகின்றனர். இப்பதி நிர்மலன் ஆவான். மலங்களால் இயல்பாகவே பீடிக்கப்படாதவன். மலத்தால் பீடிக்கப்பட்ட ஆன்மாக்களுக்கு அவற்றின் கர்ம பலன்களைத் தருபவனாய். நியாயஸ்தனாய் விளங்குகின்றான். அவன் சுதந்திரனாக சுவதந்திரியனாக உள்ளான். பசுக்களுக்காக உலகைப் படைப்பவன், அதனால் உலகிற்கு உரிய காரணம், சாதனம், பலன் என்பவற்றையும் அறிந்தவன்.[35] பூரணன் என சித்தாந்திகள் கூறுகின்றனர். மேலும் பதி உலகோடும் பசுக்களோடும் ஒன்றாய் வேறாய் உடனாய் இருப்பவன். உடலும் உயிரும் போல அதுவேயாய் நிற்கும் தன்மை "ஒன்றாய்" எனப்படுகின்றது.[36] இது அபேத நிலை ஆகும். இறைவன் பொருட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையால் வேறாவதற்கு "கண் -- அருக்கன் போல்" (கண்ணொளியும் கதிரவன் ஒளியும் போல) என உவமை கூறி விளக்கப்படுகின்றது. கண்ணொளியும் கதிரவனொளியுமானது அருளும் ஒளியும் போல வேறு வேறானது அல்ல. இரண்டும் கலந்து நின்றே பொருட்டன்மையால் வேறுபடுகின்றன. கதிரவனின் ஒளி பொருளைக் காட்டுகின்றது. கண்ணொளி பொருளை காணுகின்றது. இதுவே வேறாய் நிற்றலாகும். இது பேத நிலை ஆகும். உயிருக்கு உயிராதற்றன்மையினால் உடனாதற்கு "கண்ணொளியும் ஆன்மபோதமும் (உயிரும் அறிவும்) போல் என உவமை கூறுவர். அது சொல்லும் பொருளும் போலன்றி காண்டல் நிகழும் போது ஆன்மபோதமும் உடன் சென்று அப்பொருளை "இ∴து" என அறிகிறது. இதுவே உடனாய் என்பதாகும். இது பேதாபேதநிலை ஆகும். இதனை காஷ்மீர சைவ எழுச்சிக் காலத்திற்குச் சமகாலத்தில் வாழ்ந்த தோத்திர முன்னோடியான ஞானசம்பந்தர், "ஈறாய் முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்" எனும் பாடலில் பாடிப் போந்துள்ளார்.[37] திருக்கடவூர் உய்யவந்ததேவர் இதனை,

"ஈறாகி அங்கே முதலொன்றாய் ஈங்கிரண்டாய்
மாறாத எண் வகையாய் மற்றிவற்றின் - வேறாய்
உடனாய் இருக்கும் உருவுடைமை யென்றுங்
கடனா யிருக்கின்றான் காண்"

என மொழிய,[38]

"அரக்கொடு சேர்ந்தி அணைத்த அக் கற்போல்
உருக்கி உடங்கியைந்து நின்று - பிரிப்பின்றித்
தானே உலகாந் தமியேன் உளம்புகுதல்
யானே உலகென்பன் இன்று"

என மெய்கண்டரும் பாடிப்போந்துள்ளார்.[39]

காஷ்மீரசைவத்தில் பதியே யாதுமாய் உள்ள பொருள்; "சித் ஒன்றேயாக தான் இருப்பதை அறியாத நிலை; இதனை அநாசிரித (ஆசிரயமற்ற) சிவம் என்பர். பிரகாசநிலை இது. அடுத்து சைதன்யமே பருப்பொருளாக உருக்கொண்டது போல எல்லாத் தத்துவங்களுமாய்ப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனங்களுமாய் யோகப் பொருளாய்க் காட்சியளிக்கும். அதேவேளை அவற்றை அறிந்து அனுபவிப்பவராயும் உள்ளது என்பர். ஒவ்வொருடலும் அதனைக் கொண்டுள்ள உயிரும் எல்லா உடலுமாய் அனைத்துமாய் இருக்கின்றது பதி என்கின்றனர்.[40] பிரபஞ்சத்திற்கு அப்பாற்படும் பிரபஞ்சமயமாகவும் பரமானந்தமயமாகவும் செறிந்த பிரகாசமே உருவாகவும் கொண்ட பரமசிவனுக்கு அறிபொருளாயுள்ள சிவன் முதல் பூமி ஈறாக உள்ள அனைத்துத் தத்துவங்களும் தன்னினும் வேறுபட்டதாகவே தோன்றுகின்றது. அந்நிலையில் உண்மையிலேயே அறிவோன் பரமசிவனே. பல்லாயிரம் வேறுபாடுகள் கொண்ட இவை அனைத்துமாய் தோற்றமளிக்கின்றான் என்பர். அதனை ஈஸ்வர பிரத்திய பிஞ்ஞை,

> "வேறுபட்ட இயல்பினைக் கொண்ட பொருளாய் காணப்படுவது எந்த ஒரு சைத்தன்யமோ (பிரதிமையோ) அதுதான் வேறுபாடற்ற எல்லையற்ற சைதன்ய ரூபனான அறிவோனாகிய (பிரமாதா) மகேஸ்வரன்"

எனக் கூறுகின்றது.[41]

> "பதியே உலகை உண்டாக்குகின்றது. பந்தத்தை உண்டாக்கு கின்றது. சீவனை அவற்றுள் உழலச் செய்கின்றது. அதனுளிருந்து விடுவிக்கின்றது. அவனைத் தவிர்த்து சுதந்திர மானதோ வேறுபட்டதோ வேறு எதுவுமில்லை இத்தகையவை பலவும் விந்தைகளுமே பரமனுடைய சுபாவமாகும்"

என்கிறது தந்திரலோகம்.[42] இவ்வாறாக ஒன்றாய், உடனாய், வேறாய் இருக்கும் பதியின் இயல்பை ஒருமைவாத மெய்யியற் தளத்தின்னின்றும் விளக்குகின்றனர் காஷ்மீரசைவர்.

## இரு நிலைகள்

இவ்வாறு இச்சைவதத்துவவாதிகளால் உரைக்கப்படும் பதி இரு நிலைகளை அல்லது இரு இலக்கணங்களை உடையதாக எடுத்தாளப்படுகின்றது.

உபநிடதங்கள் பிரமத்தின் நிலையை "நிஷ்பிரபஞ்சநிலை, சப்பிரபஞ்சநிலை, என இரண்டாக விளங்குகின்றன. வேதாந்திகளும் பிரமத்தை நிர்குணப்பிரம்மம், சகுணப்பிரம்மம் (ஈஸ்வரன்) என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாக எடுத்தாளுவர். சைவசித்தாந்திகள் இறைவனுடைய நிலையை சொரூபநிலை, தடத்த நிலை என எடுத்தாளுகின்றனர். குணங்குறிகள் கடந்த திரிகரணங்களுக்கு அதீதமான சுத்த சைத்தன்யமான உண்மையான இயல்பு நிலையாய் சொரூப நிலை விளங்குகின்றது. இந்நிலையில் இறைவன் "சுத்த சிவம், சொரூபசிவம், பரமசிவம் என அழைக்கப்படுகின்றார். இதனை சிவாக்கிர யோகிகள்,

"அறிவரிதாய்ச் சச்சிதா னந்தமாகி
யகண்டமாய் நித்தியமா யனாதியாகிப்
பொறிகரணம் குறி குணங்கள் விகாரமின்றாய்ப்
பூரணமா மெய்ப்பிலாதா யமலமாகிப்
செறிவரிதாய் மிகச்சிறிதாய்ப் பெரிதுமாகிச்
சித்தசித்தா யுள்ளதனைச் சேட்டித் தொன்றாய்ப்
பிறிவிலாதாய்ப் பேரொளியாய்ப் பெண்ணலியாணன்றாய்ப்
பெரும் பொருளாய் பதி சொரூபம் பேசுங்காலே"

என உரைத்துள்ளார்.[43] அருவ உருவங்கள் தாண்டிய, தொழில்கள் அற்ற, யாவையும் கடந்த பேரானந்தப் பொருளாய் இறையிருக்கும் என்கிறது சித்தியார். இதனைச் சிவப்பிரகாசம்,

"................................. பதிபரமே அதுதான்
நிலவும் அருவுருவின்றிக் குணம் குறிகளின்றி
நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி
அலகிலுயிர்க் குணர்வாகி அசலமாகி
அகண்டிதமாய் ஆனந்தவுருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்துளோரே"

என்கிறார்.[44] இதனை "குணமிலான் குணம் குறியிலான் குறைவிலான்...." எனத் தாயுமானவரும் எடுத்துரைத்துள்ளார்.[45] அதேவேளை சொரூப நிலைச் சிவன் "எண்குணத்தானாகத்" திகழ்கிறான். எண்குணங்களாவன, தன்வயத்தினனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை, என்பனவாகும். இவ்வாறான இறைவனை "காணொணா வண்ணத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளந்து காண்கிலாத அறிகிலார் அரியவர்கள்" "ஆதி அந்தமில்லா அரும் பெரும் சோதி"[46] "தாயினும் நல்ல தலைவன்"[47] எனப் பலவாறு சுட்டிநிற்பதையும் குறிப்பிடலாம்.

இவ்வாறு பரிபூரணப் பொருளாய் விளங்கும் இறைவன், பண்பு, தொழில், இணைந்த நிலையினனாதல் "தடத்தநிலை" ஆகும். இந்நிலையில் குணங்குறியுடன் கூடியவராய், வழிபாட்டிற்குரியராய் உணர்ந்தறிதற்கு எளியராய் இறைவன் விளங்குவார். யாவும் கடந்த பரம் பொருளாக சொரூப நிலையிலிருந்த இறைவன் தடத்த நிலையில் நாம, ரூப, தொழில் கொண்டோராய் இருப்பதை,

"ஒருநாமம் ஓரு ருவம் ஒன்றும் இலார்க்கு ஆயிரம்"
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டமோ"

எனும் வரிகளால் திருவாசகம் உணர்த்துகின்றது.[48] திருவுந்தியாரும், "அகளமாய் யாவரும் அறிவரது அப்பொருள் சகளமாய் வந்தது....." எனச் சொரூபநிலைச் சிவன் தடத்த நிலையில் மாறுபட்டு நிற்பதை உணர்த்துகின்றது.[49] இறைவன் உயிர்களின் பொருட்டு தன்னியல்பான சொரூபநிலையினின்றும் இறங்கித் தடத்த நிலைக்கு வருகின்றார். உயிர்களின் தன்மைகளுக்கேற்ப அருள்புரியும் பொருட்டு "அருவம், உருவம், அருவுருவம்"எனும் முத்திருமேனிகளையும் உடையவரா கின்றார். அருவநிலையில் "சிவன், சக்தி, நாதம், விந்து" எனும் வடிவங்களையும் அருவுருவநிலையில் "சதாசிவ" வடிவத்தையும் எடுத்து ஒன்பது விதமான நாமரூப பேதங்களைக் கொண்டவராக இறைவன் விளங்குகின்றார்.[50]

"அருவம் உருவம் அறிஞர்கறிவாம்
உருவும் உடையான் உளன்"

என இதனை உமாபதிசிவாச்சாரியார் விளக்குகின்றார்.[51]

இத்தடத்த நிலையில் நாம ரூபமுடையோனாய் செயல்புரியத் தொடங்கும் இறைவனின் செயல்களை "அருளாற்றல், மறைப்பாற்றல்" என இரண்டாகச் சித்தாந்திகள் எடுத்தாள்வர். இறையுண்மையை உணர்த்தும் அவ்வழிநிற்போரை இறைவன் தானே வெளிப்பட்டு நின்று தன்னருளால் வழிநடத்துவான். அதுவே அருளாற்றல் எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுகின்றது. இறையை உணராதோரை அவர் கருத்து செயல்களுக்கு ஏற்ப வழிநடத்துவான். அதுவே மறைப்பாற்றல் எனவும் "திரோதானசக்தி" எனவும் கூறப்படுகின்றது. சூரியன் தன்னை சுற்றி வரும் கோள்களை தன் ஈர்பாற்றலாலும் பேரொலியாலும் தொழிற்படுத்துவது போல இறைவனும் தன் அருளால் தொழிற்படு கின்றான். இவ்வருளே சக்தி என்பர். சித்தாந்திகள் சிவத்துக்கும் சக்திக்கும் உள்ள உறவை "தாதன்மியம்" (தற்கிழமை) எனக் கூறுவர். தாதான்மியமாவது ஒரு பொருளே இரண்டு என எண்ணப்படுவதற்கு ஏதுவாய் நிற்றலாகும். மேலும் இதனை "குணங்குணி" போல "நீக்கமில் சம்பந்தம்" என்பர். இதனைத் திருவருட்பயன், சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்[52] என்று கூற, சிவஞானபோதம் "அருளுண்டார் ஈசற்கு அது சக்தி" என்றும் சுட்டுகின்றது.[53] சக்தியின் முதன்மையை,

"அவளை யறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவளன்றி யூர்புகு மாற்றியேனே"

எனத் திருமந்திரம் சுட்டும்.[54] உமாபதிசிவாச்சாரியாரும், இதனை வழிமொழிகின்றார்.[55] இறைவன் உலகத்தைப் படைக்கத் துணைக்காரணமாய் "சக்தி" விளங்குகின்றதென்பர். மேலும் ஆணவம் உயிர்களுக்கு இயல்பாகவுள்ள, இச்சை, கிரியை, ஞானம் என்பவற்றை மறைத்து நிற்கும். அவ்வேளை அருட்சக்தியாகிய "பராசக்தி" திரோதான சக்தியாய் "மூலமலத்தின்" வழிநின்று உயிர்களை வழிப்படுத்தும். உயிர்கள் வினைபோகம் நீங்கி "மலபரிபாகம், இருவினையொப்பு" நிலையினை அடையும் போது பராசக்தியாய் நின்று இறையருள் புரியும். பிறப்பின்றித் திகழும் இறைவனின் சக்தியானது பராசக்தி, திரோதன சக்தி, இச்சை, கிரியை, ஞானாசக்திகளாகத் (ஐவகைச் சக்திகள்) திகழ்வதாக எடுத்தாளப்படுகின்றது.[56]

காஷ்மீரசைவர் நேரடியாகப் பதியின் நிலையைப் பிரித்துரைக்காதுவிடினும் அதன் கட்டமைப்பு பதியின் இரு நிலைகளை விளக்கி நிற்கின்றது. ஷேமராஜர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிதானந்த கனஸ்வாத்ம பரமார்த்தாவ பாஸினே"
சத்தம் பஞ்ச க்ருத்ய விதாயினே சிவாய நம"

என்கிறார்.[57] அதாவது எக்காலத்தும் ஐந்தொழிலைச் செய்பவனும் பேரறிவும் பேரின்பமும் குறைவிலா நிறைவாகப் பெற்றவனும் மேலான உண்மைப் பொருளை வெளிப்படுத்துவோனும் பரமாத்மாவுமான சிவனுக்கு வணக்கம் என்கிறார். இங்கு சைவ சித்தாந்தம் கூறும் தடத்த, சொரூப இலக்கணங்களை ஒத்த கருத்து நிலைகள் காணப்படுகின்றன.

சங்கரரது பிரமம், ஞானத்தை, ஒளியை, போதத்தை இயல்பாகக் கொண்டது. அவரைப் பொறுத்தவரை அதுவே மேலான நிலை, அவ்வாறு நிஷ்காரியமான, நிரஞ்சனமான, சாந்த சொரூபமானதாக பிரமம் இருப்பின் சடத்திற்கும் அதற்கும் என்ன வேறுபாடு என உத்பலதேவர் வினாவுகின்றார். ஸ்படிகம் பிரகாசம் உடையது, ஆனால் தொழிற்படாச் சடப்பொருள் அதற்கும் பிரமத்திற்குமான வேறுபாடு என்ன என வினாவி ஆகாச புஸ்பம் மணத்தைப் பரப்புவது போன்றது. சாந்த சொரூபமான பிரமம் உலகை இயக்குவது என்கிறார்.[58]

காஷ்மீர சைவர்கள் கூறும் பரமசிவன் பிரகாசமயமானவனாகவும் விமர்சமயமானவனாகவும் இருக்கின்றான். ப்ரகாசம்" என்பது ஒளி - சோதிரூபம் அது இன்றி எதுவுமே தோன்றாது; இதுவே பரமாத்மதத்துவம் என்றும்' அஹம் எனும் தன்மை (ப்ரகாசரூபதா சித்சக்தி) என்றும் கூறப்படுகின்றது.[59] இவ்வாறு ஒளிமயமாக மட்டும் இருந்தால் பதி வைரமணிக்கல் போல ஒளியுடையதாகவும் ஜடமானதாகவும் இறைதன்மை யற்றதாகவும் இருக்கும்.[60] உத்பலதேவர் சம்புவாகிய பதியின் தன்மையைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

> "பேதம் நிரம்பியதான பிரபஞ்சத்திற்குக் காரணமான "மாயை" எனும் சுதந்திரசக்தியை உடைய மாயாவி மும்மல அழுக்கு மண்டிய பிரபஞ்சமாகக் காட்சியளித்தாலும் சித்ரூபன் ஆதலால் விசுத்தன்; மக்களிற்கு எளிதில் புலனாக விட்டாலும் பிரகாசமயமானவன்; சூக்குமமாக இருப்பினும் தன் சுதந்தி சக்தியால் பிரபஞ்சகாரமான ஸ்தூலப் பொருளாகவும் தோன்றுகின்றான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார்.[61] பிரகாசம் ஆகிய நிலையில் பதி சாந்தமாயும் செயல் அற்றதாயும் இருக்கும்; நிலையானது; அசைவற்றது; சுயஞ்சோதியாய் திகழ்வது; அறிவுடையன யாவும் செயலுடையன; தன்னறிவுடமை செயலுடமையாகும். எனவே பிரமத்தின் சாந்தமும் முழு அமைதியும் விகாரமடைதல் ஆகும். பிரமம் நிர்விகற்பமானது. இந்நிறத்தர் இவ்வண்ணத்தர் எனச் சொல்லொணாது. வேதாந்திகளின் நிர்குணபிரம்மமும் சைவசித்தாந்திகளின் சொரூப நிலைப் பதியும் இவ்வாறே. இதுவே மேலான நிலை எனச் சங்கரர் வாதிட, இராமானுஜர், மத்துவர் மற்றும் சைவசித்தாந்திகள் இதன் அடுத்தநிலையான ஈஸ்வர நிலைக்கு முதன்மையளிப்பர். கடோவுபநிடதம்,

> "பிரமம் பிரகாசிக்கின்றது. அப்பிரகாசத்திலேதான் இப்பிரபஞ்சம் முழுதும் பிரகாசிக்கின்றது"

என்கிறது.[62] இக்கருத்தை ஒத்தே ஷேமராஜரும், "பரமேஸ்வரன் ஞானப்பிழம்பாக அறிவுச்சுடராக" உள்ளவன். தன் விமர்ச சக்தியால் உயிர்ப் பொருளாயும் (சிதி) உயிரில் பொருளாயும் (அசித்) காட்சி தருவதாகவும் இதுவே அவனது இயல்பான குணமென்றும் கூறுகிறார். பராப்பிரவேசிகாவில் இதனை "அச்ருத்ருமாஹம் இதி விஸ்(ப்) புரணம்" என்கிறார். இதனை அவர்,

> "யதி நிர்விமர்ச: ஸ்யாத் அநீச்வரோ ஜடஸ்சப்ரஸஜ்யேத"

என எடுத்துரைத்துள்ளார்.[63] நான் என்பதன் சார்பற்ற உடனடிப் பிரக்ஞை என்பதுவும் அதன் பொருளாகும்.

விமர்சம் என்ற சொல் "வி-ம்ருச்" எனும் வேர்ச் சொல்லில் இருந்து வந்ததாகக் கூறப்படுகின்றது. இது அறிவினால் பற்றுவது எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. விமர்சம் சிவத்தின் கர்த்திருத்துவசக்தி அதாவது நான் செய்பவன் என்ற நிலையை உணரும் வடிவம். அதாவது நானே பிரகாசிக்கின்றேன் என்பதை உணரும் தன்மை; வலிமையை கொண்ட பதியின் நிலையே விமர்சம் ஆகும். இவ்விமர்சத்தினாலேயே உலகில் முத்தொழில்களும் இடம்பெறுகின்றன. இத்தளத்தில் நின்றுதான் அத்வைத பிரமத்தை நிஷ்காரிய பிரமமாகக் கொண்டு அதனை "சாந்தம்" என்கின்றனர். காஷ்மீரசைவர்களின் கருத்துப் படி இது மூன்றாவதாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாசிவதத்துவத்திற்கு சமமானது என்றாகின்றது. விமர்சம் "சுத்த ஸ்வாப விதமான அஹத்தின் (சைத்தன்யத்தின்) விரிவு என்பர். நான் இது; அஹம் - பிரபஞ்சம் என்ற வேறுபாடு இல்லை. இதுவே அது - அதுவே இது என்பதான நிலை என விமர்ஸத்தினூடாக ஒருமைவாதம் முன்வைக்கப்படுகின்றது.

காஷ்மீரசைவர் விமர்ச நிலையை பராசக்தி, பராவக், ஸ்வதந்தர்யம், ஐஸ்வர்யம், கர்த்ருத்வம், ஸ்புரத்தா எனப் பல பெயர்களால் அழைப்பதோடு பல சொரூபங்களை உடையது என்றும் கூறுவர்.[64] மேலும் அபிநவகுப்தர்,

"பரமசிவன் தன்னில் எண்ணில் பல பேதங்களை வெளிப்படுத்தாது மூலரூபமாகவே இருப்பின் பரம்பொருளுக்குரிய சைத்தன்ய சொரூபத்தையும் மகேஸ்வரப் பண்பையும் பெறாது ஒரு சாடி போல சடமாக வீற்றிருக்கும்" என்கிறார்.[65] அந்தவகையில் விமர்ச சுவதந்திரமாக உள்ளது. அதுவே சக்தியின் எல்லையற்ற ஆற்றல். இது அனைத்தையும் தன்னுள் உள்ளடக்கியுள்ளது. பெரிய ஆலமரத்தின் சக்தியெல்லாம் ஒரு விதைக்குள் அடங்கியிருப்பதைப் போல பிரபஞ்சத்தில் உள்ள தாவர சங்கமம் அனைத்தும் பரம்பொருளினுள் அடங்கியிருக்கும் எனப்படுகின்றது.[66]

சித் என்பது பரமசிவனிடம் உள்ள ஆற்றல்சக்தி எனவும் இப்பராசக்தி சிவனிடம் இருந்து வேறுபட்டதல்ல இது சித், சைத்தன்யம், பராஸம்வித் எனப் பலவாறும் அழைக்கப்படுகிறது. சக்தியின் சுபாவம் உலகவடிவில் வெளிப்படுவதாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே

(i) விஸ்வோத்திரண

(ii) படைக்கும் ஆற்றல்

என இரண்டாகக் கூறியிருக்க வேண்டும்.[67] "விஸ்வோத்திரண" என்பது எல்லாம் கடந்து நிற்கும் நிலை . படைக்கும் ஆற்றல் என்பது பிரபஞ்ச தோற்றம் எனப்படுகின்றது. இச்சக்தி சிவத்தினின்றும் வேறானதல்ல விமர்சமயமான இச்சக்திக்கு மேலானது எதுவுமில்லை. இதுவே பிரபஞ்ச உற்பத்தி, நிலைபேறு, ஒடுக்கம், மீள் உற்பத்தி என யாவும் நிகழக் காரணமானது. சைதன்யமே பிரபஞ்ச உற்பத்திக்கு நிமித்தகாரண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகவும் உபாதனகாரணமாகவும் அமைய சக்தியே யாவுமாகிறது. இதற்குப் பிறிதொரு பொருளோ கருவியோ தேவையில்லை. முத்தொழிலும் நிகழக்காரணமான சக்தி - சுதந்திர சக்தியாகக் கூறப்படுகின்றது.

இச்சக்திகள் பலவாகக் கூறப்படினும் "சக்திவிஷேடங்கள்" ஐந்து எனக் காஷ்மீர சைவர்கள் எடுத்துரைப்பர். அவைமுறையே சித்சக்தி, ஆனந்தசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, என்பனவாகும். சித்சக்தி தனித்துவமான சக்தியாகும். இது தன்னை வெளிப்படுத்துவதாகவும் வேறொன்றைச் சாராது தனித்தியங்குவதுமான சிவனது சக்தி எனப்படுகின்றது. எல்லா மாற்றங்களின் ஊடும் மாற்றமின்றி இருப்பது. இவ்வியல்பு பற்றியே பரம்பொருள் "சிவம்" எனப்படுகின்றது.[68] இதைப் பற்றி ஷேமராஜர்,

"சிதி: ஸ்வதந்த்ரா விச்வ - ஸித்தி - ஹேது"

எனக் குறிப்பிடுகின்றார்.[69] அதாவது ஸதாசிவதத்துவம் தொட்டு பூமிதத்துவம் வரையான முத்தொழிற்பாட்டிற்கும் ஏதுவாக இருப்பது பராசக்தி ரூபமான சித்சக்தியே. ஒளிரூபமான இச்சக்தி விமர்சவாகும். ஆக இது இயல்பாகவே ஒளிரூபமாய் ஒளியூட்ட வேறு பொருள் தேவையில்லாததால் யாவற்றிற்கும் ஒளியூட்டக்கூடியதாய் இருக்கும் பரமசிவத்தின் சுபாவமாக உள்ளது என்பர். இதனை அபிநவகுப்தர்,

"ஸசப்ரகாரீசா ந பரதந்த்ர : ப்ரகாச்யதைவ ஹிபாரதந்த்ர்யம்
ப்ரகாச்யதா ச ப்ரகாசாந்தரா பேக்ஷிதைவ
நசப்ரகாசாந்தரம் கிஞ்சித் அஸ்தி இதி ஸ்வதந்த்ர ஏக ப்ரகாசம்:"

என எடுத்துரைத்துள்ளார்.[70] இது போல ஆனந்தசக்தியும் பரமசிவத்தின் சுபாவமே; இது சுவாதந்திரியமானது. இத்தோற்றப் பாட்டில் பரம்பொருளை "சக்தி" என்பர். இது பிறிதொன்றைச் சாராததாயும் மகிழ்வானதாயும் தன்னையே இடமாகக் கொண்டு ஆன்மாவில் இளைப்பாறுவதாயும் விளக்கங் கூறுவர். இதனாலேயே அபிநவகுப்தர், "பிரகாசம், ஆனந்தம்" ஆகிய இரு தன்மைகளிலும் பரமசிவன் சுதந்திரனாகத் (சுவாதந்திரியம்) திகழ்கின்றான் என்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சாசக்தி நிலையில் பரம்பொருள் "சதாசிவம்" அல்லது "சாதாக்கியம்" எனப்படுகின்றது. இது இச்சையின் மிக உயர்ந்த நிலையிலுள்ள சுதந்திரத் தன்மையாக விபரிக்கப்படுகின்றது. தான் எவ்வாறு தோன்ற வேண்டும் என எண்ணுகின்றதோ அவ்வாறே தோன்றுவதும் தனக்குத் தோன்றியதைச் சிருஷ்டிக்க வல்லதுமாகத் திகழும் சக்தி இது என்பர்.

ஞானசக்தி ஓங்கிய நிலையின் பரம்பொருள் ஈஸ்வரன் எனப்படுகின்றான். அபிநவகுப்தர் இதனை "ஆமர்ஷாத்மகதா" எனும் சொல்லால் சுட்டுகின்றார். எப்பொருள் பற்றியும் எவ்வகை உணர்வோ அன்றி எதிர்ச்செயலோ தோன்றாமல் எல்லாப் பொருள்களினதும் உண்மைச் சொரூபத்தை அறிதல் என்பது அதன் விளக்கமாகும்.

கிரியாசக்தி நிலையில் பரம்பொருள் தான் விரும்பும் எத்துணை வடிவமும் எடுக்கும் ஆற்றல் உள்ளதாகவும் விளங்கும். இதனால் இது சத்வித்யா, சுத்தவித்தியா, எனப் பலவாறு சுட்டப்படும்.

இந்த வகையில் இப்பிரபஞ்சம் மிக மேலான நிலையின் (பிரஸ்சர) ஒருவிரிவாக, பரம்பொருள் தன்னைச் சக்தியாக விரிவடையச் செய்யும் ஒரு வெளிப்பாடாகக் கூறப்படுகின்றது.

இறைவனுடைய விருப்பம் மட்டுமே உலகவெளிப்பாடாக வருவதாக காஷ்மீர சைவர்கள் கூறுகின்றனர். இதனைச் சோமானந்தர்,

"யோகிநாமிச்சயா யத்வந் நாநா - ரூபோபபத்திதா
ந சாஸ்தி ஸாதநம் கிஞ்சித் ம்ருதாதீச்சாம் விநாப்ரபோ:
ததா பகவதிச்சைவ ததாத் வேத ப்ரஜாயதே"

என விளக்கியுள்ளார்.[71] ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு சிவம் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பதாக சித்தாந்திகள் எடுத்துரைப்பர். அந்தவகையில் இருவரும் ஐந்தொழில் பற்றிய தத்தம் கருத்துக்களை முன்வைப்பர்.

காஷ்மீரசைவர்கள், "ஸ்ருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் விலயம் ஸபிதானம், அனுக்கிரகம், எனக் குறிப்பிட சித்தாந்திகள் அவற்றைப் "படைத்தல், காத்தல், அழித்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளல்" எனச் சுட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸ்ருஜ்" என்பதை வேர்ச் சொல்லாகக் கொண்டே "ஸ்ருஷ்டி" எனும் சொல் உருவாக்கம் பெற்றது. ஸ்ருஜ் என்றால் "போகவிடுதல்" என்பது பொருள். அதாவது சிவன் தன்னுள் அடங்கியுள்ள உலகைப் போகவிடுதல் அல்லது வெளிப்படுத்தலே சிருஷ்டி என்பர் காஷ்மீரசைவர்கள்.[72] ஆனால் சித்தாந்திகள் இதனை மறுப்பர். காஷ்மீரிகள் கூறுவது போல் சிவம் பிரபஞ்சத்திற்கு உபாதனகாரண மாகவும் நிமித்த காரணமாகவும் திகழாது என்றும் உபாதன காரணமாய் மாயை திகழ, நிமித்தகாரணமாய் சிவனும் துணைக்காரணமாய் சக்தியும் விளங்கும் என்கின்றனர். ஆன்ம வினைபோகத்திற்காகச் சிவன் தனுகரண புவன போகங்களைப் படைக்கின்றது என்பதில் இருசாரருக்கும் மாற்றுக் கருத்து இல்லை.

காஷ்மீரசைவர்கள் உலகை வெளிப்படுத்தும் செயலை - ஓயாமல் செய்யும் செயலை "ஸ்திதி" என்பர். இது நிலை நிறுத்தல் எனப்படும். சித்தாந்திகளும் படைக்கப்பட்ட தனுகரண புவன போகங்களை அழியாது நிலை நிறுத்திப் பயன்படச் செய்வதே "காத்தல்" என்கிறார்கள். வினைநீக்கத்திற்கு உரிய வழியில் நின்று அதனைப் பெறுதலே காத்தலின் ப்யன் என்பர் சித்தாந்திகள்.

ஸம்ஹாரம் எனும் அழித்தலானது உலகை சிவன் தன்னுள் மீள இழுத்துக் கொள்ளும் செயல் என்பர். சித்தாத்திகளோ ஆன்மா வினைபோகத்தினின்றும் நீங்கியபின் தனுகரண புவன போகங்களை பகுதிகளாகப் பிரித்தல் அல்லது ஒடுக்குதலே அழித்தல் என்பர் காஷ்மீர சைவர்கள். இவ்வாறு படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் செயல்கள் சிவனது எப்போதுமுள்ள, அளவற்ற காலத்திற்கும் நடக்கும் விளையாட்டு ஆகும் என்கிறார் தகாரே.[73] இதனை மணிவாசகரும், "காத்தும் படைத்தும் கரத்தும் விளையாடி" என சித்தாந்த அடிப்படையில் எடுத்தாண்டுள்ளார்.[74]

இவை தவிர "மறைத்தல், அருளல்" என்பனவும் இறைவனது தொழில்களாக இருசாராராலும் எடுத்தாளப்படுகின்றன. ஆத்மாவின் உண்மையான சொரூபத்தை மறைத்தல் "மறைத்தல்" ஆகும் என்பர் காஷ்மீரசைவர்கள். ஆணவமலத்தின் மறைக்கும் ஆற்றலைத் தூண்டி மாயை, கன்மம் என்பவற்றால் உலக இன்பத்தைத் தோற்றிவித்து இறைவன் தன்னைக் காட்டாது உலக இன்பத்துடன் ஆன்மாக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்திருக்கச் செய்யும் நிலையே மறைத்தல் எனச் சித்தாந்திகள் எடுத்தாள்வர். இச்செயலால் ஆணவ மலத்தின் ஆற்றலானது காலபோக்கில் ஒடுக்க நிலையைப் பெறும் இதுவே மறைத்தலின் பயனாகும். இவ்வாறான நிலையை எய்தியவுடன் உயிர்கள் இறைவனை அடையும் செயற்பாட்டில் விருப்பம் கொள்ளும். அப்போது சிவன் காணாதெனவெல்லாம் காட்டி மலநீக்கம் பெறச் செய்து தன்னை அடைவித்தலே "அருளல்" அல்லது "அனுக்கிரகம்" என எடுத்தாளப்படுகின்றது. காஷ்மீரசைவர்கள் பரம தயாளுவான பரமசிவன் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு உலகை ஐந்தொழிலுக்கு உட்படுத்துதலும் மலநீக்கம் செய்தலும் ஆகிய செயல்களைச் செய்வதே அனுக்கிரகம் என்பர்.

காஷ்மீரசைவரான வசுகுப்தர் உலகம் பரமசிவனது சக்தியின் அசைவாகிய மலர்ச்சி (பிரசயம்) என்கிறார்.[75] இதனை சித்தாத்திகளும் ஏற்பர். "சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்கிறது திருவருட்பயன்.[76] சக்தி-குணம் சிவம் குணத்தையுடைய குணி என்பர். இதனால் முதலின்றிப் பெற்றி இல்லை என்றாகிறது. இதனை,

"அருளது சக்தியாகும் அரன்றனக் கருளை யின்றித்
தெருள் சிவம் இல்லை அந்தச் சிவம் அன்றிச் சக்தி இல்லை"

எனச் சித்தியார் கூறிநிற்கின்றது.[77] இறைவனின் சக்தி காஷ்மீரசைவர் கூறுவது போல, "சிற்சக்தி" அறிவு பூர்வமானது இது பரிபூரணனின் பரிபூரண ஆற்றலாக சித்தாந்திகளால் எடுத்துரைக்கப்படுகின்றது. இதனை "கண் கதிரவனை நோக்க வேண்டுமாயின் அவனது ஒளியாகிய கதிர்களின் வழியே தான் நோக்க வேண்டும் அது போலவே உயிர் சிவத்தை அடைய வேண்டுமாயின் அஃது அவனது சக்தி வழியே தான் நோக்க வேண்டும்" என ந.சுப்புரெட்டியார் விளக்கியுரைக்கிறார்.[78]

இறைவனது உண்மை இயல்பைச் சித்தாந்திகள் "சச்சிதானந்தம்" என்பதனூடு விளக்குவர். சத் என்றும் உள்ள பொருள்; சித் - பேரறிவு; ஆனந்தம் - மெய்யறிவின்பம்; என்றுமுள்ள பேரறிவு பெற்ற பரிபூரண ஆனந்தமாய் இறை திகழ்வதை இது உணர்த்துகின்றது. இவ்வாறு சைவசித்தாந்தம் கூறும் பதியும் காஷ்மீர சைவம் கூறும் பதியும் ஓரோரிடங்களில் ஒன்றுபட்டும் வேறுபட்டும் திகழ்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடிக்குறிப்புகள்**

1) *திருமந்திரம், பா. 113*

2) Tantraloka, 2 - 19

3) *உண்மை விளக்கம், பா. 47*

4) *சிவஞானபோதம், சூத். 1*

5) *சித்தியார், சுப., சூத். 1*

6) *திருக்களிற்றுப்படியார், பா. 1*

7) *சித்தியார், சுப., பா. 22*

8) *சிவஞானபோதம், பா. 1:1*

9) *சித்தியார், சுப., பா, 27*

10) *மேலது, சுப., பா. 38*

11) *ஞானாமிர்தம், அகவல், 57, வரி. 1-6*

12) *மேலது வரி. 10-13*

13) *சிவஞானபோத மபாடியம், சூத். 1*

14) *சித்தியார், சுப. பா. 54*

15) *போற்றிப் ப∴றொடை, பா. 71*

16) *சித்தியார், சுப., பா. 94*

17) *மேலது, சுப., பா. 107*

18) *மேலது சுப., பா. 112*

19) *சிவஞானபோதம், 2: 10*

20) *மேலது 2: 11*

21) Bhaskari, vol., 1, p. 193

22) Sivastotravali, vol., II , 12

23) *ப்ரத்திய பிஞ்ஞான ஹிருதயம், சூத். 2, ப. 9*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24) Loc. cit

25) Para Trimsika, 11-13

26) Isvaraprapratyabhija, 1-5.13, 14

27) *தகாரே, க.வை., 2001, மு.கு.நூல், ப. 171*

28) Para Trimsika, 24

29) Isvarapratyabhinajna Vimarsini, 11 - iv.10

30) *ப்ரத்திய பிஞ்ஞான ஹிருத்தயம், சூத். 1*

31) *திருவெம்பாவை, பா. 1*

32) *தாயுமான சுவாமிகள் பாடல்கள், ஆசை பெறும், 30*

33) *அற்புதத்திருவந்தாதி, பா. 20*

34) *கந்தர் கலிவெண்பா, பா. 37*

35) *ப்ரத்திய பிஞ்ஞான ஹிருதயம், சூ. 11*

36) *சிவஞான போதம், 2-1:7,8*

37) *திருஞானசம்பந்தர், 1ம் திருமுறை, திருவீழிமிழலை, பா. 2*

38) *திருக்களிற்றுப்படியார், பா. 86*

39) *சிவஞானபோதம், 2:9*

40) *ப்ரத்திய பிஞ்ஞான ஹிருதயம், 3:11,12*

41) Isvara prapratya bhinja, 5:18

42) Tantraloka, 8 - 72

43) *சிவாக்கிரயோகிகள், 1968 சிவநெறிப்பிரகாசம், திருவாவடுதுறை ஆதீனம், பா. 29*

44) *சிவப்பிரகாசம், பா.13*

45) *தாயுமானசுவாமிகள், ஆசை பெறும், பா. 30*

46) *திருவெம்பாவை, பா. 1*

47) *திருஞானசம்பந்தர், திருகோணமலை திருப்பதிகம், பா. 5*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48) மாணிக்கவாசகர், திருத்தெள்ளேணம், பா. 1

49 "சொரூப நிலையில் சிவன் என்றும் தடத்த நிலையில் சக்தி என்றும் பேசப்படும்", சுப்புரெட்டியார், ப. 48

50) சிவநெறிப்பிரகாசம், ப. 40

51) திருவருட்பயன், 1.5

52) மேலது, 1:2

53) சிவஞானபோதம், 5:2.33

54) திருமந்திரம், பா. 1053

55) திருவருட்பயன், 1.2

56) சித்தியார், 1.63

57) ப்ரத்திய பிஞ்ஞான ஹிருதயம், கடவுள் வாழ்த்து

58) Ut paladeva, Ajadapramatr siddhi, v . 9

59) Tantra Sara, ah. 1, g. 6

60) Para pravesika, g. 2

61) திருஞானசம்பந்தன், பெ., காஷ்மீரசைவம், ப. 12

62) கடோவுபநிதம், 15

63) Para pravesika, g. 2

64) Para pravesika, ah. 4, v. 28

65) Tantraloka, 3 - 100

66) Para Trimsika, 34

67) Pandey, K.C op.cit., xxii

68) K.C. Pandey, Ibid., g. xxi

69) பிரத்தியபிஞ்ஞான ஹிருதயம், சூத். 1

70) Tantra Sara, ah. 1 p. 06

71) Siva drisri, 1-44 , 45


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*72)* Isvara prapratyabhija, 1.5.7

*73)* ***தகாரே, க.வை., மு.கு. நூல், ப. 145***

*74)* ***திருவெம்பாவை, பா.12***

*75)* Siva Sutra, 3.30

*76)* ***திருவருட்பயன், 1.2***

*77)* ***சித்தியார், 5.9***

*78)* ***சுப்புரெட்டியார், ந.இ மு.கு.நூல்: ப. 110***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுவுண்மை

சைவசித்தாந்தமும் காஷ்மீரசைவமும் பதியினை அடுத்துக் குறிப்பிடும் பொருள் "பசு" ஆகும். "பந்திக்கப்பட்ட ஆன்மாவே பசு" ஆகும். பசுத்துவம் உடையவனாகி பசுவென நிற்கும் ஆன்மா என்பர் சித்தாந்திகள்.[1] பதியே மேன்மைப் பொருளாகக் கொள்ளப்படினும் சைவ மெய்யியல் சிந்தனை பசுவை அடிநிலையாகக் கொண்டே தன்னைக் கட்டமைத்துள்ளது.

இந்திய மெய்யியலில் ஆன்மா பற்றி நிலவுகின்ற சிந்தனைப் போக்குகளை கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) அநாத்ம வாதிகள்

2) ஆன்மாவின் அநாதித்துவத்தை ஏற்காதோர்.

3) ஆன்மா அல்லாதவற்றை ஆன்மா எனக் கொள்வோர்.

4) ஆன்மாவின் அநாதித்துவம் உண்மைத்துவம் என்பவற்றை ஏற்போர்.

இவர்களுள் ஆன்ம இருப்பை ஏற்று அது அநாதியான, பன்மைத்துவமான உண்மைப் பொருள் எனக் காஷ்மீர சைவர்களும் சித்தாந்திகளும் வாதிடுகின்றனர். மேற் சொன்னவற்றுள் இதர வகையினரின் கருத்துக்களை மறுத்துத் தமது கருத்தை நிறுவுகின்றனர். பாசத்தால் பீடிக்கப்பட்டது, பசுத்துவம் உடையது என்னும் பொருளில் ஆன்மா இவ்விரு மெய்யியலாளர்களாலும் "பசு" எனச் சுட்டப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பசுவின் இருப்பு**

காஷ்மீரசைவர்களைப் பொறுத்தவரை பதி,பசு, பாசம் எனும் முப்பொருட்களும் உண்மைப் பொருட்களாயினும் பதியே பூரண உண்மைப் பொருள். அப்பதியே பசுவாகவும், பாசமாகவும் தோன்றுகின்றது என்பர். சைத்தன்ய ரூபினனான "பரமசிவன்" தன் சுதந்திரத்தன்மையால் அபேதவியாப்தியை மறைத்துக் கொண்டு பேதவியாப்தியை மேற்கொள்ளுகின்றான். அப்போது அவனுடைய சக்திகள் குறுக்கப்பட்ட நிலையை அடைய அவன் "சீவாத்மா" எனப்படுகின்றான். "பரமசிவனின்" சர்வஞ்த்வம், பூர்ணத்துவம், நித்தியத்துவம், வியாபகத்தவம், கர்த்ருத்வம் எனும் சக்திகள் சீவனோடு தொடர்புள்ள குறுகிய நிலையில் கலை, வித்தை, அராகம், காலம், நியதி என்னும் தத்துவங்களாகின்றன என்றும் கூறப்படுகின்றது. மேலும் சக்தி பூரணமாகப் பிரகாசிக்கும் நிலை பரமசிவன் என்றும் பிரகாசம் குறைந்த "சக்தி தரித்திரனாக" விளங்கும் போது சீவாத்மா அல்லது "சம்சாரி" என்றும் சுட்டப்படுகின்றது. சித்தாந்திகளைப் போலச் காஷ்மீரசைவர்கள் சீவாத்மா பாசத்தால் பந்திக்கப்படுவதால் "பசு" ஆகிறது என்பர். அதனை அபிநவ குப்தர்,

"ஆணவம் முதலிய கோசங்களால் சூழப்பட்டிருப்பதால் எங்கும் வியாபித்திருக்கும் சைதன்யம் அணுவென்றும் சீவன் என்றும் புருடன் என்றும் ஆத்மா என்றும் வழங்கப்படுகின்றது. அநாதி விசித்திர கர்ம மல வாசனையினாலே பல பிறப்புக்களில் பல உடல்களைத் தாங்கி பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப சொர்க்கம், நரகம், பூமி முதலான இடங்களில் சுகம், துக்கம், பிறப்பு, இறப்பு, என்பவற்றால் இடர்படுகின்றன. இவற்றை ஈஸ்வரனே அனுபவிக்கின்றான் என்பது உபசார வழக்கே உண்மையல்ல."

என்கிறார்.[2] பரமசிவனின் ஸ்வதந்திரிய சக்தியான மாயை, பசுவின் நிலையை மேற்கொண்டுள்ள சிவனுக்கு மறைப்பாகப் பயன்படுகின்றது. பதி சொரூபத்தை மறைக்கும் ஆணவம் முதலானவை மும்மலங்களாகக் கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் இச்சக்தியை ஏற்பதனால் பதியின் சுதந்திரத் தன்மை மறைக்கப்பட்டு "பரதந்திரநிலை" ஏற்படுகின்றது. இதனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தூய அறிவினனான பதி பாசத்தால் பீடிக்கப்பட்ட பசுவாகிய நிலை பெற்றுக் காலம், கலை, நியதி, அராகம்,வித்தை என்பவற்றால் கட்டுண்ட நிலையைப் பெறுகின்றது."

என அபிநவர் கூறுகின்றார்.[3] இவ்வாறன நிலை பதிக்கு இழுக்கானதோ எனின் இழுக்கில்லை என்பர் காஷ்மீர சைவர்கள். எவ்வாறெனில் கருமேகங்கள் சூழ்ந்தாலும் புகைமண்டலம் மண்டினாலும் புழுதிப் படலம் பரவினாலும் ஆகாயம் தன் நித்திய தன்மையையோ அன்றி பரந்திருக்கும் தன்மையையோ இழப்பதில்லை. அழுக்கோ வண்ணமோ படிவதில்லை. ஆகாசம் என்றும் தன்னிலை இழக்காத ஆகாசமாகவே காட்சி தருகின்றது. இதேபோல மாயா விகல்பங்களால் பிறப்பு, இறப்பு முதலான மாற்றங்கள் சீவாத்மாவாக விளங்கும் பரமசிவனுக்கு ஏற்படினும் அவற்றால் அவனது சொரூபத்திற்கு, எவ்வித பழுதோ இழுக்கோ ஏற்படுவதில்லை. எல்லா உயிர்களிலும் அனுபவிப்போனாகத் திகழும் பரமசிவத்தை சுகம், துக்கம், போகம் என்பன பாதிக்க மாட்டாது. அது தூய ஆகாயத்தைப் போல தூய பரமசிவ சொரூபமாகவே இருக்கும் என்பர்.[4]

இவ்வாறான விளக்கம் எமக்குச் சங்கரரின் ஆன்மக் கோட்பாட்டை ஞாபகப்படுத்தினும் காஷ்மீரசைவரின் ஆன்மக்கோட்பாடு வேறாகிறது. சங்கரர் பிரம்மம் ஆன்மாவாகத் தோன்றுகின்றது என்பார். காஷ்மீரசைவர்கள் பதியையும் ஆன்மாவையும் உண்மைப் பொருட்கள் என்கின்றனர். காலத்தால் பிந்திய விஷிட்டாத்வைத ஆன்ம, உலகக் கோட்பாடு காஷ்மீரசைவர்களின் ஆன்மா உலகக் கோட்பாட்டை ஓரளவு ஒத்துள்ளது எனலாம்.

காஷ்மீரசைவர்களின் ஆன்மக் கோட்பாடு இவ்வாறாக விளங்க, சைவசித்தாந்திகள் ஆன்மக்கோட்பாடு வேறுபட்டதாகக் காணப்படு கின்றது. ஆன்மா என்றும் உள்ள தனித்துவமான உண்மைப் பொருள் என்பர். "பதியே ஆன்மாவாகியது" என்ற கருத்தை இவர்கள் மறுத்து ஆன்மா தனித்துவமான பொருள் என்பர். அந்த வகையில் பசுவின் இருப்பை அவர்கள் நிறுவ முற்படுவர். பசுவுண்மைத்துவத்தை மெய்கண்ட தேவர் சிவஞான போதத்தில்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உளதில தென்றலி னெனதுட லென்றலி
னைம்புல னொடுக்க மறிதலிற் கண்படி
லுண்டிவினையி ன்மையிலுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவினு ளான்மா"

எனும் சூத்திரத்தால் விளக்கியுள்ளார்.[5] "உளதில தென்றலின்" எனும் சொற்றொடரால் சூனியாத்மவாதிகளான பௌத்தர்கள் மறுக்கப்படுகின்றனர். உடல் நான் அன்று, ஐம்பொறிகள் நானன்று என "இது நானல்ல, இது நானல்ல" எனக் கூறும் அறிவு ஒன்று உண்டு எனும் கருத்தையும் மறுத்து வினவின், அது இல்லாததாகவே ஆகிவிடுகின்றது. ஆகையால் சூனியமாக உள்ள ஒன்றே உயிரெனப்படுகின்றது என்பர். சுருங்கக் கூறின் "இல்லதும் அன்றி உள்ளதும் அன்றி இருப்பது" என்பர். இதனை மறுக்கும் சித்தாந்திகள் "இவையெல்லாம் சூனியம் என உணர்வது எது என வினவி இவை சூனியம் என உணர்வது, எதுவோ அதுவே ஆன்மா என்பர். இலதென்றலில் உளது" எனும் வார்த்திகத்தால் இதனை நிறுவுகின்றார் மெய்கண்டார். ஆன்மா இல்லை என்பது தன் தாயை ஒருவன் "எனது தாய் மலடி" எனக் கூறுவதற்கு ஒப்பாகும் என்பர்.

இனி, "நானுண்ணுகின்றேன்" "பருத்தேன்" எனக் கூறி உடம்பினையே "ஆன்மா" எனத் "தேகான்மவாதிகள்" கூறுவர். இவ்வாறு கூறினும் "யான் உடம்பு, யான் கை"என உடம்பாகக் கூறி நிற்காமல் "எனது" என வேற்றுமைப்படவே யாவரும் வழங்குவர். அவ்வாறு உரைத்து இச்சூத்திரம் இவற்றை விட வேறாக உயிர் உண்டு என்பதை அறிவுறுத்தும் என்கிறார் சிவஞானசுவாமிகள்.[6] உலோகாயுதர், பூதச்சேர்க்கையில் உருவானதே அறிவு அல்லது உயிர் என்றும் அதற்கு உதாரணமாக வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை எனும் பொருட்களில் இல்லாத போதும் அவற்றை மெல்லும் போது சிவப்பு நிறம் உருவாவது போல் பூதச் சேர்க்கையால் உயிர் உருவாகின்றதென்பர். இவ்வாறு உடம்பே உயிர் எனச் சாதிப்பதை உடம்பு பிணமாகி விட்டபின் அதில் அறிவு காணப்படாததற்குக் காரணம் என்ன? எனின் பிணமாகிய பின் காற்றாகிய பூதம் வெளியேறிவிடும். அதனால் அறிவு இல்லை என்பர் எனின், உறக்கத்தில் காற்றாகிய பூதமிருந்தும் அறிவு ஏன் செயற்படவில்லை என வினவி, உடல் உயிரல்ல, உடலினும் வேறானதாக அதனை இயக்கும் பிறிதான பொருள் ஒன்று உள்ளது அதுவே ஆன்மா என்பர். இதனை அருணந்தி சிவாச்சாரியார்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உடலின் வேறுயிரேனிந்த உடலன்றோ உணர்வதென்னின்
உடல் சவமான போதும் உடலுக்குணர் வுண்டோதான்
உடலினில் வாயுப்போனால் உணர்ச்சியின் றுடலுக்கென்னின்
உடலின் வாயுப் போகா துறக்கத்தும் உணர்வதின்றே"

என விளக்குகின்றார்.[7]

ஐம்புலங்களை அறிவன ஐம்பொறிகள் என்பதால் "ஐம்பொறிகளே ஆன்மாக்கள்" என்பர் இந்திரியவாதிகள். ஒவ்வொரு பொறியும் ஒவ்வொரு புலனை உணருமேயன்றி பிறிதொரு புலனை உணராது என்பதாலும் பொருட்கள் பிற பொருட்களை அறியுமேயன்றி தம்மைத்தாமே அறியாது என்பதாலும் பொருட்களைக் கருவியாகக் கொண்டு புலனுகர்ச்சி மேற்கொள்ளும் பொருள் பிறிதொன்று இருக்க வேண்டும் என்றும் அதுவே ஆன்மா என்றும் சித்தாந்திகள் வாதிப்பர். அதேபோல "நுண்ணுடம்பே உயிர்" என வாதிடும் சூக்குமதேகான்ம வாதிகளையும் மறுத்துரைப்பர். மனம் முதலிய உட்கருவிகளை உடைய நுண்ணுடம்பே பொறிவழி புலன் நுகர்ச்சியை மேற்கொள்கின்றது என்பர். சூக்கும தேகான்மவாதிகள், அதனை மறுத்து, கனவு காணுமிடத்து பொறிகள் தொழிலற்று இருக்கும். சூக்கும தேகத்தை ஆதாரமாகக் கொண்டு இயங்கும் பொருள் அதற்கு வேறாக உள்ளதென்றும் அதுவே ஆன்மா என்றும் சித்தாந்திகள் கூறுவர். அவ்வாறெனின் ஆன்மா கனவில் கண்டவற்றை விழிப்பு நிலையில் முழுவதுமாகக் கூறமுடியவில்லை எனின் பருவுடலில் நின்று கனவு நிலையில் நிகழ்ந்தவற்றை அறிவதும் நுண்ணுடம்பில் நின்று கனவு நிலையில் அறிவதுமான பொருள் ஒன்று இவ்விருவுடம்பிற்கும் வேறாயுண்டு என வாதிட, கனவில் கண்டதைப் பருவுடலோடு கூடிய நனவு நிலையில் மறப்பது அதன் ஆற்றல் எனச் சித்தாந்திகள் உரைப்பர். இதனை மெய்கண்டார்,

"அவ்வுடலின் நின்றுயிர்ப்ப ஐம்பொறிகள் தாம் கிடப்பச்
செவ்விதின் அவ்வுடலிற் சென்றடங்கி - அவ்வுடலின்
வேறொன்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறலுடல் நீயல்லை மற்று"

எனும் உதாரண வெண்பாவால் விளக்குகின்றார்.[8] பிராணவாயுவே ஆன்மா என்பர் பிராணான்மவாதிகள். உறக்கம், விழிப்பு, எனும் இருநிலைகள் உள்ளன. விழிப்பு நிலையிலேயே இன்பதுன்ப நுகர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்கின்றது. உறக்க நிலையில் அவ்வாறில்லை. ஆனால் இவ்விரு நிலைகளிலும் பிராணவாயு உள்ளது. ஆகவே பிராண வாயு இவ்வேறுபாட்டிற்குக் காரணம் இல்லை. "நான் நன்றாகத் தூங்கினேன்." எனும் கூற்றில் பிராணன் அல்லாத பொருளுண்டு, அதுவே ஆன்மா என்பர் சித்தாந்திகள். பிரம்மமே ஆன்மா என வாதிடுவர் ஏகான்ம வாதிகள். அறிவே வடிவாக எடுத்தாளப்படும் பிரமம் எவ்வாறு அறியாமையுடைய - சிற்றறிவுடைய ஆன்மாவாகும்? நீர் நிலைகளில் சந்திரனின் பிம்பம் பலவாகத் தெரிவது போல என்பர். பிம்பமேயாயினும் அது சந்திர பிம்பமே. அதுபோல பிரமம் மாயையுடன் சேரினும் அது பிரமமே தவிர ஆன்மா இல்லை என்பர். சித்தாந்திகள் சுயப்பிரகாசமான, சுதந்திர அறிவாகிய பிரம்மம் ஆன்மாவாகாது என்பதை பலவற்றாலும் நிறுவி பிரமம் வேறு ஆன்மா வேறு என்பர். மேலும் அந்தக் கரணங்களே ஆன்மா எனும் அந்தக்கரணவாதிகளையும் மறுப்பர் சித்தாந்திகள். பொறிவழி பெற்ற புலனை மனம் சங்கற்பம், விகற்பம் செய்ய, சித்தம் சிந்திக்க, அகங்காரம் ஒருப்பட்டு எழ, புத்தி அதை நிச்சயிக்கும். ஆயினும் அவை தாம் செய்யும் தொழில்களைத் தாம் செய்வதாக உணரா. ஆகவே அவற்றை செய்விக்கும் பொருள் பிறிதாய் உள்ளதென்றும் அதுவே ஆன்மா என்றும் சித்தாந்திகள் கூறுவர்.இதனை அருணந்தி சிவாச்சாரியார்,

"அறிந்திடும் பிராணவாயு அடங்குதல் விடுதல் செய்தால்
அறிந்திடா துடலு றக்கத் தறிவின்மை கரணமின்மை
அறிந்திடு முதலி யாகின் அது நிற்கக் காரணம் போகா
அறிந்திடும் பிராணன் தன்னை அடக்கியும் விட்டும் ஆன்மா"

எனும் செய்யுளால் விளக்கிப் போந்தார்.[9] இவ்வாறு ஆன்மாக்கள் பல பெயர்களைப் பெறினும் அவை மாயாகாரியங்களே என்றும் அவை ஆன்மா எனப் பெயர் பெறாது வேறு பெயர் பெறுமென்பதை,

"கலையாதி மண்ணந்தங் காணில் அவை மாயை
நிலையாவாந் தீபமே போல - அலையாமல்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடில் அதுதனுவாம்
தான் அத்தின் வேறாகும் தான்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் உதாரண வெண்பாவால் நிறுவி,[10] மாயாகாரியங்களால் ஆன சூத்திரப்பாவை போலும் உடம்பில் அதனின்றும் வேறுபட்ட ஆன்மா உண்டு என்பதை, "மாயாவியந்திர தனுவினுள் ஆன்மா" என மெய்கண்டார் விளக்கி உரைத்துள்ளார்.[11] இவ்வாறு எண் வகையாளர் களையும் மறுத்துத் தன் ஆன்மக்கோட்பாட்டைச் சித்தாந்திகள் முன்வைக்கின்றனர்.

இவ்வாறு ஆன்மா உண்டு. அது ஏகமல்ல பன்மைத்துவமானதென நிறுவியதோடு பதியால் படைக்கப்பட்டது இவ்வுலகு; இதனை மேலான பதி அனுபவிக்காது; உலகோ சடமானது; ஆகவே அதுவும் தன்னைத்தான் அனுபவிக்காது. இவை இரண்டிற்கும் வேறான, இரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு பொருள் இருக்க வேண்டும் என்றும் அதுவே ஆன்மா என்றும் சித்தாந்திகள் கூறுவர். அருணந்தி சிவாச்சாரியார்,

"உயிரென படுவதிந்த வுடலின்வே றுளதா யுற்றுச்
செயிறுரு மிச்சா ஞானச் செய்திக ளுடைய தாகிப்
பயில்வுறுமின்ப துன்பப் பலன்களும் நுகரரும்"

என்கிறார்.[12] உடலுக்கு வேறாகவும் இச்சா, ஞானச் செயல்களுடைய தாகவும் அதன் வழி இன்ப துன்பங்களை நுகர்வதாகவும் உள்ளது ஆன்மா என்கிறார். இதனை உமாபதி சிவாச்சாரியாரும்,

" செறிந்திடும் உடலுள் மன்னிச் சேர்புலன்வாயிற் பற்றி
அறிந்ததில் அழுந்தும் ஒன்றும் அறிந்திடா அறியும் தன்மை
பிறிந்தடை அஞ்சவத்தை பெருகிய மலத்தாற்பேணி
உறுத்தனி அதீதம் உண்மை உயிர்க்கென உணர்த்துமன்றே."

எனக் கூறப்போந்துள்ளார்.[13]

**பசுவின் இயல்பு**

சைவ மெய்யியல்கள் ஆன்மாவின் இருப்புக்கு முதன்மை யளிக்கின்றன. அந்த வகையில் அவற்றின் இயல்புகளையும் எடுத்துரைக்கத் தவறவில்லை. காஷ்மீர சைவம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சைத்தன்யத்தின் சக்தி குறுகும்போது அச்சைத்தன்யமே மலங்களால் சூழப்பட்ட சம்சாரியாகின்றது."

என்று கூறுகின்றது.[14] சைதன்யமான சிவம் தன் சுதந்திரஇச்சையால் இரண்டற வியாபித்திருக்கும் தன்மையை மறைத்துக் கொண்டு எப்போதும் எப்பொருளிலும் வேறுபடும் தன்மையை மேற்கொள்ளு கின்றதோ அப்போது அச்சிவத்தினுடைய இச்சை முதலான சக்திகள் உண்மையில் குன்றாவிடினும் குன்றியவை போல் காட்சி தருகின்றன என்பர். அப்போதுதான் சிவம் மலங்களால் சூழப்பட்ட சம்சாரியாகப் பிறப்பிறப்புக்குள் அகப்பட்டு உழலும் சீவனாகின்றது. சீவனாகிய அரங்கத்தில் பரமேஸ்வரன் நாட்டியம் ஆடுகின்றான் என்கின்றார் வசுகுப்தர்.[15]

"பசு நித்திய: ஹிஅமுர்த்த: நிஷ்கிரிய நிர்குண
வ்யாபிமாயெ தரந்தஸ்தோ போகாபாய விசித்தக"

எனும் கிரணாகமத்தில் கூறப்படும் பசு இலக்கண சூத்திரத்திற்கு அபிநவகுப்தர்,

"அணுத்துவம் முதலான பாசங்களோடு கூடியதால் "பசு" எனப்படுகின்றது. அநாதியாகையாலே நித்தியம் அஹம் என்ற பண்பினாலே குறிக்கப்படுவதால் உருவமற்றதுசர்வ வியாபியுமா யிருப்பது. அறியப்படுபொருளாய் இருப்பதால் ஞானக்கிரியை அற்றது. மாயைக்குள்ளே சிக்கியது அறிவோனாக குணங்களைக் கடந்தவனாகின்றது. (நிர்குணம்) சைத்தன்ய சொரூபனாயினும் பூரணத் தன்மையின்மையரால் போகத்தில் மேலும் மேலும் விருப்புடையதாகின்றது"

என விளக்கவுரை செய்துள்ளார்.[16] இதனூடாக காஷ்மீர சைவர் கூறும் ஆன்ம இயல்புகள் பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

சைவசித்தாந்தம் சிவத்தின் சக்தி குறுகிய நிலையே "ஜீவாத்மா" என்பதை ஏற்றுக் கொள்வதில்லை. சிவத்தைப் போல தனித்துவமான மெய்ப்பொருளாக, சீவனை சைவசித்தாந்தம் எடுத்துரைக்கின்றது. காஷ்மீரசைவத்தைப் போல் சைவசித்தாந்தமும் "பசு அநாதி" என்பதை ஏற்றுக் கொள்கின்றது. இவ்வாறு இருப்புக்குரிய இவ்வான்மா அநாதியானது என்பதை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏகன் அநேகன் இருள் கருமம் மாயை இரண்
டாகவிவை யாறா தியில்"

எனும் குறளால் அறியலாம்.[17] அநாதியான ஆன்மா பல என்பர். அதையே மேற்படி குறளில் "அநேகன்" என்ற சொல் சுட்டி நிற்கின்றது. பசுக்கள் மலங்களால் பீடிக்கப்பட்டு எல்லைக்குட்பட்ட சிற்றறிவும் அனுபவமும் உடையனவாக இருக்கின்றன. பாசங்களால் பந்திக்கப்படுவதால் பசுக்களாகின்றன. என்றுமுள்ள எங்குமுள்ள அருவப் பொருளாக இருக்கின்றன. மலவாசனைக்குட்பட்டு பிறப்பிறப்புக்களுக்குள் உழல்கின்றன. சிவப்பிரகாசம் பசுக்களின் இயல்பை,

"எண்ணரியதாய் நித்தமாய் இருள் மலத்தின் அழுந்தி
இரு வினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை
அண்ண லரு ளால்நண்ணி அவைஅவரா யதனால்
அலகில் நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றால்
புண்ணிய பாவம்பு ரிந்து போக்குவர வுடைத்தாய்ப்
புணரும் இருள் மல பாகம் பொருந்தியக் கால் அருளால்
உள்நிலவும் ஒளியதனால் இருளகற்றிப் பாதம்
உற்றிடுமந்த பசுவருக்கம் என உரைப்பர் உணர்ந்தோர்"

என எடுத்துரைத்துள்ளது.[18] அறிவிக்காமலே அறிவது பதி அறிவித்தாலும் அறியாதது பாசம் அறிவித்தால் அறிவது பசு என்பர் சித்தாந்திகள். இதனையே இருசாரரும் "சார்ந்ததன் வண்ணமாவது ஆன்மா" என்கின்றனர். ஆதலால் ஆன்மா அறியும் இயல்பினை உடைய அறிவுப் பொருள் எனப்பட்டது. இதனையே மெய்கண்டார்,

"அறிந்தும் அறிவதே யாயும் அறியாது
அறிந்ததையும் விட்டங்கு அடங்கி - அறிந்தது
அது அறிவும் அன்றாகும் மெய்கண்டான் ஒன்றின்
அதுஅது தான் என்னும் அகம்"

எனும் பாடலால் உணர்த்துவார்.[19] அறிவேயுருவான பதி சித்து: அறிவற்ற சடமான பாசம் அசித்து: பதியைச் சாரும்போது சித்தாயும் பாசத்தைச் சாரும்போது அசித்தாயும் இரண்டிற்கும் இடைப்பட்டு இருப்பதால் பசு "சிதசித்து" எனக் கூறப்படுகின்றது. பதி ஒரு பெற்றியதாய் இருத்தலால் "சத்து"என்றும் பாசம் நிலைமாற்றங்கள் அடைதலால் "அசத்து" என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டிற்கும் இடைப்பட்டு இருப்பதால் பசு "சதசத்து" என்று கூறப்படுகின்றது. உமாபதி சிவாச்சாரியாரும்,

"சதசத்தைச் சாரா தசத்ததறியா தங்கண் இவை
உய்த்தல் சத சத்தாம் உயிர்"

என்றார்.[20] இதனைத் தாயுமான சுவாமிகள்,

"அறியாமை சாரின் அதுவாய், அறிவாம்
நெறியான போத்துவாய் நிற்கும் - குறியால்
சதசத்தருள் உணர்த்தத் தான் உணரா நின்று
விதமுற் றறிவெனும் பேர் மெய்"

என்கிறார்.[21] சத்தோடும் அசத்தோடும் இணைவதனால் ஆன்மா இரண்டாலும் அறிவைப் பெறும். இதனால் வரும் நன்மை தீமைகளை அனுபவிக்கும். இதனையே, "இருதிறன் அறிவுளது இரண்டலா வான்மா" என மெய்கண்டார் எடுத்துரைத்துள்ளார்.[22]

காஷ்மீர சைவம், ஒரு எல்லைக்குட்படுத்தப்பட்டுள்ள சீவாத்மா குறுகிய சைதன்யத்தை உடையதாக இருக்கின்றது. அதன் உடலும் குறுகிய பிரபஞ்சத்தாலாகியது[23] என்கின்றது. சைவசித்தாந்திகள் பசு பாசத்தால் கட்டுண்ட நிலையில் பிரபஞ்சத்தில் பிறவி எடுக்கின்றது. அப்போது பதி நிமித்த காரணமாய் இருந்து மாயையை முதற் காரணமாக்கி சக்தியைத் துணைக் காரணமாகக் கொண்டு மாயையில் இருந்து உலகைத் தோற்றுவித்து, ஒடுக்கி, நிலைபெறச் செய்து நிற்கின்றது என்பர்.

பசு, பதி போல் அநாதிப் பொருள் என்பதை இருசாராரும் ஏற்றுக் கொள்வர். பசுத்துவம் உடையது பசு; பசுத்துவம் - பாசத்தால் பந்திக்கப்பட்டது; இயல்பாகவே பந்திக்கப்பட்டது: ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்று மலங்களால் சுட்டப்பட்ட சைதன்யமே பசு என்பர் காஷ்மீரசைவர்கள். பசுவைப் பதியினின்றும் வேறுபட்டதாக கருதும் சித்தாந்திகள் மும்மலங்களால் பிடிக்கப்பட்ட ஆன்மாவே பசு என்பர். இதனைக் காஷ்மீரசைவர்கள் மாயா பிரமாதா, சித்தப் பிரமாதா, சகல, அணு, ஜீவ எனப் பல பெயர்களால் எடுத்தாள்வர்.[24]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுத்தவிகல்பத்தால் மக்கள் அல்லது ஆன்மாக்கள் தாம் கட்டுண்டு கிடப்பதாகக் கருதுகின்றனர். இத்தவறான புரிதலே அவர்கள் பிறப்பெடுக்கக் காரணாமாகின்றது என்கிறார் அபிநவர்.[25] அசுத்த விகல்பங்கள் எனப்படுபவை, தன் உள, உடல் கூறுகளை "அஹம்" என மயங்கும் எண்ணங்கள் ஆகும். உதாரணமாக, நான் மெலிந்து விட்டேன், நான் பலவீனமாக இருக்கின்றேன்" எனக் கூறுதலைக் குறிப்பிடலாம். இவ்வாறான அசுத்தவிகல்ப எண்ணங்களால் பசு பல்வேறுபட்ட வினைகளைச் செய்து மீளமீளப் பிறப்பெடுக்கும்.

அறியாமைக்கு (அக்யாதி) காரணம் பாசம் என்பதை இருசாராரும் ஏற்பர். உண்மையில் அறியும் தன்மையுடையது உயிர் அறிவே சொரூபமானது; ஆனால் அறிவிக்கவே அறிவது என்பதை முன்னர் பார்த்தோம். அறியாமை ஆன்மாக்களின் குணமல்ல. ஞானமே (அறிவு) அதன் குணமாகும்.

"அறியாமை யான்மாக்கள் குணமே யென்னி
லறிவு தொழி லாற்போக மருந்து மாற்றால்
செறியாது நீசொன்ன குணமென்கை யுயிர்பாற்
சித்தினுக்குக் குணமொன்றுஞ் சித்தே யாகும்
குறியாக் கொள் ஆன்மாவைச் சடமதாகக்
கூறி யவவ் வாணவத்தின் குணமறியா மையதாம்
நெறியிலே யாணவந்தா னாற் மாக்க னறிவை
நிகழாத வகை தடுக்கு மென்று நீ தெளியே"

எனச் சிவாக்கிரயோகிகள் உரைக்க,[26] இதனை உமாபதி சிவாச்சாரியார், "ஒளியும் இருளும் உலகு மலர்கட் தெளிவில் எனில் என் செய" என்கிறார்.[27] இதில் காஷ்மீரசைவர்களுக்கும் மாற்றுக் கருத்து இல்லை. ஏனெனில் ஆன்மா என்பது பதியே[28] ஆகவே இது இயல்பில் அறிவுடையது.[29] அறியாமை அதன் குணமல்ல என்பது தெளிவு. ஆக, மலபந்தத்தாலேயே ஆன்மா அறியாமைக்கு உட்படுகின்றது. அறியாமைக்கு மூல காரணமாக இருக்கும் மலம் ஆணவமலம் ஆகும். இதனைச் சித்தாந்தம்,

....... செம்பினிற் களிம் பெய்ந்து
என்றும் அஞ்ஞானங்காட்டும் ஆணவம் இயைந்து நின்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறுகின்றது.[30] காஷ்மீரசைவமும் அநாதியே புருஷனோடு தொடர்புடைய அறியாமைக்கு மூலகாரணமாக ஆணவமலத்தைச் சித்திரிக்கின்றது. இவ்வறியாமை நீங்கி அறிவுபெற ஆன்மாவுக்குக் கலை முதலிய தத்துவங்களால் பொதுவகையில் உணர்வு நிகழ்வதாயினும் சிறப்பு வகையால் உணர்வு நிகழ்வதில்லை. ஆன்மா அந்தக்கரணங்க ளோடு கூடிநின்று சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆகிய ஐந்து அவத்தைகளை உடையதாகின்றது. அந்தவகையில் சைவசித்தாந்திகள் பதியின் அறிவு தானே விளங்குவது. பசு அறிவுடையதெனினும் அறிவிக்க அறிவது அறியப்படும் பொருளில் அழுந்தி அறிவது ஆதலால் அது "பரதந்திர நிலை அறிவு" என்று சுட்டுவர். இதனைக் காஷ்மீரசைவர்களும் ஏற்று நிற்கின்றனர்.

**ஆன்மவகைகளும் நிலைகளும்**

ஆன்மா அறிவுடையபொருள்;ஆனால் பதியைப் போல் சுதந்திர அறிவுடையதல்ல; பதி அறிவிக்காமலே அறிவது; ஆனால் ஆன்மா அறிவித்தால் அறிவது; தனித்தியங்கும் தன்மையற்று சார்ந்ததன் வண்ணமாதல் ஆன்மாவின் இயல்பாகும். அந்த வகையில் ஆன்மா பாசத்தைச் சாரும் போது பாசமேயாயும் பதியைச் சாரும் போது பதியோடும் நிற்கும் என்பர் சிந்தாந்திகள். இதுவே ஆன்மாவின் உண்மை நிலைஎன்றும் இது ஆன்மாவின் சொரூபலக்கணம் என்றும் கூறப்படுகின்றது. அறியாமை இருளில் அகப்படல் தடத்தலக்கணம், இதில் இது உருவோ அருவோ அருவுருவோ என வினவின் அவையல்ல என்பர்.[31] மேலும் உயிர் எல்லையற்று நிற்கும் வியாபகப் பொருளினும் அது பதியின் வியாபகத்துள் அடங்கி நிற்பதாக எடுத்தாளப்படுகின்றது. இந்த வகையில் பதியுடன் இணையின் வியாப்பியமாகவும் பாசத்துடன் இணையின் வியாபகமாயும் நிற்கும் என்பர். அந்த வகையில் ஆன்மாவின் இருப்பு நிலையை,

(i) பெத்த நிலை

(ii) முத்தி நிலை

என சைவசித்தாந்திகள் இரண்டாக எடுத்தாள்வர். காஷ்மீரசைவர்க்கும் இதில் மாற்றுக்கருத்தில்லை. பாசத்தோடு இணைந்த நிலை பெத்த நிலை என்றும் பதியோடு இணைந்த நிலை முக்தி நிலை என்றும் விளக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை உணர விடாது தடுக்கும் பந்தத்தால் பந்திக்கப்பட்ட ஆன்மாக்கள் பல என சித்தாந்திகள் கூற, காஷ்மீரசைவம் ஒன்றான பதி பல ஆன்மாக்களாகின்றதே தவிர அது உண்மையில் ஒன்று என்பர். இரு சாராரும் ஆன்மாவை மூன்று வகையினதாக எடுத்தாள்வர். அவை,

i) சகலர்

ii) பிரளயாகலர்

iii)விஞ்ஞானகலர்

ஆன்மாவை அநாதியே பற்றியிருக்கும் மலம் ஆணவம் என்பதில் இருசாராருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. திருமூலர் இதனை,

"ஆணவமாகும் விஞ்ஞான கலருக்குப்
பேணிய மாயை பிரளயா கலருக்கே
ஆணவ மாயையும் கன்ம மூன்றுமே
காணுஞ் சகலர்க்குக் காட்டு மலங்களே"

எனக்கூற [32]

"உரைதரும் இப் பசுவர்க்கம் உணரின் மூன்றா
முயரும் விஞ்ஞானகலர் பிரளயாகலர், சகலர்
நிரையின்மல மலங் கன்ம மாயை
நிற்கும்........................"

என அருணந்தி சிவாச்சாரியாரும் [33]

"மூவகை ஆருயிர் வருக்கம், மலத்தார், கன்மம்
மூல மலத்தார்மூன்றும்உடையார் அன்றோ"

என உமாபதி சிவாச்சாரியாரும் [34] எடுத்தாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆணவ மலத்தால் மட்டும் பீடிக்கப்பட்ட ஜீவன்கள் விஞ்ஞானகலர் இதனை, "ஒரு மலத்தாராயும் உளர்" என்கிறார் உமாபதி சிவாச்சாரியார். [35] இந்நிலையை காஷ்மீரசைவர்கள் விளக்கும் போது சுத்த அத்வாவிற்கும் அசுத்த அத்துவாவிற்கும் இடைப்பட்ட நிலை என்பர். சுத்த வித்யாவிலிருந்து சிவம் வரையுள்ள நிலையை சார்ந்த ஜீவர்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவமலம் குறைந்து கொண்டே வந்து சிவனிடம் முற்றுமாக சிதைந்து அழிந்து விடுகின்றது.[36] இந்நிலையில் அவரவர் பக்குவத்திற்கு ஏற்ப மந்திரர், மந்திர கேசரி, மந்திர மஹேசர், சக்திஜர், சார்பவர் என்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன. ஆணவத்தோடு கன்மத்தையும் உடையவராய் மாயை நீக்கப் பெற்றவராய் இருப்பவர் பிரளயத்துக்குப் பின்பு உடல்கள் இல்லாமையால் வெறும் ஆணவ, கார்மீக மலங்களே ஜீவர்களிடம் உள்ளன. இதுவே பிரளயாகல நிலை என்றும் இந்த ஜீவர்கள், அத்துவாவைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகின்றது.[37]

மாயா தத்துவத்தின் மேல்நிலையில் (சுத்தாவத்தைக்குக் கீழே) இருப்பவர்கள் விஞ்ஞானகலர். இவர்களிடத்தில் "கர்த்ருத்வம்" இல்லை. அறிதற்றொழில் ஆகிய போதம் ஒன்றே உள்ளது. அவர்களின் அறியப்பெறுகின்ற பொருளாக (பிரமேயம்) இருப்பது தங்களுடைய கழிந்த கால - பிரளயாகல, சகல நிலைகளே. மாயாதத்துவ நிலைகளில் அறிவோராகிய பிரளயாகலரின் அறியப்படு பொருளாக இருப்பது சூனியம். அது பிரளயாகல நிலையைப் பெரிதும் சார்ந்ததாகும். மாயை தொடங்கி பூமி ஈறாக உள்ள தத்துவ நிலைகளில் அறிவோராக இருப்பவர்கள் சகலர்கள். அவர்கள் பெரிதும் வேறுபட்ட நிலையினர். மிகக் குறுகிய திறனையுடையோராவர். இவர்கள் அறியும் பொருளும் குறுகிய எல்லைக்குட்பட்டதே என்பர் காஷ்மீரசைவர்கள்.[38]

மும்மலங்களாலும் பந்திக்கப்பட்டு அறியாமைக்குள் ஜீவன் அகப்பட்டிருக்கும் நிலையே சகல நிலையாகும். இது, கலை முதலிய தத்துவங்களோடு கூடிய நிலையில் பல்வேறு பிறப்புக்களுக்கு உட்பட்டு உலகத்தில் உள்ளவர், பேத உணர்விற்கு உட்படுவர். இதனைக் கூறும் போது காஷ்மீரசைவர், "தடையற்ற சுதந்திரத்தன்மை வாய்ந்த நித்தியமான ஒரே சக்தியை மறைத்துப் பல உயிர்கள், பல பொருட்கள் என்று நம்மை எண்ணச் செய்கின்றது" என்பர்.[39]

"கலர்" என்பதற்கு "கலையோடு கூடியவர்" என்றும் "அகலர்" என்பதற்கு "கலை நீங்கப் பெற்றவர்" என்றும் பொருள் சுட்டி, விஞ்ஞானத்தால் கலை நீக்கியவர் விஞ்ஞானகலர் என்றும் பிரளயத்தில் கலை நீங்கியவர் பிரளயாகலர் என்றும் இருசாரரும் பொருள் சுட்டுவர். வியாபகப் பொருளான ஆன்மா பாசத்தால் தன்னியல்பிழந்து அல்லது மறைக்கப்பட்டு நிற்கும். வியாபகம் - மகத்து. ஏகதேசமடைந்தல் - அணு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்படுகின்றது. ஆன்மா மலவாசனையால் அணுத்தன்மை பெறுகின்றது என்பதில் இரு மெய்யியலாளர்க்கும் மாற்றுக்கருத்தில்லை. மலங்கள் ஆன்மாவின் உண்மை இயல்பைத் தோற்றவிடாது மறைத்து நிற்கும்.

"...... ஐம் பொறியின்
நீங்கான்நீர்ப் பாசிபோல் நீங்குமல கன்மம் வரின்
நீங்கானை நீங்கு நினைந்து"

என மெய்கண்டாரும்[40]

"பாசி படு குட்டத்திற் கல்லினைவிட்டெறியப்
படும் பொழுது நீங்கி அது விடும் பொழுதிற்பரக்கும்..."

என அருணந்தி சிவாச்சாரியாரும்[41] விளக்கிப் போந்துள்ளார். அதாவது நீர் பாசியால் மறைக்கப்பட்டிருக்கும். அந்நீர் நிலைக்கு கல்லை எறியும் போது பாசி விலகி நீர் வெளித்தெரியும். அதுபோல் சடமாயையின் காரியங்களான உடல், பொறி, கரணங்கள் மூலம் ஆணவம் ஒடுங்கும் போது அல்லது விலகும் போது உயிரின் வியாபகம் புலப்படுகின்றது என்பர். மேலும் பிறவிக்குள்ளாகும் ஆத்மா உலகில் உடல் வழி பிறக்கின்றது என்பர்.[42]

இவ்வுடம்பின்வழியேயே ஆன்மாவிற்கு அறிவு கிடைக்கின்றது. அதன் வழியே ஆன்மா தான் ஒன்றை அறியவும் செய்யவும் நினைக்கும்போது உடலைச் செலுத்துகின்றது. செலுத்தப்படுவது; உடலே அன்றி உயிரல்ல. மேலும் உயிர் இச்சையும் செயலும் உடையதாதலால் பதியைப் போல் அதுவும் இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானாசக்தி என்பனவற்றை உடையவை என்றும் ஆயினும் இறைவனின் சக்திக்கு ஒப்பாகா என்றும் கூறுவர்.[43]

இவ்வாறு உயிர்கள் மலங்களோடு கட்டுண்டு கிடக்கும் நிலையை கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை என வடமொழியாளர் சுட்டுவர். இதனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவத்தை கேவல சகல சுத்தமென மூன்றாய்
அடையுமா ணவமாயை அருட்சக்தியதனால்
இவற்றுட் கேவலமுயிர்க்குச் சகசமாக
மிறை வன்றாள் மாயையினிற் கலாதிகளை மிசைக்கப்
பவத்துக் காஞ் சகலமா மிருவினையுமொத்த
பருவத்தே பராசக்தி பதிந்தருளினாலே
சிவத்துடனாம் அது சுத்தஞ் செய்யவிந் மூன்றுந்
தேருங்காலை வைத்தாய் மூவைந்தாய்த் திகழும் "

எனும் பாடலால் சிவாக்கிரயோகிகள் கூறியுள்ளார்.[44] ஆன்மா ஆணவமலத்துடன் மட்டும் கூடியுள்ள நிலை "கேவலாவத்தை" எனப்படும். இந்நிலையில் அறிவு, இச்சை, செயலின்றி, உடல், அந்தக் கரணங்கள், இன்றி அதனால் வினையின்றி பிறவியின்றி இன்பதுன்பமின்றி எதனையும் அறியாததாய் ஆன்மா விளங்கும் எனச் சித்தியார் விளங்கி நிற்கும்,[45] ஆன்மாக்களுக்குச் சகசமாய் இருக்கும் நிலையிதுவாகும். இவ்வாறு அறியாமையுள் மூழ்கியுள்ள ஆன்மா மாயை, கன்மம் ஆகிய இரு மலங்களோடும் கூடும் காலத்தில் தனு, கரண, புவன போகங்களைப் பெற்று இருவினை புரிந்து பல பிறவிகளுக்கு உட்படும் இதனைச் சித்தியார்,

"உருவினைக் கொண்டு போக போக்கியத்து உன்னல் செப்பல்
வருசெயன் மருவிச் சத்த மாதியாம் விடயந் தன்னில்
புரிவதும் செய்திங் கெல்லா யோனியும் புக்குழன்று
திரிதரும் சகலமான வவத்தையிற் சீவன் சென்றே"

என்கின்றது.[46] சுத்தாவத்தை நிலையில் ஆன்மா இரு வினையொப்பும் மலபரிபாகமும் பெற்று பதியின் திருவருள் கூடிய காலத்தில் அத்துவிதமாய் அமையும். இதனைச் சித்தியார்,

"திரிமலமறுத்துப் பண்டைச் சுற்றசிற்றறி வொழிந்து ஞானம்
பெருகி நாயகன் தன்பாதம் பெறுவது சுத்தமாமே"

என்கிறது.[47] இம்மூவகை அவத்தைகளும் முறையே இருள், மருள், அருள், நிலைகளுக்கு ஒப்பிடப்படுகின்றன.அத்தோடு இவ்வவத்தை நிலைகள் "காரணாவத்தைகள்" எனச் சிறப்பிக்கப்படுகின்றன. இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைப்பாட்டை நேரடியாக காஷ்மீரசைவம் கூறாது விடினும் இக்கருத்தியல் அவர்களிடமும் உண்டு.[48]

சைவசித்தாந்தம் சுட்டும் "காரியாவத்தைகள்" பற்றித் திரிக சாஸ்திரமும் விரிவாக எடுத்துரைக்கின்றது. பரமசிவனே சீவாத்மா என்று சுட்டும் காஷ்மீரசைவர்கள், பரமசிவனின் முத்தொழில்களாகப் படைத்தல் (ஸ்ருஷ்டி), காத்தல் (ஸ்திதி), அழித்தல் (ஸம்ஹாரம்) என்பவற்றிற்கேற்ப சீவாத்மா நிலையில் விழிப்பு நிலை (ஜாக்ரத்), கனவு நிலை (ஸ்வப்னம்), உறக்கநிலை (சுக்ஷுப்தி) எனும் மூன்று நிலைகளாகின்றன என்றும் கூறுவர். பரமசிவன் எங்கும் எதிலும் நீக்கமின்றி நிற்பதனால் துரியம் மற்றைய நிலைகளிலும் உள்ளுறையாய் உள்ளது. பிரபஞ்சம் பரமசிவத்தின் "விராட்சொரூபமாக" இருக்கும் நிலை, "விழிப்பு நிலை" எனப்படுகின்றது. ஐம்பொறிகளும் ஐம்புலன்களை விஷயமாகக் கொண்டிருக்கும் இந்நிலையில் பல்வகைப்பட்ட ஞானம் பசுவிற்கு ஏற்படுகின்றது. கனவுநிலை புறக்கரணங்களில் ஈடுபடாத நிலை, ஆயினும் புறக்கரணங்கள் சார்ந்த, கண்ட, காணாத பொருட்கள், காட்சிகள் என்பவற்றை ஆத்மா காண்கின்றது. இதனால் இது "தேஜோவஸ்தை" எனப்படும். சுழுத்தி நிலையில் அறிவோன், அறியப்படுபொருள் எனும் நிலை இல்லை. இது அஹத்தினுள் இருக்கும் சிவம் சாட்சியாக இருப்பது: தூய சிதானந்த: மனம் பழக்க சக்தியால் நிபந்தனைக்குட்பட்டு இருக்கையில் யோகப் பயிற்சியால் அந்நிபந்தனைகளினின்றும் விடுபடின் துரிய பிரக்ஞை நிலையை அடைகின்றான். இதனை ஸ்பந்த சாஸ்திரம்,

> "அறிவு(ஞானம்), அறியப்படுபொருள் (ஞேயம்) என்பதான பரம சக்தியோடு கூடிய விழிப்பு, சொப்பனமாகிய நிலைகளிலும் சின்மயமாக மட்டும் இருந்து சுழுத்தி, துரியம் ஆகிய நிலை களிலும் பரம் பொருள் விளங்குகின்றது"

எனக் கூறுகின்றது.[49] அபிநவகுப்தர்,

> "பாசங்களின் வாசனைதீர்ந்து போகும் போது பசுவிற்கு சுத்த பூர்ணானந்த துரியநிலை ஏற்படுகின்றது. இந்நிலையில் பரம்பொருள் "ஞானாகனப் பிரகாசானந்த" மூர்த்தியாகத் திகழ்கின்றார். இதில் பரமாத்வயஸ்பாவம் ஓங்கி நிற்கின்றது."

என்று கூறுகின்றார்.[50]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்தம் இவை நான்கிற்கும் மேலாக "துரியா துரியத்தை" முன்வைக்கின்றது. இது மூலாதாரத்துக்கு உரியது. இதனை உயிர்ப்படங்கல் எனச் சுட்டுவர். இதனை, "நாபி நோக்கிய துரியாதீத நுவலின் மூலத்தி லொன்று" என்கிறது சித்தியார்.[51]

ஸ்தூல சித்தான உயிர் இயல்பாகவே பாசத்தால் கட்டுண்டிருக்கும். உயிர் பதிஞானத்தையடைய பாசம் நீங்கும். அந்தவகையில் உயிர் ஆணவத்தோடு மட்டும் முதலில் கூடியிருந்து பின்னர் மாயை கன்மங்களோடு சேரும். உரிய காலத்தில் மும்மல நீக்கமடைந்து இறைவனோடு இரண்டறக் கலக்கும். இம்மூன்று நிலைகளையும் சித்தாந்திகள் "அவத்தைகள்" என எடுத்தாள்வார்கள். மேற்கூறிய சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனும் ஐந்தும் காரியாவஸ்தைகள் எனப்படுகின்றன. இவ்வைந்தும் மூன்று வகையினதாக எடுத்தாளப்படுகின்றன. அவை, கீழாவத்தை, மேலாலவத்தை, மத்தியாவத்தை என மூன்றுமாகும். கீழாவத்தையில் அறிவு குறைந்து கொண்டே வரும். இம்முறையில் உயிர் சிறப்பாக நிற்கும் இடங்கள் ஐந்தாகும். அவை, சாக்கிரம் - புருவநடு, சொப்பனம் - கண்டம், சுழுத்தி - இதயம், துரியம் - நாடி, துரியாதீதம் - மூலாதாரம் என்பனவே. இவை "மேலாவத்தை" எனப்படுகின்றன. இந்நிலையிலே இறுதியாகப் புருவநடுவை அடைந்த உயிர் அவ்விடத்திலேயே ஐந்து நிலைகளை அடையும் அவை மத்தியாவத்தையாகும். இந்நிலையிலேயே உயிர் தன்னால் அறியப்படும் பொருளில் அழுந்தி நிற்கும்; கீழாவத்தையில் உயிர் அறியாமையில் அழுந்தும்; கேவலாவத்தை நிலையிலேயே சிவத்தில் அழுந்தும் நிலையைக் எட்டுகின்றது. இதனை உமாபதி சிவாச்சாரியார்,"ஐவகை யவத்தை யுய்க்கும் அறிவினால் அறிந்து கொள்ளே" என்கிறார்.[52]

உடலில் ஆறு ஆதாரங்களுக்கு முதன்மை அளிக்கின்ற "யோக" நிலைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் காஷ்மீரசைவம் இவ்வாறான கருத்துக்களை வெளியிடவில்லை. ஆனாலும் குறிப்பாற் சுட்டும். சர்வமயமாக இருக்கும் சீவன் ஒவ்வொரு பொருளைப் பற்றியும் அறியும் போதும் அதுவாகவே மாறி விடுகின்றது. அது அபேத ஞான நிலை; சித்தாந்திகளின் மத்தியாவத்தை நிலையும் இவ்வாறாகவே சுட்டப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமையுள் கட்டுண்ட நிலை சீவன் எனப்படுகின்றது. இதனாற்றான் ஜீவனுடைய அஞ்ஞானம் என்பது ஜடப் பொருள் போல அறவே அறிவற்றதன்று. அது அபூர்ணஞானம் என அபிநவகுப்தரும் சுட்டினார் போலும்.[53] இதனை சித்தாந்திகள் கீழாவத்தை என்பர். ஆயினும் இதற்கான விளக்கங்கள் வேறுபடுகின்றன. ஆன்மா தான்வேறு பொருள்வேறு எனக் கருதி உடல், கரணம் போலத் தன்னையும் அழியும் பொருளாகக் கருதி, பிறப்பிறப்பு எனும் தளையுள் கட்டுண்டு உழலும். இதை நுகர்வோன் - நுகரப்படுபொருள், பிரமாதா - பிரமேயம், போக்தா - போக்கியம் என அறியலாம் என்பர். தன்னை அணுவாக எண்ணும் சீவனின் அறியாமையை சித்தாந்திகளும் எடுத்தாளுகின்றனர். மேலும் சீவன் சிவசூரியனின் கிரணங்களில் அருட் சக்தி படிந்த காலத்தில் மெய்யறிவு பெறுகின்றது. உடல் முதலிய சடப் பொருட்களின் நின்றும் சைதன்ய சொரூபனான தான் வேறு எனவும் உறுதிப்படுத்துகின்றது. தன் உண்மைச் சொரூபத்தை அப்போது அறிகின்றது என்பர். சித்தாந்திகளும் அதனை எடுத்தாண்டுள்ளனர். இதனை,

"சரீர - புவநாகாரோ மாயீய: பரிகீர்த்திக:"

என அபிநவகுப்தர் குறிப்பிடுகின்றார்.[54] மேலும் காஷ்மீர சைவர் பதித்தன்மை, மாயையால் பசுத்தன்மை பெறுவதாகக் கூறிநிற்பர். இதனைச் சித்தாந்திகள் ஏற்பதில்லை. இருசாராரும் இம்மாயாசக்தியால் தோற்றுவிக்கப்பட்டதே "புரியஷ்டகம்" என்பர். "புரி" என்பது தேகம் அஷ்டகம் - சப்தம், ஸபர்சம், ரூபம், ரசம், கந்தம், எனும் ஐந்து தன்மாத்திரைகளையும் மனம், புத்தி, அகங்காரம் எனும் திரிகரணங்களையும் இணைத்ததே புரியஷ்டகம் எனப்படும். இது "தேகபந்தம்" எனவும் சுட்டப்படுகின்றது. பிரளயாகலர் நிலையிலுள்ள பசுக்களில் எவர் ஆணவம், கன்மம் ஆகிய மலங்களிலினின்றும் விலகவில்லையோ அல்லது அம்மலங்கள் பக்குவமாகவில்லையோ அவர்கள் புரியஷ்டகம் எனும் உடல் கொண்டு தத்தம் கன்மத்தின்படி வெவ்வேறு பிறவி எடுக்கின்றார்கள் எனச் சைவசித்தாந்தம் கூறுகின்றது. அந்தவகையில் புரியஷ்டகம், சூக்குமதேகம், ஸ்தூலதேகம் எனப் பிரித்து எடுத்தாளப்படுகிறது. பிரபஞ்சத்தில் ஆன்மா பிறவியெடுக்க முன்னும் மரணத்தின் பின்னும் சூக்கும தேகத்தையும் பிரபஞ்ச வாழ்வில் ஸ்தூல தேகத்தையும் கருவியாகக் கொண்டு கர்மபலனை அனுபவித்து நிற்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் தன்னிச்சாமாத்திரத்தால் தோற்றுவித்த தன்மாத்திரைகளே பஞ்சபூதங்களாக பரிணமித்ததாக காஷ்மீரசைவர்கள் கூறுவர். மேலும் பரமசிவம், சரீர நாடிகளில் ஆகாசமாகவும் பிராணன்களில் வாயுவாகவும் உடலிலுள்ள பாசனாக்கினி தேஜஸாகவும் இரத்தம் முதலானவை நீராகவும் எலும்பு, தசை முதலானவை பிருதிவியாகவும் இருந்து தொழிற்படச் செய்யும். பசுவுக்கு அனுபவங்களைத் தருபவை திரிகரணங்கள். இங்கு அலை பாயும் மனம் இராட்சத குணத்துக்கும் தான் என்னும் செருக்கு, அகங்காரம் தாமசகுணத்திற்கும் பிரித்துணரும் இயல்புடைய புத்தி சத்துவ குணத்திற்கும் காரணமாய் அமைகின்றன. "விடிவாமளவும்" விளக்கனைய உதவும் மாயையினூடாக ஆரம்ப அறிவைப் பெறும் பசு அவனருளால் அறிவிக்க அறிந்து பதியை நாடும் என்பர் சித்தாந்திகள். இத்தன்மையில் பொறி ஒன்றும் அதற்குரிய பூதமும் கரணங்களும் வித்தியா, சிவதத்துவங்களும் எனப் பதினெட்டுக் கருவிகளுடனும் கூடியே அறிவைப் பெறுகின்றது. இதனை.

" மருவிய பொறியில் ஒன்றும் மாபூதம் ஐந்திலொன்றும்
கருவிகள் நான்கும் நீங்காக் கலாதிகள் ஐந்தும் கூடி
ஒருபுலன் நுகரும் ..."

எனச் சிவப்பிரகாசம் கூறுகிறது.[55] ஆக, அறிவை அறிய அறிவு (ஞானம்) தேவைப்படுகின்றது. ஆன்மாவின் அறிவு பரதந்திர அறிவே தவிர சுதந்திர அறிவன்று. அதாவது அறியும் காலத்தில் அறிபொருளில் அழுந்தி சார்ந்ததன் வண்ணமாகிப் பெறும் அறிவை உடையதாகும். பதி முற்றறிவு அல்லது பேரறிவுடையது. ஆன்மா குறித்த காலத்தில் குறித்த பொருளை மட்டுமே அறியும். ஆதலால் அதன் அறிவு சிற்றறிவு ஆகும். அறிவிக்க அறியும் அறிவு என்பதால் பருஅறிவு என்றும் எடுத்தாளப் படுகின்றது. இவை பாசத்தால் விளைவன. இக்கருத்தில் இரு சாராருக்கும் வேறுபாடில்லை. பதிக்கும் பசுவிற்குமான இவ்வேறுபாட்டை,

"சுத்த மெய்ஞ்ஞான மேனிச் சோதிபோல் அசத்தஞ்ஞானம்
ஒத்துறா குற்ற மெல்லாம் உற்றிடும் உயிரின் கண்ணே
சத்துள போதே வேறாம் சதசத்தும் அசத்துமெல்லாம்
வைத்திடும் அநாதி யாக வாரி நீரலவணம் போலும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சித்தியார் எடுத்துரைக்கின்றது.[56] இவ்வாறிருக்கும் ஸ்தூலசித்தான ஆன்மாவை மலத்தை நீக்கி அறிவை அறிவிக்கும் வியஞ்சகப் பொருள் பதியாகும். அவ்வாறு அறிவிக்கும் நிலையை,

"மெஞ்ஞானம் தானே விளையும் விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான அச்சகலர்க் கக்குருவாய் - மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயாகலருக்கு
முன்னுணர்ந்துந் தான் குருவாய்முன்"

என மெய்கண்டர் விளக்கிப் போந்துள்ளார்.[57] ஞானமே மலநீக்கவழி; அது பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என மூன்றாக எடுத்தாளப்படுகின்றது. பைசந்தி, மத்திமை. வைகரி எனும் வாக்குகளின் விருத்தியாகிய சொற்பிரபஞ்சம், நாதம் முதல் நிலம் ஈறாக உள்ள பொருட் பிரபஞ்சம் எனும் இரண்டினையும் சார்ந்து நின்றறிந்தால் உண்டாகும் ஞானம் பாசஞானம் ஆகும்.

பிரமாண நூல்களினூடு பெறப்படும் செயற்கை அறிவாக இது சுட்டப்படுகின்றது. கரணங்களை வெறும் கருவிகள் என உணர்த்தும் பதி பற்றி ஆராய முற்படும்போது "நான்" எனும் தன்முனைப்பால் ஆன்மாவில் ஏற்படும் அறிவு "பசுஞானம்" எனப்படும். "நானே பிரமம்" எனும் பொய்யறிவு இதன் பாற்படும். அது இயற்கை அறிவாகும். ஆன்மா அவன் தாள் வணங்கி , பிரியாது அவனருளிலடங்கி அவனருளாய் நிற்கும் போது அவன் காணாதவெல்லாம் காட்ட, அறிந்து நிற்கும் சிவாநுபவ நிலை பெறுவதற்குக் காரணமாய் உள்ள அறிவு பதிஞானம் ஆகும். இதுவே உயர்வானதும் உண்மையானதும் ஆகும். இதனையே சிவப்பிரகாமும்,

"பாசமாம் ஞானத்தாலும் படர்பசு ஞானத்தாலும்
ஈசனை உணர வொண்ணாது..."

எனக் கூறுகின்றது.[58] ஆன்மா மலவாதனைகளில் இருந்து விடுபட்டுத் தன்னையுணர வேண்டும். அதன்வழி தம்மையுடையவராகிய பதியையும் உணர வேண்டும்.

"ஊனக்கண் பாசமுணராப்பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் சிவஞானபோத வரிகள் பதிஞானத்தின் முதன்மையை எடுத்துரைக்கின்றன.[59] அதற்கு மலபரிபாகம், இருவினையொப்பு, சத்திநிபாதம் ஆகிய நிலைகளை அடைய வேண்டும்.

அவற்றினூடு அவனருளால் பதிஞானம் பெற்று அவனோடு இரண்டறக் கலக்கும் "சிவாவநுபவத்தைப்" பெற வேண்டும். இதுவே ஆன்மாவின் இலட்சியம் ஆகும் என்கின்றது சைவசித்தாந்தம்.

ஆனால் காஷ்மீரசைவம் பசு மலவாசனை நீங்கி, தன்னைப் பரமசிவமாக உணரவேண்டும் என்கிறது. இதனை சித்தாந்தம் பசுஞானம் என்றே கூறுகிறது. மேலும் இவ்விகற்பங்கள் தோன்றும் நிலையில் காணப்படும் பிரபஞ்சத்தின் பெருமைகள் யாவும் எனதே என்றும் இப்பிரபஞ்சத்தில் ஆத்மா நானே என்றும் அறிகின்ற போது மகேசனின் தன்மையை பெற்றவனாகின்றது என்கின்றனர்.[60]

பசு பற்றிய பல கருத்து நிலைகளில் சைவசித்தாந்தமும் காஷ்மீர சைவமும் ஒத்துப்போனாலும் பசுவினது விடுதலை பற்றிய கருத்தில் மாறுபட்டு நிற்பதற்கு முறையே அவற்றின் பன்மைவாத, ஒருமைவாத எண்ணக்கருக்களே காரணங்களாக அமைந்தள்ளன என்பது தெளிவாகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1) *சித்தியார், பா.216*

2) Paramartha sara, R. 37

3) Ibid, V. 16

4) Ibid, R. 37

5) *சிவஞானபோதம், சூத். 3*

6) *சிவஞானமுனிவர் (உரை), சிவஞானபோதம், சூ. 3*

7) *சித்தியார், 2.1*

8) *சிவஞானபோதம், 3.19*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) சித்தியார், 3.3

10) சிவஞானபோதம், 3.22

11) மேலது, சூ. 3

12) சித்தியார், 3.1

13) சிவப்பிரகாசம், 3.52

14) பிரத்திய பிஞ்ஞான ஹிருதயம், 9, ப. 26

15) Sivasutra, 9 - 11

16) திருஞான சம்பந்தன், பெ. 1978 மு.கு. நூல் பக். 30

17) திருவருட்பயன், 6.52

18) சிவப்பிரகாசம், சூ. 2

19) சிவஞானபோதம், 3.21

20) திருவருட்பயன், 3 -17

21) தாயுமானசுவாமிகள், பாடல் - 37

22) சிவஞானபோதம், சூ. 7

23) பிரத்திய பிஞ்ஞான ஹிருதயம், சூ. 4

24) Pandey, K.C., Op.cit., xxii

25) Tantraloka, g. 21

26) சிவநெறிப்பிரகாசம், பா. 50

27) திருவருட்பயன், 2.16

28) பிரத்திய பிஞ்ஞான ஹிருதயம், சூ. 9

29) மேலது, சூ. 12

30) சிவநெறிப்பிரகாசம், பா. 50

31) சுப்புரெட்டியார், மு.கு. நூல், ப. 140


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32) திருமூலர், 15

33) சித்தியார், 8.2

34) சிவப்பிரகாசம், பாயிரம், 8

35) திருவருட்பயன், 2.2

36) Tantraloka, 6, 77 - 80

37) தகாரே, க.வை. மு.கு. நூல், ப. 179

38) பிரத்திய பிஞ்ஞான ஹிருதயம், ப. 11

39) Tattva sandoha, 5

40) சிவஞானபோதம், 8.9

41) சித்தியார், 8. 39

42) சிவஞானபோதம், சூத். 3

43) சுப்புரெட்டியார் - மு.கு.நூல் - ப.150

44) சிவநெறிப்பிரகாசம், பா. 39

45) சித்தியார், பா. 228

46) சுப - மேலது, பா. 229

47) சுப - மேலது, பா. 230

48) திருஞானசம்பந்தன் - மு.கு.நூல், பக். 26

49) Spandasastra, Nisil, Kar., 18

50) Parmarthasara, 35

51) சித்தியார், பா. 223

52) சிவப்பிரகாசம் - பா. 61

53) Tantraloka - 125, p. 28

54) Ibid., pp 1 - 56



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*55)* *சிவப்பிரகாசம், 63*

*56)* *சித்தியார் , 7.3*

*57)* *சிவஞானபோதம் , 8.47*

*58)* *சிவப்பிரகாசம் , பா. 84*

*59)* *சிவஞானபோதம், சூ. 9*

*60)* Paramarthasara, V. 60


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமும் அதன் வகைகளும்

### பாசத்தின் இயல்புகள்

சைவமெய்யியல்களில் ஆன்மாவைப் பசுத்துவப்படுத்துவது பாசம்.[1] என எடுத்தாளப்படுகின்றது. அறிவித்தாலும் அறியாத சடப்பொருளான இப்பாசம் அசத்து /அசித்து எனப்படுகின்றது. ஆன்மாவின் இயல்பை மறைத்து அறியாமைக்குட்படுத்திப் பிறவித்துன்பத்துக்குள் உட்படுத்துபவை இவை. இதனை,

"மம்மர் செய்த தணுவி னுண்மை வடிவினை மறைத்து நின்று
பொய்மை செய் போக பந்த போத்திருத் துவங்கள் பண்ணும்"

என அருணந்தி சிவாச்சாரியார் எடுத்துரைகின்றார்.[2] காஷ்மீரசைவமும் ஆன்மாவைக் கட்டுப்படுத்தும் அஞ்ஞானத்தை "மலம்" என்றும்[3] ஆன்மாவின் அஞ்ஞானமானது சடப்பொருட்களைப் போல முழுதாக ஞானமற்றதன்று - அது பூரணமற்ற/ குறைபாடுகளுடைய ஞானம் என்றும் எடுத்தாளுகின்றது. இதனையே,

"அஜ்ஞாநமிதி நஜ்ஞாநாபாவ:....ஸஹி
லோஷ்டாதி கேப்யஸ்தி/"

என்கின்றது தந்திரலோகம்.[4] பிரத்திய பிஞ்ஞானம் அஞ்ஞானத்தை இருவகைப்படுத்துகின்றது. அவையாவன,

1) பௌருஷ அஞ்ஞானம்
2) பௌத்த அஞ்ஞானம்

என்பனவாகும். சீவனோடு அநாதியே தொடர்புள்ளதாகப் பௌருஷ அஞ்ஞானம் எடுத்தாளப்படுகின்றது. இதுவே ஆணவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பர். பரமசைதன்யத்திடமிருந்து தன்னை வேறானதாக சீவன் நினைக்கும் நிலை இது என்பர். பௌத்த அஞ்ஞானம் புத்தியைப் பற்றியது. "மனம், புத்தி, கரணங்கள்" ஆகியவை ஒரு எல்லைக்குட்பட்ட ஆற்றல் உடையவை. அவற்றின் மூலம் பெறப்பட்ட அறிவு சிற்றறிவு என்பர். அந்த வகையில் அஞ்ஞானம் என்பது "பூரணஞானமின்மை" எனக் கருதலாகாது என்பர். பிரமத்திற்கும் ஜீவனிற்கும் எந்த நிலையிலும் பேதமில்லை எனும் அத்வைத கருத்தியல் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஆயினும் "பூரண அகந்தை" மறக்கப்பட்ட காரணத்தால் அவ்வாஞ்ஞானத்தோடு தொடர்பு கொண்ட சீவன் சம்சாரத்தளையுள் அகப்படுகின்றது என்பர். பாசத்தை இரு சாராரும் "மலம், தளை, கட்டு, பந்தம்" எனப் பல பெயர்களாலும் சுட்டுகின்றனர். பந்தம் என்பதை விளக்க முற்பட்ட அபிநவகுப்தர்,

> "தான் பரிபூரணன், பேரறிவு, பேராற்றல் கொண்டவன் என்பவற்றை அறியாது குறுகிய அறிவையும் ஆற்றலையும் கொண்டவனாகக் கருதுவதே பந்தம்"

என்கின்றார்.[5] அணுவாகின்ற சீவனுக்குச் சுகம், துக்கம், மோகம் போன்ற அனுபவங்கள் ஏற்பட, கரண - பொறிகள் தொடர்பு காரணமாகின்றது. பேத உணர்வைத் தரும் இவ்வனுபவ ஞானமே பந்தம் எனப்படுகின்றது.[6]

சைவசித்தாந்தம் பன்மைவாதத்தை முன்வைப்பது; ஆன்மா "பசு" வாகக் காரணம் பந்தமென்றும் பந்தத்திற்குக் காரணம் அறியாமை என்றும் கூறுகின்றது. இதனை, "அஞ்ஞானத்தால் உறுவதுதான் பந்தம்" என்கின்றது சித்தியார்.[7] தளை என்பதை, "ஆன்மா தன்னை மறப்பது அல்லது தன்னுடைய செம்மையை அறியாதிருப்பது" எனக் காஷ்மீரசைவம் எடுத்தாளுகின்றது.[8] இவ்வாறு கட்டுண்ட நிலையில் கூட பசுவாகிய பதி தனக்கே உரிய தூய்மையோடும், செம்மையோடும் இருக்கும். ஆனால் அதை அது அறியாது என்பர். மேலும் திருவிளையாடல் எனும் நோக்கிலும் பரம்பொருள் சுயபிரக்ஞை என்ற நிலையிலும் இக்கட்டுப்பாடுகளைப் பதி ஏற்பதாகக் கூறுவர். இவ்வரையறைகளுக்கு உடன்படுவதால் ஆசைகள் எழுகின்றன. இம்மட்டுப்படுத்தப்பட்ட ஆசைகளால் பல செயல்களில் ஈடுபட்டு அவற்றின் விளைவுகளை அது அனுபவிக்கின்றது. பொருட்களைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதமாக உணர்கின்றது என்பர் காஷ்மீரசைவர். பேதவுணர்வைத் தருவது பந்தம் என்பதைச் சித்தாந்திகளும் ஒத்துக் கொள்வர். அத்துவிதம் அடைந்திருந்த போதும் மீளவும் ஆன்மாவைப் பிறப்பெடுக்கச் செய்து துன்பசாகரத்துள் மூழ்கச் செய்வது பந்தம் என்பர் சிந்தாந்திகள்.

காஷ்மீர சைவம் ஒருமைவாத சைவம்; பரமசிவம் சுவதந்திரிய சக்தியை உடையது. அது "எல்லையற்ற தங்குதடையற்ற ஆற்றல்" எனப்படும். இச்சக்தியே பிரபஞ்ச நாடகத்தை நிகழ்த்துகின்றது. இதனால் பரமசிவம் மகாமாயா சக்தியைத் தொழிற்பட விடுகின்றது. இதன் மூலம் தன்னுடைய சுய இயல்பைத் திரையிட்டு மறைக்கின்றது.

"சுவாதந்தர்ய - சக்தியா பாஷிட - ஸ்வரூப
சோபனா - ரூபாயா, மகாமாயா - சக்தியா"

என்கிறது சிவசூத்திரம்.[9] இவ்வண்ணம் சிவம் தன்னியல்பை மறைத்து விட்டது. மறைத்த பின் தன் எல்லைப்படுத்தப்பட்ட அறிவோடும் வடிவோடும் காட்சி தரும். இதுவே பசு - பந்திக்கப்பட்ட நிலை என்பர். பதி, பசு போல பாசமும் அநாதி என்பதைத் திருமூலர்,

"அறிவறி வென்ற அறிவு மனாதி
அறிவுக் கறிவாம் பதியும் அனாதி
அறிவினைக் கட்டிய பாசம் அனாதி"

என எடுத்துரைத்துள்ளார்.[10] இதனை காஷ்மீர சைவரும் ஏற்றுக் கொள்வர். அத்தோடு ஆன்மாவிற்கு அறியாமையைத் தரும் இம்மலங்களுக்கும் ஆன்மாக்களுக்கும் உள்ள உறவை,

"மும்மல நெல்லினுக்கு முளையொடுத விடுமிப் போல்
மம்மர் செய் தனுவி னுண்மை வடிவினை மறைத்துநின்று
பொய்மை செரல் போக பந்தபோத்திருத்துவங்கள் பண்ணும்
இம்மல மூன்றி னோடு மிருமல மிசைப்ப னின்றும்"

எனச் சித்தியார் எடுத்துரைக்க[11], அதனை

" நெல்லின் முளை தவிடுமிபோ லநாதி யாக
நிறுத்திடுவ ரிதுசை நிகழ்த்துமாறே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சிவப்பிரகாசம் வழிமொழிகிறது.[12] நெல்லின் முளையாக மாயையும் தவிடாக கன்மமும் உமியாக ஆணவமும் எடுத்தாளப் படுகின்றன. இவ்வாறான உவமிப்பு காஷ்மீரசைவத்தில் இல்லை யென்றே கூறலாம். பூரணப் பொருளின் இயல்புக்கு-செயலுக்கு உள்ள வரையறையாகவும், தெய்வீகத்தின் சுயாதீன வெளிப்பாடாகவும் எடுத்தாளப்படுகின்றது.[13]

இந்த வகையில் பாசப்பிணியாக இருசாராரும் ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்றையும் எடுத்தாள்வர். இவை மூன்றாக உள்ளமையால் மும்மலங்கள், மூவகை அழுக்குகள் எனப் பலவாறு சுட்டப்படுகின்றன. அறியாமையை[14] தரும் ஆணவ மலத்தை நீக்க உதவுவதனாலேயே "கர்ம / கார்மீக, மாயா / மாயீய மலங்கள் காணப்படுகின்றன. இது காலில் குத்திய முள்ளைப் பிறிதொரு முள்ளால் எடுப்பதை ஒத்தது எனலாம்.

**ஆணவ மலம்**

அறிவுள்ள ஆன்மாவை அறியாமைக்கு உட்படுத்தித் தன்னை உணரவிடாது தடுக்கும் மலம் ஆணவமலம் என எடுத்தாள்வர். ஆணவம் பற்றி,

"ஒன்றதா யனேக சக்தி யுடையதாய் உடனாய் ஆதி
அன்றதா யான்மா வின்ற அறிவோடு தொழிலை யார்த்து
நின்று போத் திருத்துவத்தை நிகழ்த்திச் செம்பினிற் களிம் பேய்ந்து
என்றுமஞ் ஞானம் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே"

என அருணந்தி சிவாச்சாரியார் சுட்டி நிற்பது குறிப்பிடத்தக்கது.[15] அநாதியான ஆணவம் அறிவைக் குணமாகக் கொண்டிருப்பினும் அறியாமைக்கு உட்படக் காரணமாக அமைவது என்பர் சித்தாந்திகள். ஆதலால் அது பிரதி பந்தம் எனப்படும்.[16]

"நெல்லிற்குமியும் நிறை செம்பி னிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே"

எனச் சிவஞானபோதம் எடுத்துரைக்கின்றது.[17] செம்பில் களிம்பு குணமல்ல குற்றமே. செம்பு உண்டெனில் அதில் களிம்பும் உண்டு. புளியிடக் களிம்பு குறைந்து பின் மீளத் தோன்றும். புடமிட்டுப் பதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து இரசகுளிகையைச் சேர்க்கும் போது களிம்பு முற்றாக நீங்கும். ஆக, செம்பிற்குக் களிம்பாகிய குற்றம் செயற்கையே என்பர் சித்தாந்திகள்.[18] இருண்மலமான ஆணவமே ஆன்மாவிற்கு அறியாமையைத் தருவது: ஆணவத்தின் இயல்பு - குணம் அறியாமை ஆகும். இதனை சிவாக்கிர யோகிகள்,

"அறியாமை யான்மாக்கள் குணமே யெண்ணி
அறிவு தொழி லாற்போக மருந்து மாற்றால்
செறியாது தீசொன்ன குணமென்கையுயிர் பாற்
சித்தினுக்குக் குணமென்றுந் சித்தே யாகும்.
குறியாக்கொள் ஆன்மாவைச் சடம தாகக்
கூறிய வாணவத்தின் குணமறியாமையதாம்
நெறியாலே யாணவந்தா னான்மாக் களறிவை
நிகழாத வகைதடுக்கு மென்று நீ தெளியே"

என்கிறார்.[19] காஷ்மீர சைவர்கள் உயிர்கள் தளைக்கப்பட்டு இருப்பது "உள்ளார்ந்த அறியாமையால்" அதுவே ஆணவமலம் என்பர்.[20] இது முழுமையான பிரக்ஞையை அணுத்தன்மைப்படுத்துகின்றது. இதனாலேயே ஜீவன் "அணு"எனப்படுகின்றது.[21] பரம்பொருளின் இச்சாசக்தியினால் இது எல்லைப்படுத்தப்படுகின்றது. இதனால் ஜீவன் "தான் தனி" என எண்ணும். பூரண பிரக்ஞையில் இருந்து தான் தனித்த ஒன்று எனச் சிந்திக்கும். அசுத்த அத்துவாவுடன் தொடர்பு பட்ட சீவன் பிறப்பிறப்பிற்கும் செயலிற்கும் உரியதாய் மாறக் காரணமாக ஆணவம் திகழ்கின்றது. இதனைச் சித்தாந்திகளும் ஏற்று நிற்பர். அதாவது கார்மீக, மாயீய மலங்களிற்கு நிமித்த காரணமாக இதனைத் தகாரே சுட்டுகின்றார்.[22] இது சித்தாந்திகளுக்கும் பொருந்தும் அதனாலேயே இது "மூலமலம்" எனப்படுகின்றது.

அதேவேளை காஷ்மீர சைவர்கள், உள்ளார்ந்த அறியாமை ஆகிய ஆணவமலத்தால் சீவனாகிய சிவன் தன்னை செம்மையற்றவராகக் கற்பனை செய்துகொள்வார். பிரபஞ்ச பிரக்ஞையை இது ஒரு எல்லைக்குள் கொண்டு விடுகிறது. சைதன்யம் தன் அடிப்படை நிலைப்பாட்டையிழந்து இருவழிகளில் துன்புறுகிறது. சுதந்திர இழப்பு, ஞான இழப்பு என்பனவே அவையாகும். இந்நிலையில், "சுதந்திரமும் ஞானமும் முற்றுமுழுதாக இழக்கப்படுவதாகக் கொள்ளக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைதன்யம் இவ்வாற்றல்களைப் பொறுத்தவரை எல்லைப்படுத்தப் படுகின்றது" என்பதே இதன் அர்த்தமாகும்.[23] இச்செம்மையற்ற தன்மையினால் ஜீவன் பிரபஞ்ச பிரக்ஞை எனும் நீரோட்டத்திலிருந்து துண்டிக்கப்பட்ட தனியான ஒன்றாகத் தன்னைக் கருதுகின்றது. இதனைச் சுய எல்லைப்பாடு பற்றிய பிரக்ஞை எனச் சுட்டுவர். இம்மலத்தால் "சித்" உடைய பிரக்ஞை இழப்பால் (எல்லாம் அறியும் சுஜ ரூப ஹாணி) சித்தத்தினுடைய இயல்பை இழக்கின்றது. மேலும் சுவதந்திரியத்தையும் இழக்கச் செய்கின்றது.[24] இதனால் பரமசிவம் அதன் இயல்பாகிய இரண்டற்ற நிலையை மறைத்து எங்கும் இருமை போன்று காட்சி தருகின்றது.

ஆணவ மலம் ஒன்று என்பதில் இரு சாராருக்கும் வேறுபட்ட கருத்தில்லை. அதேவேளை அது எண்ணற்ற சக்திகளை உடையது என்பதையும் ஏற்பர். இதனைச் சிவப்பிரகாசம்,

"ஏகமாய்த் தம் கால எல்லைகளின்
மீளும் எண்ணரிய சக்தியாய்"

என எடுத்தாளும்.[25] சூரியன் ஒருவனே ஆயினும் எண்ணற்ற கதிர்களால் எண்ணற்ற பொருட்களை விளக்குவது போல ஆணவமும் திகழ்கிறது. அதே போல அருள் ஒன்றாய் இருந்து எண்ணிலாத சக்திகளை எண்ணிலாத கண்களை மறைத்தல் போல ஆணவமும் எண்ணிறைந்த மறைக்கும் சக்திகளைக் கொண்டதாய்த் திகழ்கின்றது என்பர்.[26] இதன் மூலம் எண்ணற்ற ஆன்மாக்களின் அறிவை மறைக்கின்றது என்பது தெளிவாகின்றது.

அதே போல காஷ்மீர சைவரும் ஒன்றான பரமசிவம் தன்னியல்பாகிய இரண்டற்ற நிலையையடுத்து பன்மையாய்க் காட்சிதர "ஒன்றான ஆணவமே காரணம் என்கிறது.[27] பரமசிவ நிலையிலுள்ள பூரணத்துவம் இல்லாமையால் அல்லது அளவுற்றிருப்பதனால் காஷ்மீர சைவர் ஜீவனை அணு என்கின்றனர்.[28] ஆயினும் அணு என்னும் சொல்லால் வல்லபர் முதலானோர் போல இடப்பரப்பு அளவு கூறப்படுவதில்லை. அதேவேளை சாங்கியரின் ராகம் - பற்று என்ற கொள்கையும் போன்றதன்று [29] ஏனெனில் ராகம் - புத்தியின் குணம் ஆணவம் அநாதியாயினும் உயிரின் நின்றும் வேறொன்று ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்திகளும் காஷ்மீரசைவர்களும் ஒன்றாய், சடமாய், அளவற்ற சக்திகளையுடையதான ஆணவமலம், "கேவலம், சகலம், சுத்தம்" எனும் மூன்று நிலைகளிலும் செயற்படுவதாக உரைப்பர். கேவல நிலையில் ஆன்மாவைத் தனித்துத் தளைப்படுத்தியிருக்கும் ஆணவம் தன் "மறைத்தல் "ஆகிய செயலைத் தடையின்றிச் செய்யும் ஆன்மாவும் செயலின்றிச் சடமாய் ஆணவத்துள் அமிழ்ந்திருக்கும். சித்தாந்திகள் அறியாமையைத் தரும் ஆணவத்தின் சக்தியை "ஆவாரக சக்தி" (மறைத்தல்) எனும் சொல்லால் சுட்டுகின்றனர். இதுவே ஆணவத்தின் சொரூப நிலையிலும் அவர்களால் எடுத்தாளப்படுகின்றது. சகலநிலையில் ஆணவம், மாயா, கன்மங்களுடன் இணைந்திருக்கும் ஆதலால் அதன் சக்தி சிறிது குறைந்திருக்கும் இந்நிலையில் நுண்பொருளைக் காணாத ஆன்மா பருப்பொருளின் தன்மையையும் மாறுபட்டே காணும். இவ்வாறான விபரீத ஞானத்தை மயக்கவுணர்வை சித்தாந்திகள் "அதே நியாமிகா சக்தி" (கீழ் நோக்கிச் செலுத்துவது) என்னும் சொல்லால் சுட்டுகின்றனர்.[30] இந்நிலையிலேயே ஆன்மா அணுத்தன்மைப்படுதலால் இது ஆணவத்தின் தடத்த நிலையாக எடுத்தாளப்படுகின்றது. சுத்த நிலையில் இறையருளை நேரே பெறுகிறது ஆன்மா. இப்பேரொளியின் முன் மலங்களின் சக்தி அடங்கியே கிடக்கும் இதனைச் சிந்தாந்திகள் "அந்தர்ப்பா வித சக்தி" (அடங்கிக் கிடக்கும் சக்தி) என்கின்றனர்.

இவ்வாணவ மலம் ஆன்மாவை அநாதியே பீடித்திருப்பதாலும் ஏனைய மலங்களுக்குக் காரணமாயும் அமைதலால் "மூல மலம்" என்றும் உயிரோடு உடன் பிறப்பதால் "சகசமலம்" என்றும் இருண்மை யாகிய அவித்தையை அளித்தால் "இருண்மலம்" எனவும் எடுத்தாளப்படுகின்றது.

"ஒரு பொருளும் காட்டாது இருள் உருவங்காட்டும்
இரு பொருளும் காட்டாது இது"

என்கிறார் உமாபதி சிவாச்சாரியார்[31] மேலும் ஆணவமே மூவகை ஆன்மாக்களையும் பற்றி நிற்கும் ஒரே மலம் என்பதை இரு சாராரும் எடுத்துரைப்பர்.

இவ்வாணவ மலம் ஏழ் குணங்கள் கொண்டது எனச் சித்தாந்திகள் எடுத்தாளுகின்றனர். "மோகமுத வேழ் குணங்களுடைய தாதி" என்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறிப்பிரகாசம்.[32] அவையாவன மோகம், மதம், அராகம், கவலை, தபம், வாட்டம், விசித்திரம் என்பனவாகும்.

மோகமானது உன்மத்தம், மயக்கம் போன்ற உணர்வுகளைத் தந்து நல்லறிவைக் கெடுக்கும். மீதி அறுவகைக் குணங்களும் ஏதுவாயமையும் மதமானது அது உலக இன்ப நாட்டமும் தான் பெற்ற இன்பமே மேன்மையானது என எண்ண வைப்பதும் ஆகும். அராகமானது உலக இன்பங்களில் அழுத்தமான அவாவை ஏற்படுத்துவது என்பதாகின்றது. கவலையானது அது தாமனுபவித்த இன்பம் எட்டாதபோது ஏற்படும் பெருந்துயர் எனப்படும். தாபம் உள் வெதும்பித் தவிப்பதற்கு ஏதுவானதாகும். வாட்டம் தாபத்தால் உடலும் உள்ளமும் வருந்துதல். விசித்திரம் அகமுனைப்பால் தன் குற்றங்களுக்கு இறைவனை ஏதுவாக்கலும் தான் பெற்ற உலக வாழ்வை தானே வியத்தலுமாகும்.

அவை தவிர, "அகங்காரம் மமதை" போன்றனவும் பிடிவாதம் கோபம், அறியாமை, கொடுந்தொழில், வருத்தம், செருக்கு, பொறாமை, போன்றனவும் ஆணவத்தின் குணங்களாகக் கூறப்படுகின்றன. இக்கருத்துக்களைக் காஷ்மீர சைவத்தில் காண முடியாது. ஆயினும் உள்ளார்ந்த அறியாமையான ஆணவ மலத்தால் கட்டுண்ட நிலையில் பதி, பசுவாகிய தன்னைச் செம்மையற்றவராக கற்பனை செய்து கொள்வார் எனவும் இது பிரபஞ்ச பிரக்ஞையை ஒரு எல்லைக்குள் கொண்டு வருமென்றும் அப்பிரக்ஞை தன்னுடைய அத்தியாவசிய நிலையை, அடித்தளத்தை இழந்து இரு நிலைகளில் வெளிப்படுத்தும் என்பதும் காஷ்மீர சைவர்களின் கருத்து என்கிறார் சுவாமி முத்தியானந்தர்.[33] அவை

1) சுதந்திர இழப்பு

2) ஞானத்தை இழத்தல்

என்பனவாகும். இந்நிலையில் ஞானமும் சுதந்திரமும் முற்றாக இழக்கப்படுகின்றது என்பது பொருளல்ல. இவ்வாற்றல்களைப் பொறுத்த வரை "அஹம்" ஒரு வரையறைக்கு உட்படுகின்றது என்பதே பொருளாகும். தன்னுடைய செம்மையின்மை பற்றிய பிரக்ஞை அஹத்திற்கு ஏற்படுவதனாலேயே தனித்துவம் உண்டாகின்றது. இதனால் ஜீவன் பிரபஞ்சப் பிரக்ஞை எனும் நீரோட்டத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டிக்கப்பட்ட தனியான ஒன்று எனத் தன்னைக் கருதுகின்றது. இதனூடாக மாயீய, கார்மீக மலங்களால் பீடிக்கப்பட ஆணவமே ஏதுவாகிறது என்பர் காஷ்மீர சைவர்.

ஆயினும் சைவசித்தாந்தத்தில் ஆணவம் பெறும் வலிதான இடத்தினை காஷ்மீரசைவத்தில் பெறவில்லை என்றே கூறவேண்டும். உமாபதிசிவாச்சாரியார்,

"பன்மொழிக ளென்னுணரும் பான்மைதெரியாத
தன்மையிரு ளார்தந்தது"

என்கிறார்.[34] ஆன்மாவை பெத்த நிலையிலும் முத்தி நிலையிலும் விடாது பற்றியிருப்பது இது. ஆன்மாவை மறைந்து நிற்கும் தன்மையில் விஞ்ஞானகலரை சூக்கும நிலையிலும் பிரளயாகலரை ஸ்தூல நிலையிலும் சகலரை ஸ்தூலதர நிலையிலும் வெவ்வேறு விதமாய் மறைத்து நின்றிருக்கின்றது என்பர். இவ்வாணவத்தின் வலி மாயாகாரியமான உடலினூடாகப் பெறும் அறிவினூடாகவே கெடும். அவ்வறிவு வரும்வரை பிறவிப்பிணி தொடர்வதோடு ஆணவம் வலி கெடாது. முக்தியும் சித்தியாது. இதனை,

"ஒன்று மிகினும் ஒளிகவரா தேலுள்ளம்
என்று மகலா திருள்"

என உமாபதி சிவாச்சாரியார் எடுத்துரைக்கின்றார்.[35] காஷ்மீரசைவம் இவ்வாறான வலிதான இடத்தை ஆணவத்துக்கு வழங்கவில்லை. ஒருமைவாதிகளான அவர்களைப் பொறுத்தவரை பதி மட்டுமே வலிதானது. அதன் வெளிப்பாடே யாவும் என்றவகையில் ஆணவத்திற்கு முதன்மையளிக்கவில்லை போலும்.

ஆயினும் ஆதியிலே உள்ள ஆன்மாவின் உள்ளார்த்த அறியாமையாகிய ஆணவமலம் நீக்கமுற, ஆன்மாவின் முக்திக்கான முதலும் முடிவுமான வழி ஏற்படும் என்பதில் இருமெய்யியல்களும் ஒன்றுபடுகின்றன.

**கன்ம மலம் - கார்மீக மலம்**

ஆன்மாவை அநாதியே பற்றி நிற்கும் மலங்களுள் சகச மலமாகவும் மூலமலமாகவும் இருக்கும் ஆணவமலத்தை நீக்கும் முகமாக உயிர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவாகிய ஆகந்துகமலங்களாகக் கன்மமும் மாயையும் சைவசித்தாந்திகளால் எடுத்தாளப்படுகின்றன. ஆகந்துகம் - பின்பு வருவது. ஆணவப் பீடிப்புக்குப் பின் வந்து ஆன்மாவைப் பந்திப்பவை இவை என விளக்கப்படுகின்றது.

கன்மம் என்னும் சொல் "செயல், வினை" என எடுத்தாளப் படுகின்றது. இவ்வுலகில் பிறப்பெடுத்த அனைத்து உயிர்களும் வினையின்றி இருக்கமுடியாது. இவ்வினைகள் மனம், வாக்கு, காயம் எனும் திரிகரணங்களாலும் நிகழ்த்தப்படுகின்றன. கன்மம் என்பது கர்மம், செயல், வினை எனப் பலவாறு எடுத்தாளப்படுகின்றது.

காஷ்மீர சைவர்களும் கர்மமலத்தை ஏற்றுக் கொள்கின்றனர்; "கார்மீக மலம்" என எடுத்தாளுகின்றனர். செயலாற்றல் வரையறைக்கு உட்படும் போது இக்கட்டுப்பாடு கர்மமலம் எனப்படுகின்றது. செயலாற்றல் சர்வமும் கர்மமலத்தினால் ஒரு முடிவுக்கு உட்பட்ட ஆற்றலாக மறைக்கப்படுகின்றது. இம்மல வாசனைகளினால் (ஆசையால் செய்யும் செயல்களின் மிகுதி) ஏற்படும் எல்லைப்பாட்டில் உருவாகும் என மேலும் விளக்குவர். பிரபஞ்ச உற்பத்திக்கு முன் விடய சூனியமாக இருந்தாலும் ஜீவர்களிடம் கிரியா சக்தியைப் பயன்படுத்த வேண்டும் என்ற ஊக்கம் உண்டாகும். ஆதலால் உற்பத்தியின் பின் ஜீவர்களுக்கு உடல் கிடைக்கின்றது. இதுவே கன்மத்தின் மூலவேர் / மூலகன்மம் எனலாம். செயலாற்றும் இவ்விச்சையை - கட்டுப்பட்டுள்ள இவ்விச்சையே கார்மீகமலம், என்பர்.[36] இதே கருத்தை,

பலவாகி யணுக்கடொறும் படர்வதாகி
    எண்ணிவரு மனவாச கன்மத்தா லியற்று
மியல்பின தாய் மதிகதமா யிருபயனாம் பாவ
    புண்ணியமாய்ப் புலர்காலை மாயைமேவிப்
பொருந்துமிது கன்மமலம், புகலுமாறே"
    நண்ணியிடு முருவதனுக் கேதுவாகி
நானாபோ கங்களாய் நாசோற்பத்தி
    பண்ணிவரு மாதலால் அநாதியாகிப்

என உமாபதிசிவாச்சாரியார் எடுத்தாண்டுள்ளார்.[37]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லிலுள்ள முளைக்கும் ஆற்றல் முளையைத் தோற்றுவித்தல் போல கன்மமலம் உயிர்களிடம் சுகதுக்கங்களை, முதற்காரணமாக நின்று தோற்றிவிக்கும்.[38] ஆணவ பந்தத்திற்கு ஏற்பவே மூலகன்மமும் மாயாமலமும் உயிர்களுக்கு உள்ளன என்பதில் இரு சாராருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. அதே போல மூல கன்மம் "நன்மை, தீமை" என்று பாகுபாடு அடையாமல் பொதுவாய் நிற்கும். பின்னர் அது இயங்கத் தொடங்கும் காலத்தில் அதன் தன்மைக்கு ஏற்ப நல்வினை, தீவினை எனப் பாகுபடும் என்பர்.

ஆணவ பந்தத்திற்கேற்ப மாயையிலிருந்து சூக்கும உடம்பு இறையருளால் ஆன்மாவிற்குக் கிடைக்கின்றது. ஆன்மா இவ்வுடல் பெற்ற காலத்தில் சிறிதளவு ஆணவ நீக்கம் பெற்று மூலகன்மத்திற்கேற்ப "இச்சை, கிரியை, ஞானசக்திகளைப் பெறும். இதன்வழியே நல்வினை, தீவினைகளை ஆற்ற முற்படும், இன்பதுன்பங்களை நுகரும். இதனை மணிவாசகர், "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என்கிறார்.[39] சேக்கிழார்,

"இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில் வீழ் மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ"

எனப் பாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.[40] மலமாகிய கல்லோடு நல்வினை, தீவினை எனப்படும் கயிற்றால் கட்டி ஆன்மாக்கள் பிறவிப் பெருங்கடலுள் தள்ளப்படுகின்றன என்கிறார் சேக்கிழார். இவ்விருவினைகளும் "காரியகன்மங்கள்" எனப்படுகின்றன.

சைவசித்தாந்திகள் கன்ம மலம் "மடிவந்திருத்தல், பொசிப்பற்றுக் கிடத்தல், புண்ணியம் செய்தல் , பாவம் செய்தல், தொழிலைச் செய்யாது விடுதல், பரநிந்தை செய்தல்" என ஆறுகுணங்களைக் கொண்டதாக எடுத்துரைப்பர். இதற்கு,

"இருத்தலும் கிடத்தலும் இருவினை இயற்றலும்
விடுதலும் பரநிந்தை மேவலென்று அடுத்த
அறுவகைக் குணனும் கருமத்து அருளினை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் இருபா இருப஼துப் பாடலை உதாரணமாகக் குறிப்பிடலாம்.[41] இக்குணங்கள்,

1) இருத்தல் - இந்திரிய வழி செய்தல்

2) கிடத்தல் - அவ்வழியில் ஓங்கி நிற்றல்

3) விடுதல் - முயற்சி செய்தல்

4) இயற்றல் - இதவகிதஞ் செய்தல்

5) பரநிந்தை - பிறர் பழி கூறல்

6) மேவல் - பல பிறப்புக்களில் மேவல்

என விரித்து விளக்கப்படுகின்றன. இவ்வாறான எடுத்துரைப்புக்கள் காஷ்மீர சைவசிந்தனை மரபில் கையாளப்படவில்லை.

ஆன்மா, ஆணவ முனைப்பால் பிறவி எடுக்கின்றது, வினை புரிகின்றது. அவ்வினைகளின் தன்மைகளுக்கு , விளைவுகளுக்கு ஏற்ப அவை நல்வினை, தீவினை என எடுத்தாளப்படுகின்றது.[42] ஆணவத்தை அடக்கி ஆன்மாவை ஈடேற்றும் செயல்கள் நல்வினைகள் என்றும் ஆணவத்துக்கு அடங்கி ஆன்மாவிற்குக் கேடு விளைவுக்கும் செயல்கள் தீவினைகள் என்றும் கூறப்படுகின்றன. இக்கருத்துக்களில் காஷ்மீர சைவர்களும் வேறுபடுவதில்லை. ஆயினும் சைவசித்தாந்திகள் நல்வினையை சிவநல்வினை, பசுநல்வினை என்றும் தீவினையை சிவத்தீவினை, பசுத்தீவினை என்றும் எடுத்தாள்வர். நல்வினை பொன்விலக்கு என்றும் தீவினை இரும்பு விலங்கு என்றும் இவ்விருவினைகளும் முத்தி சித்திக்க உதவா என்றும் கூறுவர். மேலும் உணவு சமைத்தல், ஓவியம் வரைதல் உள்ளிட்ட கலைச் செயற்பாடுகள் போன்றவற்றை வெறுவினைகள் என்றும் அவை பயனற்றவை எனவும் எடுத்துரைப்பர். இக்கருத்தியல்கள் காஷ்மீர சைவத்தில் இடம் பெறவில்லை என்றே கூற வேண்டும்.

சித்தாந்திகளால் கன்மங்கள் மூன்று வகையினதாக எடுத்தாளப் படுகின்றன. அவை, சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என்பனவே அவையாகும். ஒருவன் முற்பிறப்பில் செய்த வினை பிராரத்துவம் எனப்படுகின்றது. இதனை விதி, நியதி, ஊழ் எனும் சொற்களாலும் எடுத்தாள்வர். "ஊழிற் பெருவலியாவுள" என்கிறார் வள்ளுவர்.[43]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊழ்வினை வந்துறுத் தூட்டும் என்பதுவும்" என ஊழ் வினை பற்றி சிலப்பதிகாரமும் எடுத்துரைக்கின்றது. இப்பிராரத்துவ வினையை அனுபவிக்கும் போது செய்யும் புதிய வினைகள் "ஆகாமியம்" எனப்படுகின்றது. இது உடனுக்குடன் அனுபவிப்பதாயும் பிராரத்துவமாயும் மாறும். முற்பிறப்பில் செய்த வினைகளிலும் இப்பிறவியில் செய்த வினைகளிலும் அனுபவிப்புக்கு வராமல் எஞ்சிநிற்கும் வினை - ஏனைய பிறவிகட்குக் காரணமாக அமையும் வினை "சஞ்சிதம்" எனப்படுகின்றது.

மேலும் ஆகாமியம் - மேல்வினை, வருவினை எனவும் சஞ்சிதம் - அபூர்வம், பழவினை, தொல்வினை எனவும் பிரார்த்துவம் - ஊழ்வினை, நுகர்வினை எனவும் எடுத்தாளப்படுகின்றன. இப்பிறப்பில் ஆற்றப்படும் ஆகாமியம் "திரிகரணங்களாலும் ஆற்றப்படும் வினைகளும் மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புலமை, கலை ஆகிய அத்துவாக்களுக்கு உட்பட்டுச் செய்யும் வினைகளும் உள்ளடங்கலாக எடுத்துரைக்கப் படுகின்றன. இவையே நல்வினை, தீவினைகளால் இன்பதுன்ப நுகர்வைத் தருவன. உமாபதிசிவாச்சாரியார்,

"கன்ம நெறி திரிவிதநற் சாதியாயு போகக்
கடனதென வருமூன்று உயிரொன்றிற் கலத்தல்
தொன்மையதூ ழல்லதுண வாகா தானுந்
தொடங்கடைவி னடையாதே தோன்று மாறிந்
தன்மைதரு தெய்விகமுற் பௌதிகமான் மிகமாந்
தகையிலுறு மசேதன சே தனத்தாலுஞ் சாரு
நன்மையொடு தீமைதரு சேதனனுக் கிவணூ
ணாடிலத னூழ் வினையா நணுகுந் தானே"

என சஞ்சித, பிராரத்துவ கன்மங்கள் பற்றி எடுத்துரைத்துள்ளார்.[44] ஆன்மாவுக்கு அனுபவமாய் வரும் பிராரத்துவமாய் பக்குவமடையும் வரை ஆகாமிய கன்மம் சஞ்சித கன்மமாய் இருக்கும். இவற்றுள் பக்குவப்பட்டவை பிராரத்துவமாய் வரும். அது, சாதி, ஆயுள், போகம் எனும் மூன்றையும் தரும்.

பழவினையாகிய சஞ்சிதம் இன்பதுன்பங்களை இப்பிறப்பில் தருவதற்கு மூல காரணமாகத் திகழ்கின்றது. ஆன்மா ஸ்தூலசரீரத்தைப் பெற்றுப் புசிக்கவும் காரணம் சஞ்சிதமே. அனுபவிக்க முடியாத அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவித்து எஞ்சிய வினையாகச் சஞ்சிதம் எடுத்தாளப்படுகின்றது. பயன் தரும் வரை சூக்குமமாக புத்திதத்துவத்துள் மறைந்திருந்து பின்னர் வெளிப்படும் ஆகாமிய, சஞ்சித வினைகள் இறைவனை அணமித்த ஆன்மாக்கள் நீக்க வல்ல வினைகளாக எடுத்தாளப்படுகின்றன. ஆகாமியம் தன்னிலும் சஞ்சிதம் ஞானாக்கினியாலும் நீங்கப் பெறுவதாகக் கூறப்படுகிறது. எடுத்த பிறப்பிலேயே அனுபவிக்க வல்ல வினையாகப் பிராரத்துவம் விளங்குகின்றது. இது, இச்சை, பரேச்சை, அநிச்சை என்னும் மூவகையால் பயன்தரவல்லது. இன்பத்தை நாடி அனுபவித்தல் இச்சை என்றும் இன்ப துன்பங்களைப் பிறருக்கு ஊட்டுதல் பரேச்சை என்றும் தற்செயலாக வருவது அநிச்சை என்றும் கூறப்படுகின்றது. பிராரத்துவம், "ஆதிதைவிக மாதி பௌதகமாதி யாத்தி யான்மீகமென" என்று ஞானாமிர்தத்தில் வாசீகமுனிவரால் எடுத்தாளப்படுகின்றது.[45] அதாவது பிராரத்துவம் ஆன்ம அனுபவத்திற்கு வரும்போது செய்த முறையில் அன்றி மாறியும் வரும். இதனை, ஆதி தெய்வீகம், ஆதி பௌதிகம், ஆதி ஆத்மீகம் எனப்பகுப்பர்.[46] தெய்வம் காரணமாக வரும் கன்மத்தை ஆதி தெய்வீகம் என்றும் பஞ்சபூதங்களான நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ என்பவற்றால் வருவன ஆதி பௌதிகம் என்றும் உயிர்களால் வருவது ஆதி ஆத்மீகம் என்றும் விளக்கப்படுகின்றது. பிராரத்துவம் உடலில் பொசித்தே தீர்க்கப்பட முடியும். ஜீவன் முக்தர் இறையையுணர்ந்தும் பிராரத்துவம் முடியும் வரை உடலுடன் கூடியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான கன்ம வகையீடுகளைக் கையாளாது விட்டாலும் காஷ்மீரசைவம் பிறவிக்குக் காரணம் கன்மம் என்பதையும் அதன் இயல்புகளையும் கூறிநிற்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை.

பதி, உயிருடன் ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்கும்; அது கன்மத்தினூடு மாயா காரியங்களை வழங்கி ஆன்மாக்கள் உய்வடைய வழிசெய்கின்றது.

"உலகெலாமாகி வேறா யுடனுமா யொளியா யோங்கி
அலகிலா வுயிர்கள் கன்மத் தாணையினமர்ந்து செல்லத்
தலைவனாய்...."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சித்தியார் எடுத்துரைக்கின்றது.[47] இறைவனே, கன்மத்தைச் செய்தவனிடம் சேர்ப்பிக்கின்றான். இதனை,

"அவையே தானே ஆய்இருவினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கமின்றி நிற்கும் அன்றே"

எனும் சிவஞானபோத வரிகளால் அறியலாம்.[48] கன்மத்தால் மாயா காரியங்களுக்குட்பட்டுப் பிறவி எடுக்கும் ஆன்மா வினை போகங்களைப் புசித்து நிற்பதால் மீளமீளப் பிறவிக்குட்படுகின்றது. இதனை,

"இருவினை இன்பதுன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து
வருவது போவதாகும்...."

என்கின்றது சித்தியார்.[49] இக்கட்டத்தில் இக்கன்மம் பிறவிக்குக் காரணமா? பிறவி கன்மத்திற்குக் காரணமா எனும் வினா எழும். அதற்குச் சித்தியார்,

"ஒன்றுக்கொன்று தொன்றுதொட்ட நாதி வித்தின்
இடத்தினின் மரமரத்தின் வித்தும்வந்தியைய மாபோல்"

என்கிறது.[50] அதாவது உடலும் கன்மமும் மரமும் வித்துப் போல தம்முட் காரணகாரியமாய்த் தொன்று தொட்டு பிரவாகா நாதியாய் வருதலால் முன் பின் எனும் பேதம் அவற்றுக்கு இல்லை என்கிறது.

இவ்வினைகள் உயிர்த்துவம் உடையனவா என வினவின் "சடம்" என்பர் சித்தாந்திகள். வினை தானாகவே வரும், முதல்வன் - தருவன் என்பது எதற்காக? என மீமாஞ்சகர், சார்வாகர் போன்றோர் வினவுவர். வினை அறிவற்றது. அது தானே பயன்தராது. உழவுத் தொழிலைச் செய்பவன் உழுது எருவிட்டு நீர்பாய்ச்சி விதைவிதைத்து உரிய காலத்தில் களை களைந்து பயிர் வளர்க்கின்றான். இச்செயலுக்கு ஆதாரம் "நிலம்" அது போல யாவற்றிற்கும் பரம ஆதாரம் பதியாவார்.[51] அவர் உயிர்களின் செயலுக்கேற்ற பலனை மாயா காரியங்களினூடாகக் கொடுப்பார். இதனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"......வள்ளலவன்

செய்பவர் செய்திப் பயன் விளைக்கும் செயயே போல்

செய்பவன் செயல் அணையா சென்று"

என்கிறார் மெய்கண்டார்.[52] ஆகவே வினையின் பயன், உயிர்களுக்குப் பரமசிவனால் சேர்ப்பிக்கப்படுகின்றது.

ஆன்மாக்களைப் பந்திக்கும் வினைகள் அவற்றின் உய்யும் வழிக்கும் உதவுகின்றன. வினைவழி மாயா காரியங்களூடாகப் பாசஞானம் கிடைக்கின்றது. இவ்வறிவின் ஒளியில் பயணம் செய்து ஆன்மா பசுத்துவம் நீங்கி இறைகதிக்கான பாதையைக் கண்டடைகின்றது. அந்நிலையில் நல்வினைகள் தீவினைகளை ஒன்றாக நோக்கும் இருவினையொப்பு நிலையை ஆன்மாக்கள் பெறுகின்றன. இதனை,

"கேடும் ஆக்கமும் கெட்டதிருவினார்

ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவர்"

எனச் சேக்கிழார் கூறுகிறார்.[53] இதனூடு மலபரிபாகம் நிகழ்ந்து ஆன்மாக்கள் இறையருளைப் பெற்று முத்தி பெற வழி ஏற்படும் என்பர் சித்தாந்திகள்.

காஷ்மீரசைவர் இவ்வாறான விரிவான விளக்கங்களைத் தராதபோதும் பிறவித் தளைக்குக் காரணமாகவும்[54] மனம், வாக்கு காயங்களால் செய்த செயல்களால் உருவாவதாகவும் கன்மமாகிய கார்மீகமலத்தை எடுத்துரைப்பர். சகல, பிரளயாகலர் நிலையிலுள்ள ஆன்மாக்களைப் பீடித்திருக்கும் இக்கன்மம் ஆணவமலத்தின் ஆற்றலை பொறுத்தே நீடிக்கும் எனப்படுகின்றது.[55] எது எவ்வாறு இருந்த போதிலும் இருசாராரும் கன்மம் தளையாய் அமையினும் ஒருகட்டத்தில் பாச, பசு ஞானங்களினூடாக ஆன்மாக்களை அவற்றின் இலட்சியமாகிய முத்தியைப் பெற உதவுகின்றன என்பதை மறுக்கவில்லை.

**மாயை - மாயீயமலம்**

இந்து மெய்யியலில் முதன்மை பெறும் பௌதிகத்தத்துவமாக மாயையைக் குறிப்பிடலாம்.[56] "மாயை" என்னும் சொல்லை மா + யா எனப் பிரித்து வடமொழியாளர் மா - தோன்றல் யா - ஒடுங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பொருள் கொள்வர். பிரபஞ்சம் எல்லாம் தோன்றி மீள ஒடுங்குவதற்கு இடமாக உள்ளது. தமிழ் மொழியில் மா + ஆ எனப் பகுத்து, மாய்த்து ஒடுங்குவதற்கும் ஆகித் தோன்றுவதற்கும் இடனாய் உள்ளது என்பர். ஆக, இந்து மெய்யியலில் பெரும்பாலானோர் பௌதிகப் பொருட்களின் உற்பத்திக்கும் ஒடுக்கத்திற்கும் தளமாக மாயை எடுத்தாள்வது கண்டு அந்த வகையில் மாயை ஒரு பொருள் என மு. கந்தையா துணிந்துரைக்கின்றார்.[57]

**மாயையின் இருப்பும் இயல்பும்**

மாயையின் இருப்புப் பற்றி பல்வேறு கருத்தாடல்கள் உள்ளன. மாயை உட்பொருள் என்றும் இல்பொருள் என்றும் தோற்றப் பொருள் என்றும் பிரபஞ்சத்திற்கு உபாதன காரணம் என்றும் கருத்துரைப்பர். சைவசித்தாந்திகளும் காஷ்மீரசைவர்களும் சாங்கியரும் (பிரகிருதி) மாயை உள் பொருள் எனக் கூற, வேதாந்தியான சங்கரர் தோற்றப் பொருள் என்கின்றார். மிருகேந்திர ஆகமம்,

"தத் ஏகம் அசிவம் பீஜம்ஜகத் சிக்ர சக்திமத்
ஸஹகார் யதி காராந்த ஸம் ரோதி வியாப்யநச்வரம்"

எனக் கூறுகின்றது.[58] மாயை ஏகமாகவும் மயக்கம் தருவதாகவும் பிரபஞ்சத்திற்கு மூலமாகவும் ஆன்மாக்களை மறைப்பதாகவும் வியாபகமாகவும் நித்தமாயும் எடுத்துரைக்கப்படுகின்றது. இச்சூத்திரம் மேலும் ஆடைக்கு நூல் முதற்காரணம் போல சடவுலகுக்குச் சட மாயை காரணம் என்கிறது. அதே போல மதங்க பரமேச்சர ஆகமம்,

"சூக்குமம்- சர்வலகதம் - நித்யம் -அற்புதகுணம்
சைதன்ய நிலையம் விச்வம் அசேதனம் அரூபகம்"

என மாயைக்கான இலக்கணங்களை எடுத்துரைக்கின்றது.[59] இவ்வாறான ஆகமங்களின் கூற்றுக்கள் அமானுஷ்ய ஆற்றல், பலம், வஞ்சனை முதலாங் கருத்துக்களைக் கூறிநிற்கின்றன. சித்தாந்திகளும் மாயைக்கு முதன்மையளிக்கின்றனர்.

"தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துள்ளதாம்
அந்தமாதி என்மனார் புலவர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார் மெய்கண்டார்.[60] மேலும் ஒடுங்கின சங்காரத்தினல்லது தோற்றமில்லை என்கிறார். சித்தாந்திகள் கட்புலனாகும் இப்பிரபஞ்சமும் பிரபஞ்சப் பொருட்களும் தோன்றி நின்று ஒடுங்கவும் மீளத்தோன்றவும் இடமாய் இருப்பது மாயை என்கின்றனர். ஆனால் காஷ்மீரசைவர்கள் சிவத்தின் வெளிப்பாடாகவே பிரபஞ்சத்தைக் கூறுகின்றனர். சட்டர்ஜி, "உயர் மெய்ப் பொருளாகிய பரமசிவத்தின் (சைதன்யம்) அனுபவ வெளிப்பாடாக மட்டுமே இருக்கும்" என்கிறார்[61] K.C பாண்டே, "தெய்வீகத்தின் சாராம்சம் சிருஷ்டி" என்கின்றார்.[62]

> "பெரிய ஆலமரத்தின் சக்தி எல்லாம் ஒரு விதையில் அடங்கியிருப்பது போலப் பிரபஞ்சத்திலுள்ள தாவரசங்கமம் அனைத்தும் பரம் பொருளில் அடங்கியிருக்கும்."

என்பதே இவர்களின் பொது நிலைவாதமாகும்.[63]

இவ்வெளிப்பாடு ஒரு "மானச" படிமுறையை ஒத்தது என்றும் எமது அன்றாட வாழ்வில் நாம் சிந்திப்பதும் அனுபவிப்பதும் எல்லாம் மாயையின் மறுவுருவாக்கம் ஆகும் என்றும் சட்டர்ஜி கூறுகிறார்.[64] இந்தப் படிமுறையை ஆபாசன, ஆபாச எனக் கூறுவதும் உண்டு. ஆபாச - ஆபாசபரமார்த்த வாதம் அல்லது சுவதந்திரிய வாதம் எனவும் அழைப்பர். சங்கர வேதாந்தம் கூறும் விவர்த்தவாதத்தை ஓரளவு ஒத்ததாக இவ்வுன்மேச காணப்படுகின்றது. உன்மேச என்றால் மேலானதன் விரிவு மலர்ச்சி ஆகும். அதே போல விவர்த்தவாதம் என்பது சுருண்டிருப்பது, விரிந்து வருதல், பல்வேறு வடிவங்களில் தோன்றுவது என்பர்.[65] விவர்த்த வாதத்தின் படி தோற்றங்கள் எல்லாம் பெயர்களும் வடிவங்களுமே. நாமரூப மந்ர மட்டுமே. இதனை மெய்ப்பொருளாகக் கருதமுடியாது என்பர். ஏனெனில் இது பரம் பொருளின் பகுதியல்ல; விடுதலை நிலையில் அந்த அனுபவத்தைப் பெறுவதுமில்லை. இல்பொருளாய் இருப்பதால் உண்மையுமல்ல. கட்புலனாவதால் முற்றுமுழுதான பொய்ப் பொருளுமல்ல. ஏனெனில் தொடக்கமின்மை எனும் வரிசையான அனுபவத்தை உடையவை. பரிபூரண விடுதலை, சுயாதீனம் என்பவை தவிர்ந்த ஏனைய எல்லா விதமான இருத்தல்களுக்கும் உள்ளானவை. ஆக இவை உள்ளதுமல்ல. இல்லதுமல்ல ஆதலால் இது "சதசத்யாம் அநிர்வாச்சியாம்" என்பர்.[66]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆபாச" என்பதைக் கூறுவோர் தோற்றங்களே உண்மை என்பர். ஏனெனில் இவை மெய்ப்பொருளோடு பேதமறக் கலந்திருப்பவை. மெய்ப்பொருளின் அனுபவமிவை. ஆகவே ஆபாச, விவர்த்த வாதங்கள் படிமுறையில் ஒன்றே என்பர்.

ஆனால் சைவசித்தாந்திகள் மாயையின் வெளிப்பாடாகவே பிரபஞ்சத்தை எடுத்தாள்வர். மாயையின் நின்று பிரபஞ்சத்தைத் தோற்றி நிலைபேறடையச் செய்து பின் ஒடுக்கும் பிறவினையாளனாகப் பதி திகழ்கின்றான். பிரபஞ்சம் பதியின் வெளிப்பாடல்ல. பதி மாயையில் நின்றும் பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் நிமித்த காரணமாக பதி விளங்குகின்றான். இதனையே சித்தியாரும் " தோற்றமும் நிலையும் ஈறும் மாயையின் தொழில தென்றே"என்கிறது.[67] மாயையே உபாதன காரணம் என்பது சித்தாந்திகளின் கூற்றாகும். மலத்தால் பீடிக்கப்பட்ட ஆன்மா அவ்வறியாமை இருளினின்றும் நீங்க, கன்மமும் மாயையும் நீங்கும். ஆயினும் அறியாமையை நீக்கும் அறிவைப் பெறும் வரைக்கும் கன்ம மாயைகளும் இருட்டின் பாற் பட்டவையே. சித்தியார்,

"நித்தமாய் அருவாய் ஏக நிலைய தாய் அகிலத்துக்கோர்
வித்துமாய் அசத்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக்கோர்
சக்தியாய் புவன போகம் தனுகரணமும் உயிர்க்காய்
வைத்தோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யுமன்றே"

எனக்கூறத்,[68] தத்துவ விளக்கம்,

"ஓதிய வல்வினை ஊட்டக் கருவி உடம்பு உலக
மாதிமை யோகமாய் நின்ற மாயை மயக்குவித்தே"

என அதனை வழிமொழிகின்றது.[69] அந்த வகையில் சித்தாந்திகள் மாயை அநாதியாய் சகல நிலையில் உயிருக்கு மயக்கம் தருவதாய் சடமாய் சடப்பொருட்களுக்கு உபாதன காரணமாய் உள்ளது என்பர். சாந்தோக்கிய உபநிடதம்,

"ஸத் ஏக சோம்ய இதம் அக்ர ஆசீத்
ஏக மேவ அத்விதீயம் - ஸம் "

என்கிறது.[70] இதனை விளக்க முற்பட்ட சங்கரரும் இராமானுஜரும் இருவேறு விளக்கங்களைக் கூறுகின்றனர். பிரமம் மட்டும் உண்மை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதி யாவும் தோற்றம், இவ்வாறு தோன்றக் காரணம் மாயை என்கின்றார் சங்கர். பிரம்மம், உயிர், உலகு என்பவற்றை உண்மைப் பொருளாகச் சுட்டும் இராமானுஜர் பிரம்மத்தில் நின்றும் அவை பிறிதில என்கிறார். பிரமம் மாயையோடொன்றாய்த் தன், ஸ்தூலநிலைக்கு வந்தமையால் பிரபஞ்சம் ஏற்பட்டது என்கிறார். காஷ்மீர சைவருக்கு இது சாலப் பொருந்துகிறது. இறை, தான் நிமித்த காரணமாக நின்று முதற்காரணமான மாயையில் இருந்து பிரபஞ்சத்தைத் தோற்றிவித்துத், தான் அவற்றுடன் கலப்பினால் ஒன்றாய் நிற்கிறது என்பது சைவசித்தாந்திகளின் கருத்து.

காரணம் உண்மை காரியம் பொய் - தோற்றம் எனக் கூறும் சங்கரர் பிரம்மம் மட்டும் உண்மை, அதுவே மாயையால் உலகாயும் உயிராயும் தோன்றுகிறது என்கிறார். பிரம்மத்துக்கு சமனான இடத்தை மாயை பெறுவதனால் அத்வைதம் மாயாவாதம் எனக் கூறப்படுகின்றது. பிரம்மம் மாயையுடன் இணைந்து உலகாயும் உயிராயும் தோன்றுகின்றது எனின் பிரமம் மட்டுமே உண்மையெனின் யாரிற்கு இவ்வாறு தோன்றுகின்றது ஏன் தோன்றுகின்றது? எனும் அடிப்படைக் கேள்விகள் எழுகின்றன. பிரமத்தின் உடலாக உயிரும் மாயாகாரியமான உடலும் திகழ்கின்றது எனின் உடலின் குறைபாடு உயிரைப் பாதிக்குமே எனும் கேள்வி எழுகின்றது. சித்தாந்திகள் பசு, பதி போல் பாசங்களையும் நித்தியமாக கூறுவதனால் உலகிற்கு மாயை உபாதனம்; சக்தி, துணைக்காரணம்; பதி நிமித்தகாரணம் எனக் கூறுதலும் அதனைத் தெளிவாக தத்துவத்தளத்தில் இயக்கச் செய்கின்றது.

## முப்பத்தாறு தத்துவங்கள்

இம்மாயையினின்றே தத்துவங்கள் தோற்றம் பெறுகின்றன. சாங்கியரும் சங்கரரும் "24" தத்துவங்களை முன்மொழிய காஷ்மீர சைவரும் சைவசித்தாந்திகளும் வீரசைவரும் "36" தத்துவங்களை எடுத்துரைக்கின்றனர்.

சைவசித்தாந்தம் மாயா காரியங்களை தனு, கரண, புவன, போகம் என நான்காய்ப் பகுத்துரைக்கும். "தனு - பருவுடம்பு, கரணம் - அந்தக்கரணம் - மனம் முதலிய உட்கருவிகள், புவனம் உடம்புகள் இயங்குவதற்கான இடம், போகம் முற்சொன்ன மூன்றிலும் இன்பதுன்பங்களை நுகரும் நுகர்ச்சிப் பொருள்" என்று அவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கும். மாயை அதிசூக்குமப் பொருளாகும். ஆகவே தனு, கரண, புவன போகங்களாகிய அதிஸ்தூலப் பொருட்கள் நேரே அதன் காரணமாக வரமாட்டா. ஆதலால் தத்துவங்கள் எனப்படும் முதல்களே முதலில் மாயையில் இருந்து தோன்றும்.[71]

இவ்வுலகைச் சித்தாந்திகள் "சுத்தப்பிரபஞ்சம், அசுத்தப்பிரபஞ்சம் மிச்சிரப் பிரபஞ்சம்" என மூன்றாக எடுத்தாள்வர். மயக்கந்தரா தொழிதல் - சுத்தம்; மயக்கம் தருவது அசுத்தம்: இரண்டிற்கும் இடைப்பட்டது மிச்சிரப்பிரபஞ்சம் எனவும் எடுத்தாளப்படுகின்றது. காரியமாய் உள்ள உலகம் இவ்வாறு மூவகையதாய் எடுத்தாளப் படுவதால் மாயையும் மூவகைத்து என்பது பெறப்படும். இவை, சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதிமாயை என்பன. அத்வைதத்தின் படி ஸத்தும் அஸத்துமான மாயை இன்னதென விவரிக்க முடியாத, உபாதியாதலால் அதை "மித்யா" (தோற்றம்) என்பர். ஆனால் காஷ்மீர சைவர்கள், "மாயை என்பது சிவனின் சக்தி" அது ஸத்ஸரூபம் சிவமயானது[72] சின்மயமானது என்பர். அத்தோடு அதை வியாபகமாகவும் நிறைவுடையதாயும் கூறுவர்.[73] சித்தாந்திகள் போல இவர்களும் சுத்த, அசுத்த, பிரகிருதி மாயைகள் என்னும் முப்பிரிவுகளையும் (மும்மாயை) எடுத்தாள்வர். அத்தோடு மகா மாயையில் இருந்து உருவாவது மாயா மலம் என்றும் மாயையினால் ஜீவனது அடிப்படையான ஞான சக்தி அளவிற்குள் ளாகின்றது. என்றும் அதுவே "மாயீய்மலம்" எனவும் கூறப்படுகின்றது. இந்நிலையில் தான் தன்னளவில் வேறு, மற்ற ஜீவன்கள் வேறு, மற்றப் பொருட்கள் வேறு என்னும் பேதங்களைக் காணும் இயல்பு ஏற்படுகின்றது. அதனை, "சரீர - புவநாகாரோ மாயீய, பர்கீத்தித:" எனத் தந்த்ரலோகம் கூறுகிறது. இதனால் இன்ப துன்பங்களும் மறுபிறவியும் விளைகின்றது.

வசுகுப்தர் "உலகம் என்பது பரமசிவனின் சக்தியினுடைய "பிரசயம்" அல்லது அசைவாகிய மலர்ச்சி" (கிரியா) என்கின்றார். இதனை, "ஸ்வசக்தி - ப்பரசபோஸ்ய விச்வம்" எனும் சூத்திரத்தால் அறியலாம்.[74] அதனால் பரமசிவனே உலக வடிவினனாக விளங்குகின்றான். உலகைப்படைத்ததனால் ஏற்படக் கூடிய எவ்வகை மாறுபாடுமின்றி உலகைக் கடந்தவனாக உள்ளான். சக்தியின் மலர்ச்சியின் போது அல்லது உன்மேஷவின் போது உலகம் உற்பத்தியாகி அச்சக்தி சுருங்கும் போது உலகம் ஒடுங்குதல் அல்லது பிரளயம் நிகழ்கின்றது. இதனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அஸ்யாம் ஹிஸப்ரந்ரத்யாம் ஜகத் உந்மிஷதி வ்யதிஷ்டதேச
நிவ் ருத்த - ப்ரஸரராயாம் ச நிமிஷ தி"

என ஷேமராஜர் பிரத்திய பிஞ்ஞானத்தில் கூறுகின்றார்.[75] அதாவது உலகப் படைப்பும் பிரளயமும் பரமசிவம் தன் கண்களைத் திறந்து மூடுதலை ஒத்தது என்று விளக்குவர்.சைவசித்தாந்தம் மாயையில் இருந்து 36 தத்துவங்களும் தோன்றுவதாகக் கூற, காஷ்மீரசைவம் சிவத்தினின்றே அவை தோன்றுவதாகக் கூறுகின்றது. அதன் ஒருமைவாதக் கோட்பாடே அதற்குக் காரணமாகும்.

"தத்துவம்" என்பதற்குப் "பொருள்" எனப் பல சமயவாதிகள் பொருள் கூறினும் சித்தாந்திகள் "கருவி" எனப் பொருள் கொள்வார்.[76] இது சிவபெருமானின் முத்தொழிற்கும் காரணமான சக்திக் கூடத்தின் விளையாட்டுக்கு ஏதுவாக விளங்குகின்றது.

"சக்தீநாம் சக்ரம் ஸமூஹ,- தஸ்ய யோ விபவ
உத்யோ காவ பாஸந - சர்வண - விலாபநாத்மா க்ரீடாடம்பர
தஸ்ய ப்ரபவம் ஹேதும்"

என ஷேமராஜர் இதனை விளக்குகின்றார்.[77] காஷ்மீர சைவர்களும் முப்பத்தாறு தத்துவங்களையே முன்வைக்கின்றனர். சிவனின் சக்தியே மாயையாகின்றது. மாயையில் இருந்தே 36 தத்துவங்களும் பிறக்கின்றன. அதனை ஸூரேச்வராசார்யார்,

"ஷட்த்ரிம்சத் - தத்தவ - ஸங்காத ஸர்வத்ராப்ய நுவர்த்ததே"

எனக் குறிப்பிடுகின்றார்.[78] ராமதீர்த்தயதி இச்சூத்திரத்துக்குச் செய்த உரையில் உள்ள 36 தத்துவங்களுக்கும் காஷ்மீரசைவ முப்பத்தாறு தத்துவங்களுக்குமிடையில் முரண்பாடு உள்ளதாக தகாரே குறிப்பிடுகின்றார்.[79] மேலும் பராப்பிரவேசிகா கூறும் 36 தத்துவங்களில்[80] சாங்கியம் கூறும் இருபத்து நான்கு தத்துவங்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அதே வேளை நிரீஷ்வரவாதமான சாங்கியம் கூறாத 12 தத்துவங்களை சித்தாந்தம் போல காஷ்மீர சைவமும் முன்வைத்துள்ளது. இனி 36 த்தததுவங்களையும் ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவதத்துவம்**

சைவசித்தாந்தத்தின்படி சுத்த மாயையில் இருந்து சிவதத்துவங்கள் ஐந்தும் தோற்றம் பெறுகின்றன. அவை "சிவம், சக்தி, சதாசிவம், ஈசுவரம், சுத்தவித்தை" என்பனவாகும். சிவன், தன் தொழிலால் உலகை செயற்படுத்தக் கருதும் இடமாதல் பற்றி இவை சிவதத்துவங்கள் எனப்படுகின்றன. காஷ்மீர சைவமும் சிவம், சக்தி, சதாசிவம், ஈசுவரம், சுத்த வித்தை என்பவற்றை சுத்த அத்துவா எனச் சுட்டுகின்றது. பரமசிவனின் சொரூபத்தை இவை மறைக்காது என்பதனாலேயே இவை ஐந்தும் சுத்த அத்துவா எனப்படுகின்றன. என்றும் கூறுகிறது.[81] சாங்கியத்தினுள் இவை இடம் பெறுவதில்லை. ஏனெனில் சாங்கியம் நிரீஸ்வரவாதம் ஆகும்.

அந்த வகையில் சித்தாந்திகள் இரு வகை உலகங்களை எடுத்தாளுகின்றனர். அவை, சொல்லுலகம் - சொற்பிரபஞ்சம், பொருளுலகம்- பொருட்பிரபஞ்சம் எனப்படுகின்றன. சொற் பிரபஞ்சத்தை "சப்தப் பிரபஞ்சம்" என்றும் பொருட்பிரபஞ்சத்தை "அர்த்தப் பிரபஞ்சம்" என்றும் சித்தாந்திகள் எடுத்தாள்வர். சொற் பிரபஞ்சம் எழுத்து - சொல் - சொற்றொடர் என்பவற்றால் கட்டமைக்கப்படுவது எழுத்து - வன்னம் (வர்ணம்), சொல் - பதம் எனவும் சுட்டப் பெறும். அதனூடாக மந்திரம், பதம் , வன்னம் எனச் சொற்பிரபஞ்சம் பிரித்து எடுத்தாளப்படுகின்றது. வடமொழிமரபும் சைவமரபும் பற்றி வன்னம் - 51, பதம் - 81, மந்திரம் - 11 எனவும் சிவாகமங்கள் எடுத்துரைக்கின்றன.[82] சுத்தமாயையின் காரியமாக இச்சொற் பிரபஞ்சம் எடுத்தாளப்படுகின்றது.

காஷ்மீர சைவர்கள் பிரபஞ்சத்தை பின்வருமாறு பிரித்துரைப்பார். வாசகப் பிரபஞ்சம் - பேச்சு, வாசியப் பிரபஞ்சம் - பொருள் இங்கு பேச்சு என்பது உடலால் நிகழ்த்தப்படுதல் மட்டுமல்ல சொற்கள் எதற்குக் குறியீடாக இருந்ததோ அதனைச் சுட்டுவதாகும் என்பர்.[83] இவ்விரு சைவர்களும் சொற்பிரபஞ்சத்தை "வாக்கு" என்பர். அத்தோடு சொல் என்பது ஒலி அல்ல பொருள் உணர்வை - பருப்பொருளின் வெளிப்பாட்டைத் தருவதாக எடுத்தாள்வர். அத்தோடு வாக்கை நான்கு வகையாகவும் சுட்டுகின்றனர். அவை, பரா -சூக்குமைவாக்கு, பைசந்தி /பஷ்யந்தி, மத்திமை, வைகரி என்பனவாகும். சித்தாந்திகள் சுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயையில் முதல் விருத்தியாய் முதற் கண் நிற்பதாய் இவற்றை வர்ணிப்பர். சூக்குமை வாக்கென்பது காரணநிலையிலுள்ள சுத்தமாயை ஏனைய மூவகை வாக்குகளாய் விருத்திப் பட தகுதி பெற்று நிற்கும் நிலையே அது என்பர். மேலும் இதை பரை - நாதம் எனச் சுட்டுவர். காரண நிலையிலுள்ளதால் இது அழிவற்றதாகவும் கூறப்படுகின்றது. காஷ்மீரசைவர் தூய பிரக்ஞை என்றும் கால, இட, நாம, ரூப எல்லாப்பாடுகளிலிருந்து விடுபட்டது என்றும் உடல், மனம், புலன் என்பவற்றோடு சம்மந்தப்படாத ஒன்றாகவும் எடுத்தாள்கின்றனர். வாக்கின் ஆரம்ப நிலையாக "பரா" இருசாராராலும் எடுத்தாளப்படு கின்றது. சூக்குமை வாக்கின் விருத்தி நிலை பைசந்தி, எனப்படுகின்றது. பஸ்யத்தி என்பதன் திரிந்த வடிவமே பைசந்தி, இது விளங்குவது எனப் பொருள்படும். சொல் வடிவமொரு வகையில் விளங்கி நிற்கும் நிலை இது எனச் சித்தாந்திகள் கூறுவர்.[84] காஷ்மீரசைவமும் வாக்கின் ஸ்தலமான வெளிப்பாட்டு நிலையே பைசந்தி என்கின்றது. இதில் நுண்மையான, ஸ்தூலமான பேச்சு இருக்கும். இது பிரக்ஞையில் இருந்தும் வேறுபட்டது. வேறுபாட்டை அறிய முடியாதளவு நுண்மையானது. இதற்கு மயில் முட்டையில் உள்ள நீரில் நிறங்கள் தோன்றியும் தோன்றாமலும் நிற்றலைச் சித்தாந்திகள் உவமையாக எடுத்துரைப்பர்.[85]

இவ்வேறுபாட்டுக்கு ஆசையே காரணமென்பர் சித்தாந்திகள். ஏதோ ஒன்றை அறிய எடுக்கும் முயற்சியே ஆசையை ஞாபகப் படுத்துதல் என்பர். பொற் ஜாடி ஒன்று பல எண்ணங்களோடு தொடர்புபட்டிருந்ததாலும் நாம் அதனை நினைவுகூரும் போது எல்லாம் ஞாபகம் வருவதில்லை. மகிழ்வாக இருக்கும் போது சில விடயங்களும் துக்கமாக இருக்கும் போது வேறு சில விடயங்களும் ஞாபகம் வரும். அதற்குக் காரணம் ஆசையே. இது போலவே பேச்சு வடிவங்கள் சிலவற்றை விலக்கி, பைசந்தி நிலையில் எடுப்பதற்கும் ஆசையே காரணம் எனக் கூறி நிற்பர். இரு சாராரும் நுண்மையான தோன்றியும் தோன்றாத வெளிப்பாடு நிலை என்பதில் ஒருமித்த கருத்தை உடையோராகத் திகழ்கின்றனர்.

பைசந்திக்கு அடுத்ததாக "மத்திமை" விளங்குகின்றது. இதனை பைசந்தியில் இருக்கும் வாக்கு சொல் வடிவில் வெளிப்பட்டுப் பின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்து வடிவில் வெளிப்பட்டு பின் அதனை உரைக்க முற்பட்டு மிடற்றளவில் மெல்ல ஒலித்து நிற்கும் நிலை என்பர் சித்தாந்திகள். காஷ்மீர சைவர்களும் பேச்சுக்கு முந்திய நிலை இது என்பர். இது பைசந்திக்கும் வைகரிக்கும் இடைப்பட்ட நிலை என்பதால் "மத்திமை" என இரு சாராரும் கூறுவர். இதில் எண்ணத்திற்கும் வாயால் கூறுவதற்கு முந்திய பேச்சுக்கும் துல்லியமான வேறுபாடு இருந்த போதும் கீழ் நிலையில் ஒரு கறுப்பு ஜாடியை நாம் கறுப்பிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பதுண்டு. (ஜாடி என்பது வேறு; கறுப்பு என்பது வேறு) ஆனால் அடிப்படையில் அவ்வேறுபாடு இல்லை என்பர் காஷ்மீரசைவர். சித்தாந்திகளும் அதனை ஏற்று நிற்கின்றனர்.

மிடற்றளவில் நிற்கும் சொற்கள் பிராணனால் நன்கு வெளிப் படுத்தப்பட்டுச் சொல்வோனுக்கும் கேட்போனுக்கும் புலனாவது "வைகரி" எனப்படுகின்றது. காஷ்மீர சைவர் அன்றாடத் தொடர்பாடலுக்குப் பயன்படுத்தும் பேச்சே வைகரி என்பர். இங்கு எண்ணமும் வெளியிடப்படும் குறியீடும் அடிநிலையில் வேறாக இருக்கும் என்பர். சித்தாந்திகள் வைகரியை இரண்டாக எடுத்தாள்வர். அவை, ஸ்தூல வைகரி, சூக்கும வைகரி என்பனவாகும். சொல்பவர் செவிக்கு மட்டும் கேட்கும் பேச்சு சூக்கும வைகரி என்றும் சொல்பவர்க்கும் கேட்பவர்க்கும் கேட்கும் பேச்சு ஸ்தூல வைகரி என்றும் கூறப்படுகின்றது. வைகரி என்பது விகாரமடைவது எனப்படுவது இவற்றால் பெறப்படும் என்பர்.

இந்நால்வகை வாக்குகளும் சுத்த மாயையில் இருந்து பெறப்படு கின்றன. இவை விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலரெனும் மூவகை ஆன்மாக்களும் முறையே ஒருவரை விட மற்றையவர்களுக்கு ஸ்தூல நிலையைப் பெற்றுப் பயன் தரும் என்பர் சித்தாந்திகள். இதனை,

> "மூவகை அணுக்களுக்கு முறைமையால் விந்து ஞானம்
> மேவினதில்லை ஆகில் விளங்கிய ஞானமின்றாம்
> ஓவிடவிந்து ஞானம் உதிப்பதோர் ஞானமுண்டேல்
> சேவுயர் கொடியினான்றன் சேவடி சேரலாமே"

எனும் பாடலால் அறியலாம்.[86] காஷ்மீர சைவர் இந்நான்கு வாக்குகளையும் முறையே விதை, ஆயத்தநிலை, முளை விதையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு வெளியே வந்ததும் வராததுமான நிலை, முளை வெளிவந்த நிலை என விளக்குகின்றனர்.[87]

சித்தாந்திகள் சிவம் என்பது உலகைத் தொழிற்படுத்தக் கருதுங்கால் இச்சை, ஞானம், கிரியை என்னும் முச்சக்திகளுள் இச்சை எப்பொழும் ஒரே நிலையில் நிற்கும். ஞானமும் கிரியையும் தனித்தும் ஒன்றின் நின்றும் ஒன்று மிகுந்தும் குறைந்தும் சமமாயும் நின்று தொழிற்படும். அக்கட்டத்தில் இறைவன் முதற்கண், ஞானசக்தி ஒன்றாலே சுத்தமாயையை பொதுமையில் நோக்கி "சிவன்" எனப் பெறுகின்றான் என்பர்.

சிவத்தால் நோக்கப்பட்ட அந்நிலையில் சுத்தமாயை முதல் விருத்தியால் அவனுக்கு இடமாகின்றமையால் இம்முதல் விருத்தியே "சிவம்" எனச் சுட்டப் பெறுகின்றது. சூக்கும வாக்காகிய நாதத்திற்குப் பற்றுக் கோடாதல் பற்றி இத்தத்துவம் "நாதம்" என சித்தாந்திகளால் சுட்டப்படுகின்றது. காஷ்மீரசைவம், சிவம் என்பதைப் பரமசிவத்தின் ஆரம்பப் படைப்பியக்கம் (பிரதம ஸ்பந்த) என்கிறது. மேலும் பராப்பராவேசிகாவில்,

இச்சை ஞானம், கிரியை ஆகியவற்றை பூர்ணனாந்த சுபாவம் மட்டுமே கொண்ட பரமசிவனே சிவதத்துவம் என்று ஷேமராஜர் கூறுகின்றார்.[88] இதனை,

"யத யமநு த்தரமூர்த்திர் நிஜேச்ச யாகிலமிதம் ஜகத் ஸ்ரஷ்டும்/
பஸ் பந்தே ஸஸ்பந்த ப்ரதம சிவதத்தவ முச்யதே தஞ்ஞை//"

என்பதாலும் அறிய முடிகிறது.[89] அதாவது எவன் ஒருவன் தனக்குமேல் தலைவன் இல்லாதவனாயும் தன் சுதந்திர இச்சையினால் உலகம் அனைத்தையும் படைப்புருவாக்கம் செய்யப் பரமசிவனாகத் துடிக்கின் றானோ அவனது முதல் அசைவே சிவதத்துவம் எனப்படுகின்றது.

**சக்திதத்துவம்**

ஞானசக்தியில் நின்று சுத்தமாயையைப் பொதுமையில் நோக்கிய பரமசிவம் கிரியாசக்தி ஒன்றாலேயே சுத்தமாயையைக் காரியப்படுத்தப் பொதுவகையில் சங்கரித்து "சக்தி" எனப் பெயர் பெற்று நிற்பன். இது இரண்டாம் விருத்தி . சக்திக்கு இடமாகும் நிலை என்பதால் அதற்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுக் கோடாக உள்ள இத்தத்துவமும் சக்தி எனப்படுகின்றது. சித்தாந்திகள் "பைசந்தி" விந்து எனவும் அழைக்கப்படும் என்பர். காஷ்மீர சைவ நூலான பராப்ராவேசிகா,

"அஸ்ய ஜகத் ஸ்ரஷ்டு மிச்சாம் பரிக்ருஹீதவத:
பரமேச்வரஸ்ய ப்ரதமஸ்பந்த ஏவ இச் சாசக்தி -
தத்வம் அப்ரதிஹ தேச் சத்வாத்/"

எனச் சக்தித் தத்துவம் பற்றிக் கூறுகின்றது.[90] எவரும் தடுக்க முடியாத இச்சக்தியைக் கொண்ட பரமேஸ்வரன் உலகைப் படைக்க அவாவும் முதல் ஸ்பந்தமே சக்தி தத்துவம் என்பர். சிவனின் சக்தி, அவன் பிரக்ஞையை அஹம், இதம் என இருமைப்படுத்துகின்றது. ஆக, சக்தி சிவத்தின் வேறாதயதல்ல. சுட்டியுரைக்கின் சிவத்தின் ஸ்ருஷ்டி இயல்பே சக்தி என்பர். சக்தி, "சிவத்தின் அஹம் விமர்ச" (சுயப்பிரக்ஞை) அதாவது உன் முகத்தர் (படைப்பு இச்சை) என்பர். சிருஷ்டியாளனான பரமசிவம், தன் ஆனந்த பரவசத்தை வெளிப்படுத்துகின்றது என்பர். சிவ சக்தி தத்துவங்கள் பிரிப்பற்றவையாக இரு சாராராலும் எடுத்தாளப்படு கின்றன.

**சதாசிவதத்துவம்**

சித்தாந்திகளால் அடுத்த தத்துவமாக சதாசிவ / சாதாக்கிய தத்துவம் எடுத்தாளப்படுகின்றது. இறைவன் "ஞானக் கிரியை சக்திகள் சமமாகத் தொழிற்பட நிற்கும் நிலை சதாசிவம்" என்கின்றனர். சுத்தமாயை மூன்றாம் இடத்துக்கு விருத்தி அடைந்து சிவத்துக்கு இடமாய் விளங்கும் என்பர். இது நால்வகை வாக்குகளில் மத்திமை வாக்கிற்குரியது. பிரமாணங்களை பதி சொல் வடிவில் தோற்றுவிக்கும் நிலை இதுவெனச் சிறப்பிப்பர். காஷ்மீர சைவர், பூரண அனுபவத்தின் "இது" அம்சத்தை உறுதி செய்யும் இச்சையாகச் சதாசிவதத்துவத்தை எடுத்தாள்வர். இந்நிலையில் ஏற்படும் அநுபவம் "நான் இது" என்பதே. அதேவேளை இது என்பது தெளிவில்லாததோர் அனுபவம். பிரக்ஞையின் ஆழத்தில் பிரபஞ்சம் தெளிவில்லாத ஒன்றாக அறியப்படுகின்றது. ஞானா சக்தியைப் பிரதானப்படுத்தும் தத்துவமாக சதாசிவ தத்துவம் விளங்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஞானம் கிரியை ஆகிய இரண்டின் முதல் மலர்ச்சி என்பதே சதாசிவம்"

என "மஹார்த்த மஞ்சரி" கூறுகிறது.[91] மேலும் நான் என்னும் தன்மையில் உலகத்தின் தெளிவற்ற உணர்வும் கொண்டு உலகைப் படைக்க முனையும் தத்துவம் அடங்கியுள்ளது.[92]

அந்த வகையில் இதுவே முதல் வெளிப்பாடு (ஆபாச). இம்முழுமையான அனுபவத்தில் விடயமும் விடயியும் பிரக்ஞை உடையவை. பிரக்ஞை இதுவினால் அறியப்படும் என்பர்.

**ஈஸ்வர - ஐஸ்வர்யதத்துவம்**

காஷ்மீரசைவம், தெய்வீக அனுபவத்தின் அடுத்த கட்டத்தில் "இதம்" அல்லது பூரண அனுபவத்தின் "இது" என்பது தெளிவாகத் தெரிகின்றது என்கின்றது. இது "ஸ்பூட" எனப்படுகின்றது.[93] இதுவே ஈஸ்வர தத்துவம் ஆகும். இது பிரபஞ்சத்தின் விகசிப்பு (உண்மையான மலர்ச்சி) அல்லது "உன்மேஷ" எனப்படுகின்றது. (வடமொழியில் அங்குரிதம் ஜகத் எனப்படுகின்றது) இதுவே நான் - இதம் அஸ்மி அஹம்" என்னும் அந்த உணர்வு மிகத் தெளிவாகப் புலப்படுகிறது. ஷேமராஜர்,

"அங்குரிதம் ஜகத் அஹந்தயா ஆவ்ருத்ய ஸ்ரிதம் ஈஸ்வர தத்துவம்"

என்கின்றார். [94] அதாவது மலர்வுற்ற உலகை இதம் நான் என்னும் தன்மை கொண்டு சூழ்ந்து விளங்குதலே ஈஸ்வர தத்துவம் ஆகும். இந்நிலையில் "நான்" என்னும் நிலையும் (சைதன்யம்) இது என்னும் நிலையும் (பிரபஞ்சம்) சமமாகத் தெளிவாக வெளிப்படுகின்றன.[95] இந்நிலையில் ஞானம் மேலோங்கி நிற்கும். சதாசிவத்தின் அனுபவம் "நான் இது" (ஈஸ்வராவஸ்தா) என்ற உணர்வும் ஈஸ்வர தத்துவத்தில் "இது நான்" என்ற உணர்வும் தோன்றுகின்றன என்பர் காஷ்மீர சைவர்.

சைவ சித்தாந்திகள் இக்கருத்துக்களினின்றும் மாறுபடுவர். பதி ஞானசக்தியை மிகச்செலுத்தாது கிரியா சக்தியை மிகச் செலுத்தி சுத்தமாயையை சூக்குமமாகக் காரியப்படுத்தி ஈஸ்வரன் எனப் பெயர் பெற்று நிற்பன் என்பர். மாயை நான்காம் விருத்திப்பட்டு அவனுக்கு இடமாயமையும் தன்மையால் இந்நிலை "ஈஸ்வரம்" எனப்பட்டது. இதனை "மகேஸ்வர தத்துவம்" எனவும் சித்தாந்திகள் சுட்டுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்வித்யா - சுத்தவித்யா தத்துவம்

காஷ்மீரசைவர், நான் என்பதும் இது என்பதும் சமமாக இருப்பதாகத் தோன்றுகின்றதோ அதுவே சுத்தவித்யா தத்துவம் என்பர்.[96] இதனை ஷேமராஜரும் வழி மொழிவார். இங்கு நான், இது என்பன தனித்தனியே தெளிவாகத் தெரிந்தாலும் இரண்டும் ஒரே பொருளைப் பற்றியவை (ஸமாநாதிகரணம்) என்பர். இங்கு கிரியா சக்தி மேலோங்கி நிற்கும். இந்நிலை அநுபவத்தை "ஒருமையிற் பன்மை" (பேதா பேத விமர்சனாத்மா) என்பர். நான் நானே, இதம் இதமே என அறியும் நிலை; இது "பரஸ்பரத்" எனப்படுகின்றது. மேலும் பரத்திற்கும் அபரத்திற்கும் இடைப்பட்ட நிலை ஆதலால் அதனை "பராபரதசா" எனவும் சுட்டப் பெறும்.

சைவசித்தாந்திகள் இவற்றினின்றும் மாறுபட்டுப் பதி, ஞானசக்தியை மிகச் செலுத்தி அதனை ஸ்தூலமாகக் காரியப்படச் செய்து வித்தியேஸ்வரன் எனக் கூறப் பெறுவான் என்பர். சுத்தமாயை இந்நிலையில் ஐந்தாம் விருத்திப்படும். இதனால் இது "வித்தை". அசுத்தமாயா வித்தையினின்றும் வேறுபடுத்த இதனை சுத்த வித்தை என்பர் சித்தாந்திகள்.

மேற்சொன்ன ஐந்து தத்துவங்களையும் காஷ்மீர சைவர் சுத்தாத்வா எனக் கூற, சைவசித்தாந்தம் "சுத்தமாயா தத்துவங்கள்" என்கிறது. இவ் வகைத்தத்துவங்களும் பரமசிவ சொரூபத்தை மறைப்பதில்லை. ஆகவே இதனை காஷ்மீரசைவம் சுத்த அத்வா என்கிறது.[97] சித்தாந்த தத்துவ நிலையில் சிவசக்திகள் - அருவம்; சதாசிவம் - அருவுருவம்; வித்தியாதத்துவம் - உருவம் எனும் நிலைகளைப் பதி பெறும் என்பர் சித்தாந்திகள்.

## அசுத்தாத்வா / அசுத்தமாயா தத்துவங்கள்

மாயையும் அதன் ஐந்து கஞ்சகங்களும் "5-11" வரையான தத்துவங்களாக இருசாராராலும் எடுத்தாளப்படுகின்றன. தெய்வீகத்தின் இயல்பு மறைக்கப்படுகின்றது. மாயையினால் பரமசிவனது அபாரமான அநுபூதி "மேயம்" அதாவது அளவுக்கு - எல்லைக்கு உட்பட்டிருக்கின்றது. இது நானிலிருந்து துண்டிக்கப்படுகின்றது. இவ்வாறு பொருட்கள் ஒன்றிலிருந்து ஒன்று புறமொதுக்க / விலக்கப்பட்டதுக்குக் காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயை எனப்படுகின்றது. சுத்த வித்தியா வரை அனுபவம் பூரணமானது. இது என்பது முழுப்பிரபஞ்சத்தையும் குறிக்கும். மாயை தொழிற்படுகையில் வெறும் இதுவையே குறிக்கும் என்பர் காஷ்மீர சைவர்கள்.[98]

சைவசித்தாந்திகள், பதி அசுத்தமாயையைத் தான் நேர் நின்று தொழிற்படுத்தாது சுத்த வித்தையில் நிற்கும் வித்தியேஸ்வரர் எண்மருள்ளும் ஒருவரான ஆனந்த தேவர் ஊடாகவே தொழிற்படுத்தும் என்பர். ஆணவ, கன்ம மலங்களோடு கலப்புற்றது அசுத்த மாயை. ஆதலால் பருப்பொருளாகத் திகழ்வது பருப்பொருட்களை அனந்த தேவரூடாகத் தொழிற்படுத்துவான். அதிகார மலம் நீக்கிய அனந்ததேவர் சகலர், பிரளயாகலர் எனும் இரு வகையினரதும் வினைகளுக்கேற்ப அசுத்த மாயையை காரியப்படுத்துவார். இவ்வசுத்த மாயையினுள் தோன்றும் தத்துவங் களாகக் காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை எனும் ஏழும் எடுத்தாளப்படுகின்றன.[99] ஆனால் காஷ்மீரசைவர்கள் மாயையும் அதன் ஐந்து கஞ்சுகங்களையுமே அசுத்த அத்துவாக்களாக எடுத்தாள்கின்றனர்.

காஷ்மீர சைவர், மாயையின் சட்டைகளாக (கஞ்சுகங்கள்) கலை, வித்தை, ராகம், காலம், நியதி என்பவற்றை எடுத்தாள் வதால் அதனை முன்னே உரைப்பர். ஆனால் சித்தாந்திகள் மாயை ஏனையவை போல காரியப்படாமையினால் அதனை இறுதியில் உரைப்பர்.

> "ஆணவக் கருவறையில் அறிவின்றிக் கண்ணிலாக் குழவி போல கேவலப்பட்டு இருந்த உயிருக்கு, முதற்கண் மாயை என்னும் உட்சட்டை அமைந்து அது பொது உணர்வைப் பெற்றுப் பின்னர் ஐஞ்சட்டையாகிய கருவியைப் பெறும்"

என்பர் வச்சிரவேலு முதலியார்.[100] ஆத்மாவைத் திரை போட்டு மறைத்து அதன் சுபாவத்தை மறக்கச் செய்து, அதன் அடிப்படையான அளவற்ற ஆற்றலுக்கு மாயை எல்லை கோலுகின்றது என்பதில் இருசாராருக்கும் மாற்றுக் கருத்து இல்லை.

மாயையின் கஞ்சுகங்களில் முதலாவதாகச் சுட்டப்படுவது கலா (கலை) ஆகும். இது சித்சத்தியிடமுள்ள எல்லாம் செய்யும் வல்லமை, செய்வதும் செய்யாமையுமாகிய சக்தி ஆகியவற்றை மறைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மாவின் செயலாற்றலைக் கட்டுப்படுத்துகின்றது.[101] அதாவது பூரணப் பிரக்ஞையின் கர்த்திருத்துவத்தைக் குறைத்து எல்லைப்படுத்துகின்றது என்பர் காஷ்மீர சைவர்கள். சைவசித்தாந்திகள் ஆன்மாவிற்கு உள்ள ஞானம், இச்சை, கிரியாசத்திகளுள் கிரியாசக்தியை விளக்கித் தொழிற்படச் செய்யும். இதனூடாக உயிரினது செயலாற்றலைக் கிளரச் செய்வது கலை எனப்படும். இது குருடனுக்கு " கோல்" உதவுவது போல உயிர்க்கு உதவும். கலை - கலிப்பது - நீக்குதல் - ஆணவ மலத்தை நீக்குதல் - கன்ம நிலைக்கு ஏற்ப நீக்குதல் கலை என்பர்.[102] ஆக, ஆன்மா கிரியா சக்தி விளங்கப் பெற்ற பின்னே கர்த்திருத்துவம் பெறும் எனச் சித்தாந்திகள் எடுத்துரைப்பர். இதனை,

"அசுத்த மாயைவைத்த கலை தான் மூலமலஞ்சிறிதே நீக்கி மருவும்வகை தெரிவிக்கும் "

என்கின்றார் உமாபதி சிவாச்சாரியார்.[103] இவ்வாறு கிரியா சக்தி - செயலாற்றல் விளங்கி நிற்கும் உயிர்க்கு அறிவாற்றலை விளக்குவது வித்தை என்பர் சித்தாந்திகள். [104] இது கலையினின்றும் தோன்றுவது அதாவது ஞான சக்தி கலையினால் எழுப்பப் பெறும். கிரியா சக்தியின் வேறாகாது அதன் ஒரு கூறேயாதலில் அதனைத் தோற்றுவிக்கும் தத்துவமும் கிரியா சக்தியைத் தோற்றுவிக்கும் கலையின் ஒரு கூறாய் அதனின்றே தோன்றும் என விளக்குவர். மேலும் வித்தை என்பது அறிவதற்குக் கருவி எனச் சுட்டப்படுகிறது. அறிபவன், அறிபொருள், அறிகருவி என்பன பொதுவில் ஏற்கப்படுகின்றன. ஆன்மா அறிபொருளை அறிதற்கு உதவும் அறிகருவியே வித்தை எனப்படும்.

காஷ்மீர சைவர்கள் வித்தை சித்சக்தியை அல்லது ஆன்மாவின் எல்லாமறியும் சக்தியை மறைத்து அவனது ஞானத்தை எல்லைப்படுத்தி எல்லாமறிந்த அவனை சிறிதே அறிந்தவனாக்குகின்றது.[105] பூரண பிரக்ஞையின் சர்வஞ்ஞத்துவத்தினைக் குறைத்து அறிவை எல்லைப் படுத்துகின்றது என்கின்றனர்.

இவ்வித்தையில் இருந்து தோன்றும் தத்துவம் "அராகம்" எனச் சித்தாந்திகள் எடுத்தாள்வர். இது இச்சையினின்றும் தோன்றுகின்றது என்பர். உயிருக்கு உலக நுகர்ச்சியில் விழைவைத் தோற்றுவிக்கும் அராகம் என்பது " விருப்பு" எனச் சுட்டப் பெறுகின்றது. மேற்சொன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை, வித்தை, அராகம் என்பன அக அந்தக் கரணங்களாக வர்ணிக்கப்படுகின்றன. காஷ்மீரசைவர்கள் ராகம் (பற்று) என்பது தனது பூரணத் தன்மையினால் என்றும் திருப்தியுற்று விளங்கும் ஆன்மாவிடம் பற்பல வகையான பொருட்களைப் பற்றிய விருப்பங்களை அல்லது வேட்கைகளை உண்டாக்கி ஆத்மாவை சுக போகங்களில் களித்திருக்கச் செய்கின்றது என்பர்.

அடுத்து "கால தத்துவம்" எடுத்தாளப்படுகின்றது. உலக நுகர்ச்சியை அறிந்து செயற்பட்டு நுகரும்போது அத்நுகர்ச்சியைக் காலவரையறைப் படுத்துவது காலதத்துவம் என்பர் சித்தாந்திகள். மேலும் காலம், இறப்பு, நிகழ்வு, எதிர்காலங்களாக பகுத்துரைக்கப்படும். இறந்த காலம் ஏனைய ஏதுக்களுடன் இணைந்து ஆன்மாவின் இச்சா, கிரியா, ஞானா சக்திகளை வினை, வினைப் பயன்களின்னின்றும் பிரிக்கும். நிகழ்காலம், முச்சக்திகளையும் வினை, வினைப்பயன்களை எதிர் நோக்கச் செய்யும். அந்தவகையின் எல்லா வினைகளுக்கும் காலமே பற்றுக் கோடாகும் என எடுத்துரைக்கின்றனர்.[106] ஆன்மாவின் வினைகளுக்கேற்ப பிறவியை அளிக்கும் பதியின் சக்தி வழியே அவை தத்தம் செயல்களைச் செய்யும் என்பர். காஷ்மீர சைவமும் என்றும் உள்ள ஆன்ம தத்துவத்திற்கு இறந்த கால, நிகழ்கால, எதிர்காலபகுதியை ஏற்படுத்தி நிற்பது கால தத்துவம் என்கின்றனர். பூரணபிரக்ஞையின் நித்தியத்துவத்தைக் குறைத்து முக்காலங்களினூடாக அவற்றை எல்லைப்படுத்துவது இதுவென்பர்.

நியதிதத்துவம் பற்றி சித்தாந்திகள் "இஃது அன்று என நியமித்து நடத்துவது நியதி" என்பர். அவரவர் வினை போகத்தை அவரவரே நுகர வழி செய்வது இதுவென்பர். இதனூடாகப் பதியின் சக்தி கன்மத்தை வரையறுக்கும் செயலுக்கு இந்நியதித் தத்துவம் ஒரு கருவியாக நிற்கும் என எடுத்தாள்வர். காஷ்மீரசைவர்கள் சித்சக்தியின் சுதந்திர தன்மைக்கு பரப்பிரகாசத்திற்கு எல்லையிட்டு உரிய காரிய காரணக் கொள்கைக்கு அதனை உட்படுத்துகின்றது என்பர்.

ஆன்மாவை உலக நோக்குடையதாகச் செய்தலின் இவ்வைந்துக்கும் மூல காரணமாய் உயிரின் ஆற்றலைப் பொதுவாக முதற்கண் விளங்கச் செய்து, மயக்கத்தையும் தருவது "மாயை" என இருசாராரும் எடுத்தாள்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமைவாதிகளான காஷ்மீர சைவர், "பரமசிவம் மலங்களுள் கட்டுண்டபின் அல்லது மாயையின் போர்வை மறைப்பினால் அவரது சக்திகள் எல்லைப்படுத்தப்படுகின்றன" என்கின்றனர். பரமசிவத்தின் சர்வகர்த்ருத்வம் கலையாகவும் ஸர்வஜ்ஞத்வம் (எல்லாம் அறியும் தன்மை) வித்தையாகவும் பூரணத்துவம் ராகமாகவும் நித்தியத்துவம் காலமாகவும் ஸ்வாதந்த்ரியம் (எங்குமுள்ள தன்மை) நியதி எனவும் எடுத்தாளப்படுகின்றது.

"த தாஸர்வ - கர்தருத்வ - ஸர்வஜ்ஞத்வ - பூர்ணத்வ
நித்யத்வ - வ்யாபகத் வசக்தய
ஸங்கோசம் க்ருஹணாநா யதாக்ரமம் கலா
வித்யா - ராக - கால- நியதி ரூபதயா பாந்தி"

என க்ஷேமராஜரால் இது எடுத்துரைக்கப்படுகின்றது.[107] இவ்வாறான கருத்துக்கள் பன்மைவாதிகளான சைவசித்தாந்திகளிடம் இல்லை. ஏனெனில் சைவசித்தாந்தத்தில் பதி வேறு ஆன்மா வேறு, பதி என்றும் மலவாசனைக்கு அகப்படா நிர்மலம் என்பதே இதன் சித்தாந்தம் ஆகும்.

காஷ்மீர சைவம் தனி மனிதனுள் அடங்கும் தத்துவங்களாக புருஷன், பிரகிருதி என்பவற்றை எடுத்தாளுகின்றது. ஆனால் சித்தாந்தத்தில் அசுத்த மாயையின் தத்துவங்களில் ஒன்றாகப் புருடன் எடுத்தாளப்படுகின்றது.[108] பஞ்ச கஞ்சுகத்தை எய்திய ஆன்மா இவற்றுக்குக் கீழுள்ள மூலப்பிரகிருதியைப் பற்றிய வழியன்றிப் போகும். நுகர்தல் கூடாமையின் அதனைப் பற்றும் நிலை "புருட தத்துவம்" எனச் சித்தாந்தம் எடுத்தாள்கின்றது. மேலும் இது தனித்தத்துவமல்ல என்றும் பிரகிருதியின் காரியங்கள் தோன்ற முன்நிற்கும் நிலை என்பதால் அசுத்த மாயா தத்துவமாக எடுத்துரைக்கப்படுவதாகவும் போகத்தை நுகர்பவன் புருடன் என்றும் போகத்தை நுகர்வோனாந்தன்மை போத்திருத்துவம் எனவும் எடுத்துரைக்கப்படுகின்றது. இதை சகலர்க்குரியதாகவும் சித்தாந்தம் இயம்பி நிற்கின்றது. காஷ்மீரசைவம், பரமசிவம் தன் பூரணத்துவ இயல்பைக் கட்டுப்படுத்தி மாயையின் போர்வையால் மூடப்பட்ட நிலையில் புருஷன் எனப்படுகின்றான் என்கிறது.[109] இந்நிலை சம்சாரி நிலை என்றும் விபரிக்கப்படுகின்றது. மேலும் புருஷ தெய்வீக முழுமையின் மட்டுப்படுத்தப்பட்ட அல்லது எல்லைப் படுத்தப்பட்ட நிலை என்பதால் அவனை "அணு" எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுகின்றனர். இதனை, "பூர்ணத் வா பாவேத பரிமிதத்வாத் அணுத்வம்" எனும் வரிகளால் அறியலாம்.[110] புருஷன் பரமசிவத்தின் அஹவய வெளிப்பாடாக எடுத்தாளப்படுகின்றது.[111]

**ஆன்மதத்துவம்**

சித்தாந்திகள் மேற்சொன்ன பன்னிரு தத்துவங்களையும் விடுத்து மீதி இருபத்து நான்கு தத்துவங்களையும் "ஆன்மதத்துவங்கள்" எனும் சொல்லால் சுட்டுகின்றனர். காஷ்மீரசைவர் அவ்வாறு சுட்டுவதில்லை. சித்தாந்தத்தில் ~~ஆன்மாவின்~~ கிரியா சக்தியை எழுப்புவதாகக் கூறப்படுகின்ற கலையினின்றும் வித்தையும் அதனின்று அராகமும் தோன்றிய பின் கலையினின்றும் நேரே மூலப்பிரகிருதி தோன்றுவதாகக் கூறப்படுகின்றது. இதுவே இருபத்து நான்கு ஆன்ம தத்துவங்களினதும் மூலகாரணமாக எடுத்தாளப்படுவதோடு இத்தன்மையால் அதுவும் ஒரு மாயையாகவே முன்மொழியப்படுகின்றது.

அந்தவகையில் இது முக்குணங்களையும் உள்ளடக்கி அவற்றுக்கு வித்தாய் விளங்குகின்றது ஆதலால் இது "அவ்யக்தம்" எனப்படுகின்றது. சிவத்தின் புறவய வெளிப்பாடு இது எனக் கூறப்படுகின்றது. சாங்கியம் கூறும் பிரகிருதியினின்றும் இது வேறுபட்டது. சாங்கியம், பிரகிருதி ஒன்று என்றும் அது எல்லாப் புருடர்களுக்கும் முழுமையாக உரியதென்றும் கூறுகின்றது. காஷ்மீரசைவத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு புருஷனுக்கும் ஒவ்வொரு பிரகிருதி உண்டு. சித்தாந்திகள் போல பிரகிருதி புறவயமாக, அனைத்துக்கும் கருப்பையாகத் திகழ்வதாகவும் காஷ்மீர சைவர் எடுத்தாளுகின்றனர். முக்குணங்கள் வெளிப்பாடற்ற சமமான நிலையில் இருக்கும் என்பர். சத்துவம் ஒளிமயமானதும் மகிழ்வு, அமைதி என்பவற்றை இயல்புகளாகக் கொண்டதாலும் அறரீதியாக நன்மையான குணமாகவும் கூறப்படு கின்றது. தமஸ் குணம் இருண்மையானதாக, செயலற்றதாக எனக் கூறப்படுவதோடு "மந்தம், விரக்தி, கீழ்மை" எனும் இயல்புகள் உடைய தாகவும் சுட்டப்படுகின்றது. "இரஜஸ்" செயலை இயல்பாக உடைய தாகவும் ஆசை, ஆசைப்பட்டதையடைய வேண்டும் எனும் விருப்பு உடையதாகவும் சுட்டப் பெறுகிறது. இதனைச் சித்தாந்திகளும் ஏற்பர்.[112]

பிரத்திய பிஞ்ஞானத்தில் பிரகிருதி, சிவத்தின் "சாந்த சக்தி" மேற்சொன்ன குணங்கள் சிவனது ஞானம், இச்சை, கிரியா சக்திகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தூல உருவமாக எடுத்தாளப்படுகிறது.[113] சாங்கியத்தில் அத்வைதம் இல்லை. இங்கு புருஷ, போக்தாவாயும் அனுபவிக்கப்படும் பொருளாகப் (போக்கியா) பிரகிருதியும் காஷ்மீர சைவர்களால் சுட்டப்பெறுகின்றன. இவற்றைச் சித்தாந்திகளும் ஏற்பர்.[114] அடுத்து அகக்கருவி அந்தக் கரணங்களாக "சித்தம், மனம், புத்தி, அகங்காரம், எனும் நான்கும் சித்தாந்திகளால் எடுத்தாளப்பட காஷ்மீரசைவர்கள் "புத்தி, அகங்காரம், மனம்" என்னும் மூன்றையும் மனச் செயலை விளக்கும் தத்துவங்களான எடுத்தாள்கின்றனர்.[115]

சூக்குமமாய் நிற்கும் முக்குணங்கள் ஸ்தூலமாய் வெளிப்பட்டுத் தம்முள் சமமாய நிலைபெறும் நிலையொன்று உண்டு. அது குணதத்துவம் என வழங்கப்படுகின்றது. இக்குணதத்துவமே ஆன்மா ஒன்றைச் சிந்திப்பதற்கு கருவியான சித்தம் எனப்படுகின்றது. மகிழ்வை அல்லது துக்கத்தை மீள மீள நினைத்து இன்புறும் தன் வேதனைக் காட்சிக்கு இச்சித்தமே கருவி ஆகும் என்பர். இச்சித்தம் பற்றிய கருத்து காஷ்மீர சைவத்தில் இல்லை.

குண தத்துவத்தின் ஒருபகுதியினது வெளிப்பாட்டின் பின் சாத்வீக குணம் மிக உடையதாய்ப் பரிணமித்துத் தோன்றும் அந்தக் கரணத்தை "புத்தி" எனச் சித்தாந்திகள் எடுத்தாள்வர். ஆன்மா ஐயுற்ற ஒன்றை "இஃது இது" என உறுதிபட அறிய உதவும் கருவி இது. இதனால் இது சவிகற்ப ஞானத்திற்கு உரியது என்பர். இதனால் ஆன்மா நேரே பற்றி அனுபவிப்பது புறப்பொருளை அல்ல என்றும் புத்தி தத்துவத்தையே என்றும் கூறுவர்.[116] காஷ்மீர சைவர் பிரகிருதியில் இருந்து முதல் விளையும் தத்துவமாக புத்தி தத்துவத்தை எடுத்தாள்வர்.[117] சித்தாந்திகள் போல இஃது இன்னது என உறுதிபட அறிய உதவும் தத்துவமாகவே இது சுட்டப்படுகின்றது. இது சாத்வீக குண வெளிப்பாடு என்ற சித்தாந்தக் கருத்தையும் ஏற்பர். நிச்சயிக்கும் விவேகமான (வியவகாயாத்மிகா) புத்தியில் பிரதிபலிக்கப்படும் பொருட்கள் இரு வகையினதாகச் சுட்டப்படுகின்றன.

1) புறம் / புறப் பொருள் - உதாரணம் - கண்ணால் காணப்படும் குடம்
2) அகம் / அகப் பொருள் - உதாரணம் - மனதில் ஏற்படும் பதிவுகளால் கட்டியெழுப்பப்படும் படிமங்கள்.

என்பனவே அவையாகும் என்பர் காஷ்மீர சைவர்.[118]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்திகள் இராட்சத குணம் மிகுதியாக உடைய நிலையில் புத்திதத்துவத்தின் நின்றும் அகங்காரம் தோன்றும் என்பர். "யான் இதைச் செய்வேன்" என்னும் உணர்வு தோன்றக் காரணம் அகங்காரமே. ஆக, அக்கருவியே ஆன்மா ஒவ்வொரு செயலையும் செய்வதற்கு ஏதுவாகிறது என்பர். அகங்காரம் பல தத்துவங்களுக்கு காரணமாயும் எழுச்சிகளுக்குக் காரணமாகவும் இருத்தலினால் இது முக்குண அடிப்படையில் "தைசதாகங்காரம் (சாத்வீகம்) வைகாரியங்காரம் (இராட்சதம்) பூதாதி அகங்காரம் (தமஸ்) எனும் பெயர்களால் சுட்டப்படுகின்றது. சித்தாந்திகள் போலவே காஷ்மீர சைவரும் புத்தியின் உற்பத்தி அகங்காரம் என்பர். "நான்" என்பதை உருவாக்கும் தத்துவம் என்பர். தனக்கெனக் கொள்ளும் சக்தியாகவும் (மமகாரம்) உள்ளதென்பர். நான் என்பது அகங்காரம் எனவும் எனது என்பது மமகாரம் எனவும் சித்தாந்திகள் சுட்டி நிற்பர்.

சித்தாந்திகளும் காஷ்மீர சைவர்களும் புலன்களை ஆன்மா பற்றி நின்று அவற்றினூடாகப் புலக்காட்சியைக் கட்டியெழுப்பி சங்கற்பங்கள் விகற்பங்களால் ஐயுற்று நிற்கும் கருவி மனம் என்பர்.[119] இவற்றினூடாகத் தானாக படிமங்களையும் எண்ணக்கருக்களையும் உருவாக்குகின்றது மனம் என்பர் காஷ்மீர சைவர். இவ்வாறு புத்தியானது ஐயுற்ற பொருளை இன்னதெனத் துணியும் என விளக்குவர் சித்தாந்திகள்.

அடுத்து புலன்சார் அனுபவத்தின் தத்துவங்கள் இருசாராராலும் எடுத்தாளப்படுகின்றன. புலன்சார் புலக் காட்சியின் ஐந்து சக்திகளும் ஞானேந்திரியங்கள் எனச் சித்தாந்திகள் சுட்ட, காஷ்மீர சைவர் "மனம் (பிராணேந்திரிய) சுவை (ரசமேந்திரிய), பார்வை (சக்ஷூருத்திரிய) தொடுகை (ஸ்பரிசேந்திரிய) கேட்டல் (ஸிரவனேந்திரிய) என எடுத்தாளுகின்றனர். இவற்றை முறையே சித்தாந்திகள் மூக்கு, நாக்கு, (வாய்) கண், மெய், செவி எனும் சொற்களால் சுட்டிநிற்கின்றனர். புத்தி இந்திரியங்களாக இவை இருசாராராலும் வர்ணிக்கப்படுகின்றன.

இவற்றைத் தொடர்ந்து கன்மேந்திரியங்கள் எடுத்தாளப்படுகின்றன. இவை வைகாரிகாகங்காரத்திலிருந்து தோன்றின என்பர். சித்தாந்திகள் இவையும் அகங்காரத்தின் உற்பத்தியே எனப் பொதுவில் சுட்டுவர். எது எவ்வாறு இருந்த போதும் இரு சாராரும் கன்மேந்திரியங்களாக வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்பவற்றை எடுத்தாள்வர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை முறையே பேச்சு, அசைவு, இருத்தல், கழிவகற்றல், பாலியற் தொழிற்பாடு, (இனப் பெருக்கம்) எனும் தொழில்களைச் செய்யும் என இரு சாராரும் உரைத்து நிற்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து இருசாராராலும் தன்மாத்திரைகள் முன்வைக்கப்படுகின்றன. காஷ்மீர சைவர் தன்மாத்திரையை "தத் - மாத்ரம்" எனப் பகுத்து "அதுவே அவ்வளவே" எனப் பொருளுரைப்பர். சித்தாந்திகள் தாமதாசகங்காரமாகிய பூதாதியங்காரத்தினின்றும் தோன்றுவது தன்மாத்திரை என்பர். மேலும் "அதனளவாய் நிற்றல்" எனச் சொற்பொருளுரைப்பர். மேலும், "இந்நிலை பாலின் தன்மை முழுதும் நீங்காமலும் தயிரின் தன்மை முழுதும் தோற்றாமலும் உள்ள நிலைமையைப் போன்றதாகும்" என விளக்குவர்.[120] காஷ்மீர சைவர் புலக்காட்சியின் அடிப்படைக் கூறுகளாகவும் அகங்காரத்தின் உற்பத்தியாகவும் இதனை எடுத்தாள்வர். தன்மாத்திரைகளாக "சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பவற்றை இரு சாராரும் கூறி நிற்பர். இவை பூதங்கட்கு முதற்காரணமாயும் சூக்குமமாயும் உள்ளவை; இவையே ஐம்புலன்கள்; இவற்றைத் தமிழில் முறையே ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்" என உரைப்பர். சித்தாந்திகள் தன்மாத்திரையை தனித்து நிற்றல் என்னும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு கேவலம், விசிட்டம் என இரண்டாகப் பகுத்துரைப்பர்.[121] கேவலமாவது தனித்து நிற்றலாகும் என்பர். விஷிட்டமாவது ஒரு பொருள் எவ்வகையிலேனும் பிறவற்றோடு தொடர்புற்று நிற்றலாகும் என்பர். அந்த வகையில் சப்தம் கேவலமாய் நிற்க ஏனைய நான்கு தன்மாத்திரைகளும் விஷிட்டமாய் விளங்கும் என்பர். இத்தன்மாத்திரைகளுள் இருந்து பஞ்சபூதங்கள் தோற்றம் பெறுகின்றன. சப்தம் - ஆகாயம், ஸ்பரிசம் - வாயு, ரூபம் - ஒளி, ரசம் - நீர் , கந்தம் - மண் என விளக்குவர். இதனை,

> "பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
> நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி"

எனத் தொடரும் பாடல்வரிகளால் மாணிக்கவாசகர் விளக்கி நிற்கின்றார்.[122] இப்பூதங்கள் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றியதாகக் கூறி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருநிலனது புனலிடை மடிதர எரிபுக எரியது மிகு
பெரு வளியில் அவிதர, வளிகெட வியனிடை முழுவது கெட
இருவர்களுடல் பொறையொடு திரிதழலுருவுடை யவன்
இனமலர்
மருவிய அறுபதம் இசை முரல் மறைவனம் அமர் தருபரனே"

என விளக்குவர்.[123] இவற்றின் ஊடாக இறைவனின் திருவருட் பெருமை விளக்கப்படுகிறது இதையே,

"ஆலம் விதையின் முளை, இலை, கனி கொண்ட சக்தி ரூபமான பெரிய மரம் அடங்கியிருப்பது போல இந்த சராசர உலகு அந்த சிவனாகிய இதயவிதையில் பொதிந்துள்ளது"

எனச் காஷ்மீர சைவர்கள் எடுத்துரைக்கின்றனர்.[124]

இவ்வாறாக முப்பத்தாறு தத்துவங்களைப் பெருமளவு ஒத்த கருத்துக்களோடு கையாண்டாலும் ஒருமைவாதியான காஷ்மீரசைவர் உலகிற்கு முதல் நிமித்த காரணமாக பதியைக் கூறுவது தவிர்க்கவியலாதது ஆகிறது. இதனாலேயே பதி பற்றிய கருத்தாடலோடு இவற்றை வைத்துப் போந்தனர். சித்தாந்திகள் தத்துவத்திற்கு முதற் காரணமாய் மாயையை உரைத்தால் இவற்றை மாயையோடு இணைத்துரைத்தனர்.

அதேவேளை காஷ்மீரசைவாசிரியர்கள் சிலர் முப்பத்தேழாவது தத்துவத்தையும் முன்வைக்கின்றனர். இவர்களுக்குள் முக்கியமானவர் அபிநவகுப்தர் ஆவார்.[125] ஈஸ்வர பிரத்தியபிஞ்ஞானவிமர்சனியின் இறைவணக்க முதற்பாவில் "அதத்வைத வந்தே பரமசிவம் சத்தியாத்ம நிதி" என்பதால் முப்பத்தேழாவது தத்துவத்தை ஏற்கின்றார். பாஸ்கரர், "தத்துவ சத்திரிம்வி பித்தி பூதாம் தத்துவ சத்தரும் பரமசிவரூபாம்" என்கின்றார். தந்திர படதானிகாவில் முப்பத்தெட்டாவது தத்துவத்தையும் கூறுகின்றார்.

ஷேமராஜர் போன்றோரும் முப்பத்தேழாவது தத்துவத்தை ஏற்றே வந்துள்ளனர். "சிதி சுவதந்திரா விஷ்வசித்தி ஏது" என பிரத்திய பிஞ்ஞான ஹிருதயத்தில் கூறியுள்ளார். மஹார்த்த மஞ்சரியில் மஹேஸ்வரானந்தர் இது பற்றிக் கூறியுள்ளார். உத்பலர் பிரத்திய பிஞ்ஞான காரிகாவில் முப்பத்தேழாவது தத்துவத்தை ஏற்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்திகளிடம் இவ்வாறான கருத்துக்கள் இல்லை. அதே வேளை தாத்துவிகங்களாகிய தத்துவங்களின் கூறுகளையும் காரியங்களையும் ஏற்பர். அவை "அறுபது" ஆகும். இவற்றுடன் முப்பத்தாறு தத்துவங்களையும் இணைத்து "தொண்ணூற்றாறு" தத்துவங்களை முன்வைப்பர்.

சித்தாந்திகள் இவற்றோடு சரீரம், அண்டங்கள் என்பன பற்றியும் எடுத்தாள்கின்றனர். முப்பத்தாறு தத்துவங்களும் ஆன்மாக்களுக்கு உடலாக பரிணமித்து நிற்கும் என்பர். அந்த வகையில் ஸ்தூல சரீரம், சூக்கும சரீரம், குணசரீரம், கஞ்சுக சரீரம், காரண சரீரம், என ஐவகை சரீரங்கள் எடுத்தாளப்படுகின்றன. இவ்வகை சரீரங்களும் ஐவகைக் கோசங்களாக வழங்கப் பெறுகின்றன. அவை முறையே "அன்னமய கோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞான மயகோசம் ஆனந்தமயகோசம், என்பனவாகும். அண்டங்கள் நூற்றியெட்டு என்பர்.

இவ்வாறு உரைக்கப்படும் மாயையின் காரியங்கள் "மந்திரம், பதம், வன்னம், புலனம், தத்துவம், கலை" என ஆறு பகுதிகளாக எடுத்துரைக்கப்படுகின்றன. இவ்வாறு அத்துவாக்களையும் நன்குணர்ந்து ஒவ்வொன்றாகக் கடந்து சென்றால் இறைவனை அடையலாம் என்பர்.

**ஐவகை மலங்கள்**

மேற்சொன்ன மும்மலங்களோடு மாயேயம், திரோதானம் என்பனவும் மலங்களாகக் கூறப்பட்டு ஐவகை மலங்களாக சித்தாந்திகள் சுட்டுவது கவனிக்கத்தக்கது. "இம்மலம் மூன்றினோடும் இருமலம் இசைபன்" எனச் சித்தியார் எடுத்துரைக்க[126] "ஆகம மலம் ஐந்தென்பர்" என மாணிக்கவாசகரும் கூறி நிற்கின்றார்.[127] அசுத்த மாயையில் காரியமே மாயேயம் என்பர். அதனை, "மாயையின் காரியத்தை மாயேய மலமதென்றும்" எனச் சித்தியார் கூறிநிற்கின்றது.[128] சுத்த மாயை மயக்கத்தை தராமையால் "விந்து, குடிலை" என சித்தாந்திகளால் சுட்டப் பெறும்.

ஐந்தாவது மலமாக திரோதான சக்தி கூறப்படுகின்றது. இது பதியின் அருட்சக்தியே; மலமல்ல, ஆயினும் மலங்கள் பசுவைப் பந்தப்படுத்தத் தூண்டும் சக்தியாக அமைவதனால் அதனை ஐந்தாவது மலமாக எடுத்தாள்வர். பதியின் ஐந்தொழிலில் "மறைத்தல்" இச்சக்தியின் பாற்படும். மல நீக்கம் ஏற்படும் காலத்தில் இது அருட் சக்தியாய் மாறி ஆன்மா ஈடேற்றத்துக்கு உதவும். இதனை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாகமாம் வகை நின்று திரோதாயி சக்தி
பண்ணுதலான் மலம் எனவும் பகர்வர்; அது பரிந்து
நாகமா நதிமதியம்பொதி சடையான் அடிகள்
நணுகும் வகை கருணை மிக நயக்குந்தானே"

என்றும்[129]

"முற் - சினமருவு திரோதாயி கருணை யாகித்
திருத்தியசத்திநிபாதம் திகழுமன்றே"

என்றும்[130] உமாபதி சிவாச்சாரியர் விளக்கிப் போந்துள்ளார். "தூயவன் றனதோர் சக்தி திரோதனகரிய தென்றும்" அருணந்தி சிவாச்சாரியார் எடுத்துரைத்துள்ளார்.[131] காஷ்மீர சைவம் இக் கருத்துக்களை கொண்டமையவில்லை.

**அடிக்குறிப்புகள்**

1) *சித்தியார், சுப., பா.210*

2) *மேலது, பா. 176*

3) Tantrasara, p. 5

4) Tantraloka, 125, p. 28

5) *திருஞானசம்பந்தன், பெ., மு.கு.நூல், ப. 34*

6) Siva Dristi, 111

7) *சித்தியார், சுப., பா. 279*

8) Prajnanda, Swami, 1975, Introduction To Kashmir Shaivism-Gurudevsiddrapeeth, p. 42

9) Siva sutra, 2

10) *திருமந்திரம், பா. 2405*

11) *சித்தியார், பா. 176*

12) *சிவப்பிரகாசம், பா. 25*

13) Prajnananda Swami, op.cit, p. 42



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) இது அஞ்ஞானம், அழுக்கு எனப் பலவாறு சுட்டப்படுகின்றது.

15) சித்தியார், பா.170

16) சுப்புரெட்டியார், மு.கு.நூல், ப. 184

17) சிவஞானபோதம், 2:1:8

18) சுப்புரெட்டியார், மு.கு. நூல், ப. 165

19) சிவநெறிப்பிரகாசம், பா. 50

20) Jaideva singn, op.cit, p. xxix

21) Isvara Pratyabhijnvivrti, 3 -2 -4

22) தகாரே, க.வை., மு.கு. நூல், ப. 179

23) Guradev, pp. 42 , 43

24) Rudrappa, J., op.cit, p. 89

25) சிவப்பிரகாசம், பா. 20

26) சுப்புரெட்டியார், நா., மு.கு. நூல், ப. 167

27) Rudrappa, J., op. cit, p. 90

28) Isvara Pratyabhijna Vivrti, 3 -2 -4

29) தகாரே, க.வை., நா., மு.கு. நூல், ப. 179

30) சுப்புரெட்டியார், நா., மு.கு. நூல், பக். 167, 168

31) திருவருட்பயன், குறள். 23

32) சிவநெறிப்பிரகாசம், பா. 46

33) Prajnananda Swami, op. cit, pp. 42-43

34) திருவருட்பயன், குறள். 26

35) மேலது, குறள். 29

36) Tantraloka, 6.56

37) சிவப்பிரகாசம், பா. 28

38) மேலது, பா. 25

39) மாணிக்கவாசகர், சிவபுராணம் வரிகள், 26 - 31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40) சேக்கிழார், 1993, பெரியபுராணம் இராமகிருஷ்ண மிஷன், பா. 129

41) இருபா இருப∴து, வரிகள். 8 -10

42) சித்தியார், பா. 94 -96

43) திருக்குறள், குறள். 380

44) சிவப்பிரகாசம், பா. 29

45) ஞானாமிர்தம், அகவல் 26,வரி.1-2

46) சிவப்பிரகாசம், பா. 29

47) சித்தியார், சுப, பா. 91

48) சிவஞானபோதம், சூத். 2

49) சித்தியார், 94

50) மேலது, பா. 100

51) மேலது, பா. 107

52) மேலது, பா. 10

53) பெரிய புராணம், திருக்கூட்டச்சிறப்பு

54) Tantraloka, 6.56

55) "தேவ ஏவ ததாஸௌ சேத் ஸ்வரூபம் காஸ்யதாக்ருசம் தாத்ருக் ப்ரதாஸ்வபாவஸ்ய ஸ்வபாவே காநுயோஜ்யதா" Thantraloka, 8 - 72

56) வேதவுபநிடதங்களில் மாயை பற்றி கூறப்பட்டுள்ளது. ஆகமங்கள் மாயையை முதன்மைப்படுத்துகின்றன. மாயை பற்றிய இலக்கணங்களை விளக்கமாக எடுத்துரைக்கின்றன. உதாரணம்- மிருகேந்திர ஆகமத்தின் மாயாபிரகரண அத்தியாயம்.

57) கந்தையா, மு., 1978, சித்தாந்த செழும்புதையல், ஈழத்துச்சித்தாந்த சைவவித்தியா பீடம், யாழ்ப்பாணம், ப. 59

58) மேலது, பக். 62 - 63

59) மேலது.

60) சிவஞானபோதம், சூத். 1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61) Chatterji, J.C., Kashmir Shaivaism, Indological book corporation patna, p. 53

62) Pandey, K.C., op.cit, p. xvi

63) Para Trimsika, 34

64) Chatterji, J.C., op.cit, p. 54

65) Pandey, K.C., op.cit, p. xxii

66) Chatterji, J.C., op.cit, p. 55

67) *சித்தியார், சுப, பா. 34*

68) *மேலது, பா. 144*

69) *கோவிந்தசாமிப்பிள்ளை, இராம., (பதிப்பு) 1963, தத்துவ விளக்கம், சரசுவதி நூல் வெளியீடு, இந்தியா, ப. 43*

70) *சாந்தோக்கிய உபநிடதம், 6.2.1*

71) *சுப்புரெட்டியார், நா., மு.கு நூல், ப. 208*

72) *தகாரே, க.வை., மு.கு. நூல், ப. 199*

73) Tantraloka, 1.56

74) Siva Sutra, 3.30

75) *பிரத்திய பிஞ்ஞான ஹிருதயம், ப. 47*

76) *சுப்புரெட்டியார், மு.கு. நூல், ப. 208, அடிக்குறிப்பு. 53*

77) Spanda nirnaya, p . 7, karika. 1,2

78) *தகாரே, க.வை., மு.கு. நூல், ப. 147, அடிக்குறிப்பு. 49*

79) Lop.cit

80) Para pravesika, p. 6

81) Isvara Pratyabhijna, 3.1.4

82) *சுப்பு ரெட்டியார், நா., மு.கு. நூல்,* p. *215*

83) Pandey, K.C.,- op.cit, p. 48

84) *சுப்புரெட்டியார், மு.கு. நூல், ப. 217*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85) "வந்தடைந்த பின்னமாய் வன்னங்கடோற்றம் வருமளவு படவொடுங்கி மயிலண்ட சலநேர்" சிவப்பிரகாசம், 38

86) சித்தியார், சுப, பா. 46

87) Pandey, K.C., op.cit , p. 50

88) Prapravesika, p. 6

89) ஷட்த்ரிம் சத்தத்வ ஸந்தோஹம், காரிகை, 1, தகாரே. க.வை., மு.கு. நூல், ப. 149

90) Prapravesika, pp. 6,7

91) Mahartha manjari, 15

92) பிரத்திய பிஞ்ஞான ஹிருதயம், சு.3

93) Pandey - K.C., op.cit, p. xxiii

94) Prapravesika, p. 7

95) பிரத்திய பிஞ்ஞான ஹிருதயம், சூத். 3

96) Isvara Pratyabhinjna, 3.1.3

97) Op.cit, 3.1

98) தகாரே, க.வை., மு.கு. நூல், பக். 156, 157

99) சிவப்பிரகாசம், பா. 39,40

100) வச்சிரவேல் முதலியார், மு.கு. நூல், ப. 69

101) ஷட்த்ரிம்சத் தத்வஸ்ந்தோஹம், பக். 6 - 8

102) வச்சிரவேல் முதலியார், மு.கு. நூல், ப. 68

103) சிவப்பிரகாசம், 39

104) வச்சிரவேல் முதலியார், மு.கு. நூல், ப. 68

105) ஷட்த்ரிம்சத் தத்வஸ்ந்தோஹம், பக். 6 - 8

106) நிகழ்காலங் கழிகால மெதிர்கால மென்றே ஓசை தரவருங்கால மெல்லைபலம் புதுமையுறுவிக்கு மாறைசக்தி யுடனாய் நின்றே - சிவப்பிரகாசம், 40

107) பிரத்திய பிஞ்ஞான ஹிருதயம், சு. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

108) சிவப்பிரகாசம், 41

109) Prapravesika, pp. 7 - 9

110) Pratyabhijna vivrti, 2.2.4

111) Jaideva singh, op.cit , p. xxvi

112) சிவப்பிரகாசம் · பாடல்· 42

113) Prapravesika, 9.10

114) சுப்புரெட்டியார், நா., மு.கு. நூல், ப. 232

115) Prapravesika, 10

116) சிவப்பிரகாசம், பா. 42

117) Isvarapratyabhinjna vimarsini, 22

118) Jaideva singh, op.cit , p. xxviii

119) சுப்புரெட்டியார், நா., மு.கு. நூல், ப. 235
Jaideva Singh, op.cit, p. xxviii

120) சுப்பரெட்டியார், நா., மு.கு. நூல், ப. 238

121) மேலது, ப. 240

122) மாணிக்க வாசகர், போற்றித்திருவகவல், பாடலடிகள். 137, 138

123) திருஞானசம்பந்தர், மு.கு. நூல், 1:2217

124) PraTrimsika, 28

125) Pandey, K.C., op.cit, p. 92 (முப்பத்தேழாவது தத்துவம் பற்றிய கருத்துக்கள் இந்நூலிருந்தே பெறப்பட்டன).

126) சித்தியார், சுப., பா. 86

127) மாணிக்கவாசகர், மு.கு.நூல், அச்சோபதிகம். 09

128) சித்தியார், சுப., பா. 87

129) சிவப்பிரகாசம், பா., 20

130) சிவப்பிரகாசம், பா. 48

131) சித்தியார், சுப, பா. 787



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தியும் முத்திக்கான மார்க்கங்களும்

சைவதத்துவங்களின் உயரிய நோக்கமாகவும் உன்னத இலட்சியமாகவும் இருப்பது முத்தியே. இந்து மெய்யியலில் முத்தி எனும் கருத்தியல், "விடுதலை, சுதந்திரம், வீடு, மோட்சம், நிர்வாணம், அருகதநிலை" எனப் பல சொற்களால் சுட்டப்படுகின்றது. அனைவரினதும் இலட்சியம் முத்தியே. இறைவனது அருளினாலும் ஆன்மாவினுடைய முயற்சியினாலும் அநாதியான ஆன்மாவை பசுத்துவப்படுத்தும் மலங்கள் நீங்கினால் முத்தி சித்தியாகும் என்பர்.

ஆன்மா தன்னைக் கட்டியிருக்கும் மலங்களினின்றும் விடுபடல் அல்லது அஞ்ஞான இருளினின்றும் விடுபட்டு மெய்ஞ்ஞானம் அடைதல் முத்தி எனச் சித்தாந்திகள் விளக்கம் கூறுவர்.[1] துன்பம் துளியுமிலாத ஒன்றுமற்ற ஆனால் யாவுமுள்ள பேரின்பநிலை முத்தி எனச் சுட்டப்படுகின்றது. இதனை விளக்க முற்படும் சிவாக்கிரயோகிகள்,

"அறைந்தனமுன் னேசைவ சித்தாந்த முத்தி
யான்மாவின் சிற்சக்தி யனாதி யாணவத்தால்
மறைத்தது தான் பருவத்தே ஈசனருளினாலே
மாசற்று நின்றநிலை யேசிவத்தை மன்னி
உறைத்துவேற றவுப்பு நீருடனே நன்னீ
குற்றதுபோ லோருணர்வோ யுவமை யின்றி
நிறைந்து பர மானந்த மெய்தியது தானு
நிகழாம லதுதானாய் நிற்றலென நேரே"

என எடுத்துரைத்துள்ளார்.[2] பரிபூரணனான சிவத்தைப் பொருந்தி அச்சிவமாகவே நிற்றல் முத்தி என்கிறார். அருணந்தி சிவாச்சாரியாரும் "சிவனடியைச் சேருமுத்தி" எனக் குறிப்பிடுகின்றார்.[3]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலவாசனையினின்றும் விடுபட்டு சிவனடியைச் சேரலே சைவசித்தாந்தம் கூறும் முத்தி என்பது தெளிவாகின்றது. காஷ்மீரசைவம் பந்தம் என்ற ஒன்று உண்மையிலே இல்லை என்றும் இல்லாத பந்தத்தில் இருந்து விடுபடுதல் என்பது எவ்வாறு என்றும் வினாவுகின்றனர். ஒருமைவாதிகளான இவர்கள், "யதா ஸர்வ - பதார்தாநாம் பகவத் சிவரூபதா" என்கின்றனர்.[4] "சர்வம் சிவமயம்" என்பதை சைவசித்தாந்திகளும் ஏற்பர். ஆனால் காஷ்மீரசைவர், எல்லாம் சிவரூபம் எல்லாப் பொருட்களிலும் சிவரூபம் உண்டு என்கின்றனர்.

"..... ஸர்வாஸூ ப்ரதிபத்தி ஷூ
விஞ்ஞேயம் சிவரூபத்வம் ஸ்வசக்த்யாவேச நாத்மகம்"

என்கிறது சிவதிருஷ்டி.[5] ஆக, பந்தமும் இல்லை. மோட்சமும் இல்லை என்பர். இதனைப் பிறிதொரு விதத்திற் கூறின் எங்கும் எல்லாம் சிவரூபம் எனின் பந்தம், மோட்சம் எனும் வேறுபாடு இல்லை என்றாகின்றது.

அதேவேளை மோகமும் அஞ்ஞானமும் துலங்கும் ஸம்சார நிலையில் பசுவிற்கு இவ்வேறுபாடு தோன்றும். "ஸைவேஷா ஸாச ஸம்ஸாரோ பந்த மோக்ஷாவத ஸ்தீதௌ" என விளக்கப்படுகின்றது.[6] ஆனால் அஞ்ஞானம் நீங்கிய நிலையில் பந்த மோட்ச வேறுபாடு இல்லை என்பர். எது எவ்வாறு இருந்த போதிலும் ஒரு கட்டத்தில் பந்தம், மோட்சம் எனும் வேறுபாடு இருப்பதை அவர்கள் மறுக்கவில்லை. முத்தி எனும் கருத்தை விளக்க முற்பட்ட அபிநவகுப்தர், "சிவாபேத - ப்ரதீதிமாத்ரம் மோக்ஷ..." என்கின்றார்.[7] அதாவது சிவன், சீவன் எனும் பேதவுணர்வே அல்லது நம்பிக்கையே பந்தம் ஆகும். ஆன்மா தன் உண்மை இயல்பை அறிதல் - உணர்தல் முத்தி. "அக்கிருத்திம அஹம் விமர்ச" என்பது உண்மையான உள்ளார்ந்த தூய நான் எனும் பிரக்ஞை ஆகும். இக்கட்டத்தில் பந்தம் - மோட்சம்; குடம் - கும்பம்; நல்லது - கெட்டது என்கின்ற பேதம் அற்றுப் போகும். சுத்தமான தன்னையே சார்ந்துள்ளதான "நான்" எனும் உணர்வு (சுயப்பிரக்ஞை), செயற்கையற்ற உண்மையை உணர்கின்றது; தன்னை "விமர்ச" என உணர்கின்றது. இது சிவப்பிரக்ஞை நிலை, இந்நிலையே மோட்சம் எனப்படுகின்றது.[8]

சைவசித்தாந்தத்தின் படி ஆன்மா சார்ந்ததன் வண்ணமானது - சதசத்; அசத்தோடு இணைந்து பந்தமுற்று பசுத்துவமாகிய கீழ்நிலைக்குச் செல்லும்; கன்மத்தைச் செய்து பிறவிக்கு உட்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கன்மத்தை ஆன்மாக்கள் அனுபவிக்க மாயை "தனு, கரண, புவன" போகங்களை அளிக்கின்றது. மயக்கத்தைத் தரும் மாயா காரியங்களை ஆன்மா சரிவரப் பயன்படுத்தும் போது முத்திக்கான மார்க்கங்கள் தெளிவுடையாதா கின்றன. "மாயா தனு விளக்காய்" என மெய்கண்டாரும்[9] "விடிவா மளவும் விளக்கனைய மாயை" என உமாபதிசிவாச்சாரியாரும் [10] கூறிப்போந்தமை இதற்குச் சான்றாகின்றன.

ஆணவ மலம் அறிவை மறைத்து அறியாமைக்குட் படுத்துகின்றது. இவ்விருள் நீக்கமுற ஆன்மாவின் முயற்சி மட்டும் போதாது. மாயையும் ஆன்மாவிற்கு கைவிளக்கே. ஆன்மா அறிவு பெற்று முத்தி பெற வேண்டும் என்ற உணர்வு சித்திக்க வழியாது எனும் வினா மேற்கிளம்புகின்றது. அதற்கு சைவசித்தாந்திகள் "அவனருள்" எனப் பதிலளிக்கின்றனர். இதனை, "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என மணிவாசகரும் கூற[11] காரைக்காலம்மையார், அருளாலே மெய்ப் பொருளை நோக்கும் விதியுடையோன்" எனவுங் கூற,[12] "அவனருள் பெறாது முத்தியடைந்தனரில்லையல்ல, லவனருளின்றி வாழ மமரரும் யாருமில்லை, யவனருளெய்தி னெய்தா வரும் பொருளில்லை, யானை யவனல திறைவனில்லை, யவனை நீ அடைதி யென்றான்" எனக் கச்சியப்பரும் கூறிப்போத்தார்.[13]

காஷ்மீரசைவமும் இதனை எடுத்துரைக்கின்றது. இறையருளாகிய "அநுக்கிரகம் அல்லது சக்திபாதம்" இன்றி மோட்சம் சித்திக்காது. காஷ்மீரசைவத்தில் "இத்தம் ஸ்ரீசக்தி பாதோயம் நிரபேக்ஷ இஹோதித:" என்று கூறப்படுகின்றது.[14] இறைவனின் அருளினாற்றான் ஜீவன் ஆத்மஞானம் பெறுகின்றான். அது கேவலம், இறைவனது திருவுள்ள விருப்பத்தைப் பொறுத்தது. அதில் உயிரின் செயலுக்கு இடமில்லை என்றாகின்றது. ஜீவனும் பரமசிவனும் ஒன்றெனெ ஒருமைவாதம் பேசும் காஷ்மீரசைவம் இவ்வாறு உரைப்பது முரணாக உள்ளது. ஏனெனில் இறைதிருவுளமே சீவனின் முத்திக்கு வழிசமைக்கும் எனின் பதியும் பசுவும் வேறாகின்றது. அது பேதமற்ற ஒன்றெனில் இவ்வாதம் குறைபாடு உடையதாகின்றது. சித்தாந்திகள் பதி வேறு பசு வேறு எனப் பேதமுரைப்பதனால் இம்முரண் அங்கு நிகழவில்லை. பசுவின் பசுத்துவமகற்றி தன்னடி சேர்ப்பவனாகப் பதி செப்பப்படுவது சித்தாந்தத்தைப் பொறுத்தவரை பொருத்தமானதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரர் "கைவல்யம்"[15] எனும் சொல்லால் மோட்சத்தைக் குறிக்கின்றார். கைவல்ய நிலையில் மாயையும் கர்மமும் அழிகின்றன. காஷ்மீர சைவத்தின்படியும் மோட்சநிலையில் மலங்கள் யாவும் அழிகின்றன. ஆனால் சைவசித்தாந்தம் அதனை ஏற்பதில்லை. முத்தியிலும் ஆணவமலம் இருக்கும். வலி ஒடுங்கியதாய் வறுத்த வித்துப்போல் இருக்கும் என்பர். அதே வேளை வேதாந்தம் தன்னைத் தான் உணர்தல் - தன்னை பிரம்மமாக உணர்தலே முத்தி என்கிறது. ஒருமைவாத சைவமான காஷ்மீரசைவமும் இதனை வழிமொழிந்து நிற்கின்றது. சைவசித்தாந்தம் இறைவனுடன் இரண்டற அத்துவிதமாய் இணைதலே முத்தி" எனக் கூறுகிறது. காஷ்மீரசைவம் மோட்சம் என்பது வேறு எதுவுமல்ல; ஆன்மா தன் உண்மையான ஸ்வரூபத்தை, தானே பரஞானஉருவமுடையவன் என்பதை உணர்தலாகும். இதனை,

"மோக்ஷோ ஹி நாம நைவாந்ய ஸ்வரூப - ப்ரதநம்ஹிதத்
ஸ்வரூபம் சாத்மத: ஸம்வித் நாத்யத்"

எனும் தந்திரலோக வரிகளால் அறிந்து கொள்ளலாம்.[16]

எது எவ்வாறு இருந்த போதிலும் மோட்சம் எனும் கருத்து இரு மெய்யியல்களிலும் தவிர்க்க இயலாத பேற்றினைப் பெற்றுள்ளது. அதனை அடைதலே அவற்றின் இலட்சியமாகும்.

இந்து மெய்யியல் மரபில் "அத்வைதம்" எனும் சொல் பெரிதும் கையாளப்பட்டுள்ளது. "அத்வைதம்" என்பதைத் தத்தம் மெய்யியல் நோக்கில் சங்கரர், இராமானுஜர், மத்துவர், முதலான வேதாந்திகள் தொடக்கம் ஒருமைவாதசைவர் அல்லது காஷ்மீரசைவர், சைவசித்தாந்திகள், ஸ்ரீகண்டர் உள்ளிட்ட சைவ மெய்யியலாளர்களும் எடுத்தாண்டுள்ளனர். இது கேவலாவத்வைதம், விஷிட்டாத்வைதம், துவைதம், சுத்தாத்வைதம், சிவாத்துவிதம், எனப் பல மெய்யியற் சிந்தனை மரபுகளை தோற்றுவித்தது. அத்வைதத்தின் "அ" நகார மறுப்பு, ஆறு வகையிலானதாக எடுத்துரைக்கப்படுகின்றது. அவை "அபாவம் - இன்மை, சாதிருசியம் - அன்மை, விரோதம் - மறுதலை, மற்றும் பேதம் அற்பதை, அப்பிராசஸ்தியம் என்பன. முதற் சொன்ன மூன்றும் முதன்மையானவை. சங்கரர், இராமானுஜர், ஸ்ரீகண்டர், போன்றோரும், காஷ்மீரசைவரும் அத்வைதத்தை அபாவ - இன்மைப் பொருளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைத்துள்ளனர். சைவசித்தாந்திகள், பாசுபாதர், வைஷ்ணவர், உள்ளிட்டோர், அதனை அன்மைப் பொருளின் பயன்படுத்துகின்றனர். காஷ்மீரசைவம் பசு, பாச இருப்பை உண்மை என ஏற்கின்ற அதேவேளை பதியே யாவுமாகி நிற்கின்றது எனும் கருத்திலும் உறுதியாக உள்ளது. இராமானுஜரை அண்மித்த தன்மையாக இதனைக் கொள்ளலாம். "விடயம், விடயி" உறவாக இது எடுத்தாளப்படுகின்றது.

முப்பொருளையும் ஏற்கும் சைவசித்தாந்திகள் பன்மைவாதிகள்; அன்மைப் பொருளில் அத்துவிதத்திற்கு விளக்கம் தருகின்றனர். அ + ஏகம் - அநேகம் எனக்கூறி "எண்ணுப்பெயர் மேல்வரும் நகாரம் அன்மைப் பொருளையே தரும் என்றும் அந்தவகையில் அ +துவைதம் ஸ்ரீ அத்வைதம் என்பதும் அன்மைப் பொருளையே தருமென சித்தாந்திகள் வாதிடுகின்றனர். [17] இதனை மெய்கண்டார், "அத்துவித மென்ற சொல்லே அற்றிய நாத்தியை யுணர்ந்து மாயிட்டு" என எடுத்துரைக்கின்றார்.[18] ஏகம் என்பதல்ல அத்துவிதம். அத்துவிதமானது வேறின்மை, பிரிவின்மை, எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. பதி, பசுவுடன், கலப்பினால் ஒன்றாய், பொருட்டன்மையால் வேறாய் செயற்றன்மையால் உடனாய் இருப்பன் எனச் சித்தாந்திகள் இதற்கு விளக்கமளிப்பர். இதனை,

"ஈறாகி அங்கே முதலொன்றாய் ஈங்கிரண்டாய்
மாறாத எண்வகையாய் மற்றிவற்றின் வேறாய்
உடனாயிருக்கும் உருவுடைமை என்றும்
கடனா றிருக்கின்றான் காண்"

எனும் திருக்களிற்றுப் படியாரின் பாடலூடு புரிந்து கொள்ளலாம்.[19] உமாபதிசிவாச்சாரியாரும்,

"...பொற்பணி போல் அபேதப
பிறப்பிலாதாய் இருள்வெளி போற்பேதமும்சொற் பொருள்போற்
பேதாபேதமும் இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதால் உடலுயிர்கள் அருக்கன்
அறிவொளிபோல் பிறிவரும் அத்துவிதமாகும்
சிறப்பினதாய் ..."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என விளக்கி நிற்பது குறிப்பிடத்தக்கது.[20] இறை ஆன்மா உறவை மெய்கண்டார் "அவையேதானேயாய்" என்கிறார்.[21] சிவஞான யோகிகள் இதனை " இரட்டுற மொழிதலான் "அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய்" எனப் பொருண்நிலைப்படுத்துகின்றார். ஆக இறைவன் ஆன்மாவுடன் ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்பன் இவ்வாறு பேத. அபேத, பேதாபேத நிலையினதாக அத்துவிதம் விளக்கப்படுகிறது. மேலும், "ஒன்றாகம விரண்டாகாமல் ஒன்று மிரண்டு மின்றாகாமல்" என அருணந்திசிவாச்சாரியார் இரண்டுமின்றி ஒன்றுமின்றி அத்துவித நிலைக்குரியதாய் எடுத்தாள்கின்றார்.[22] ஆக, சைவசித்தாந்திகள் காணும் முத்தி துன்பம் துளியும் இலா பேரின்பநிலை ஆகும்.

உலகாயதர், இவ்வுலகின் கண் இளம் பெண்களுடன் உறவு கொண்டு இன்பமடைதலே முக்தி என்கின்றனர். உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் எனும் ஐந்து கந்தங்களும் கெட வருவது முக்தி எனப் பௌத்தர் கூறுவர். நிகண்ட வாதிகள் முக்குணங்களும் அடங்குவதே முக்தி என்பர். பிரபாகர் எல்லாக் கன்மபயன்களும் அற்றுப் போவதே முக்தி என்பர். கர்மயோகிகளோ சுத்த மாயாசரீரம் நீங்காது நித்தியமாயிருத்தல் முக்தி என்பர். மாயாவாதிகளான சங்கரவேதாந்திகள் "நான் பிரமம்" என உணர்தல் முத்தி என்பர். பாற்கரியார், ஆன்மா தன்னிலை கெடுதலே முக்தி என்பர். காயகல்பம் முதலிய அட்டமாசித்திகளைப் பெறுதல் முக்தி எனச் சித்தர் கூறுவர். ஆன்மா ஒன்றுமறியாது பாடாணம் போலக் கிடப்பது முக்தி எனப் பாடாணவாதிகள் கூறுவர். ஆனால் சைவசித்தாந்திகளோ "திரிமலமும் நீங்க ஆன்மா, "திருவருளால்" இறைவனடி சேர்தலே முத்தி" என்பர். இதனை உமாபதி சிவாச்சாரியார்,

"அறிவையறின் புறுமுத்தி கந்த மைந்தும்
அறுமுத்தி திரிகுணமும் அடங்கு முத்தி
விரிவுவினை கெடு முத்தி மலம் போமுத்தி
விக்கிரக நித்த முத்தி விவேக முத்தி"
"பரவுமுயிர் கெடுமுத்தி சித்தி முத்தி
பாடாண முத்தி இவை பழிசேர் முத்தி
திரிமலமும் அகலஉயிர் அருள்சேர் முத்தி
திகழ் முத்தி யிதுமுத்தித் திறத்த தாமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவரும் பாடலால் கூறி நிற்கின்றார்.[23] த்ரிக தரிசனத்தில் முக்தி நிலை என்பது "தனது இயல்பான மூல ஸ்வரூபத்தை மீண்டும் அறிந்து கொள்ளுதல்" என எடுத்தாளப்படுகின்றது.[24] குடம் இருக்கும் வரை "குடாகாசம்" என வழங்கப்பட்டு வந்த பொருள் குடம் நீங்கிய / உடைந்த இடத்து பழைய மகாகாசமாகவே இருக்கும். அதுபோல ஆன்மா "தான் பிரமம் என உணர்தல்" முக்தி எனப்படுகிறது. இக்கருத்து மாயா வாதத்தை ஒத்ததாயினும் இது பசு, பாச இருப்பை ஏற்பதால் இம்மெய்யியல் ஒரு வகை விஷேடித்த அத்வைதம் எனலாம். நீரும் நீரும் கலப்பது போல் சீவனும் சிவனும் சமநீர்மையடைதலே முக்தி என்பர் காஷ்மீரசைவர்.

சைவசித்தாந்தத்திலும் காஷ்மீரசைவத்திலும் பெத்தத்திலே தத்துவங்கள் எல்லாம் ஆன்மாவோடு நிற்பது போல முக்தியிலே ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும் எனப்படுகின்றது. சித்தாந்திகள் இதனை, சூரியனின் பிரகாசத்திற் சந்திரனின் பிரகாசம் இரண்டறக் கலப்பது போல முக்தியில் ஆன்மா இறைவன் திருவடியை இரண்டறச் சேர்ந்து பேரின்பம் பெறும் என்பர். இதனை,

"ஆதவன் தன் சந்நிதியில் அம்புலியின் ஆர்சோதி
பேதமற நிற்கின்ற பெற்றிபோல் - நாதாந்தத்து
அண்ணல் திருவடியில் ஆன்மா அணைந்தின்பக்
கண்ணில் அழுந்தியிடுங் காண்"

என்கிறது உண்மை விளக்கம்.[25] முக்தியிலும் பதி, பசு, பாசம் எனும் மூன்றும் இருக்கும். முக்தியின்பத்தை அனுபவிப்பது ஆன்மா; வழி செய்து கொடுப்பது பதி; அதனை விளைவிப்பது மலம் என்பர். ஆனால் காஷ்மீர சைவர்கள் முக்தியில் பதி மட்டுமே இருக்கும் என்பர். அவர்கள் ஒருமைவாதிகள். பதியின் சக்தி மலங்கள்; பசுவானது பாசம் நீங்கத் தன்னைத் தான் உணர்ந்து பதியாகிவிடும் . ஆக, எஞ்சுவது பதியே.

முக்தி நிலையில் ஆன்மா பூதச்சேர்க்கையற்று வாக்கு, மனம், காயம், செயல், மற்றும் தன்னுணர்வற்று மலமற்று எல்லையற்ற வியாபகமாய் எங்கும் இருக்கும் . இதனை,

"இரவுபக லில்லா இன்பவெளி யூடே
விரவி விரவிநின் றுந்தீபற
விரைய விரைய நின்றுந்தீபற"

எனத் திருவுந்தியார் கூறுகின்றது.[26] மேலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மலமில்லை மாசுமில்லை மானாபிமானம்
குலமில்லை கொள்ளுங் குணங்களுமில்லை
நலமில்லை நந்தியை ஞானத்தினாலே
பலமன்னி யன்பிற் பதிந்துவைப் போர்க்கே"

எனத் திருமந்திரம் கூறுகிறது.[27] ஆக,

"தாடலை போல் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலைநீ ஏகமெனக் கொள்"

எனும் வரிகட்கு இணங்க இரண்டறக் கலத்தலே சித்தாந்த முக்தி ஆகும்.[28]

**முக்திக்குரிய மார்க்கங்கள்**

இவ்விரு மெய்யியல்களும் முக்திநிலையை அடையப் பல்வேறு வழிமுறைகளை எடுத்துரைக்கின்றன. மோட்சஞானம் என்பது புத்தி மார்க்கத்தாலோ, தர்க்கத்தினாலோ கட்டமைக்கப்படுவதில்லை. அதற்கு இறைவன் அருள் தேவை என இருசாராரும் முன்மொழிகின்றனர். ஆக, இறைவனின் திருவுள்ளத்தைப் பொறுத்தது முக்தி என்றும் அதில் மனிதச் செயலுக்கு இடமில்லை என்றும் காஷ்மீரசைவர் கூறுகின்றனர்.[29] அதேவேளை இறையருள் ஆன்மமுயற்சியின்றிக் கிடைப்பதில்லை என்பதை இருமெய்யியலாளர்களும் ஏற்று நிற்பர். உலகியலறிவோடு இருக்கும் பாசஞானத்திலிருந்து விடுபட்டுத் தன்னை உணர்விக்கும் பசுஞானத்தை உணர்ந்து ஆன்மா பதிஞானத்தைப் பெறும். இதனூடாக ஆன்மா சிற்சக்தியின் செயற்றிறம் உணரப் பெறும் என்பர் சித்தாந்திகள். அந்தவகையில் சைவசித்தாந்தம் சைவநாற்பாதங்களை முக்திக்குரிய வழிகளாக முன்வைக்கின்றது. இதனை,

"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய்கனிபோல் அன்றோபராபரமே"

என்றார் தாயுமானவர்.[30] சிவஞானசித்தியாரும்,

"......அருங்கலைகள் பல தெரிந்தும் ஆரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேதச்
சிரப் பொருளை மிகத் தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவர் இதிற் சரியா, கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என எடுத்துரைக்கின்றது.[31] இந்நால்நெறியும் முறையே தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என நால்வகை மார்க்கங்களை உடையனவாகத் திகழ்கின்றன. இதனை,

"சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கந்
தாசமார்க் கம் என்றுஞ் சங்கரனை யடையும்
நன் மார்க்கம் நால் அவைதாம் ஞானயோக
நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்"

என்கிறார் அருணந்திசிவாச்சாரியார்.[32] சரியை முதற் கட்டமாகவும் ஞானம் இறுதிக்கட்டமாகவும் கிரியா, யோகநிலைகள் இடைவளர்ச்சிக் கட்டங்களாகவும் சித்திரிக்கப்படுகின்றன. ஞானமே உயர்ந்ததும் சிறந்ததுமான வழியாக முன்மொழியப்படுகின்ற போதிலும் அதற்கு ஏதுவாக மீதி மூன்று நிலைகளும் சித்தாந்திகளால் சுட்டப்பெறுகின்றன.

காஷ்மீர சைவர்களும் முக்திக்கு வழியாக நான்கு உபாயங்களைக் கூறுகின்றனர். அவை, ஆணவோபாய, சாக்தோபாய, சாம்பவோபாய, அனுபாய எனப்படுகின்றன. இவற்றின் மூலம் அணுத்தன்மை நிலையிலிருந்து பசு, சிவத்துவம் - சிவஸ்வரூபம் பெறுகின்றது என்பர்.[33] சிவாகமங்கள் சரியா, கிரியா, யோகா, ஞானா பாதங்கள் என அத்தியாயங்களாக பகுக்கப்பட்டிருத்தல் போலச் சிவசூத்திரம் முதலானவையும் ஆணவ, சாக்த, சாம்பவ, அனு உபாயங்களாக கட்டமைக்கப்பட்டிருத்தல் கவனிக்கத்தக்கது. காஷ்மீரசைவர் உயிர்களின் மெய்யுணர்வு வளர்ச்சிக்கேற்ப ஏதேனும் ஒன்றைத் தொடங்கி இப்படிமுறையை அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்பர்.

சைவசித்தாந்தத்தின் படி சைவநாற்பாதங்கள் முக்திக்குச் சிறந்த உபாயங்கள்; அவற்றுக்குரிய மார்க்கங்களாக முறையே "தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம்" போன்றன எடுத்துரைக்கப் படுகின்றன. இவற்றால் பெறப்படும் முத்திகளாக முறையே " சாலோபம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்" போன்றன கூறப்படுகின்றன. இதனை,

"சன்மார்க்க முத்திகள் சாலோக்கி சாமீப்பிய
சாரூப்பிய சாயுச்சியம் என்று சதுர்விதமாம்
முன்மார்க்க ஞானத்தால் எய்துமுத்தி
முடிவென்பர் மூன்றினுக்கும் முத்திபதம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பர்.[34] சித்தாந்திகள் கூறும் இந்நான்கு பாதங்களும் தத்தம் முள்ளே நன்னான்கு பிரிவுகளை உடையன. உதாரணமாக சரியாபாதம் "சரியையிற் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என்பன. இவ்வாறே கிரியை யோகம், ஞானம் என்பனவும் தம்முள் நன்னான்கு பிரிவுகளைக் கொண்டிலங்குகின்றன.

**சைவ நாற் பாதங்கள்**

சரியை என்பது புறவழிபாடு, உடலால் இறைவனுக்குச் செய்யும் பணி, இது தடத்த நிலைச் சிவனின் உருவவழிபாட்டை, அருவுருவ, அருவ நிலைகளிலுள்ள இறைவனை வழிபடும் சிந்தனைப் பக்குவத்திற்கு உரிய ஆரம்ப நிலைப்படியாக அமைவது என்பர். இதனை,

"தாதமார்க்கம்சாற்றிற் சங்கரன் தன் கோயில்
தலம் அலகிட் டிலகுதிரு மெழுக்குஞ் சாத்திப்
போதுகளுங் கொய்து பூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பல சமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதில் திரு விளக்கிட்டுத் திருநந்த வனமும்
செய்து திருவேடங் கண்டால் அடியேன் செய்வது
யாது பணி யீரென்று பணித்தவர்தம் பணியும்
இயற்றுவதிச் சரியைசெய்வோர் ஈசனுலகிருப்பர்"

என அருணந்தி சிவாச்சாரியார் கூற[35] இதனைத் திருமூலர்,

"எளியனல் தீப மிடல் மலர் கொய்தல்
அளிதின் மெழுகவதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ்சனமாதி
தளிதொழில் செய்வது தான் தாசமார்க்கமே"

என்கிறார்.[36] இவற்றுள் திருக்கோயில் அலகிடல், மெழுகிடல், என்பன சரியையிற் சரியை; ஆலயத்திலே வீற்றிருக்கும் பரிவாரமூர்த்திகளுள் ஒருவரை வழிபடுதல் சரியையிற் கிரியை; உள்ளத்திலே சிவபெருமானின் உருவத்திருமேனியை தியானித்தல் சரியையில் யோகம்; அத்துவித பாவனையின் பயனாக ஓர் அனுபவ உணர்வு ஏற்படுதல் சரியையில் ஞானம் என்பர். சரியை சிவவினையாக சிவத்தொண்டாக எடுத்தாளப்படுகின்றது. இச்சரியையின் வழி நிற்போர் தாசமார்க்கத்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை ஆண்டவனாகவும் தம்மை அடிமையாகவும் பாவனை செய்பவர். இவ்வழி இவர்களுக்குக் கிடைக்கும் முக்தியைச் சித்தாந்திகள் "சாலோக்கியம்" என்பர். "சாலோகமாதி சரியாதி யிற் பெறும்" என்கிறார் திருமூலர்.[37]

இரண்டாவதாக உரைக்கப்படுவது கிரியை ஆகும். இது அகப்புற வழிபாடு; அருவுருவநிலையிலுள்ள சிவத்தை வழிபடல்; மனம், வாக்கு, காயமெனும் திரிகரண சுத்தியோடு வழிபடல் எனப் பலவாறு விளக்கப்படுகின்றது. இதனை அருணந்திசிவாச்சாரியார்,

"புத்திரமார்க் கம்புகலில் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனம் அமுது முதல் கொண் டைந்து
சுத்திசெய்தா சன மூர்த்தி மூர்த்தி மானாம்
சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த
பத்தியினால் அருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினொடும் எரியில் வரு காரியமும் பண்ணி
நித்தலும்இக் கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலன்தன் அருகிருப்பர் நினையுங்காலே"

எனவுரைத்துள்ளார்.[38] கிரியைக்குரிய மார்க்கம் சற்புத்திர மார்க்கம் ஆகும். இதனைத் திருமூலர்,

"பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை
நேசித்திட் டன்னமும் நீ சுத்தி செய்தன்மர்
றாசற்ற சற்புத்திர மார்க்க மாகுமே"

என எடுத்தாண்டுள்ளார்.[39] கிரியைக்கு வேண்டிய வாசனைத் திரவியம் தூபம், தீபம், தீர்த்தம், புட்பம், பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம் முதலிய பூசைக்குரிய பொருட்களைச் சேகரித்தல். கிரியையிற் சரியை; பூதசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, லிங்கசுத்தி எனும் ஐவகைச் சுத்திகளையும் செய்து சேகரித்த பொருட்களால் உட்பூசை, புறப்பூசை, முதலியவற்றை முறைப்படி செய்தல் கிரியையிற்கிரியை; அகத்திலே பூசை, ஓமம், தியானம், எனும் மூன்றாலும் முறையே இருதயம், நாடி, புருவநடு எனும் மூவிடங்களை வகுத்துக் கொண்டு செய்யும் அந்தர்யாகப்பூசை கிரியையில் யோகம்; அந்தர்யாக பூசையின் பயனாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் அனுபவ உணர்வு கிரியையில் ஞானம் என எடுத்தாளப் படுகின்றது. இக்கிரியாநெறி தந்தை மகன் உறவினதாகச் சற்புத்திர மார்க்கமாகத் திகழ்கின்றது. இவ்வழி ஏற்படும் முத்தி சாமீபமாகும். இதனைத் திருமூலர்,

"பாசம் பசுவான தாகும் இச் சாலோகம்
பாச மருளான தாகும் இச் சாமீபம்"

என்கின்றனர்.[40] சம்பந்தர்,

"நறைமலி தருமளறொடுமிகை நகுமலர் புனகமிகு வளரொளி
நிறைபுனல் கொடுத்தனை நினைவொடு நியதமும் வழிபடும்
அடியவர்
குறைவில் பதம் அணைதர அருள்குணமுடையிறையுறை வனபதி
சிறைபுன லமர்சிவ புரமது நினைபவர் செயமகள் தலைவரே"

என சாமீபமுத்தியை விளக்கிப் போற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.[41]

"யோகம்" என்பது புலன்களை ஒடுக்கி ஆதாரங்கள் ஆறிலும் பொருந்தி, பரிபூரண வஸ்துவான பதியை சிந்தையில் இருத்தி, தியானித்து வினை ஒடுங்க இருத்தல் எனப்படுகிறது. சுருங்கக் கூறின் மனதால் சிந்தித்து சிந்தனை வழி தியானித்து இறைவனைத் தரிசிக்கும் பரிபக்குவநிலையே யோகம் ஆகும். தடத்த நிலையைச் சிவத்தை உருவம் கடந்த அதீதனாக, அருவநிலைக்கு உரியவனாய் வழிபடும் தன்மை கொண்டது. உடலிச்சைகளைக் களைத்து மனதை ஒருமுகப்படுத்தி இறையுண்மையை உணர்ந்து இறைவனை அண்மிக்கச் செய்யும் இயல்பினது எனச் சித்தாந்திகள் எடுத்தாள்வர். இதற்குரிய மார்க்கம் சகமார்க்கம் சகமார்க்கத்தை சித்தியார்,

"சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்து வளி
இரண்டும் சலிப்பற்று முச்சதுர முதலாதாரங்கள்
அகமார்க்க மறிந்தவற்றின் அரும்பொருட்கள் உணர்ந்தங்
கணைந்து போய் மேலேறி அலர்மதி மண்டலத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமார்க்க அமுதுடலம் முட்டத் தேக்கி

முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள்

உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்

உழத்தல் உழந் தவர்சிவன்தன் உருவத்தைப் பெறுவர்"

என எடுத்துரைக்கின்றது.[42] எமது உடல் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தம், ஆக்ஞேயம், என்னும் ஆறு ஆதாரங்களை உடையதாகக் கூறுகின்றது. அவற்றுக்கு உயர்ந்த நிலையாக "சகஸ்ரா கமலம்" விளக்கப் பெறுகின்றது. மூலாதாரத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் பாம்பு வடிவத்தில் சுருண்டு கிடக்கும் குண்டலினியை எழுப்பி மேல்நோக்கி மற்றைய ஆதாரங்களினூடு செல்ல வைக்கும் ஆத்மீகசாதனையே யோகம் எனப்படுகின்றது. யோகத்தால் இறைவனை அர்ச்சிப்பதே யோகமார்க்கம். பிராணவாயுவைச் சலனமற நிறுத்தி ஐம்புலன்களையும் அடக்கி மூலவாயுவை எழுப்பும் இடைபிங்கலை எனும் நாடிகளை அடைந்து சுழுமுனை வழியைத் திறந்து அருளைத் தரும் புறவெளியிலே புகுந்து அழுந்தியிருத்தலே யோகம் எனப்படுகின்றது.

அந்த வகையில் அட்டாங்க யோகங்கள் இங்கு முதன்மை பெறுகின்றன. அவையாவன,

| | | |
|---|---|---|
| 1) இயமம் | - | அகிம்சை, வாய்மை, திருடாமை, பிரமச்சரியம், அன்பு, வஞ்சனையின்மை, பொறுமை, தைரியம், ஆதாரம், சுத்தி |
| 2) நியமம் | - | தமசு, சந்தோஷம், தேவசிந்தனை, தானம், ஈஸ்வரபூசை, ஞானசாத்திரங்கள் கேட்டல், பழிக்கஞ்சுதல், பக்தி, செபம், விரதம் |
| 3) ஆசனம் | - | அரைகண்மூடி அமர்தல் |
| 4) பிராணாயாமம் | - | சுவாசத்தை அடக்கி ஆளுதல் |
| 5) பிரத்தியாகாரம் | - | மனத்தை பிறவிடயங்களில் செல்ல விடாது தடுத்தல் |
| 6) தாரணை | - | மனத்தை ஒரு வழியில் நிறுத்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) தியானம் - இறைவனின் அருவத்திருமேனியைத் தியானித்தல்

8) சமாதி - தியானத்தில் நிலைபெறல்

என இவை விளக்கப்படுகின்றன. யோகத்தின் சிறப்பை,

"யோகச் சமாதியின் உள்ளே யகலிடம்
யோகச் சமாதியின் உள்ளே யுளரொளி
யோகச் சமாதியின் உள்ளே யுளசக்தி
யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே"

என்றும் [43]

"யோகமும் போகமும் யோகியர்க் காகுமால்
யோகஞ் சிவரூபம் உற்றிடும் உள்ளத்தோர்
போகம் புவியிற் புருடார்த்த சித்திய
தாகும் இரண்டும் அழியாத யோகிக்கே"

என்றும் திருமூலர் எடுத்துரைக்கின்றார்.[44] மேலும் சகமார்க்கத்தை,

"போதா லயத்துப் புலன்கர ணம்புந்தி
சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே"

எனவும் கூறியுள்ளார்.[45] இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்பன யோகத்திற் சரியை; பிரத்தியாகாரமும் தாரணையும் யோகத்திற்கிரியை; தியானம் யோகத்தில் யோகம்; சமாதி யோகத்தில் ஞானம் எனப்படுகின்றது. இந்த யோகம் சகளத்தைப் பற்றி நின்று செய்யப்படும் போது சாலம்ப யோகம் எனவும் நிட்களத்தைப் பற்றி நின்று செய்யப்படும் போது நிராலம்ப யோகம் எனவும் இரு வகையினதாய் எடுத்தாளப்படுகின்றது. இவ்யோகத்தின் வழி பெறப்படும் முக்தி சாரூப்பிய முக்தி எனப்படுகிறது. இதனைத் திருமூலர், "பாசஞ் சிரமான தாகும் இச்சாரூபம்" என்றும் [46] "அங்கத் துடல் சித்தி சாதனர் ராகுவர் இங்கித ராகவிழிவற்ற யோகமே" என்றும் எடுத்தாண்டுள்ளார் [47]

இறுதியாக யாவற்றிலும் சிறந்ததாய் உரைக்கப்படுவது "ஞானாபாதமாகும்." சரியை முதலான மூன்றும் நிகழ்ந்ததன் பின் பக்குவமுதிர்ச்சியால் உணர்வு உள்ளவாறு விளங்க, எங்கும் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபகமாய், "சத், சித், ஆனந்த" மயமாய் விளங்கும் பதியின் சொரூபத்தை அகப்புறத் தொழில்களை ஒழித்து, ஞானாசிரியரின் (குரு) வழிபடுதலின் கீழ் நின்று அறிவுத் தொழிலால் வழிபடும் நிலையே ஞானம் ஆகும். பதி, பசு, பாசம் தெரிந்து பரமசிவத்தை நாடும் நன்மார்க்கமாக ஞானம் எடுத்தாளப்படுகின்றது. இதனைச் சித்தியார் ,

"ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராண
நல்லா கமஞ்சொல்ல அல்லவா மென்னும்
ஊனத்தா ரென்கடவர் அஞ்ஞானத்தால்
உறுவது தான்பந்தமுயர் மெய்ஞ்ஞானந்தான்
ஆனத்தா லதுபோவ தலர்கதிர்முன் னிருள் போல்
அஞ்ஞானம் விடப்பந்தம் அறு முத்தியாகும்
ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்
இறைவனடி ஞானமே ஞானமென்பர்"

என்கின்றது.[48] இஞ்ஞானத்துள்ளும் தார்க்கிகர், சாங்கியர், மாயாவாதி முதலியோர் கூறும் ஞானங்களெல்லாம் பாச, பசு ஞானங்களாகும் என்றும் அவையும் பந்தமுறுவனவே அல்லாமல் வீடுபேறடைய உதவா என்றும் அவற்றின் நின்றும் வேறான திருவடி ஞானமொன்றே அப்பெற்றித்தாக்கிய ஞானமெனவும் கூறுவர் உண்மையுணர்ந்தோர் என்கின்றனர் சித்தாந்திகள் ஞானத்திற்குரிய மார்க்கம் சன்மார்க்கமாகும். இதனைச் சித்தியார்,

"சன்மார்க்கம் சகல கலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்கள் தாம்பலவும் உணர்ந்து
பன்மார்க்கப் பொருள் பலவும் கீழாக மேலாம்
பதிபசுபா சம்தெரிந்து பரமசிவனைக் காட்டும்
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனாம் பெற்றிஞானப்
பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் தானே"

என்கிறது.[49] இதனைத் திருமூலர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஞானத்தின் ஞானாதி நான்குமா ஞானிக்கு
ஞானத்தின் ஞானமே நானென தென்னாமல்
ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி
ஞானக் கிரியையே தன்முக்தி நாடலே"

என்கிறார்.[50] ஞானசாத்திரப் பொருட்களை குருவினிடம் கேட்டல் ஞானத்திற் சரியை; ஏது, திருட்டாந்தங்களுடன் சிந்தித்தல் ஞானத்திற் கிரியை; ஞான சாத்திரப் பொருட்களை ஐய விபரீதமின்றித் தெளிதல் ஞானத்தில் யோகம்; பரமசிவனோடு கலந்து நிட்டைகூடல் ஞானத்தில் ஞானமாகும். இதுவே மேலான நிலை, பசு பாச ஞானங்களின்றி அவற்றால் பெற்ற பதிஞானத்தால் இறைவனை அடைதலாக சித்தாந்திகள் எடுத்தாள்கின்றனர். இதனை,

"ஞானத்தாற்றொழு வார்சில ஞானிகள்
ஞானத்தாற்றொழு வேனுனை நானலேன்
ஞானத்தாற்றொழு வார்க டொழக்கண்டு
ஞானத்தாயுனை நானுந் தொழுவேனே"

என்கிறார் அப்பரடிகள்.[51]

முக்தி காரணமாகச் செய்யும் சிவபுண்ணியங்களே உண்மைச் சரியை, கிரியை, யோக, ஞானம் எனப்படுகின்றன. இவற்றுள் உண்மை ஞானம் பத்தாக எடுத்தாளப்படுகின்றது. இவை தசகாரியங்கள் எனப்படுகின்றன. இதனைக் கண்டதைக் கொண்டு காணாததற்குச் செல்லுதல் என்றும், படிமுறையில் அறிவு (ஞானம்) நுணுகி வருதல் என்றும் பலவாறு விளக்கப்படுகிறது.[52] மெய்கண்டார்,

"ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னிய மின்மையின் அரன் கழல் செலுமே"

எனவுரைத்த சூத்திரத்தில்[53] இடம் பெறும் "விட்டு", "செலுமே" எனும் இரு சொற்களையும் அடிப்படையாகக் கொண்டே தசகாரியம் உரையாசிரியர்களால் விளக்கப்படுகின்றது. "விடுதல்" என்பது பாசக் கூட்டத்தையும் பசுபோதத்தையும் விடுதல் என்றும் "செல்லுதல்" என்பது சிவத்தை நோக்கிச் செல்லுதல் என்றும் உரைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசகாரியங்களாக தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பன எடுத்தாளப்படுகின்றன.

முப்பத்தாறு தத்துவங்களும் தன்னில் வேறானவை என ஆன்மா அறியும் நிலையே தத்துவரூபம் எனப்படுகின்றது. இத்தத்துவங்கள் தன்னுடன் நின்று சீவித்த முறைமையைக் காணும் போது அவை மாயகாரியங்கள் சடத்தன்மை வாய்ந்தவை என ஆன்மா அறிதல் தத்துவதரிசனம் எனப்படுகின்றது. இவ்வாறு தத்துவங்களின் உண்மையை அறிந்து அவற்றினின்றும் நீங்கி நிற்றல் தத்துவசுத்தி ஆகும். இதனை.

"மண்முதற் சிவமதீறாம் வடிவு காண்பதுவே ரூபம்
மண் முதற் சிவமதீறாம் மலஞ்சடம் என்றல் காட்சி
மண்முதற் சிவ மதீறாம் வகை தனில் தான் நிலாது
கண்ணுதல் அருளால் நீங்கல் சுத்தியாய்க் கருத்துமன்றே"

என உமாபதி சிவாச்சாரியார் கூற,[54]

"தத்துவ ஞானத்துத் தானவ னாகவே
தத்துவ ஞானானந் தந்தான் தொடங்குமே"

எனத் திருமூலரும்,[55] "இது சத்தியஞ்சடமே எனத்தான் அறிந்திடுதல் காட்சி நித்தியமன்று சில நாள் நீங்குதல் என்றல் சுத்தி" என அம்பலவாணத்தேசிகரும்[56] கூறியமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தத்துவ விசாரத்தால் சாதகன் பிறவியை அறுக்கலாம் என்பர் சித்தாந்திகள்.

தத்துவங்களினின்றும் தான் வேறானது என உணர்தல் ஆன்மரூபம் எனப்படும். இந்நிலையில் ஆத்மஞானம் ஏற்படும். ஆதலால் மேற்சொன்ன "நான்கும் நின்மல சாக்கிரம்" எனப்படும். மலபரிபாகமுற்ற ஆன்மாவின் நனவு நிலை இது என விளக்கப்படுகிறது.[57] திருவருளால் தன்னிலை அறிந்த பின் அவற்றைத் தன் அறிவு பொருந்துமாறு ஆராய்தல் ஆன்மதரிசனம் ஆகும். இவற்றின் வழி தற்போதமிழந்து திருவருளின் அடங்கி தன்செயலாவது ஒன்றுமில்லை என நிற்கும் நிலை ஆன்மசுத்தி எனப்படும். இதனை உமாபதி சிவாச்சாரியார்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேசுற மருவும் ஆன்ம தரிசனமும் ஆன்மசுத்தி
ஆசு இலா ஆன்மலாபம் ஆக மூன்றாகு மூன்றும்
பாச மதகல ஞானம் பற்றல் தான்பணியை நீத்தல்
ஏசில் நேயத்தழுந்தல் எனும் இவற்றுளடங்குமன்றே"

எனக்கூறுகிறார்.[58] இந்நிலையில் ஆன்மா பற்றற்று சிவத்தின் இச்சா கிரியா, ஞானா வழிப்பட்டு நிற்கும்.

இவற்றின் மூலம் ஆன்மா திருவருளின் வியாபகத்துளடங்கி சிவத்தோடு ஏகனாகி நிற்கும். இதன் மூலம் தம்முதல் சிவம் என்றும் அருளுரு சிவரூபம் எனவும் அறிவர். அதாவது ஆன்மவியாபகம் உணரப்பட்டு அதற்குச் சார்பாய் யாங்கணும் நிறைந்துள்ள திருவருள் ஒளி இருத்தல் பற்றி யுணர்தல் சிவரூபம் எனப்படுகின்றது. அதனை ஆன்மா தன்னிலைக்கேற்ப ஆராய்தல் சிவதரிசனம் ஆகும். இத்தரிசனத்தால் சர்வம் சிவமாய்க் காணும் காட்சியும் சிவானந்தப் பேறும் உண்டாகும். இதனூடாக சிவதரிசனம் பற்றிய தெளிவு பெறப்படும். இது ஞான தரிசனம் ஆகும். இதனை,

".... இச்சைமேவ
வைத்தது ரூபமாகும் வரும் அருட்செயலதாக
ஒத்தது காட்சியாகும் உணர் சிவமதற்குத்தானே"

என அம்பலவாணதேசிகர் கூறுகிறார்.[59] இவ்வாறு ஆன்மா சிவதரினம் பெற்றுத் தற்போதம் நீங்கி, சிவத்தில் ஒன்றியிருத்தல் சிவயோகம் ஆகும். சிவசத்தியைத் தெளிவுற அறியும் நிலையாக இது எடுத்தாளப்படுகின்றது. திருமூலர்,

"சிவயோகமாவது சித்தசித் தென்று
தவயோகத் துள்புக்குத் தன்னொளிதானாய்
அவயோகஞ் சாரா தவன் பதி போக
நவ யோக நந்தி நமக்களித்தானே"

எனக் கூறியுள்ளமை கவனிக்கத்தக்கது.[60] இந்நிலையில் ஆன்மா தன்னறிவு சிவனறிவாய்த் திகழும். இவற்றால் அபர முக்தி சித்திக்கும். நின்மல துரியாதீத பேரின்பநிலையே சிவபோகம் என எடுத்தாளப்படு கின்றது. சிவயோகத்தில் நிலைத்துநின்று சிவானந்தம் பெறும் ஆன்மா,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருளால் அன்பேருபமாய், இன்பமாய்ப் பெற்ற அரும் நிலை சிவபோகம் ஆகும். இது சிவத்தைத் தெளிவாக அறியும் நிலை எனப்படுகின்றது. இது ஆன்மலாபம் எனப்படும். இந்நிலை பிறவியின் போதே பெறக்கூடிய பிறவியின் முடிநிலைப் பெரும்பயனாகச் சுட்டுகின்றனர் சித்தாந்திகள். இதனை உமாபதி சிவாச்சாரியார்,

"பேதமற நின்றவனைத் தானொக்கி விடுவன்
பெருகுசிவ போக மெனப் பேசுநெறியிதுவே"

எனவும்[61] அம்பலவாணதேசிகர்,

"சத்தியின் செயல்கள் எல்லாந் தற்சிவம் அதனுக்கின்றாய்
ஏத்திடல் உணர்வளித்தல் உயர் சிவயோகமாகும்.
வைத்துயிர் போகமாக வளர்த்தல் ஆராமை தானே"

எனவும் கூறியுள்ளார்.[62] இத்தசகாரியங்கள் நிச்சயமாக ஓரொழுக்கில் நிகழும் எனக்கூறமுடியாது என்றும் ஒன்று நிகழும் போதே மற்றொன்றோ பலவோ நிகழ்ந்து விடமுடியும் என்றும் சிந்தாந்திகள் சுட்டுவர். சைவ சித்தாந்திகளால் சிறப்பித்துப் பேசப்படும் இத்தசகாரியங்கள் பற்றிய கருத்துக்கள் பிற இந்து மெய்யியல்களில் இடம்பெறவில்லை என்பதும் காஷ்மீர சைவம் இதற்கு விதிவிலக்கல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.

**காஷ்மீரசைவ முத்திக்குரிய உபாயங்கள்**

த்ரிக தரிசனமான காஷ்மீரசைவம் "நீரும் நீரும் கலப்பதுவும்" "பாலும் பாலும் கலப்பதுவும்" போன்றது முக்தி என்கின்றது. அந்த வகையில் முக்தியை - இறையருளைப்பெற ஆன்மா முயற்சிக்க வேண்டும்; அம்முயற்சிகள் அல்லது விடுதலைக்கான மார்க்கங்கள் "உபாயங்கள்" எனப்படுகின்றன.[63] அதாவது தன் இயல்பாகிய ஆனந்தத்தில் மூழ்கியுள்ளவனும் சோதியுருவானவனும், இச்சா, ஞானா கிரியா சக்திகளுடன் கூடியவனுமாகிய சிவன் தன் சுதந்திரஇச்சையால் தன்னை ஆன்மாவாகச் (அணு) சுருக்கிக் கொள்கின்றான். அவன் மீளவும் சுயரூபமான சிவரூபத்தைப் பெற உதவுவனவே உபாயங்கள் எனப்படுகின்றன. அவை, அநுபாய, சாம்பவவுபாய, ஆணவோபாய, சாக்தோபாய என்பனவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாகமங்கள் தமது பகுதிகளைச் சரியாபாதம், கிரியாபாதம், யோகாபாதம், ஞானா பாதம் எனக் கொண்டமைந்தமையைப் போல் காஷ்மீரசைவ சிவசூத்திரம் முதலானவையும் ஆணவோபாய, சாம்பவோபாய, சாக்தோபாய என்ற சொற்களாலேயே தன்னை உணர்தலுக்கான குறிப்பிட்ட வழியைச் சாம்பவோபாயம் சிபாரிசு செய்கின்றது. அதனை ஏற்காமல் விடும் போது, சிந்தனையில் இருந்து விடுபட்டுப் பிரக்ஞை நிலையில் இருக்கும் போது எமது சுயத்தில் அனுபவவொளி வெளிப்படும் இதனைச் சாம்பவ சமாவேச என்பர்.[64]

இது நேரடியானதும் உடனடியானதுமான அனுபவம் ஆகும். ஆத்மீக நிலையில் பின்தங்கிய - ஆரம்ப நிலையிலுள்ள சாதகர்களுக்கு உரியதாக இவ்வுபாயம் எடுத்தாளப்படுகிறது.

இவ்வுபாயத்தின் வழி செயற்கையற்ற நான் (சுத்தன்) எனும் பிரக்ஞை ஏற்படுகின்றது. இந்நிலையை அடைய விகல்ப - க்ஷயம் ஆகவேண்டியது அவசியமாகும். விகல்பம் - வேறுபாடு தனிமனித மனத்தின் - சித்தத்தின் சுபாவம் எனப்படுகின்றது. யோகராஜர் குடம் பற்றிய அனுபூதிக்கும் இடமற்ற அநுபூதிக்கும் வேறுபாடு கற்பித்து குடத்தின் தன்மையை நிச்சயித்து - அந்யாபோஹ- லக்ஷண - த்வயம் என விளக்குகின்றார்.[65] ஒருவன் தன் இச்சாமாத்திரத்தால் பரம்பொருள் சமாவேசத்தைப் பெறுகின்ற உபாயமாகிய இதில் அறிவு பூர்வமாக முயன்று பரம்பொருளே யாவுமாய் நிற்கிறான் என்ற உண்மையை அறிய வேண்டியதில்லை. இது தனித்துவமான யோகவழி இந்நிலையில் எல்லா மனச் செயற்பாடுகளும் நின்று விடுகின்றன. இது பரமகுருவினால் காட்டப்பட்ட வழி; ஒருவன் தன்னுடைய மனதைச் சிந்தனைகள் ஏதுமின்றி வெறிதாக்கிய பின் பரம்பொருளை அநுசந்தானம் இன்றித் தன் இச்சாசக்தி மூலம் உணர வல்லவனாகின்றான். இது நிர்வகல்ப யோகம்[66] ஒருவன் தன்னுடைய மனதை அசைவின்றி வைத்திருக்கும் அதேவேளை விழிப்பாக வைத்திருக்கும் நிலையாகவும் திடசித்தத்தினா லேயே இது கைகூடும் என்றும் எடுத்தாளப்படுகின்றது. இதன் மூலம் சாதகன், சிவநிலையின் உயர்சக்தியை எய்துகிறான் என்பர்.

சித்பிரக்ஞையை குருவின் அநுக்கிரகம் மூலம் விருத்தி செய்த ஆன்மாக்களுக்கே சாம்பவோபாயம் உரியது என்றும் அதற்காக பரித்துரைக்கப்படும் வழிகளாக பின்வருவன அமைகின்றன என்றும் கூறுவர்.[67]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) விஸ்வ சித் பிரதிபிம்பநிலை

2) பர மார்ஷதோ தயாகிரம

3) மந்ர தயா பின்னுத்வ

விஸ்வசித் பிரதிபிம்பநிலையில் ஒன்றன் பின் ஒன்றான ஆறு நிலைகளில் மந்திர உச்சாடனம் செய்ய வேண்டும். பரனாத்துவம் (அசைநிலை), பராத்துவம் (சொன்னிலை), மந்திராத்துவம் (உச்சாடனம்), காலாத்துவம் (உடன் நிகழ்நிலை), தத்வதா (உட்பொருள்), பாவனாத்துவம் (விழிப்பு நிலை) என்பனவே அவ்வாறுநிலைகளும் ஆகும். இது ஒருவரின் சொந்தப் பிரக்ஞையில் பிரதிபலிக்கின்றன. இவ்விழிப்பு நிலையில் அவன் பரிபூரண பிரக்ஞையை உணர்கின்றான். அதன் பின் சாம்பவ சமாதி நிலையை அடைகின்றான். "பரமார்ஷதோதயாகிரம" நிலையின் வழி ஒலி - சொல் - வசனம் யாவும் பரம்பொருளேயன்றி வேறில்லை எனச் சாதகன் புரிந்து கொள்கின்றான். இந்நிலையை விருத்தி செய்து மனதில் வளர்த்து உட்கருவிகளை சாம்பவ சமாதி நிலை நோக்கிக் குவியவைக்கின்றான். மூன்றாம் நிலையான மந்திரதயா பின்னுத்வ" நிலையில் சாதகன், "பிரபஞ்சம் நான்" எனும் உயர் பிரக்ஞையைப் பயில்கின்றான். இதனைப் பயிலவே தனிமனித சுயப்பிரக்ஞை மறைகின்றது. தெய்வப் பிரக்ஞையோடு ஒன்றுபடுகின்றது. அதாவது சிவத்தின் அகவய ஆற்றலுடன் ஆன்மா ஒன்றி விடுகின்றது என்பர்.

உள்ளே இருக்கும் அஹம் - தெய்வீக அஹம் - சிவம் என்றும் விகல்ப இயல்புடைய மனம் ஒரு தடையாகச் செயற்பட்டு எம்முள்ளே ஒளி வீசும் உண்மையைக் காணவிடாது தடுக்கின்றது எனவும் சுட்டிக்காட்டப் படுகின்றது. விகல்பம் கரைந்து "லயம்" உண்டாகும் போது உண்மையை மறைக்கும் திரை அகற்றப்படுகின்றது. விகல்பம் வாய்ந்த மனத்தை ஒடுக்குதலே இதன் மையமாகும். "விகல்பம் இருக்கும் போது ஏற்காதே நிராகரிக்காதே அதுதானாக ஒடுங்கும்; நீ உண்மையைத் தரிசிப்பாய்" என்கிறார் அபிநவர்.[68] இது ஒரு கலையல்லாத கலை; முயற்சியால் கைவராது உள்ளார்ந்து எழுவது; முயற்சி இன்மையால் எளிமையானதாகவும் விகல்பத்தை உண்டாக்குவதால் கடினமான தாகவும் இவ்வுபாயத்தை எடுத்தாள்வர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் "பூரணன்" ஆதலால் அவன் விகல்பமற்றவன் - சீவன் அபூர்ணன்; ஆதலால் ஆத்மாவிடமும் பஞ்சகிருத்தியங்கள் இடைவிடாது நடைபெறுகின்றன என்றும்[69]

"உலகியல் நிலையிலும் பிரபு (சிவன்) உடல் முதலானவற்றில் புகுந்து கொண்டு தனது இச்சை ஒன்றினாலேயே, பலவகையான பொருட்டொகுதிகளும் தன்னுள் பிரகாசித்துக் கொண்டிருப்பினும் புறத்தே அவற்றைத் தோன்றும் படியாகச் செய்கின்றான்.."

என்றும் கூறுகின்றது.[70]

ப்ரத்திய பிஞ்ஞான ஹிருதயம் ஆத்மாவில் நடைபெறும் பஞ்சகிருத்தியங்களை பின்வருமாறு விளக்குகின்றது.

"ஒரு குறிப்பிட்ட காலத்தையும் இடத்தையும் மனத்தின் ஊடாக அறிவது ஸூஷூப்தி (படைப்பு) ஆகும். அவ்வாறு பெறப்பட்ட அறிவைக் காத்தல் - பயன்படுத்தல் ஸ்திதி எனப்படுகிறது. இவ்வறிவு போகாநுபவத்தில் (போகாநுபவ ஆனந்தம்) தேய்வடைதலே நீக்கல் ஆகும். அதேவேளை இப்படி இவ்வறிவு நீங்கினாலும் ஸம்ஸ்காரம் என்ற உருவில் அது மீள நினைவுக்கு வர முயல்கிறது. இதுவே விலயநிலை மனதால் உண்டான இவ்வறிவு ஆத்மதத்துவத்தில் முற்றாக மறையும் நிலையே அநுக்கிரஹம் எனப்படுகின்றது."[71]

இப்பஞ்சகிருத்தியங்கள் ஆத்மாக்களுக்குள் இருப்பினும் பசுநிலையில் அறியாமைக்கு உட்பட்டு பேதங்களுக்குள் மூழ்குகின்றன. அறிவு தொழிற்படத் தொடங்கிய இவ்வுபாயத்தின் வழி படிப்படியாக விகல்பத்தைச் சுருக்கி விகல்பமில்லாத நிலையை அடைகின்றன. அதுவே சிவ சொரூபத்தைத் தரும் என்பர் காஷ்மீர சைவர். இதனை,

"ஸக்வோ மமாயம் விபவஇத்யேவம் பரிஜா நத
விச்வாத்மநோ விகல்பாநாம் ப்ரஸரேபி மஹே சதா"

என்கின்றார் உத்பலதேவர்.[72] அதாவது ஒருவன் "இப்பிரபஞ்சம் முழுவதும் எனது வெளிப்பாடே, இப்பிரபஞ்சம் முழுவதும் நானே" என்ற உணர்வைப் பெறுகின்றானோ அவன் விகல்பமுடையவனாயினும் சிவசொரூபத்தைப் பெற்றவனாகின்றான் என்கின்றார். இந்நிலை உடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உளம் எனும் தொடர்பு அற்ற நிலைக்கு இட்டுச் செல்லும். அந்தராத்மா பற்றிய பிரக்ஞை எழும் சிவசொரூபம் - சிவாத்வைதம் சித்திக்கும் என்பர். (விகல்பம் சுருங்கி விகல்பமற்ற நிலையை அடைதல் சிதானந்த மயமான பைரவீ முத்ரை எனப்படுகின்றது.)

மேலே கூறப்பட்டது போல ஆத்மாவிடம் பஞ்சகிருத்தியம் செய்யும் ஆற்றல் இருத்தலைச் சித்தாந்திகள் ஏற்பதில்லை. முத்தி நிலையிற் கூட சிவத்தோடு ஆத்மா இருக்குமே தவிர பஞ்சகிருத்தியம் செய்யாதென்பர். சிவசமவாதிகளே முக்திநிலையில் ஆன்மாவும் பஞ்ச கிருத்தியம் செய்யும் என்பர். காஷ்மீர சைவர் சுட்டும் சாக்தோபாயம் மந்திரசக்தியின் வெளிப்பாட்டைக் குறிக்கும் சிவசூத்திரம் மூன்று சொற்களை முன்வைக்கின்றது.[73] அவை, மஹாரத, அனுசந்தான, மந்திர வீரியானுபவ என்பனவாகும். மஹாரத என்பது மஹாசக்தியைக் குறிக்க, அனுசந்தான மனம் பற்றிய மிக நுணுக்கமான ஆராய்வைக் குறிக்க, மந்திர வீரியானுபவ என்பது மந்திரத்தின் வீர்யத்தை அனுபவித்தல் எனப்படுகின்றது. உள்ளார்ந்த நிலையில் மஹாசக்தியிடம் ஒருவன் தன்னைக் காப்பாற்றும் மந்திரத்தின் வீர்யத்தை அனுபவிக்கலாம் என்கிறார் ஜயதேவ்சிங்.[74] ஒரு சாதகன் விமர்ச அல்லது சிற்சக்தி மூலம் முக்தி அடையலாம். அதனாலேயே இவ்வுபாயம் சாக்தோபாய எனப்படுவதாக எடுத்தாளப்படுகின்றது. இதனை சாக்தயோக, ஞானோவுபாய, ஞானயோக, பாவனோபாயா, மந்த்ரவுபாய எனப் பலவாறு சுட்டி நிற்பர்.

பராசக்தியே பிரபஞ்சமயமாய் காட்சியளிக்கின்றது. என்று நினைக்கும் போது (மனனம்) அப்பேதவுணர்வினின்றும் ஆன்மா காப்பாற்றப்படுவதால் (த்ராணம்) இவ்விரு விடயங்களையும் சுட்டும் தன்மையில் மந்திர எனும் சொல் எடுத்தாளப்படுகின்றது. மந்த்ர - ஞானம்; இதனால் இவ்வுபாயம் ஞானோபாயம் எனப்படுகின்றது. மந்தர - சக்தி சொரூபங்கள், வர்ண, (ஒலி) ரூபமானவை; சிற்றறிவால் வரும் சிற்றன்பங்களை (திவ்யரூபதரிசனம், திவ்யசப்த ஞானம் முதலானவை) விலக்கி, சுத்த வித்தையை நாடி ஞானாகாசத்தில் சஞ்சரிப்பர் - ஆகாசம் மூன்று அவை சக்தி, வியாபினீ, சமனா, என்பன; இவை கேசரீ எனப்படுகின்றன. ஆகவே இது கேசரீ யோகம் ஆகும். இந்நிலையில் பேதவுணர்வு நீக்கமுறும். பேரின்ப நிலையான முத்ரா வீர்யம் (முத் - ஆனந்தம் -ரா - தருதல்) ஏற்படும் என்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகல்பம் இருவகையாக எடுத்தாளப்படுகின்றது. பொதுவில் அவை சுத்தவிகல்பம், அசுத்தவிகல்பம் சுத்த விகல்பமாவது சரியான மனப்பாங்கும் நம்பிக்கையுமே என்கிறார் அபிநவகுப்தர்.[75] எல்லைகள் யாவும் கடந்த அதிஉயர் பொருளான பிரக்ஞை அதுவே நான் ஆதலால் நானும் யாவும் கடந்த பொருள் என நம்புதலே சுத்த விகல்பம் என்பர். இது செயலுருப்பெறுதலே சாக்தோபாயம் எனப்படுகின்றது.

எல்லைகளற்ற மேலான, எல்லாமறிந்த பரமசிவம் இவ்விகல்ப நிலைக்குள் வருமா? எனும் வினாவிற்கு அபிநவகுப்தர் பின்வருமாறு விளக்கமளிக்கின்றார்.

> "பரசிவம் எங்கும் எல்லாவிதத்திலும் பிரகாசமாக உள்ளது. விகல்பம் அதற்கு உதவவோ, தடுக்கவோ முடியாது. எதனுள்ளும் அது அடங்காது ஏனெனில் சிவத்தினை எதுவும் கட்டுப் படுத்தாது சிவத்திலிருந்து எதையும் எடுக்கவோ பொருத்தவோ முடியாது"

என்கின்றார்.[76] இவ்வாறு கூறின் சுத்தவிகல்பத்தின் பயன் யாது என வினாவின் இருமை இரண்டு எனும் உணர்வை அகற்றுதல் ஆகும். அசுத்த விகல்பத்தால் ஏற்படும் இருமை எனும் மயக்கத்தை நீக்கவல்லதே சுத்தவிகல்பம் என்பர். அந்தவகையில் சுத்தவிகல்பம், மறைத்தொழிற்பாடு, நேர்த்தொழிற்பாடு எனும் இரு தொழிற்பாடுகளை உடையது என எடுத்தாளப்படுகின்றது. அசுத்தவிகல்பத்தை நீக்கல் மறைத் தொழிற்பாடு ஆகும். நேர்தொழிற்பாடு, மந்த்ர சக்தி, சத், தர்க்கா, சுத்த வித்யா என மூன்றாக எடுத்தாளப்படுகின்றது. இவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளன.

மந்த்ர சக்தி என்பதில் மந் - சிந்தித்தல் அல்லது பிரக்ஞை பூர்வமாக சிந்தித்தல்; தர - இரட்சித்தல்; மந்தர என்பது "சிந்திப்பவனைக் காப்பது" எனப்படுகின்றது. மேலும் பரம்பொருளோடு தன்னை அடையாளப் படுத்தும் ஒருவனுக்கு ஏற்படும் மானசீக பிரக்ஞையே என்றும் அது உலகத்தை விட வேறாக இருக்கும் உணர்வில் இருந்து அவனைக் காக்கும் என்பர். ஷேமராஜர், "மந்திர ஆற்றலின் விரிவே சக்தியைக் குறிக்கிறது. ஆகவே மந்த்ரத்தை முதலில் ஆராய்கின்றேன் " எனக் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.[77] சாக்தோபாய என்பது ஸாதகனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டும் சக்தி பற்றிய பிரக்ஞை எனப்படுகின்றது. சக்தி என்பது மந்த்ர வடிவில் அனுபூதி தரும் ஒலிகளை ஏற்படுத்தும் மனம் மந்த்ரத்தின் அதிதேவதையோடு தன்னை அடையாளப்படுத்துவதால் அதுவே மந்திரமாகிறது. இது பூரணமான சிவத்தின் 'சுயப்பிரக்ஞை அல்லது விமர்சசக்தி என எடுத்தாளப்படுகின்றது. அதுவே எல்லா மந்த்ரங்களுக்கும் உள்ளே இருக்கும் உயிர்த் துடிப்பாகும். அந்த வகையில் பூரண சுய பிரக்ஞையைத் தாம் சுயமாகச் சிந்திப்பதே சுத்தவிகல்பமாகும். மாலினி விஜய,

> "ஸாதகன் ஒருமித்த மனதோடு சொல்லுக்குள் அகப்படாத பரம்பொருளை உணர்ந்து சாமாவேச நிலை அடைந்தால் அந்த சாமாவேசத்தைச் சாக்த என்போம்."

என்கிறது.[78] அஹம் என்பதில் "அ" என்பது பிரகாசத்தை அல்லது சிவத்தைக் குறிக்கும் ஹ" விமர்சவை அல்லது சக்தியைக் குறிக்கும் "ஹ" மேல் இடப்படும் புள்ளியே பிந்து. இது சக்தியூடாக சிவம் பூமிவரை வெளிப்பட்டாலும் அவர் பிரிவதில்லை என்பதைக் குறிக்கிறது என்பர் த்ரிகவாதிகள். ஷேமராஜர்,

> "அ"வில் தொடங்கும் விரிந்த பிரபஞ்சம், அனுத்தராவின் உடலின் இயல்பைப் பெற்றது. அது "ஹ" வரை விரிவது சக்தியின் வியாபகம் ஆகும். பிரத்தியாஹார முறையில் அ- ஹ ஒன்றிணைதல் விந்து வடிவில் உள்ள உயர் பரம்பொருளில் தங்கியுள்ளது. இது பேதம் கடந்த பிரக்ஞையைச் சுட்டும் இவ்வாறு இயற்கையான விமர்ச - சுயப்பிரக்ஞை சொற்களின் கூட்டினால் ஏற்படுவது"

எனப் பிரத்தியபிஞ்ஞான ஹிருதயத்தில் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.[79]

இதனை உணராத நிலையில் மாத்திருஹா எல்லாவகையான உலக அனுபவத்திற்கும் இட்டுச் செல்லும். உணரும் போது அது விடுதலைக்கு வழிவகுக்கும் சாதகன் சுத்தவிகல்பத்தினூடு ஒரு மந்திரத்தை தியானித்து சிவத்தோடு தன்னை அடையாளப்படுத்தினால் மந்த்ர சக்தியின் உள்ளேயுள்ள மாத்ருஹா சாதகனின் சித்தத்தை மாற்றும் சித்தியாகும். அப்பொழுது சுயப்பிரக்ஞையை அவன் பெறுவான். முழுப்பிரபஞ்சமும் மாத்ருஹாவின் விகசிப்பு என்பதை உணர்வான். இவ்வாறு பிரபஞ்ச


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஹத்தின் வெளிப்பாடு எனும் நிலை உன்மனாவால் ஏற்படுகிறது. இது மாத்திருஹாவின் உள்ளிருக்கும் மந்த்ரசக்தியின் அதியுயர் விருத்தியாக எடுத்தாளப்படுகிறது. உன்மனா என்பது பராவித்யா சுத்தவித்யா,[80] ஹேசரீ சிவாஸ்தா [81] எனப் பலவாறு எடுத்தாளப்படுகிறது. சத் - தர்க்க ஸாதகன் முன்னேற உதவுகின்றது. இது,

"சுத்தவிகல்பத்தை ஒத்த தொடர் சிந்தனைகளை வலுவடையச் செய்து பாவனாவிற்கு இட்டுச் செல்லும்"

என்கின்றார் அபிநவகுப்தர்.[82] பாவனை என்பது,

"உள்பொருளாய் இருந்த ஒன்று முன்பு தெளிவின்மை காரணமாக இல்பொருளாகத் தோன்றியது. பின்பு ஏற்பட்ட தெளிவு காரணமாக உள்பொருளாகத் தோன்றும். இதற்கு உதவும் சிந்தனை தியானம் "பாவனை" ஆகும்."

என்று மேலும் விளக்குகின்றார்.[83] இது சுத்தவித்யாவிற்கு இட்டுச் செல்லும். இதனால் ஞேயம் தோன்றும். ஈற்றில் ஞாதா, ஞான, ஞேய வேறுபாடுகள் மறையும். இக்கூற்று,

"அவனே தானே யாகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே" ,

எனும் சிவஞான போத சூத்திரத்தையும் அதற்கான அதிகரண வெண்பாக்களையும் ஞாபகமூட்டுகின்றது.[84]

இந்நிலையில் ஸாதகன், "நெய் அரிசி முதலியவற்றை நெருப்பினும் அவிர்பாகமாகச் சொரிகின்றான்.[85] இப்பொழுது இவ்வுபாயவழிநிற்கும் ஸாதகன் பரஞானமாகிய சிவஞானத்தையே உட்கொள்கின்றான். இது பூரணசுயப் பிரக்ஞைக்கு வழிசமைக்கின்றது. மேம்பட்ட நிலையாகிய இந்நிலையில் ஸாதகன் சம்வித் சைதன்யம் பூர்ணகந்தா விமர்ச ஸ்பாவம் - சுவாதந்த்ர்யம் என ஆகமங்களில் கூறப்படுவதான எல்லாவற்றிற்கும் மூலமாக இலங்கும் பரம பிரமாதாவாகின்றான் என்கின்றார் உத்பலதேவர்.[86] ஆக, எவருடைய சித்தம் ஆத்மீக நாட்டத்தைப் பெறு கின்றதோ எவருக்கு அதியுயர் பரம்பொருளை காணும் தீவிர ஈடுபாடு ஏற்படுகிறதோ அவருக்கு உரிய உபாயம் இது. சுயவிசாரணையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும் சாக்தயோகத்தில் சித்தத்திற்கு ஆதாரமாய் அஹம் அல்லது ஜீவன் விளங்குகின்றது.

ஆனால் "ஆணவோபாய" இதனின்றும் வேறுபட்டது. துவைத நிலையிலுள்ள ஸாதகனுக்கு முதற்படியாக விளங்குவது ஆகும். ஆணவோபாய பற்றி மாலினி விஜயம்,

"உச்சார, கரண, தியான வர்ண, ஸ்தான கல்பனா ஆகியவற்றின் ஊடாக தெய்வீக சுயத்துள் அல்லது அஹத்துள் பூரணமாக அன்றி செம்மையாக உள்வாங்கப்படுவதே ஆணவ"

என்கிறது.[87] இதில் உச்சார பிராணனோடு தொடர்புடையது. உச்சார மேலெழுந்து ஒலியாதல் எனப்படுகின்றது. பிராண சக்தி பொதுப்பொருளில் "பிராணனா" என்றும் சிறப்புப் பொருளில் பிராண, அபானா, சமாண, உதான, வியாண எனத் தொழிற்பாடுகளுக்கு ஏற்ப சுட்டப் பெறும் என்கின்றனர்.[88] சிறப்புப் பிரமாணங்களின் இயல்புகளே "உச்சார" எனப்படுகிறது. இவ்வியல்புகள் நிஜானந்தம், நிரானந்தம், பரானந்தம். பிரமானந்தம். மகானந்தம் சிதானந்தம் எனும் ஆனந்த நிலைகளைக் கடந்து ஜகானந்தத்தை அனுபவிக்கும் ஸாசதகனுக்கு பிரிவு, எல்லைகள் அற்ற தெய்வீக ஆனந்தத்தை நல்கும்.

ஸாதகன் ஆத்ம சாஷாத்காரத்திற்காக தன் திரிகரணங்களையும் ஒன்றிக்கச் செய்து ஸ்தூல தத்துவங்களை சூக்குமதத்துவங்களிலும். சூக்குமதத்துவங்களை பரதத்துவத்திலும் லயிக்கச் செய்தல் வேண்டும் இதுவே தியானம் ஆகும். அபிநவர்,

"சாதகன் பிரமாதாவை, பிரமாண மற்றும் பிரமேயம் ஆகியவற்றின் வேறுபாடுகள் இன்றி ஒன்றாகத் தியானிக்க வேண்டும். அஹப்பிரக்ஞை எனும் நெருப்பில் அவற்றைச் சொரிதல் வேண்டும் பின்பு அகம், புறம், பிரக்ஞை, புறப்பொருள் எனும் பேதங்கள் நீங்க, ஒருமைப்பிரக்ஞை ஏற்படும். இது ஸாதகனுக்கு தெய்வீகத்தில் ஆணவ சமாவேசம் உண்டாகச் செய்யும்"

என்கிறார்.[89] மேலும் இதன் முடிவில் நிர்விகல்ப சிவபதத்தை அடையலாம் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ண என்பது "சூக்கும பிராண" ஆகும். பிராணனின் சிறப்பியல்பு களில் ஒன்றாக இதனைக் கொள்ளலாம். அபிநவரும்,

"பொதுப்பிராணனின் உச்சாரத்தில் இருந்து புலப்படாத, தெளிவாக உச்சரிக்கப்படாத ஒலி ஒன்று அதிர்கின்றது அதுவே வர்ண"

என்கின்றார்.[90] இது ஜீவனின் முயற்சியால் நிகழ்வதில்லை. அனைத்து ஜீவன்களுள்ளும் அவை அறியாமலேயே அது ஒலித்துக் கொண்டிருக் கின்றது. அது ஒலிப்பதைத் தடைசெய்யமுடியாது என்கின்றனர். இவ்வாறு இடைவிடாது இயங்குவதால் அநாகதம் எனப்படுகின்றது.[91] இந்நாதத்தின் தீவிர பிரக்ஞை "த்வனி யோக" அல்லது "வர்ண யோக" எனப்படுகின்றது. இதனை சங்கரர் நாதானு சந்தான என்கிறார். கபீர்தாசர் முதலானோர் சுரஜி - சப்த யோக எனக் கூறினர். ஸாதகன் மந்திரத்தை மீளமீள ஒலிப்பதாகிய ஜபத்தினைச் செய்கிறான். இதன் போது மூச்சை உள்ளெடுத்தல், வெளிவிடுதல் எனும் செயற்பாடுகள் நிகழ்கின்றன. இவை சமநிலையடைய குண்டலினி மேலெழும்பும். அப்போது ஸாதகனது மனம் அதில் மட்டுமே ஈடுபட வேண்டும். இதன் மூலம் சித்தம் கரைந்து அவன் விசுத்த சைதன்யத்தை அனுபவிப்பான் என்பர்.

ஆணவோபாயம் "கிரியோபாய" எனவும் சுட்டப்பெறுகிறது. மந்திரம் "ஜபம், தியானம், பூசை" இஷ்டதெய்வ வழிபாடு, விக்கிரகவழிபாடு என்பன முதன்மை பெறுதலே இதற்குக் காரணமாகும். அட்டாங்க யோகங்களினூடு அந்தந்தச் சித்தியை பெறமுடியுமே தவிர சிவ வியாப்தியைப் பெற முடியாது மாயை, நீக்கமே சிவவியாப்த்திக்கு இட்டுச் செல்லும்.[92]

ஆகவே ஸாதகன் ஆத்ம, வித்யா தத்துவங்களைக் கடந்த பரதத்வபோதம் பெற்று அபேத நிலையை அடைகின்றான். ஆறு ஆதாரங்களினூடு குண்டலினியின் எழுச்சியானது பிராணசக்தியாகின்ற பிரமத்தின் ஆசிரயமான மத்திய நாடியில் சைதன்யம் பிரகாசிக்க வழிசமைக்கிறது. இதனூடாக ஸாதகனுக்குச் சிதானந்தப் பேறுகிடைக்கிறது.[93] இவ்வுபாயம் க்ரியைக்கு முதன்மையளிப்பதால் சைவசித்தாந்தம் கூறும் கிரியாபாதத்தையும் யோகத்திற்கு - ஆதாரங்களூடாகக் குண்டலினியை எழுச்சிபெறச் செய்து சிதானந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறு பெறலை மொழிவதால் யோகாபாதத்தையும் ஒத்த கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது எனக் கூறல் மிகையாகாது.

"அநுபாய" என்பது உபாயமற்ற உபாயமாக எடுத்தாளப்படுகின்றது. சக்திபாதத்தால் ஒரு முறை குருவிடம் இருந்து ஒரு சொல்லைக் கேட்டால் இச்சாதகன் அதன் உண்மைத்துவத்தை உணர்ந்து தெய்வீக பிரக்ஞைக்குள் பெரு முயற்சியின்றி மூழ்குவான், இதுவே அநுபாய எனப்படுகிறது. அநு - சிறிது -அநுபாய சிறு முயற்சி அவ்வளவே: தீவிர சக்திபாதமே இதற்கு வழிகோலும். இது,

"ஐம்பொறியின் அல்லையெனும் அந்த தரசிவனை
ஐப்பொறியை விட்டங்கணை சகலன் - ஐம் பொறியின்
நீங்கான் நீர்ப்பாசி போல் நீங்குமல கன் மம்வரின்
நீங்கானை நீங்கு நினைத்து"

எனும் சைவசித்தாந்தக் கருத்தை ஒத்துள்ளது.[94] இதனைச் சித்தியார் அரசனொருவனின் மகன் வேடரிடம் வளரும் போது அவர்களின் பண்புடையவனாய் வளர்ந்து தானார் என்பதை அறியாது மயங்கி நிற்கும் காலத்தில் அரசன், என்மகன் நீ எனும் உண்மையை உணர்வித்தவுடன் அவருடன் ஏகி, தனக்குரிய பெருமையைப் பெற்றுப் பேணி இருத்தலை ஒத்தது என்கிறது.[95] இச் சித்தாந்த கருத்தை ஒத்ததாக இவ்வுபாயமுள்ளது.

இவ்வாறு காஷ்மீர சைவம் நான்கு உபாயங்களை முன்வைக்கின்றது. "உபாய" என்பது "யோகம்" எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. ஆக, இந்நான்கு உபாயங்களும் சித்தாந்தம் கூறும் சரியா, கிரியா, யோகங்களை ஒத்தவையே ஆதலின் இவை குறைபாடுடையவை என்றே கூற வேண்டியதாகின்றது. ஏனெனில்,

"மேற் சரியா, கிரியா, யோகங்களைச் செய்துழி
நன்னெறியாகிய ஞானத்தைக்காட்டியல்லது மோக்ஷத்தைக்
கொடாவாகலான்"

என மெய்கண்டார் சுட்டுகிறார்.[96] ஆக, காஷ்மீர மெய்யியலின் உபாயங்கள் சித்தாந்த யோகத்தில் ஞானத்திற்கே வழி சமைக்கின்றனவே அன்றி ஞானத்தில் ஞானத்திற்கு வழி சமைக்கவில்லை என்றே கூற வேண்டியதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரு

இரு மெய்யியலாளர்களும் முக்திக்குரிய மார்க்கங்களில் நிற்பதற்கு வழிகாட்டுபவராக குருவை எடுத்தாள்கின்றனர். குருவருளின்றேல் திருவருள் இல்லை என்பது தமிழ்ப் பழமொழி. ஸாதகனின் எல்லா நிலைகளிலும் குரு இன்றியமையாத வழிகாட்டுநராகத் திகழ்கின்றார். சைவாகமங்கள், வித்யா குரு, தீட்ஷா குரு, ஞானா குரு என மூவகையாகக் குருவைச் சுட்டுகின்றன. கல்வியறிவைத் தருபவர் வித்யா குரு; ஆத்மீக வாழ்விற்கான தொடக்கப்புள்ளியாகத் திகழ்கின்ற தீட்சையை வழங்கி ஆசீர்வதிப்பவர் தீட்ஷாகுரு; ஆன்ம விடுதலைக்கான உண்மையை உணர்விப்பவராக விளங்குபவர் ஞானா குரு ஆவார். ஔவையாரும் "குருவில்லா வித்தை பாழ்" என்கிறார்.[97] மனிதனை உலகியலிலும் அதற்கு அப்பாலும் வழிகாட்டி அழைத்துச் செல்பவராகக் குரு விளங்குகின்றார். இதனாலேதான் திருமூலரும், "கொள்ளினும் நல்லகுருவினைக் கொள்க." என்றும் [98] குரு பரி சித்த குவலயம் எல்லாந் திரிமலந்தீர்ந்து சிவ கதியாமே" என்றும் கூற , [99]சிவஞானபோதம்,

> "மெய்ஞ்ஞானத் தானே விளையும் விஞ்ஞானகலர்க்
> கஞ்ஞான அச்சகலர்க் கக்குருவாய் - மெய்ஞ்ஞானம்
> பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
> முன்னுணர்த்துந் தான் குருவாய் முன்"

என்கின்றது.[100] அதாவது மும்மலங்களால் கட்டப்பட்டிருக்கும் சகலர்க்கு மானிட உருவந்தாங்கி வந்து தத்துவஞானத்தை உணர்த்துவானென்றும் ஆணவம், கன்மமென்பவற்றால் கட்டுண்ட பிரளயாகலர்க்கு நான்கு தோள்களும் முக்கண்கள், கறை மிடறு முதலிய உருவ நிலைப்பட்டு நிற்கும் தன்வடிவே குருவடிவாய்க் காட்டி வந்து ஞானத்தை உபதேசித்து அருளுவான் என்றும் விஞ்ஞானகலர்க்கு அவருள் நின்று ஞானத்தை உணர்த்தி அருளுவானென்றும் சித்தாந்திகள் கூறுகின்றனர். இதனையே மணிவாசகரும்,

> "சிவனெனயானுந் தேறினன் காண்க.
> அவனெனை ஆட்கொண்டருளினன் காண்க"

எனக் கூறி நின்றார்.[101] உமாபதி சிவாச்சாரியாரோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நன்னெறிவிஞ்ஞானகலர் நாடு மலம் ஒன்றினையும்
அந்நிலையே உள்ளின்(று) அறுத்தருளி"

என்கிறார்.[102] எது எவ்வாறு இருந்தபோதிலும் குருவருளை முழுதும் வேண்டி நிற்போர் சகலரே எனச் சுட்டுவாரும் உளர்.[103]

காஷ்மீர மெய்யியல் குருவிற்கு அதிமுக்கியத்துவம் வழங்குகின்றது. சாம்பவோபாயம் பற்றிக் கூறும் மாலினி விஜய,

"சாம்பவ சாமவேச என்பது சிவத்துள் மூழ்குதல். இது எல்லா விதமான சிந்தனைகளிலிருந்தும் தன்னை விடுத்துக் கொண்டவர்க்குச் சாத்தியம் எனும் குருவருளோடு தன்னுள் ஏற்படும் விழிப்புணர்வாலும் ஏற்படும் தீவிர விழிப்பால் ஏற்படுமே."

என்கிறது.[104] சாக்தோபாயத்தினைப் பற்றி விளக்கும் சிவசூத்திரம்,

"மந்திர சக்தி கைவர வேண்டும் என எண்ணும் ஒருவர், குருவை அணுகி அவரருளால் மந்திர, உபதேசம் பெற வேண்டும் அம்மந்திரத்தினுள் சைதன்ய சக்தி பாய்ச்சப்படுகின்றது, குரு மாத்திருகாவின் மர்மத்தைப் போதிப்பார். சீடன் ஞானத்தைப் பெறுகின்றான்"

என்கிறது.[105] மேலும் பஞ்சகிருத்தியமாகின்ற செயல் அனைவருக்கும் எப்போதும் இருந்து வந்தபோதும் சற்குருவின் உபதேசமின்றி பிரகாசிப்பதில்லை. ஆகவே சற்குருவிடம் பணிவிடை செய்தல் இதன் பொருட்டு செய்யத்தக்கதாகும்.[106] சற்குருவின் உபதேசமின்றி ஒருவனுக்கு முழுஅறிவு ஏற்படுவதில்லை என்றும் அவன் அறியாமைக்குட்பட்டுத் துன்புறுவான் என்றும் கூறுகிறது. ஆணவ, சாக்த, சாம்பவ உபாயங்கள் குருவருளின்றி சித்திக்க வாய்ப்பில்லை என்பதும்அநுபாயம் குருவருளுடன் அல்லது குருவருளின்றியும் சித்திக்கும் என்பதும் காஷ்மீர சைவர்களின் கருத்தாகும்.[107] பேரொளியில் இருக்கும் இறையே சித்தும் அசித்துமான பிரபஞ்சமாய் இருக்கின்றான் என்பதைக் குருமுகமாக உணரும் போது சீவன் முக்தனாவான். இதனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மன்னவன் தன் மகன் வேடரிடத்தே தங்கி
வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என் மகன் நீ என்ற வரிற்பிரிந்து
பெருமையொடும் தானாகிப் பேணுமாப்போல்"

எனத் தொடரும் சித்தியாரின் பாடல்[108] அறியாமையாற் கட்டுண்டு கிடக்கும் ஆன்மாவை ஆட்கொண்டருளத் தானே குருவாக வந்து ஐம்பொறிகளாகிய வேடர்களிடம் இருந்து ஆன்மாவை மீட்டு முக்தி வழங்குபவர் எனும் கருத்தினை ஒத்துள்ளது. மேலும் அபிநவர்.

"ஒரு பக்குவ ஆன்மா தன்னிறுதிப் பிறப்பில் சிறந்த ஒரு குருவாயிலான பூர்ண சுவாதந்திரியத்தைக் குறிக்கும் பரமார்த்த மார்க்கம் பற்றிய விளக்கத்தைப் பெற்ற உடனே சிவனேயாகி விடுகின்றான்"

என்கின்றார்.[109] பக்குவமற்ற சகலர்க்குக் குருவின் உபதேசம் நீண்ட காலமாகத் தேவைப்படும் என்பர். பேராசிரியர் *M.L Kokiloo* அவர்கள் சாம்பவோபாயம் பற்றி, "இது பரம குருவினால் காட்டப்பட்ட வழி" என்றும் "சித்பிரக்ஞையை குருவின் அநுக்கிரகம் மூலம் விருத்தி செய்த ஆன்மாக்களுக்கே சாம்பவோபாய" என்றும் கூறியுள்ளர். [110]

**தீட்சை**

தீட்சை என்பது எல்லா சமயங்களாலும் எடுத்தாளப்படும் முக்கிய சடங்காகவும் முக்திக்கான மார்க்கமாவும் உள்ளது. இச்சைவ மெய்யியல்களும் இதற்கு விதிவிலக்கல்ல. தீட்சா குருவால் ஸாதகனுக்கு அல்லது சீடனுக்கு தவத்தையும் ஞானத்தையும் அளிக்கும் முறையாகத் தீட்சை எடுத்தாளப்படுகின்றது. இது அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைத் தருவது எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. சைவசித்தாந்திகள் தீட்சையை, சமய தீட்சை, விஷேட தீட்சை, நிர்வாண தீட்சை எனப் பிரித்துரைப்பர்.[111] சமயதீட்சை சிவாகமங்களை ஓதியுணர, சரியாபாதத்தில் நிற்க, அந்தர சத்திநிபாதத்தினை அடைய உதவும் என்பர். விஷேட தீட்சை லிங்கவழிபாடு கிரியா பாத நெறியில் இச்சை என்பவற்றைத் தரும் லிங்கபூசை நிகழ்த்தும் போதே அகப்பூசை, புறப்பூசை சரியா, கிரியா, யோக பாதமெனும் தவத்தின் பயன் கைவரப்பெற்று முப்பொருள் உண்மை உணரப்பெற்று சுயவிசாரணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும். இது துறவையும் ஞானோபதேசத்தையும் தரும் என்பர் சித்தாந்திகள். இது தீவிர சத்திநிபாதம் உடையார்க்கு - ஞானத்தை உடையார்க்கு உரியதாய் எடுத்தாள்கின்றனர். சகலர்க்கு மானைக் காட்டி மானைப் பிடிப்பது போல மானிடவுரு தாங்கி இறைவன் வழங்கும் தீட்சை சாதாரண தீட்சை எனப்படுகிறது. இதனை,

"பார்வையென மாக்களை முன்பற்றிப் பிடித்தற்காம்
பேர்வை யெனக் காணார் புவி"

என்கிறார் உமாபதி சிவாச்சாரியார்.[112] விஞ்ஞானகலர், பிரளயாகலர் ஆகியோருக்கு இறைவன் நேரே வந்து உணர்த்துவான் என்றும் கூறுவர்.[113]

தீட்சைப்பற்றிய இவ்வாறான விரிந்த விளக்கத்தைக் காஷ்மீர சைவத்தில் காணமுடியாது விடினும் அவர்கள் தீட்சைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. குருவிடம் மந்திரவுபதேசம் பெறுதல் என்பதற்கப்பால் எச்செயலினால் ஆன்மாவின் பசுத்துவமும் பிறவியில் ஏற்பட்ட அஞ்ஞானமும் நீங்குகின்றதோ அதுவே தீட்சை என்கின்றனர்.

"தீக்ஷயா முச்யதே ஜந்து ப்ராப்திபேந ததா ப்ரியே
குர்வாயத் தாதுஸா தீக்ஷா பத்ய - பந்தந - மோக்ஷனே
ப்ராதிபோஸ்ய ஸ்வபாவஸ்து கேவலீபாவ - ஸித்தித:"[114]

"தீயதே ஜ்ஞாந - ஸத்பாவ:ஞ க்ஷீயதே பசு - பந்தநா
தாந - க்ஷபண - ஸம்யுக்தா தீக்ஷா தேதேஹ கீர்த்திகா"[115]

எனும் அபிநவகுப்தரின் வரிகள் இதற்குச் சான்றாகின்றன.

**மந்திரம்**

இரு மெய்யியல்களும் மந்திரத்திற்கு முதன்மையளித்தன. சைவசித்தாந்திகளைப் பொறுத்தவரை பல்வேறு மந்திரங்களைக் குரு உபதேசித்தாலும் மூலமந்திரமாக எடுத்தாளப்படுவது திருவைந் தெழுத்தாகிய "சிவாயநம" ஆகும். "உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்." என அப்பர் சுவாமிகளும் [116]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே"

எனத் திருஞானசம்பந்தரும் [117]

"அஞ்செழுத்தே ஆகமமும், அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும் - அஞ்செழுத்தே
ஆனந்தத்தாண்டவமும் யாவைக்கு மப்பாலாம்
மோனந்த மாமுக்தியும்"

என மனவாசங்கடத்தாரும்[118] உரைத்து நிற்பர் . இதனை மேலும் விளக்கமுற்பட்ட சித்தாந்திகள் "பஞ்சாக்கிர" முதலாகிய மந்திரங்களை உச்சரித்து அதன் வழி அம்மந்திரங்களின் அட்சர சொரூத்தை அறிந்து சத்தி சிவான்மகமாயிருக்கின்ற அட்சரத்தை இருதயத்திலே வைத்தால் அந்தச் சக்தி தானே சிவனை இரண்டறக் கலப்பிப்பனென்றும் கூறுகின்றனர். இதனை,

"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி"

எனும் பாடலால் அறியலாம். [119]

காஷ்மீர சைவர்களைப் பொறுத்தவரை மந்திரம், ஜபம் முதலியன அகம், புறம் சார்ந்தவையாக எடுத்தாளப்படுகின்றன. ஆயினும் மந்திரவுக்கு முதன்மையளிப்பர். மந்த்ர என்பதை மந் - (பிரக்ஞைபூர்வமாக) சிந்தித்தல்; த் ர- இரட்சிப்பது. சிந்திப்பவனைக் காப்பது மந்த்ர என்பர். "பரம்பொருளோடு தன்னை அடையாளப்படுத்தும் ஒருவனுக்கு ஏற்படும் மானசீகப் பிரக்ஞையே மந்தர" என்பர்.[120] ஷேமராஜர், "மந்த்ர ஆற்றலின் விரிவையே சக்தி குறிக்கின்றது. ஆகவே மந்திரத்தை முதலில் ஆராய்கிறேன்." என்று கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது[121] சிவசூத்திர சாக்தோபாயத்தில் வரும் மந்திர வீரயானுபவ[122] எனும் சொல் மந்திரத்தின் வீரியத்தை அனுபவித்தல் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானசீகமாக மகாசக்தியை அணுக அணுகத் தன்னைக் காப்பாற்றும் மந்த்ரத்தின் வீரியத்தை அனுபவிக்கலாம் என்பர்.

இது பூர்ணாகந்தா எனப்படும். அதாவது பூரணமான சிவத்தின் சுயப்பிரக்ஞை அல்லது விமர்ச சக்தி ஆகும். அதுவே எல்லா மந்திரங்களுக்குள்ளும் இருக்கும் உயிர்த்துடிப்பு என்பர். இது சாதகனை ஒருமித்த மனதோடு சொல்லுக்குள்ளகப்படாத பரம்பொருளை உணர்ந்து சமாவேச நிலை அடைதலை ஏற்படுத்தும் என்கின்றனர். இந்தவகையில் மந்திர உச்சாடனம் மூலம் காஷ்மீர சைவர்களின் பூரணாகந்தா நிலையடைதல் என்பதும் "மோனானந்த மாமுத்தி" பெறல் எனச் சித்தாந்திகள் சுட்டுவதுமான நிலை ஒன்றென்றே எண்ணத்தோன்றுகின்றது.

**பக்தி**

இருமெய்யியல்களும் ஆகமமயப்பட்டவை என்பதால் ஆலயவழிபாடு திருவுருவ வழிபாடு, கிரியைகள், பூசைகள், வணக்கமுறைமைகள், விரதங்கள், போன்ற இன்னோரன்ன அம்சங்களுக்கு இடமும் முதன்மையும் அளித்தன. அந்தவகையில் இவை யாவற்றிற்கும் அடிப்படையாகப் பக்தியும் முதன்மை பெற்றது என்பது தெளிவு. பள்ளத்தை நோக்கியோடும் பெருவெள்ளத்தைப்போல இறையுணர்வால் தன் சமயவனுப வத்தால் இறைவன் மீது ஸாதகனுக்கு ஏற்படும் பேரன்பாக இது எடுத்தாளப்படுகின்றது. இதனை,

"அங்கையொடு மலர்தூவி அங்கமது புளகிப்ப
அன்பினால் உருகிவிழிநீர்
ஆளாக வாராத முக்தியின் தாவேச
ஆசைக் கடற்குள் மூழ்கிச்
சங்கர சுயம்புவே எனவும் மொழி
தழுதழுத் திடவணங்கும் சன்மார்க்க நெறி"

எனத் தாயுமானவர் எடுத்துரைக்கின்றார்.[123] பக்தி நிலைப்பட்ட தனது நிலையை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன்விரை யார் கழற்கென்
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி சயசய போற்றி யென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே"

எனவும் பாடி,[124] மேலும் இறையனுபவத்திளைப்பினூடாக

"முக்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்து சிவமாக்கி...."

என முக்திக்கான வழியான பக்தி நெறியின் சிறப்பை மணிவாசகர் பாடிப் போந்துள்ளார்.[125] முக்திக்கு வழியாக இறைவனால் அறிவிக்கப் பட்டது பக்தி என்பது இதனாற்பெறப்பட்டது. பக்தியின் பாற்பட்டோர் ஆலயவழிபாடு, பூசைமுறைகள், விதிகளை அறிந்து அவற்றின்படி ஒழுகவேண்டும் என்பர் சித்தாந்திகள்.[126] இவ்வாறு சைவசித்தாந்தம் பக்திக்கு அளிக்கும் இடத்தை காஷ்மீர் சைவத்தில் காணுவதரிதாயினும் பக்தி தனித்துவமாக உரைக்கப்பட்டுள்ளது. உத்பலதேவர்,

"பக்தியாகின்ற அமிருதரசத்தைப் பருகினவனுக்கு
சிவன் தன்னையொத்தவனாகத் தோன்றுவான்"

என்றும்,[127]

"நின்பால் செலுத்தும் பக்தியாகிற சூரியனுடைய ஒளியின் சேர்க்கையால் எனது சித்தமாகின்ற சூர்ய கலந்தக் கல்லினின்றும் ராகந்து வேஷங்கள் முதலான குற்றங்கள் தீப்பொறிகள் போல் பரந்து செல்லட்டும் "

என்றும்[128] பலவாறு கூறுகின்றார். இந்நிலையைக் காஷ்மீர சைவம் "சமாதேவ சானந்தம்" என்றும் "தாசபாவம்" என்றும் சுட்டுகிறது.[129] ஆக, சீவன் பரமாத்தமனும் விசுவாத்மானும் சிதானந்த சொரூபனும் நானே என பாவனை செய்தல் பக்தியாகின்றது. சித்தாந்திகள் பன்மைவாதிகள்; பக்தி இறையனுபவத்திற்கு இட்டுச் செல்லும் என்றனர். காஷ்மீர சைவர்கள் ஒருமைவாதிகள்; நானே இறைவன் என உணர வழிசமைப்பதே பக்தி என்கின்றனர். தத்தம் தளங்களினின்றும் விளக்கமளிக்கும் தன்மையால் பக்தி பற்றிய கருத்தில் இருசாரரும் வேறுபடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஞானம்**

இரு மெய்யியல்களும் முக்தி என்பது புத்தியாலோ தர்க்கத்தினாலோ வருவதில்லை என்பர். ஆன்மாவிற்குரிய ஞானத்தைச் சித்தாந்திகள், பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என மூன்றாக எடுத்தாள்கின்றனர். பாசஞானம் என்பது சொற்பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சம் பற்றி நிகழும் ஏகதேச ஞானம் எனவும் அதுவே ஆரம்ப ஞானமாகவும் கொள்ளப்படுகின்றது. பசுஞானமானது பாசஞானத்தைப் பொருந்தி இவையனைத்தும் தன்கீழ் வியாப்பியம் என அறிந்து நீங்கித் தான் அவற்றிற்கு மேலான் எனக் கருதித் தன்னைச் சடுதியில் மதிக்கவருவது சிவசமவாதஞானம் என்றும் கூறுவார்.[130] பசுத்துவம் நீங்கிய வழியும் பசுத்துவ வாதனை நீங்காததால் அது பசுஞானம் எனப்படும்.

"கரணங்கள் கெடலிருக்கை முக்தியாமெனில்

........................................................

சரணங்கள் புகு நிழல் போல் தனை அடையுஞ்சமாதி
தவிராது மலமிதுவும் பசுஞானம் ஆகும்"
அரணங்களெரித்தவன் தன்னடியை அறிவிற் தங்கி
அறிந்திடர் செறிந்ததுகள் அகற்றிடீரே"

என இதனை எடுத்துரைக்கின்றது சித்தியார்.[131] மேற்சொன்ன இரு ஞானங்களாலும் எய்துவதற்கு அரியனாகிய பராபரனை அவனது திருவடி ஞானமொன்றானே தன்னறிவின் கண் வைத்தாராய்ந்து நேசமொடு திருவடிக்கீழ் நீங்காதே பற்றச் செய்வது திருவடி ஞானமாகும்.

"பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும்
பார்ப்பரிய பராபரனைப் பதிஞானத்திலே
நேசமொடு உள்ளதே நாடி ......

எனும் பாடலாலும்[132]

"சிவனை அவன் திருவடிஞானத்தாற் சேரச்
செப்புவது செயல்வாக்குச் சிந்தையெல்லாம்...."

எனத் தொடரும் பாடலாலும். [133]சித்தியார் இதனைச் சுட்டுகின்றது. முத்தி பற்றித் திருவருட் பயனில் உமாபதி சிவாச்சாரியார்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாடலை போல் கூடியவை தான்நிகழா வேற்றின்பக்
கூடலைநீ யேகமெனக் கொள்"

என்கிறார்.[134] முக்தி பலவகையது. அவை, அபரமுக்தி, பதமுக்தி, சீவன்முக்தி, பரமுக்தி என்பனவையாகும். அபரமுக்தியானது, விதேகமுக்தி அணுசதாசிவர், மந்திரமஹேஸ்வரர். அனந்ததேவர் முதலானோரின் சுத்தநத்துவ புவனங்களில் தங்குதல் ஆகும். வித்யா தத்துவங்கள் ஏழிலும் உள்ள உருத்திர உலகங்களை அடைதல் பதமுக்தியாகும். இவை முடிந்த முடிபாகா; ஞானத்தின் ஞானமாகிய நிஷ்டையின் பயனாக அடையப் பெறும் பரமுக்தி நிலையை இவ்வுடம்போடு கூடியிருக்கும் நிலையில் பெற்றிருத்தலே சீவன் முக்தி ஆகும். விதேகமுக்தி உடல்நீங்கிய பின் கிடைக்கும் முக்தி என எடுத்தாளப்படுகின்றது. இவை யாவும் ஞானத்தாலேயே சித்திக்கும்.

இந்த ஞானம் நிகழ ஏதுக்களாக மூன்று உள என்பர். அவை, இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்பன.[135] சத்திநிதிபாதம் ஞானத்துக்கு நேரே ஏதுவாகும். பாதம் - வீழ்தல் நி - மிகுதி உணர்த்தும் இடைச்சொல் என்றவகையில் "சத்திநிதிபாதம்" என்பது சக்தி வீழ்தல் எனப்படுகின்றது. காஷ்மீரசைவமும் மேற்சொன்ன மூன்றையும் ஏற்கின்றது. காஷ்மீரசைவரின் கூற்றுப்படி, மோட்சஞானம் புத்தியாலோ, தர்க்கத்தினாலோ கிடைக்கப்பெறாது என்றும் அதற்கு சக்திபாதம் - அநுக்கிரகம் வேண்டுமென்றும் கூறுவர். மோட்சத்தினை சாதகன் சக்திபாதத்தாற்றான் பெறுகின்றான் என்கின்றனர். இதனை,

"ஸ்வாதந்த்ர்ய - மஹிமைவாதம் தேவஸ்ய யதய ஸௌபுந:|
ஸ்வம் ரூபம் பரசுத்தம் ஸத் ஸ்ப்ருசத்யப் யணுதாமய:||

என அபிநவகுப்தர் குறிப்பிடுகின்றார்.[136]

முக்திக்கு ஞானமே சிறந்த வழி என்பதில் இந்து மெய்யியலாளர்கள் பெரிதும் முரண்படுவதில்லை. முக்தி மீது நாட்டமுள்ள சாதகன் ஞானவேட்கை உள்ளவனாக இருப்பின் முக்தி சித்திக்கும் என்பர். நாற்பாத வழிகளில் சரியா, கிரியா, யோகா வழி நிற்கும் சாதகன் ஞான நிலை அடையும் போது அவனுள் ஏற்படும் முக்கிய மாற்றங்களாக சித்தாந்திகள் மலபரிபாகம், இருவினையொப்பு, சத்திநிபாதம் என்பவற்றை எடுத்தாள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான வகையீட்டை காஷ்மீரசைவர்கள் நேரடியாகக் கூறாது விடினும் மலநீக்கம் பற்றிய கருத்தாடல் ஊடாக முதலிரு பிரிவையும் ஏற்பர். சத்திநிபாதத்தை சத்திநிபாதமாகக் கூறிநிற்பர்.

மலபரிபாகமாவது ஆன்மாவைப் பசுத்துவப்படுத்தும் அல்லது அறியாமைக்கு உட்படுத்தும் ஆணவ மல நீக்கமே ஆகும். ஆன்மா ஆணவ மல நீக்கத்திற்குரிய காரணங்கள் எல்லாவற்றொடும் கூடுதல் மலபரிபாகம் ஆகும்.[137]

ஆன்மாக்களுக்குப் பிறவி நிலையில் இன்ப துன்பங்கள் ஏற்படும். அவற்றினின்று விடுபடலே - அவற்றை ஒன்றாய் எண்ணுதலே இருவினையொப்பு என்பர்.

"முனைமருவும் இருபயனும் ஒருகாலத் தகுந்த
முந்துநுகர் உந்துபலன் அந்தமுறவந்த
வினையுமெதிர் வினையுமுடி வினையுதவு பயனரல்
நேராக நேராதல் மேவுங்கால்"

என்னும் சிவப்பிரகாசச் செய்யுளுக்கு மதுரை சிவப்பிரகாசர் செய்த உரையை மறுத்து சிவஞானசுவாமிகள் வேறுரை செய்துள்ளார்.[138] புண்ணியம், பாவம், ஒன்றுடன் ஒன்று எதிர் கொள்வதால் வினைஒப்பு நிகழாது என்றும் நல்வினைப்பயனாகிய இன்பத்தில் விருப்பமும் தீவினைப்பயனாகிய துன்பத்தில் வெறுப்பும் இன்றி இவ்விருவினைகளையும் பயன்களையும் சமமாகக் கருதி அவற்றில் அழுந்தாது இருத்தலே இருவினையொப்பாகின்றது எனச் சித்தாந்திகள் விளக்குகின்றனர். இதனையே சேக்கிழார், "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்" எனக் குறிப்பிட,[139] "ஓடும் இருநிதியும் ஒன்றாகக் கண்டவர்கள்" எனத் தாயுமானவரும் கூறிநிற்கின்றார்.[140] காஷ்மீரசைவர்கள் மலநீக்கம் முத்திக்கு வழி என்கின்றவகையில் சிந்தித்துள்ளனரே தவிர இவ்வாறு படி நிலைகள் ரீதியாகப் பிரித்துரைத்தமையைக் காணலரிது.

அடுத்து சத்திநிபாதம் எடுத்தாளப்படுகின்றது. திரோதான சத்தியாகத் தொழிற்பட்டு வந்த இறைவனின் சக்தி மலபரிபாகம் உற்ற நிலையில் அருட்சக்தியாக மாறி ஆன்மாவிடத்தில் பதிதலே சத்திநிபாதம் எனப்படுகின்றது. மலபரிபாகம் பல்வேறு நிலைப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வதால் சத்திநிபாதமும் பல்வேறு வகைப்பட நிகழும் என்பர் சித்தாந்திகள். அவையாவன, மந்த தரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நால்வகையாக எடுத்தாளப்படுவதொடு அவை ஒவ்வொன்றும் நன்னாங்கு பிரிவினதாகவும் கூறப்படுகின்றது. மேலும் மேலும் எல்லையின்றி நன்னாங்காகப் பிரியும் என்றும் உரைப்பர். இவற்றின் வழியேயே சரியா, கிரியா, யோகா, ஞான பாதங்கள் நிகழும் என்றும் உரைப்பர்.[141] சிவஞானமுனிவர் தீவிரதரம் என்பதை அதிதீவிரதரம் என எடுத்தாள, சுப்பிரமணிய தேசிகரும் அதனை வழிமொழிவார். ஆனால் சிவாக்கிரயோகிகள் அதனை தீவிரதரம் என்றே கையாளுகின்றார்.[142] தரம் - அதீதம் அல்லது மிகுதி எனப் பொருட்சுட்டப்படுந் தன்மையால் மேற்சொன்ன பிரிப்பு முறையே சிறந்ததும் சரியானதும் என்கிறார் அருணைவடிவேல் முதலியார்.[143]

காஷ்மீர சைவர்களும் "சத்திபாதத்தை" எடுத்துரைக்கின்றார்கள். மோட்சஞானம் தர்க்கத்தினாலோ புத்திவாதத்தினாலோ கிடைக்காது என்றும் அதற்கு சக்தி பாதம் அல்லது அநுக்கிரகமே அவசியமானது என்றும் கூறுகின்றனர். இதனை,

"இத்தம் ஸ்ரீசக்திபாதோயம் நிரபேக்ஷ இஹோதித:"[144]

"ஸ்வதந்தர்ய - மஹிமைவாயம் தேவஸ்ய யதஸௌபுந:|
ஸ்வம் ரூபம் பரிசுத்தம் ஸத் ஸ்ப்ருச த்யப்யணுதா மய||"[145]

எனும் தந்திரலோக வரிகளால் உணரலாம்.

ஆக, இறையருள் இன்றி மோட்சம் இல்லை என்பதும் அங்கு ஆத்மனின் செயலுக்கு இடமில்லை என்பதும் சக்திபாதமே அவன் தன்னைத்தான் உணர வழிசமைக்கின்றது என்பதும் தெளிவாகின்றது. இது சைவசித்தாந்த சத்திநிபாதத்தை ஓரளவேனும் ஒத்துள்ளது. இச்சக்திபாதத்தை சைவசித்தாந்திகளினின்றும் மாறுபட்டு, தீவிரம், மத்யமம், மந்தம் என மூன்றாக எடுத்தாள்வர்.[146] இங்கு "மந்ததரம், தீவிரதரம்" என்பன இடம்பெறவில்லை. ஆயினும் புதிதாக "மத்யமம்" எடுத்தாளப் பட்டுள்ளது. முன்னைப்பிறவிகளில் ஆன்மீகமுன்னேற்றம் கண்ட ஜீவன்களுக்கு தீவிர சக்திபாதம் ஏற்பட்டு மிகுந்த சாதனை புரியாமால் மோட்சம் அடைவர் என்கின்றது. அந்நிலையைப் பெறாத ஜீவர்கள் மத்யம நிலைக்கு உரியவர்கள். இவர்கள் குருவருளால் தீட்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று யோகவழி நின்று சாதகம் புரிந்து மோட்சத்தைப் பெறுவர். இவ்விரு சக்திபாதத்தையும் பெறாத சாதகர் மந்த நிலைக்குரியோராவார். இவர்கள் உண்மையான ஆத்மீக ஞானம் பெறவும் தியானம் முதலான யோகசாதனை புரியவும் நாட்டம் கொள்வர். இதன் வழி காலக் கிரமத்தில் மோட்சத்தை அடைவரென காஷ்மீரசைவர் எடுத்துரைக்கின்றனர்.

காஷ்மீரசைவத்தைப் பொறுத்தவரை மல நீக்கமுறுகின்ற போதே சக்திபாதம் ஏற்படுகின்றது. உபாயவழி மோட்சம் சித்திக்கின்றது. உபாயங்கள் ஒழுங்குநிலைப்படுத்தப்பட்டு அவர்களால் எடுத்தாளப் படவில்லை. சைவசித்தாந்தம், ஆன்மாவின் பக்குவத்திற்கு ஏற்ப நிகழும் மல பரிபாகத்தில் வருகின்ற முதற் சக்திநிபாதம் நிகழும் என்றும் சிவ வினைகளது ஒப்புப் பலவகைச் சக்திபாதங்களால் படிமுறையாக நிகழ்ந்து முதிர்வடைந்து இறுதியில் ஞானத்திற்கு ஏதுவாயமைய ஞானமே மோட்சத்தினை நல்கும் என்பர்.

**முக்தி நிலையில் ஆன்மா**

சைவசித்தாந்திகள் ஆன்மாக்கள் பிறவியெடுத்ததன் நோக்கம் "முக்தி இன்பம்" பெறும் பொருட்டேயாம் என்பர். மலநீக்கம் பெற்று ஞான நிலையடைந்து இறைவனோடு திளைத்தலே முக்தி என்பர். இதனை,

"உள்ள மலநீக்கி யோங்கு சிவானந்த
வெள்ளந் திளைத்ததுவாய் மேவுதல்"

என முக்தி நிச்சயம் கூறும்.[147] பதியோடு இரண்டறக் கலந்து பேரின்பநிலையடைதலே முக்தி என்றாகின்றது. சித்தியார்,

"இரும்பைக் காந்தம் வலிந்தாற்போலியைந் தங்குயிரை
எரி இரும்பைச் செய்வது போல் இவனைத் தானாக்கி
அரும்பித்திந் தனத்தை அனல் அழிப்பது போல் மலத்தை
அறுத்து அமலன் அப்பணைந்த உப்பே போல் அணைந்து
விரும்பிப் பொன் னினைகுளிகை ஒளிப்பது போல் அடக்கி
மேளித்துத் தான் எல்லாம் வேதிப்பானாகி
கரும்பைத் தேனைப் பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியைஒத் திருப்பன் அந்த முக்தி யினிற்கலந்தே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என முக்தியின் இயல்பை எடுத்துரைக்கின்றது.[148] பெத்த நிலையில் ஆன்மா மலத்தோடு அழுந்தி நின்றதைப் போல முக்தியில் சிவத்தோடு அழுந்தி நிற்கும் என்பர் சித்தாந்திகள். [149]

முக்தி நிலை அல்லது முக்தி நிலையில் ஆன்மாவின் நிலை பற்றி கூற விழைந்த உமாபதிசிவாச்சாரியார்,

"காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்துண்மை
காண்பார்கள் நன் முக்தி காணார்கள் - காண்பானும்
காட்டுவதும் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டு நெறி வாரா தவர்"

என்கின்றார்.[150] அதாவது முக்தி நிலையில் காண்பவன், காட்சி, காட்சிப் பொருள் என்பன மூன்றாகவன்றி ஒன்றாம் தன்மை பெறும் என்கின்றார். இதனைக் காஷ்மீரசைவரும் எடுத்துரைக்கின்றனர். ஆன்மா நனவிலிக்குள் மூழ்கி உள்பொருளை வெளிக்கொணரும் நிலை, சுத்தவித்தியாவிற்கு இட்டுச் செல்லும் என்றும் சுத்தவித்தியாவின் செல்வாக்கால் ஞானத்தின் ஒருவடிவாகிய ஞேயம் தோன்றிய பிறகு ஞானம் ஞாதாவில் போய் முடியும். இச்செல்நெறியின் ஈற்றில் ஞாதா (காண்பான்), ஞான (அறிவு /காட்சி), ஞேயம் - அறியப்படும் பொருள் எனும் வேறுபாடு மறையும் என்பர். மேலும் பூரணமான, நித்தியமான கடவுளே என்னுடைய ஆத்மா" எனக் கூறுகின்றனர்.

ஆணவம் வலிகுன்றி யான் எனதெனும் தன்மை அகன்று ஞானம் சித்திக்கும். ஞானமும் அற்ற நிலையே முக்தி என எடுத்தாளப்படும். இந்நிலையை உடம்புள்ள காலத்தில் பெறுதல் நிட்டை எனப்படும்.

"ஞானமதில் ஞான நிட்டையுடையோருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன்றில்லைச்
சீலமில்லை தவமில்லை விரகமொடாச் சிரமச்
செயலில்லை தியானமில்லை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரணமில்லை
குணமில்லை குறியில்லை குலமுமில்லை
பாலருடன் உன்மத்தர் பிசாசர் குண மருவிப்
பாடலினொ டாடலிவை பயின்றிடினும்பயில்வர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறது சித்தியார்.[151] நிட்டை கைவரப் பெற்ற, உடம்புடன் கூடிய காலத்தில் கிடைப்பதே "சீவன்முக்திநிலை" ஆகும். இது "மறவா நிலை" என்று எடுத்தாளப்படுகின்றது. மலநீக்கமே இதற்கு வழி சமைக்கும். காஷ்மீரசைவரும் உடல் உள்ளிட்ட பௌதிகப் பொருட்களிலும் வேறுபட்ட சைதன்ய சொரூபனாகத் தன்னை உணர வேண்டும். அவ்வாறு தன்னை உணரின் அது முக்திக்கு இட்டுச் செல்லும். போக்தாவாகத் திகழ்வது நான் அல்ல பதியே; அவரே எல்லாமாயும் இருப்பார் என உணர்தல் சீவன் முக்தி நிலை எனப்படுகின்றது. சிற்றறிவினனான மாயா பிரமாதா என்ற நிலை நீங்கத் தன் முழுமையான சக்தியோடு பிரகாசிக்கும் போது முக்தன் என்று ஆன்மா கருதப்படுகின்றான்.[152]

பிருதிவி தத்துவத்திலும் பூமிக்கு மேல் உள்ள புவர்லோகம், சுவர்லோகம் போன்ற புண்ணியலோகங்கள் உள்ளன என்றும் அவற்றை அடைதல் அபரமுக்தியாகும் என்றும் கூறுவர். இந்நிலையடைந்தோர் "அணுபட்சத்தினர்" எனச் சித்தாந்திகள் எடுத்துரைப்பர்.[153] இதற்கு மாறாக இறைவனுடன் இரண்டறக் கலக்கும் நிலையே பரமுக்தி என எடுத்தாளப்படுகின்றது. வித்தியாதத்துவங்கள் ஏழிலும் உள்ள ஸ்ரீகண்டபுவனம் முதலான உருத்திர உலகங்களை அடைதல் பதமுக்தி எனப்படுகின்றது. இவ்வுருத்திரவுலகு ஒரோ வழி சிவலோகம் எனப்படும். அபர, பத, முக்தித் தானங்கள் பல ஆதலால் முக்தி நிலைகளும் பல. இதனை,

"சாலோக மாதி சரியாதி யிற்பெறுஞ்
சாலோகஞ் சாமீபந் தங்குஞ் சரியையால்
மாலோகஞ் சேரில் வழியாகுஞ் சாரூபம்
பாலோகம் இல்லாப் பரனுரு வாமே"

எனத் திருமூலர் உரைக்கின்றார்.[154]

அபரமுக்தி, பதமுக்தித் தானங்களாக விளங்குகின்ற உலகங்களில் எங்கும் தடையற இயங்கும் உரிமைபெற்றிருக்கும் நிலையாக "சாலோகம்" எடுத்தாளப்படுகின்றது. சரியை நெறி தாசமார்க்கத்தினின்று பெறும் முக்தியாகச் சித்தாந்திகள் சாலோகத்தைச் சுட்டுவர். இது பணியாளர் நிலை; சாமீபமாவது அருகணைந்து நிற்கும் உரிமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த நிலையாகும். கிரியாநெறி வழி சற்புத்திரமார்க்கத்தால் கிடைக்கும் முக்தியாக இது எடுத்தாளப்படும். இதனை,"பாசமரு ளானதாகும் சாமீபம்" எனத் திருமூலர் சுட்டுகின்றார்.[155]

மேற்சுட்டியவாறு புவனபதிகளை அருகணையும் உரிமையோடு அவரொத்தவுரு, நாமம் பெற்றுத் தோழராகி அளவளாவும் தன்மை யடைதலாகச் சாரூபமுக்தி சுட்டப்படும். இது யோக வழி நின்று சகமார்க்கத்தால் கிடைக்கப்பெறும் முக்தியாகும். இதனை,"பயிலும் குருவின் பதிபுக்க போதேகயிலை இறைவன் கதிர்வடிவாமே" எனத் திருமூலர் சுட்டுகின்றார்.[156] பேரானந்தப் பெருவாழ்வாகிய இறைவனுடன் இரண்டறக்கலக்கும் நிலையே சாயுச்சியமுக்தி ஆகும். தடத்தநிலைச் சிவத்தோடு தொடர்புடையதாக முன் மூன்று நிலைகளும் அமைய, சாயுச்சியம், சொரூபசிவத்துடன் தொடர்புடையதாக எடுத்தாளப்படுகின்றது. இதனை,

"சைவஞ் சிவனுடன் சம்பந்த மாகுதல்
சைவஞ் தன்னையறிந் தேசிவஞ் சாருதல்
சைவஞ் சிவந்தன்னைச் சாராமல் நீங்குதல்
சைவஞ் சிவானந்தஞ் சாயுச் சியமே"

எனத்திருமூலர் உரைக்க,[157]

"தாடலைபோல் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலைநீ யேகமெனக் கொள்"

என உமாபதிச்சிவாச்சாரியார் கூறிநிற்கின்றார்.[158] இது ஞானத்தின்வழி சன்மார்க்கத்தின் ஊடாகப் பெறப்படுவது; இந்நிலைப்பட்டோர் குருலிங்க சங்கம வழிபாடுகளை எல்லாம் சிவம் எனக் கொண்டு நிகழ்த்துவர். இதனை,

"மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயத்தானும் அரனெனத் தொழுமே"

என்கிறார் மெய்கண்டதேவர்.[159] அயரா அன்பினால் அரனின் கழல் சென்ற முக்தர், சீவன்முக்தி நிலையில் மனம், வாக்கு, காயம் என்பவற்றால் தெளியக் கண்டு வழிபடும் நிலை இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஷ்மீரசைவர், யோகத்திற்கு முதன்மையளித்தாலும் ஞானமே முக்திக்கு வழி என்பதில் அவர்களுக்கு மாற்றுக் கருத்தில்லை. சித்தாந்திகளைப் போல முக்தி பற்றிய விரிவான கருத்துக்களை காணுதலரிதெனினும் சாயுச்சியத்தை ஒத்த கருத்து அவர்களிடம் உண்டு. ஒருமைவாதிகளான காஷ்மீரசைவர் ஆன்மா யோகத்தினூடு ஞானம் பெற்றுத் தன்னை இறைவனாக உணர்தலே முக்தி என்பர். அதனாலேயே அவர்களிடம் "பாவனை" முதன்மை பெறுகின்றது. "பூரணமான நித்தியமான கடவுளே என்னுடைய ஆன்மா" என்றுணர்தலே முக்தி என்பர். மேற்சொன்ன உபாயங்கள் தன்னை இறைவனாக உணரும் இறைப்பிரக்ஞைக்கு வழிகோலும் என்பர்.

முக்தி நிலையில் ஆன்மா சிவமாம் தன்மைபெறும் என்றும் நீரும் நீரும், பாலும் பாலும் கலப்பது போல என்றும் காஷ்மீரசைவர் கூறுவர். இது சிவஐக்கியவாதத்தை ஒத்ததாக உள்ளது. வீரசைவமும் இதனையே முக்தி எனச் சுட்டுகின்றது. ஞானத்தீயால் தாத்துவிக்கப்பட்ட ஆன்மா மீண்டும் தேகத்தைப் பெறாது என்பர். சித்தாந்திகள் இதனை ஏற்பதில்லை. முக்தி நிலையிலும் ஆன்மாவொடு ஆணவம் இருக்கும் என்றும் அது வறுத்த வித்துப் போல இருக்குமேயன்றி வறுத்த வித்தாகாது என்பர். இதனை,

> "அழிந்திடுஞ் சக்தி நித்தம் அழிந்திடா ஒளியின் முன்னர்
> அழிந்திடு மிருளு நாச மடைந்திடா மிடைந்திடாவே"

என உமாபதி சிவாச்சாரியார் எடுத்துரைத்துள்ளார்.[160] காஷ்மீரசைவர்களோ,

> "தீயில் வறுக்கப்பட்ட விதை மீண்டும் எப்படி முளைப்பதில்லையோ அப்படி ஞானாக்கினியால் எரிக்கப்பட்ட வினை வினைப்பயனைத் தரமாட்டா........... அவ்வினைப்பயன்கள் அவனைச் சேரா அவன் சீவன்முக்தனாகக் கருதப்படுகின்றான்."

என்பர்.[161] சைவசித்தாந்திகள் இதனை நிராகரித்து முக்தி பெற்ற ஆன்மாவில் ஆணவம் இருக்கும் என்றும் அது மீள முளைவிடும் போது ஆன்மா மீள்பிறவிக்குள்ளாகும் என்றும் ஆதலால் பிரபஞ்சம் நித்தியமானது என்றும் உரைப்பர். ஒருமைவாதிகள் பிரமம் மட்டுமே உள்பொருளென்றும் அவ்வொன்று இரண்டாகிப் பின் விடுதலை நிலையில் மீள ஒன்றாகும் என்பர். இந்நிலையில் சீவனும் சிவனும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை உடையவராக வேண்டும். அது பொருந்தாது என்பர் சித்தாந்திகள். ஐக்கியவாதிகள் சிவமும் உயிரும் வேறு வேறு என்றும் இருவினையொப்பு ஏற்படும்போது பாசம் நீங்கி இரண்டும் ஒன்றாகி ஏகமாய் நிற்கும் என்பர். அநாதியே வேறாயிருத்தலை ஒன்றாகுமெனின் மற்றையது அழியும் என்பர் சித்தாந்திகள். பேதவாதிகள் எப்போதும் இரண்டும் இருமையுற்று இருக்கும் என்பர். சிவத்துடன் சேராதெனின் அது முக்தியாகாது என்பர் சித்தாந்திகள். இவ்வாறு அனைவரினதும் முக்திக் கோட்பாடுகளையும் நிராகரணம் செய்து, ஆன்மா முக்தி நிலையில் சிவத்தோடு ஒன்றிநிற்கும், எவ்வாறெனில் பெத்த நிலையில் ஆணவத்தோடு கூடிநின்றது போல என்பர். இதனை,

"ஒன்றிரண் டாகியொன்றி னொருமையா மிருமையாகி
ஒன்றிலொன் றழியு மொன்றா தென்னினொன் றாகாதீயின்
ஒன்றிரும் புறழி னின்றா முயிரினைந் தொழிலும் வேண்டும்
ஒன்றிநின் றுண ருமுண்மைக் குவமையாணவத் தொடொன்றே"

என உமாபதிசிவாச்சாரியார் விளக்குகின்றார்.[162] ஏகான்மவாதிகளை மறுத்தமை ஊடாக சைவ ஒருமைவாதமும் மறுக்கப்படுகின்றது எனலாம். சைவசித்தாந்தம் கூறும் முக்தி சுத்தாத்வைத முக்தி ஆகும். மெய்கண்டார்,

"அதுவிது வென்ற ததுவல்லான் கண்டார்க்கு
அதுவிது என்றதையும் அல்லான் - பொதுவதனில்
அத்துவிதம் ஆதல் அகண்டமுந் தைவமே
அத்துவிதி அன்பிற் றொழு"

எனத் தெளிவுறவுரைத்துள்ளார்.[163]

ஆக, முக்தி நிலையில் ஆன்மா சிவமாகும் அவனொடு ஏகமாகும் என்று காஷ்மீரசைவம் கூற, அதனை ஒரோர் வழியில் நிராகரணம் செய்வதாய் ஆன்மா இறைவனுடன் இரண்டறக்கலக்குமேயன்றி ஒன்றாகாது என்று சைவசித்தாந்திகள் கூறிநிற்கின்றனர். முத்திக்குரிய வழிகளில் வேறுபாடு உண்டெனினும் ஆன்மா முக்தியடைய வேண்டுமென்பதில் இருசாரருக்கும் கருத்து வேறுபாடு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடிக்குறிப்புகள்**

1) *சித்தியார், பா. 264 முக்தி நிச்சயம், பா. 50*
2) *சிவநெறிப்பிரகாசம், பா. 208*
3) *சித்தியார், சுப, பா. 264*
4) Siva Dristi, 2.88
5) Ibid, 3.17
6) Ibid, 3.68,69
7) Ibid, 3.70
8) Isvara Pratyabhijna, 16 - 1
9) *சிவஞானபோதம், 4:2:1*
10) *திருவருட்பயன், 3.7*
11) *சிவபுராணம், வரி. 18*
12) *அற்புதத்திருவந்தாதி, பா. 17*
13) *கந்தபுராணம், தட்சகாண்டம், உபதேசப்படலம், பா. 32*
14) Tantraloka, 8.173
15) Ibid, 88
16) Ibid, 1.156
17) *சிவஞானமுனிவர், (உரை) 1992, சிவஞான போதம், சூரியனார்* கோவில் ஆதீனம், சென்னை, ப. 100
18) *சிவஞானபோதம், 2: ஏது. 1*
19) *திருக்களிற்றுப்படியார், பா. 86*
20) *சிவப்பிரகாசம், பா. 7*
21) *சிவஞானபோதம், சூத். 2*
22) *இருபா இருப.்து, 19.9*
23) *சிவப்பிரகாசம், பா. 50*
24) Isvara Pratyabhijna, 1.6.1
25) *உண்மை விளக்கம், பா. 47*
26) *திருவுந்தியார், பா. 20*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27) திருமந்திரம், பா. 2957

28) திருவருட்பயன், 8.4

29) Tantra Sara, 8.173

30) தாயுமான சுவாமிகள், பராபரக்கண்ணி, பா.157

31) சித்தியார், சுப, பா. 263

32) மேலது, பா. 270

33) Tantra sara, 1.5

34) சித்தியார், சுப, பா. 270

35) மேலது, பா.271

36) திருமந்திரம், பா.1502

37) மேலது, பா.1507

38) சித்தியார், சுப.பா.272

39) திருமந்திரம், பா.1496

40) மேலது, பா.1509

41) திருஞானசம்பந்தர், 1ம் திருமுறை, திருச்சிவபுரம், பா. 4

42) சித்தியார், சுப, பா. 273

43) திருமந்திரம், பா. 1490

44) மேலது, பா. 1491

45) மேலது, பா. 1492

46) மேலது, பா. 1509

47) மேலது, பா. 1510

48) சித்தியார், சுப, பா, 279

49) மேலது, பா. 274

50) திருமந்திரம், பா. 1474

51) திருநாவுக்கரசர், 4ம் திருமுறை, தனிக்குறுந்தொகை, பா. 3

52) வச்சிரவேல் முதலியார், சிவஞான பாடியத்திறவு, 163

53) சிவஞானபோதம், சூத். 8

54) உண்மை நெறிவிளக்கம், பா. 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55) திருமந்திரம், பா. 2330

56) தசகாரியம், பா. 32

57) இளையதம்பி, மு., முப்பொருள் உண்மை விளக்கம், ப. 103

58) சிவப்பிரகாசம், பா. 71

59) தசகாரியம், பா. 33

60) திருமந்திரம், பா. 122

61) உண்மைநெறி விளக்கம், பா. 6

62) தசகாரியம், 34

63) Tantra Sara, 1.5

64) Siva Sutra, p. xxxvii

65) தாகரே, க.வை., சைவ தத்துவம், ப. 189

66) Kokiloo, M.I., p. 2

67) Ibid, p. 2

68) Jaideva Singh, op.cit, p. xxxix

69) பிரத்திய பிஞ்ஞான ஹிருதயம், சு. 10

70) Isvara Pratyabhijna, ah, k. 7

71) பிரத்திய பிஞ்ஞான ஹிருதயம், சு. 11

72) Isvara Pratyabhijna, ah, k. 7

73) Siva Sutra, 1.22

74) Jaideva singh, op. cit, p. 1

75) Tantra Sara, p. 21

76) Ibid, p. 24

77) Siva Sutra, I - 1

78) Malini Vijaya, 3 - 11> 12

79) பிரத்திய பிஞ்ஞான ஹிருதயம், 08, p. 109

80) Siva Sutra, 1:1

81) Ibid, 1:5

82) Tantra Sara, p. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83) Ibid, p. 23

84) *சிவஞான போதம், 3.11,12*

85) Siva Sutra, 9

86) Malini Vijaya, 11.21

87) Jaideva Singh, op.cit, LI

88) Tantra Sara, p . 36

89) Ibid, 5:3

90) Ibid, 61.216

91) Siva Sutra, 111.7

92) *ப்ரத்திய பிஞ்ஞான ஹிருதயம், 17*

93) மேலது.

94) *சிவஞான போதம், பா. 53*

95) *சித்தியார், சுப, பா. 253*

96) *சிவஞான போதம், 8.1*

97) *ஔவையார், தனிப்பாடற்றிரட்டு, 27*

98) *திருமந்திரம், பா. 1693*

99) *மேலது, 2054*

100) *சிவஞான போதம், 8:3*

101) *திருவாசகம், திருவண்டப்பகுதி, வரி. 63, 68*

102) *தாயுமானசுவாமிகள், கண்ணி. 60*

103) *அருணைவடிவேல் முதலியார், சிவஞானபோதமாபாடிய விளக்கம், பக். 665*

104) Jaideva Singh, op.cit. xxxiii

105) Siva Sutra, 1.7

106) *பிரத்திய பிஞ்ஞான ஹிருதயம், சூ. 11*

107) *மேலது, சூ. 12*

108) *சித்தியார், 8.1*

109) Paramartha sara, p. 163



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110) Kokilloo, p. 01

111) *சிவப்பிரகாசம், பாயிரம், பா. 09*

112) *திருவருட்பயன், பா. 45*

113) *சித்தியார், 8.2*

114) Tantraloka, 8.107

115) Ibid, p. 80

116) *திருநாவுக்கரசு சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், (4ம் திருமுறை), 2009, காசித்திருமடம், திருப்பனந்தாள் திருவதிகை வீரட்டானம், பா. 06*

117) *திருஞானசம்பந்தர், நமசிவாயத் திருப்பதிகம், பா. 1*

118) *உண்மை விளக்கம், பா. 44*

119) *கொடிக்கவி, பா. 4*

120) Jaideva Singh, p. Lxiii

121) Siva Sutra, Saktopaysu, 1

122) Siva Sutra, 1:22

123) *தாயுமான சுவாமிகள், சின்மயானந்த குரு, பா. 1*

124) *திருவாசகம், திருச்சதகம், பா. 1*

125) *மேலது, அச்சோப்பதிகம், பா. 1*

126) *சுப்புரெடியார், மு.கு. நூல், ப. 372*

127) Sivastotravali, 1-5

128) Ibid, xx.1

129) Ibid, 9. 13

130) *சித்தியார், சூத். 9*

131) *மேலது, பா. 294*

132) *மேலது, பா. 296*

133) *மேலது, பா. 296*

134) *திருவருட்பயன், 8.4*

135) *அருணைவடிவேல், முதலியார், மு.கு. நூல். ப. 626*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

136) Tantraloka, 8.163

137) அருணைவடிவேல் முதலியார், மு.கு.நூல், ப. 657

138) மேலது, ப. 660

139) பெரியபுராணம், திருக்கூடச் சிறப்பு, பா. 8

140) தாயுமான சுவாமிகள், பராபரக்கண்ணி, பா. 16

141) அருணைவடிவேல் முதலியார், மு.கு. நூல், பக். 657,658

142) சிவநெறிப்பிரகாசம், ப. 156

143) அருணைவடிவேல் முதலியார், மு.கு. நூல். ப. 658

144) Tantraloka, 8.173

145) Ibid, 8.163

146) தகாரே, க.வை., மு.கு. நூல், ப. 186

147) முக்தி நிச்சயம், பா. 30

148) சித்தியார், பா. 321

149) சிவப்பிரகாசம், பா.17

150) வினாவெண்பா, பா. 11

151) சித்தியார், பா. 284

152) Paramarma Sara, V- 60

153) சுப்புரெட்டியார், மு.கு. நூல், ப. 331

154) திருமந்திரம், பா.1507

155) மேலது, பா. 1509

156) மேலது, பா. 1511

157) மேலது, பா. 1512

158) திருவருட்பயன், பா. 74

159) சிவஞானபோதம், 12

160) சிவப்பிரகாசம், பா. 88

161) திருஞான சம்பந்தன், பெ., காஷ்மீரசைவம், ப. 38

162) சிவப்பிரகாசம், பா. 87

163) சிவஞானபோதம், பா. 78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


அருணைவடிவேல் முதலியார், சி., 1991, **சிவஞானபோத மாபாடிய பொருள்நிலை விளக்கம்,** தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இராசமாணிக்கனார் மா., 1958, **சைவசமய வளர்ச்சி,** ஒளவை வெளியீடு, சென்னை.

இராதாகிருஷ்ணன்.S., 1970, (பதிப்பு) **கீழை மேலை நாடுகளின்மெய்ப் பொருளியல் வரலாறு,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு.

உமாபதிசிவாச்சாரியார், 2001, **திருவருட்பயன் விளக்க உரையுடன்** (உரை - சு. சிவபாத சுந்தரனார்) இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

கந்தசாமி. சோ.ந., 2003, **இந்தியத் தத்துவக்களஞ்சியம் 2** மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம். தமிழ்நாடு.

கந்தையா.மு., 1998, **சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி,** ஸ்மிருதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.

கிருஷ்ணராஜா. சோ., 1995, **சைவசித்தாந்த அறிவாராய்ச்சியல் ஓர் அறிமுகம்,** இந்துகலாசார திணைக்களம், கொழும்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசாமி. வி., 1989, சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள், நியூஈரா பப்ளிகேசுஷன்ஸ் லிமிடெட், யாழ்ப்பாணம்.

சிவாக்கிரயோகிகள், 1968, சிவநெறிப் பிரகாசம், திருவாவடுதுறை ஆதீனம், இந்தியா.

சுப்பிரமணியபிள்ளை.கா., 1925, அறிமுகம். மெய் கண்டசாஸ்திரம் பதினான்கு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

சுப்புரெட்டியார். ந., 2004, சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம், சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.

ஞானக்குமாரன். நா., 1994, சைவசித்தாந்தத் தெளிவு, செல்வம் வெளியீடு, பருத்தித்துறை.

1994, நயம்தரும் சைவ சித்தாந்தம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.

தகாரே. க. வா., 2001, சைவதத்துவம், அல்லயன்ஸ் கம்பனி, சென்னை.

திருஞானசம்பந்தன். பெ., 1978, காஷ்மீர சைவம், சென்னைப் பல்கலைக்கழகம். சென்னை.

.............................. 1978, (மொழி பெயர்ப்பு) ப்ரத்திய பிஞ்ஞான ஹிருதயம் சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

திருமூலர் 2003, திருமந்திரம், காசித்திருமடம், திருப்பனந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரைசாமிப்பிள்ளை. ஔவை, சு., 1954, ஞானாமிர்தம் மூலமும் பழைய உரையும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு.

தேவசேனாதிபதி.வ.ஆ., 1981, சைவசித்தாந்தத்தின் அடிப் படைகள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

பாலசுப்ரமணியம். ம.(பதி), 1934, சித்தாந்தசாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், சைவசித்தந்த சமாஜம், சென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BIBLI OGRAPHY

Chatterji . J.C., 1978, **Kashmir Shaivism,** Indological Book Corporation patna,

Dasgupta. s., 1975, **A History of Indian Philosophy Volume V.**motilal Banarisidas, Delhi.

Dana wila rohon .A., 1985, **Saiva siddhanta theology,** Motilal Banarsidass Newdelhi.

Dyczkowski .S.G., 1989, **The Doctrine of Vibration An Analysis of the Doctrines and practicas of Kashmir Shaivism,** Motilal Banarsidass Delhi.

Guruedv siddha peeth, 1979, **Introduction to Kashnmir Shaivism** S.Y.D.A. foundation, california, U.S.A.

Jaideva singh, 1980, **Spand,** Karikas The Divine Creative Pulsation Motilal banarsidass, Delhi.

................ 1988, **Siva Sutras,** Motilal Banarsidass Delhi.

Jdunath Sinha, 1975, **School of Saivims**, Calcutta Sinha publishinghouse, Calcutta.

---------------- 1934, **Indian Psychology of Perception,** Kegan paul, french Tribuner & co. London.

Nallaswamipillai, J.M., 1962, **Studies in Saiva Siddhanta,** Dharma Puram Adhinam, Madres.

Narayana Avyar, C.V., 1936, **Origin and Early History of Savism in South Indian,** University of Madras, Madres.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pandit. B.N., 1990, **History of Kashmir Saivism,** Utpal publi-cations, Kashmir.

............ 1977, **Aspects of Kashmir Saivism,** Utpal publications, Srinagar.

Kanti Chandra Pandy, 1963, **Abhinavagupta An Historical And Philo sophical Study,** Chowkhamba Sanskrit Series Office, Varanasi

............ 1987, **An Out of History of Saiva philosophy,** Motilal Bararsides, Delhi.

Piet. Johnh., 1952, **Saiva Siddhanta Philosophy,** The Christian Literature Society for India, Madras.

Pranabanda Jash, 1974, **History of Saivism,** Roy and Chowdhary, Cukutta

Radhakrishanan.S., 1971, **Indian Philosophy Vol - 11,** Gevrge Allen and Unwin Ltd. Lodndon.

Raghavan.V., 1977, **The Paryanta Pancasika of Abhinavagupta,** Thomp son Co, Ltd, Madres.

Rudappa . J., 1969, **Kashmir Saivism,** Prasanga University of Mysorye. Mysorye.

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு

அட்டவணை - 1

சைவசித்தாந்தம் கூறும் 36 தத்துவங்கள்




T.M.P மகாதேவன் (கட்டுரை) சைவசித்தாந்தம்

இராதா கிருஷ்ணன் S (பதிப்) கீழை மேலை நாடுகளின் மெய்ப் பொருளியல் வரலாறு ... 1970



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரசைவம் கூறும் 36 தத்துவங்கள்




இவற்றிலிருந்து 25 தத்துவம் வரும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாதாக்யம் 5 | கர்மசாதாக்யம் | கர்த்ரு சாதாக்யம் | மூர்த்தி சாதாக்யம் | அமூர்த்தி சாதாக்யம் | சிவ சாதாக்யம் |
| லிங்கம் 5 | ஆசாரலிங்கம் | குருலிங்கம் | சிவலிங்கம் | சங்கம லிங்கம் | பிரசாத லிங்கம் |
| கலை 5 | நிவிர்த்தி | பிரதிட்டா | வித்யா | சாந்தி | சாந்தியதீதை |
| சக்தி 5 | கிரியாசக்தி | ஞானசக்தி | இச்சாசக்தி | ஆதிசக்தி | பராசக்தி |
| ஐம்பூதம் | மண் | புனல் | தீ | காற்று | ஆகாயம் |

இரத்தினசபாபதி - வை - வீரசைவம்,
சென்னை பல்கலைக்கழகம், சென்னை. 1977



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காஷ்மீரசைவம் கூறும் 36 தத்துவங்கள்

| | | | |
|---|---|---|---|
| I. | 1. Shiva Tattva<br>2. Shakti Tattva | The eternal and mutually inseparable realities. | The five tattvas from the Shiva Tattva to the Shuddha Vidya Tattva are called pure tattvas. |
| II. | 3. Sadakhya or Sadashiva Tattva<br>4. Ishvara Tattva<br>5. Shuddha Vidya or Sad Vidya Tattva | The three purely ideal states of manifestation. | |
| III. | 6. Maya<br>7. Kalaa<br>8. Vidya<br>9. Raga<br>10. Kaala<br>11. Niyati | The differentiating power.<br>The five kanchukas or limiting powers of Maya. | The seven tattvas from Maya up to Purusha are called pure-impure tattvas. |
| IV. | 12. Purusha | The subjective manifestation. The limited individual soul with its five-fold limitations. | |
| V. | 13. Prakriti | The objective manifestation with the three gunas — sattva, rajas, and tamas — as its constituents. | |
| VI. | 14. Buddhi<br>15. Ahamkara<br>16. Manas | The three psychic faculties. | |
| VII. | 17. Srotra<br>18. Tvak<br>19. Chakshu<br>20. Jihva<br>21. Ghrana | The power of hearing.<br>The power of feeling by touch.<br>The power of seeing.<br>The power of tasting.<br>The power of smelling. | The five senses of perception. |
| VIII. | 22. Vak<br>23. Pani<br>24. Pada<br>25. Payu<br>26. Upastha | The power of speaking.<br>The power of grasping or handling.<br>The power of locomotion.<br>The power of excretion.<br>The power of procreation and sexual enjoyment. | The five organs of action. |
| IX. | 27. Shabda Tanmatra<br>28. Sparsha Tanmatra<br>29. Rupa Tanmatra<br>30. Rasa Tanmatra<br>31. Gandha Tanmatra | Sound-as-such<br>Touch-as-such<br>Colour-as-such<br>Flavour-as-such<br>Odour-as-such | The five rudimentary elements. |
| X. | 32. Akasha<br>33. Vayu<br>34. Agni<br>35. Ap<br>36. Prithivi | Etheriality<br>Aeriality<br>Formativity<br>Liquidity<br>Solidity | The five gross elements. |

Prajnanda, swami - Intrpduction to Kashmir shavism - Gurudev Siddra peeth, Ganeshpuri. 1975



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Chatterji J.C1978,Kashmir Sshaivism Indologicalbook corporation patna. (reprinted at Gayatri offset press, Newdelhi)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்செல்வம் செல்வமனோகரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத் துறையின் விரிவுரையாளர். இவர் "இந்து மெய்யியல்" துறையை தனது கற்கையாக, ஆய்வாக, புலமைச் செயற்பாடாக வளர்த்து வருபவர். பின்னைக் காலனிய நோக்கில் இந்து மெய்யியல் சிந்தனைகள் குறித்து புதிய பொருள்கோடல் மரபை உருவாக்கும் அல்லது கண்டுபிடிக்கும் அறிவு, ஆய்வு இவரது ஆளுமையின் வெளிப்பாடாகின்றது. மெய்யியல், இலக்கியவியல், கலையியல் உள்ளிட்ட துறைகளில் ஊடாடித் தமக்கான விமரிசனச் சிந்தனைசார் நவீன அணுகுமுறைகளுடன் கூடிய கோட்பாட்டாக்க மரபை உணர்ந்து, தெளிந்து உருவாக்குபவர்.

இதன் அடையாளமாகப் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை எழுதுபவர். மரபுக்கும் நவீனத்துவத்துக்கும் இடையிலான தொடருறு உரையாடலை வளர்த்து நிதானமாக இயங்குபவர். தமிழ்ச் சூழலில் "தமிழர் மெய்யியல்" குறித்த தேடல் தவிர்க்க முடியாது என்பதை இனங்கண்டு அதன் உருவாக்க முயற்சியிலும் ஈடுபடுபவர். மெய்யியல் நோக்கில் புதிய ஆய்வுக்களங்களை இனங்கண்டு புலமை நேர்மையுடன் உழைப்பவர். "தூண்டி" இலக்கிய வட்டம் சார்பில் பல்வேறு ஆய்வுக் கருத்தரங்குகளை வழிநடத்தியவர். தமிழ்ப் பதிப்பு முயற்சிகளிலிலும் ஆர்வம் கொண்டு "சிவஞானசித்தியார் ஞானப்பிரகாசருரை" (2017), "சிவசங்கர பண்டிதம்" (2016) முதலான நூல்களின் பதிப்பாசிரியர். "இலங்கையில் சைவத்தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் – ஓர் ஆய்வு" (2015) எனும் நூலையும் ஆக்கித்தந்துள்ளவர். தற்போது சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் செயலாளராகவும் இருந்து தனது சமூகப் பணிகளை மேற்கொண்டு வருபவர்.

சேமமடு பதிப்பகம்

உள்ளீடு : சைவசித்தாந்தம்

விலை : 700.00

ISBN 978- 955- 685- 047-5

9 789556 850475

EPAB/02/18569

CBCN : 2017-03-01-148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org